மங்கையர் மலர்



MANGAYAR MALAR மார்ச் 1996 விலை ரூ. 9



உங்கள்
அபிமான
கோகுல்
சாண்டால்.
GOKUL
SANTOL
Micronized Sandalwood
TALC
டி.எஸ்.ஆர். & கம்பெனி, மதராஸ்.
கோகுல் காஸ்மெடிக்ஸ், பாண்டிச்சேரி.

மங்கையர் மலர்

மார்ச் '96

மலர் : 16 இதழ் : 2



சிறுகதைகள்




பேட்டிகள்



குழந்தைகளுக்காக



வாசகியரின் பங்கேற்பு



மருத்துவம்



உங்களைக் கவர்ந்த தொடர் அம்சங்கள்

ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவர்களின் அமுத வாழ்க்கையின் அபூர்வ நிகழ்ச்சிகள் பலவற்றை அவரது அமுத வாக்குடன் இணைத்து

ரா. கணபதி

வழங்கும் இரு புது நூல்கள்

கருணைக் காஞ்சி - கனக தாரை

&

"மைத்ரீம் பஜத!"

ஒவ்வொன்றும் விலை ரூ. 20.00



முந்தைய வெளியீடுகள்

ஸ்ரீ மஹா பெரியவாள் விருந்து (ரூ. 18.00); ***காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம்*** (ரூ. 25.00)



பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா குறித்தவை :

லீலா நாடக ஸாயி (ரூ. 45.00); ***அன்பு அறுபது*** (ரூ. 30.00); ***அறிவு அறுபது*** (ரூ. 24.00); ***அற்புதம் அறுபது*** (ரூ. 20.00); ***தீராத விளையாட்டு ஸாயி*** (ரூ. 20.00), ***ஸ்வாமி*** *முதற் பகுதி :* ரூ. 70.00; *இரண்டாம் பகுதி :* ரூ. 80.00) *BABA : SATYA SAI,* (*Part I :* Rs. 75.00 ; *Part II :* Rs. 50.00)

(ஸ்ரீ லலிதாம்பிகை சரிதையான)
ஸ்ரீமாதா (ரூ. 18.00).

சாதாரண தபால் செலவு முதல் பிரதிக்கு ரூ. 4/-
கூடுதலான ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 2/-;
பதிவுத் தபால் + மேற்படி தொகையுடன் கூடுதல் ரூ. 6/-.
M. O. (அ) D.D. டிரஸ்ட் பெயருக்கு அனுப்ப வேண்டும்.
VPP கிடையாது.

திவ்ய வித்யா டிரஸ்ட்,

106/1, ஹபிபுல்லா சாலை,
தி. நகர், சென்னை - 600 017.

சில பிரச்னைகள்; சில வார்த்தைகள்!

குறுக்கு வழியில் வெல்ல முயற்சிக்காதீர்கள்!

கொஞ்ச நாளைக்கு முன்னால் தனியார் சேனலில் மகாபாரதம் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்று பாஞ்சாலியைத் துகிலுரியும் காட்சி. மகாபாரத, ராமாயணக் காட்சிகளை பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இலக்கியமாகப் படித்திருக்கிறேன். வியப்பு, மகிழ்ச்சி, துயரம், பாசம் என அனைத்து உணர்வுகளையும் அப்போது அனுபவித்திருக்கிறேன். ஆனால் அன்று 'விஷுவலாக' அந்தக் காட்சியைப் பார்த்த போது 'நெஞ்சு பொறுக்குதில்லையே...!' என்ற மகாகவியின் தாங்கமாட்டாத துயரம்தான் எனக்கும் ஏற்பட்டது. (இத்தனைக்கும் ரெகுலராக எல்லாம் டிவியில் மகாபாரதம் பார்த்ததில்லை.)


ஆண்கள் அரியணையிலும், அலங்காரப் பதவிகளிலும் அமர்ந்திருக்கிறார்கள். நடுவிலே அவமானப்பட்டு பாண்டவர்கள். தன்னந் தனியாளாக திரௌபதி. துரியோதனன், கர்ணன் கண்களில் கேலியும், ஆணவமும், சிரிப்பும் கலந்த தோற்றம். பெண்களைக் கண்டாலே துச்சமாக நினைக்கும் ஒரு சில ஆண்களின் ஒட்டுமொத்த வடிவமாக அவர்கள். கலைந்த தலையும், எப்போது என்ன நடக்குமோ எனும் திகிலும், கண்களில் வழி கின்ற கண்ணீருமாக அலைபாய்கிறாள் பாஞ்சாலி.

கர்ணன் கேலியாக, "ஏற்கெனவே நீ ஐவருக்கு மனைவிதானே, இப்போது என் நண்பன் துரியோதனனிடம் வருவதால் ஒன்றும் குறைந்து விட மாட்டாய். அவன் தொடையிலே வந்து உட்கார்!" எனப் பேச ரசித்துச் சிரிக்கும் துரியோதனன்.

இதைக் கண்ணுக்கெதிரே பார்த்தபோது மனம் தாங்கவில்லை. பிறகு அவள் அவமானப்படுத்தப் பட்டதும், துகில் உரியப்பட்டதும்... கண்களில் நீர் நிரம்பியதைத் தவிர்க்க முடியவில்லை. ஆண்டவனே, காலம் காலமாகப் பெண்களுக்கு இதே துயரம்தான் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறது. சீதையின் மேல் மோகித்துத்தானே அவளை இராவணன் களவாடிக் கொண்டு ஓடினான்?

பெண்.. அவளை எப்போதும் கொத்தித் தின்னப் பார்க்கும் சமூகம். அவளை உடல்ரீதியாகவே ருசிக்கத் துடிக்கும் ஆண்களின் வக்கிர குணங்கள். நாம் இருப்பது இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் படிகளில். மாறிவரும் பெண்கள் என வரிந்து

மஞ்சுளா ரமேஷ்



கட்டிக் கொண்டு எழுதுகிறோம். பெண்கள் வெற்றிக் கொடி நாட்டாத துறையில்லை. பெண்களுக்கான வேலை இது, ஆண்களுக்கான வேலை இது என்ற பிரிவினையை உடைத்து முன்னேறிக் கொண்டு இருக்கிறோம்.

ஆனாலும் ஒரு பெண்ணை அவள் திறமையை அவள் உற்சாகத்தை ஏன் அவள் ஆத்மாவின் ஆணி வேரையே அசைத்து விட முடியும், ஒரே ஒரு வார்த்தையால்! 'நீ சரியில்லாதவள்' என்று சொல்லி விட்டால் போதும், அத்தனையும் குளோஸ். இப்படிப்பட்ட ஒரு சமூக அமைப்பில்தான் நாம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆணின் மீது ஏதாவது கோபமா, எரிச்சலா 'அவன் கொள்ளைக் காரன், கொடுமைக்காரன்' என்று சொல்வார்கள். ஆனால் ஒரு பெண்ணை விமரிசிக்கும் போது அவள் செயல் பாடுகளில் குறை, வேலையில் தவறு என்று அவளின் திறமையை அடிப் படையாக வைத்து விமரிசித் தால் சரி.

"பாத்தியா, பொம்பளைக்கு இடம் கொடுத்தாலே இதுதான். தளுக்கி மினுக் கிக்கிட்டு வந்துடுவாளுக.."

என பாமர மனிதன் என்றில்லை, படித்த உயர் மட்ட நிலையில் இருக்கும் மனிதன் கூடப் பேசுவான்.

பெண்ணை இங்கு வீழ்த்துவது மிக எளிது. அவளின் ஒழுக்கத்தைப் பற்றி அவதூறு சொல்லி விட்டால் போதும், வாழ்வையே நாசமாக்கி விடலாம். ஏன்... ஏன்.. இந்த நிலை? நம்மைப் போன்றவர் கள்தான் சக பெண்களை, முன்னேறத் துடிக்கும் பெண்களின் சிறகுகளை வெட்டுகிறோம். அவள் தோற்றத்தை, நடத்தையை வெகு எளிதாகப் பேசு கிறோம்.

நமக்கு வேண்டாம் இந்தத் தவ றான அணுகுமுறை. பெண்ணென்ன, ஆணென்ன இன்று இருவருமே வெளியுல கில் உழைக்கிறார்கள், முன்னேறுகிறார் கள். அவர்களை மனிதர்களாகப் பாவி யுங்கள். செயல்பாடுகளில் தவறு இருந் தால் தவறு என்று சுட்டிக்காட்டுங்கள்.

பெண்ணுக்கு மட்டும் கற்பு எனும் விலங்கை மாட்டி, அவள் பழைய மரபுகளிலிருந்து ஏதாவது மாற முயன்றால் சுட்டி சுட்டியாக வார்த்தை களை எறிந்து அவள் மனதை ரணமாக் காதீர்கள்.

பெண்கள் உடல்ரீதியாக ஆணி லிருந்து வேறுபட்டவர்கள். இது இறைவனால் நிர்ணயிக்கப்பட்டது. மனித சமூகம் வழி வழியாகப் பெருக ஆண்டவனால் சில வேறுபாடுகள் அமைக்கப்பட்டன. அதற்கு இத்தனை ஏசலா, கிண்டலா, கேலியா? வேண் டாம். பெண்ணை ஒரு மனுஷியாக, தன்னைப் போன்ற ஒரு ஜீவனாக, அந்த உடலிலும் உணர்வுகள், வலி, ஆசை, அன்பு எல்லாம் இருக்கும் என்ற நினைவோடு பாருங்கள் போதும்.

இன்றைய ஆற்றல்மிக்க பெண் ணைத் திறமையால் வெல்ல முடியாத போது கீழ்த்தரமாகக் குறுக்கு வழிகளில் நடத்தை, ஒழுக்கம் எனும் காரணங் களைக் காட்டி புறமுதுகில் குத்தா தீர்கள். சக்தி வாழ்க எனக் கூத்திடு வோமடா! என்றான். சக்தி வாழ நாமும் வாழ்வோம்.

அறிவிப்பு

கடந்த சில மாதங்களாக மங்கையர் மலருடன் தனி இணைப்புப் புத்தகம் வெளியிட்டு வந்தோம், நீங்கள் அறிவீர்கள். இந்த இதழ் முதல் இணைப்புப் புத்தகத்தைத் தனியாக வெளியிடாமல் ஒன்றாக, ஒரே இதழாக வெளியிடுகிறோம். (160 + 32 = 192 பக்கங்கள்) படித்து மகிழுங்கள்.

— நிர்வாக இயக்குநர்

பேப்பரை மடித்து அலுப் போடு ந்
எறிந்தார் சாம்பசிவம். ''ப்
பாடி! என்று முன
இயபடியே சோம்பல்
முறித்து முடிப்பதற்
குள் பின்னாலிருந்து
குரல் கேட்டது.

''ம்! ஒரு எழுத்து
விடாம படிச்சாச்சா!
மூணாந்தரமா? நாலாந்
தரமா? நல்ல பேப்பர்!''

சொன்னவளை
முறைத்தார்.

''ம்! ஆரம்பிக்காதே.
இப்படி உட்காரு என்ன
பண்ணிட்டு வரே இச்
சன்லு?''

''வேறென்ன? காப்பி
போட்டேன் ரெண்டு பேருக்
குமா. ஒரு வேலை இடை
யாது வீட்ல. காலங்கார்த்தால
எழுந்து மடமடன்னு சமைய
லையும் பார்த்துண்டு, டிப
னையும் பண்ணின்டு இந்த
வித்யா பரக்கற பரப்பு..
பாவம்! சொன்னாலும் கேட்க
மாட்டேங்கறா. போறாததுக்கு
வேலைக்காரி. எட்டு மணிக்
குள்ளே குளிக்கட்டு துணியைப்
போடலைன்னா இடுப்புப்
புடைவையையே இழுத்து சொப்
புல போட்டுடுவா. ஒன்பது அடிச்
சுதோ இல்லையோ இரண்டு
பேருமா கிளம்பி ஓடிப் போயிடறா.
எதையாவது செய்வம்னா வேலை
இருந்தான்னா வீட்ல. கொட்டு
கொட்டுன்னு நான் முழுக்க
மோட்டுவளையைப் பார்த்துண்டு
உட்கார வேண்டியிருக்கு. அக்கம்
பக்கம் ஈ காக்கை இடையாது
பகல்ல!''


பெருமூச்சு விட்டபடியே முடித்த



மனைவியை
ஆச்சமாதித்துத் தலையாட்டினார்
சாம்பசிவம்.

''உனக்கு மேல எனக்குப் பைத்தியம் புடிக்கறது
போ! எனக்கு வயசாயிடுத்து போன்னு கவர்ன்
மெண்ட்ல வீட்டுக்கு அனுப்பினான். புள்ளை
ஓடியா ஓடியான்னான்னு இருந்த இடத்தை

மணக்



உமா குமார்

...த்தானே செய்வேன். எல்லாத்தையும் முடிச்சுட்டு போயிடறா. இந்த ஒரு மாசத்துல இருபது தடவை கேட்டிருப்பா. ஏன் அத்தை வீட்ல போரடிக்கலையா தனியா உங்களுக்குன்னு. என்ன பதில் சொல்றது நான்?''

அழுதவளை ஆசுவாசப்படுத்தி னார்.

''என்னத்தப் பண்றது போ! இப்பத்தான் எனக்கும் பொட்டுல அறைஞ்சாப்புல ஞாபகம் வரது. கணேஷ் கூட இரண்டு மூணு தடவை பேச்சோட பேச்சா சொன்னான். உங்களுக்குப் பொழுதே போகாதே. நான் முழுக்க என்ன பண்றீங்கன்னு! ஏதோ கடிகாரத்தோட ஓடிண்டிருக்கோம்பான்னேன். வேறென்ன சொல்றது!''

''கணேஷ் போன்ல ஓல்ட் ஏஜ் ஹோம் ஓல்ட் ஏஜ் ஹோம்னு இரண்டு நாளா கத்திண்டிருக்கானே. காதுல வாங்கலை? ஒண்ணும் ஒண்ணும் இரண்டுன்னு கூட்டிப் பார்க்காமயே சொல்ற

...த்தானே செய்வேன். எல்லாத்தையும்

விடறேனா நான்? இல்லை சல்வார் அது இது வேண்டாம் அழகா புடைவையைக் கட்டிண்டு ஆபீஸ் போன்னு சொன்னேனா?

எதுவும் சொல்றதில்லைங்க நான். கல்யாண மாகி ரெண்டு வருஷமாகப் போறது இன்னும் சீமந்தம் வரலை... கவலைப்படறேனேயொழிய கேட்கக் கஷ்டமாயிருக்கு அந்தப் பொண்கிட்ட.

இப்படி எல்லாத்தையும் அட்ஜஸ்ட் பண்ணிண்டு, அனுசரித்துப் போற நாம பாரமாயிட்டோம் அவாளுக்கு. எங்க போயி சொல்றது? பேசாம ஸ்லோகத்தை சொல்லிண்டு தேமேன்னு கிடக்கேன். அவ்வளவுதான்!''

''கவலைப்படாதே கோமு! அப்படி விஷயம் கை மீறிப் போய் கணேஷ் ஏதாவது சொன்னா, நான் பார்த்துக்கறேன் கவலைப்படாதே. என்ன?''

மனைவியை அமைதிப்படுத்திய சாம்பசிவத்தின் மனத்தில் சின்னப் புயல் உருவாக ஆரம்பித்தது.

மாலை!

வழக்கத்தை விட சீக்கிரமாகவே கணேஷும், வித்யாவும் ஆபீஸிலிருந்து வந்தனர். சாம்பசிவம் எழுந்து பாலமுரளியை பொறுக்கி எடுத்து கேசட்டைப் போட்டு விட்டு சோபாவில் திரும்ப சாய்ந்து கொண்டார்.

''ம்! அவா ரெண்டு பேரும் டிரஸ் மாத்திக்கட்டும். நான் போயி காப்பியை வைக்கறேன் ரெண்டு பேருக்குமா! உங்களுக்கு வேணுமா அரை டம்ளர்?''

மறுத்து தலையசைத்தார்.

''அம்மா! காப்பி ஃப்ப்பில்லாம் கிடக்கு. வித்யா பார்த்துப்போ. நீ இப்படி வந்து உட்காரு அப்பா பக்கத்துல. ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.''

கணேஷின் குரல் பின்னாலிருந்து காதுக்குள் நுழைய திரும்பினாள் கோமதி.

எப்படி ஆரம்பிப்பது என்று அவன் யோசிப்பது முகத்தில் நன்றாக தெரிந்தது.

கோமதிக்கு அடிவயிற்றில் கடமுடவென்று எதுவோ ஓட... கணேஷ் தொண்டையைச் செருமினான்.

''அப்பா! உங்களுக்கு, ரெண்டு பேருக்கும் தான் வீட்ல ரொம்ப போரடிக்குது இல்லே? நாங்க ரெண்டு பேரும் காலைல கிளம்பிப் போனா இருட்டற மட்டும் வெளில இருக்கோம்.''

''ஆமா! அதுக்கென்னப்பா இப்போ?'' – கேட்டபடியே சாம்பசிவம் உள்ளுக்குள் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள ஆரம்பிக்க...

''அப்பா வயசானவங்கள்லாம் ஒண்ணா ஒரு இடத்துல இருக்காங்க. ஒரு ஆர்கனசேஷன்னு வச்சுக்கங்களேன். ஓல்ட் ஏஜ் ஹோம்னு! அங்க உள்ள வங்க பொழுதுபோகாம...

''போதும் நிறுத்துப்பா!'' – அப்பாவின் ஓங்கிய குரல் கணேஷின் வார்த்தைகளை தடுத்து நிறுத்தியது.

''எனக்கு தெரியும்ப்பா ஓல்ட் ஏஜ் ஹோம்னா என்னன்னு. வீட்ல இடத்தை அடைச்சுண்டிருக்கற சாமானை டிஸ்போஸ் பண்ற மாதிரி... எங்களை மாதிரி கிழங்கட்டைகளை கொண்டு போயி தள்ளிட்டு வரதுக்காக கட்டி வச்சிருக்கற ஒரு இடம். கணேஷ்! உங்கப்பா கையாலாகாதவன் இல்லடா. இப்பவும் ஆயிரத்தெண்ணூறு பென்ஷன் வாங்கறேன். உங்கம்மாவுக்கும் எனக்கும் எதேஷ்டம். இப்படின்னு ஒரு கோடு போட்டுக் காண்பிச்சிருந்தா கூட போறுமேப்பா. எப்பவோ மூட்டை முடிச்சை கட்டியிருப்போமே நாங்க!''

''என்னப்பா என்னென்னவோ பேசறீங்க?'' – கலங்கி நின்றான் கணேஷ். வித்யா பிரமித்து நின்றாள்.

''கணேஷ்! ஓல்ட் ஏஜ் ஹோம்ல சீட் தேடி அலைய வேண்டாம்ப்பா அனாவசியமா. பொறந்து வளர்ந்து, ஓடியாடி விளையாடின கிராமம் இன்னும் இருக்குப்பா...''

அப்பா பேசிக் கொண்டே போக கணேஷ் வித்யாவை கேள்விக்குறியோடு பார்த்தான்.

வித்யா நகர்ந்து மாமியாரின் அருகே போனாள். ''அத்தை! என்ன அத்தை இதெல் லாம்?'' – கணேஷ் எழுந்து அப்பாவினருகே போனான்.

''அப்பா! நீங்களுமா இப்படி? நம்பவே முடியலைப்பா எனக்கு. சத்தியமா என் காதையே நம்பலை நான். உங்க பிள்ளை மேல இவ்வளவு அவ நம்பிக்கையா?''

1½ தம்ளர் பிரெட் தூள், ¼ தம்ளர் சர்க்கரை, 2 டேபிள் ஸ்பூன் தேங்காய்த் துருவல், ஏலப்பொடி, 1 ஸ்பூன் நெய் இவைகளை ஒன்றாகக் கலந்து அடுப்பில் ஐந்து நிமிடம் கிளறி இறக்கிவிடவும். தேவையானால் முந்திரி வறுத்துப்போட்டு, சுடச்சுட சாப்பிடச் சுவையாக இருக்கும்.



- உமா



நாம் போளிக்குச் செய்வதுபோல், கடலைப் பருப்பு பூரணம் செய்து (¼ ஆழாக்கு க. பருப்பு, ½ தம்ளர் வெல்லம், ஏலப்பொடி, நெய்) 1½ தம்ளர் பிரெட் தூளுடன் சேர்த்து அடுப்பில் ஒரு நிமிடம் கிளறி இறக்கவும். 'புட்டு' போல் சுவையாக இருக்கும்.

- உமா

சாம்பசிவம் வாய்மூடி உட்கார்ந்திருக்க அம்மாவின் பக்கம் திரும்பினாள்.

''அம்மா! இந்த எண்ணம் உங்க இரண்டு பேர் மனசுலயும் எப்படி வந்தது? எங்களை நீங்க புரிஞ்சுக்கிட்டது இவ்வளவுதானா? முழுசா நான் சொல்ல வந்ததைக் கூட காது கொடுத்துக் கேட்கா ஓல்ட் ஏஜ் ஹோம்னா உடனேயே நம்மளைக் கொண்டு போயி தள்ளப் போறாங்கற முடிவுக்கு வந்துட்டீங்களே...

நிதானமாய்க் கேட்ட கணேஷின் முகத்தைப் பார்த்துத் தடுமாறிப் போனார் சாம்பசிவம்.

''அது இல்லப்பா! உலகத்துல நடக்கறதே பட்டுன்னு மனசுல...

''போறும்ப்பா. ஏதோ நாலு அறிவு கெட்ட ஜென்மங்கள் பெத்தவங்களை பண்ணினதுக்காக எங்களுக்கெல்லாம் தண்டனையாப்பா? ஒவ்வொரு பிள்ளைக்குமா?

மனசைப் போட்டு குழப்பிண்டு பெத்த பசங்க மேலேயே நம்பிக்கை இல்லாம பெரியவங்க போடற தப்புக் கணக்குதாம்ப்பா உறவுங்கற நூல்ல பெரிய முடிச்சா விழுந்துடுது. அதே தப்பு கணக்கை நீங்களும் போடணுமா! ஏன்ப்பா...?

ஓல்ட் ஏஜ் ஹோம்ல உங்க டைம் பாஸிங்குக்காக ஒரு நல்ல வேலை வந்திருக்கு. சோஷியல் சர்வீஸ்! அங்க இருக்கறவங்களுக்கு ராமாயணம், மகா பாரதம், பகவத் கீதான்னு தினமும் போயி படிக்க சொல்லணும். அவங்களுக்கும் நல்லாயிருக்கும். பொழுது போகும் இல்லையா நல்லா. இதைத்தாம்ப்பா ட்ரை பண்ணிட்டிருந்தேன். செய்யப் பிடிக்குமா?''

சாம்பசிவம் தனக்குள் கூனிக்குறுகிப் போய் உட்கார்ந்திருந்தார்.

வித்யா மாமியாரின் கையிரண்டையும் பற்றினாள்.

''அத்தை! நீங்க பெத்தவங்க. இந்த வீட்டுப் பெரியவங்க. உங்க நிழல் எப்பவும் எங்களுக்கு வேணும். நீங்க செய்யாத வீட்டு வேலையா? பிறந்து, பதினாலு, பதினைஞ்சு வயசுலயே கல்யாணத்தையும் பண்ணிண்டு சமையற்கட்டே கதின்னு இருந்திருக்கீங்க வாழ்க்கை முழுவதும். இப்ப... இப்பவாவது ரெஸ்ட் எடுத்துக்கக் கூடாதா? இங்க பாருங்க... இது உங்களுக்காக...''

வித்யா கீழேயிருந்து பெரிய போர்டை எடுத்து மூடியிருந்த பேப்பரை கிழித்துவிட்டுத் தூக்கி முகத் தின் முன்னால் காண்பித்தாள்.

''ஸ்லோகக் கிளாஸ்''

கறுப்பு போர்டில் பளிச்சென்று வெள்ளை எழுத் துக்கள் மின்னின.

கோமதி குழம்பிப் போய் வித்யாவைப் பார்த்தாள். ''என்ன அப்படிப் பார்க்கறீங்க அத்தே. இது உங்களுக்காக. நீங்க எடுக்கப் போறீங்க இந்த கிளாசை.''

வித்யா சொல்ல கோமதி பிரமித்துப் போனாள்.

''நா... நானா என்னால....'' – தடுமாறினாள் வார்த்தைகளில்.

''உங்களால நிச்சயமா முடியும்மா! தினமும் குளிச்சுட்டு நீங்க சொல்ற ஒவ்வொரு ஸ்தோத்திரமும் எனக்கு அத்துப்படி கேட்டு கேட்டே. எவ்வளவு இனிமையா, அருமையா மனசு நிறைஞ்சு போறது அத்தை. நிஜம்மா!

ஒய் டோண்ட் யூ ஷேர் திஸ் டேலண்ட்?''

''ஆமாம்மா! வித்யாதான் இந்த ஐடியாவே சொன்னா. நிச்சயமா உனக்கு ரொம்பப் புடிக்கும் இந்த வேலை''

''அத்தை! சின்ன சின்னக் குழந்தைங்கள்லாம் நான் முழுக்க படிச்சுண்டு டீவியே கதின்னு கிடக்கு. அப்பா, அம்மா ஓடற ஓட்டத்துல அதுகளைத் திரும்பிப் பார்க்க நேரமிருக்கறதில்லை.

''தோ பாருங்க! பேப்பர்ல அட்வடைஸ் கொடுத்த உடனே எவ்வளவு லெட்டர்ஸ் வந்திருக்கு. நிறைய குழந்தைகள் வரும். ஃப்ரீயா சொல்லிக் கொடுங்க. பணம் வாங்கணும்னு நமக்கு அவசியமே இல்லை.''

சந்தோஷத்தில் பூரித்துப் போனாள் கோமதி.

''நான் முழுக்க இல்லம்மா! கொஞ்ச நேரம் நம்ம வீட்டுக் குழந்தைக்காகவும் ஒதுக்கி வச்சுடு.''

கணேஷ் சிரித்தபடியே சொல்ல கோமதி கண்களில் ஆனந்தம் பூரிக்க வித்யாவைப் பார்த்தாள்.

''ஆமாம் அத்தை! பொறக்கப் போற அந்த புது ஜீவனுக்கும் பாட்டி, தாத்தான்னு [illegible] பாசம், அரவணைப்பு, செல்லம் இதெல்லாம் நிறைய வேணும். அதான் எங்க ஆசை!''

கோமதியின் கண்கள் கலங்கி முத்துக்களை உதிர்க்க, பக்கத்தில் இருந்த கணவனைத் திரும்பிப் பார்த்தாள்.


சந்தனத்தில் நல்ல வாசமெடுத்து.
உங்கள் மேனியை தழுவிட
வருகிறது - ப்யூர் சாண்டல்
டால்க். ஆஹா... இதன்
ஜிலுஜிலு குளுமையும் கமகம
நறுமணமும் உங்களை பகட்டாக
வைக்கிறது. எங்கும்
செல்லுங்கள், எதையும்
செய்யுங்கள். சந்தன மணத்தில்
நீங்கள் மட்டுமின்றி பிறரும்
லயித்து விடுவார்கள்.
நீங்கள் விரும்பும் வண்ணம் இருங்கள். முப்பொழுதும்.
SANTOOR
ஸந்தூர்
ப்யூர் சாண்டல் டால்க்
நறுமணம் எக்கணமும் உறவா

இந்தியா உலககோப்பையை வென்றிட எங்கள் வாழ்த்துக்கள்

நியூரிட் வழங்கும் அக்மி பரிசு போட்டி
ரூ.10,000
மதிப்புள்ள பரிசுகள்

முதல் பரிசு ரூ.5000

இரண்டாம் பரிசு ரூ.3000 ● மூன்றாம் பரிசு ரூ.2000

முதலில் வரும் 100 சரியான விடைகளுக்கான பரிசுகளும் உண்டு.

கீழ்கண்ட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதி மார்ச் 4ஆம் தேதிக்குள் எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

நியூரிட் இந்தியா லிமிட்.

(அதிக எண்ணிக்கையிலான எழுதுபொருள் தயாரிப்போர்)

த.பெ.எண்: 2925, சென்னை – 600 004.

வினாக்கள்:

1) 11–3–96 அன்று சென்னையில் நடைபெறும் கால் இறுதிப் போட்டியில் பங்கு பெறும் வாய்ப்புள்ள அணிகள் எவை?
2) வில்ஸ் உலககோப்பைப் போட்டித்தொடரின் சிறந்த ஆட்டக்காரராக யார் தேர்ந்தெடுக்கப்படலாம்?.
3) லாகூரில் நடைபெறும் வில்ஸ் உலககோப்பை இறுதிப் போட்டியில் பங்கு பெறக்கூடிய இரு அணிகள் எவை?
4) நியூரிட் – அக்மி பால் பேனாவில் பயன்படுத்தப்படும் பாலின் பெயர் என்ன?
5) பால் பேனா தவிர நியூரிட் இந்தியா நிறுவனம் தயாரிக்கும் வேறு மூன்று எழுது பொருட்களை குறிப்பிடுக.

(பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.)


நியூரிட் ®

அக்மி

பால் பேனாக்கள்



காஞ்சி காமகோடி பீடம் வேத பண்டிதர்கள், சாஸ்திர பண்டிதர்கள், அது போல சங்கீத வித்வான்களை எல்லாம் கௌரவித்துப் பட்டங்களை பரம்பரையாகக் கொடுத்து வந்தார்கள். இந்த ஆண்டு 'பெண்கள் பத்தாண்டுகளை'ச் சேர்ந்ததாக இருப்பதால் ஸ்ரீ மடம், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளாசி யுடன் பல துறைப் பெண்களைக் கௌரவித்தது. திருமதி. எம். எஸ். சுப்புலட்சுமி, டி.கே. பட்டம்மாள் ஆகியோருக்கு 'சங்கீத கலா ரத்னம்' விருதையும், பத்மா சுப்ர மண்யத்திற்கு 'பரத சாஸ்த்ர மணி' பட்டத்தையும், மேலும் பல கலைஞர்களுக்கு விருது களையும், ஸ்ரீ ஜயேந்திரர் வழங்கி னார்கள். பத்திரிகைத் துறையில் மஞ்சுளா ரமேஷ் 'மஹிளா தர்ம ப்ரசார ரத்னம்' எனும் விருது பெற்றார். விழா ஏற்பாடுகளை



• விருது பெறும் கலைஞர்களை ஆசீர்வதிக்கும் ஸ்ரீ ஜயேந்திரர்

அல்லல்பட்டு அழுதுகொண்டு இருப்பதற்கல்ல மனித வாழ்க்கை

திருமதி. நீலா இராமகிருஷ்ணன் தலைமையில் ஸ்ரீ ஜயேந்திர பக்த சமா ஜத்தின் பெண்கள் அமைப்பு செய்திருந்தது. இவ்விழாவினை யொட்டி ஸ்ரீ சுவாமிகள் நமக்கு அளித்த அருளுரை –

"பெண்கள் ஆண்களுக்கு நிக ராக எல்லாத் துறைகளிலும் வந்து கொண்டு இருக்கிறார்கள். முன் னேற்றம் என்ற பெயரால் நாம் பண்பாடு, கலாச்சாரம் இவைகளை மாற்றிக் கொள்ளாமல் அவைகளை யும் போற்றி வளர்த்துக் கொண்டு வருகிறார்கள். தற்போது பட்டம் பெறுபவர்களும் எந்த வேலை யையும், கலையையும் செய்

தாலும் வளர்த்தாலும் குடும்பப் பாசத் தோடும் ஆர்வத் தோடும் இருந்து கொண்டே தங்கள் கலைச் சேவையிலும் சிறப்பாக இருக்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறார்கள்.



• விருது பெற்ற கலைஞர்கள்

சினிமா, டீ.வி. போன்றவை மக்களை ஆகர்ஷிக்கின்ற நிலையிலும், இங்கே பட்டம் பெறுபவர்களுக்கு என்று நிறைய ரசிகப் பெருமக்கள் இருப்பது பாராட்டுதலுக்குரியது. மக்களுடைய மனதை ஒருமுகப் படுத்தி தூய்மைப்படுத்தி நலவழிப்படுத்தி அதன் மூலம் உலகிற்குத் தூய்மை, சாந்தி, சந்தோஷம், நேர்மையைக் கொடுக்கக்கூடிய வகையில் எந்தப் பணியாக இருந்தாலும் அவைகளை விடாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.

சரஸ்வதி தேவியால் வீணை வந்தது. நாரதகானம் தம்பூராவில் ஒன்றியிருக்கிறது. சர்வேஸ்வரன் நடராஜரால் நாட்டிய சாஸ்திரம் உலகுக்கு வந்தது. மிருதங்கம் நந்தி மூலம். வேணுகானம் கிருஷ்ணர் மூலம். இப்படி பழங்காலந்தொட்டு வரக் கூடியது சங்கீத சிட்சை வாத்தியங்கள், உபவாத்தியங்கள்.

உலகில் மக்கள் வாழ்க்கையில் எல்லாவித சுகங்களையும் அடைய வேண்டும். ஆனால் தருமத்திற்கு விரோதமில்லாமலும், மனிதனுடைய வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும், ஆன்மீக நிலையில் தெய்வீகத்தோடு தொடர்பு கொண்டதாகவும் உள்ளவற்றை கற்றுக் கொள்வது தான் நிலையான இன்பம் தரும் ஆன்மீக வாழ்க்கை மூலமாகத் தான் மனிதனுடைய வாழ்க்கை பூரணத்துவம் பெறுகிறது. அப்படிப் பூரணத்துவம் பெறுவதற்காகத்தான் மனிதப் பிறவியே கவலைப்பட்டுக் கொண்டு அழுது கொண்டு இருப்பதற்காக மனிதப் பிறவி அல்ல.

மனித வாழ்வில் சுகம் துக்கம் இரண்டும் தவிர்க்க முடியாதாகையால் ஆன்மீக வாழ்க்கை வாழ்வதன் மூலம் துன்பத்தின் வேகத்தைத் தணித்துக் கொள்ளலாம்."



• மஞ்சுளா ரமேஷ் • நீலா இராமகிருஷ்ணன்


அய்யய்யோ...
ரொம்ப ரொம்ப
Worry! No curry and
மாப்பிள்ளை is in a
big hurry. பாட்டி
போயாச்சு பாண்டி
ச்சேரி, taking away
the சாம்பார் பொடி.
Now how to make the
சாம்பாரு ரெடி?
Get Trupthi சாம்பாரப்
பொடி... ரொம்ப
ஈஸி, திருப்தி ராசி.
"பேஷ்...பேஷ்"
and no complaints.
TRUPTHI
SAMBAR POWDER
100 gms
சென்னா மசாலா * ரசப்பொடி * பாவ்பாஜி
கரம் மசாலா * சாம்பார் பொடி *
பெருங்காயத் தூள் * மஞ்சள் பொடி *
மிளகாய் பொடி * பிரியாணி மசாலா
* சாட் மசாலா
TRUPTHI
ஸ்பைசஸ் & மசாலாஸ்
அடடா, என்ன சுவை நொடியிலே!
NEPC
என் இ பி சி யின் தரமான தயாரிப்பு
என் இ பி சி அக்ரோஃபுட்ஸ் லிமிடெட்,
பதிவு அலுவலகம்: 36, வாலாஜா சாலை, சென்னை-600 006.
மார்க்கெட்டிங் அலுவலகம்: ஜீ-ஆர்.காம்ப்ளெக்ஸ் அனெக்ஸ்,
407-408 அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035.
டீலர்கள் தொடர்பு கொள்ளவும்.
R.K.SWAMY/BBDO NEPC 15053 TAM

நந்து ஸ்கூலுக்குப் போகிறான்

வீட்டுக்குள் வளைய வரவே பிடிக்கவில்லை.

சூரியனில்லாத பகல் பொழுது என ஒன்று இருக்குமானால் இப்படித்தான் இருக்குமோ?

ஆனால், இதற்காகத்தானே கடந்த இரண்டு மாதமாய் தவித்துப் போனோம். சித்திரை வெயிலை தூசாக்கி அலைந்து திரிந்தோம்.

யார், யாரிடமோ பல்லைக் காட்டி, பணிவை போர்த்தி முகத்தில்— அப்பப்பா!



நல்லவேளை! ஒன்றோடு நிறுத்திக் கொண்டது புத்திசாலித்தனமாய்படுகிறது.

பள்ளிக்கூடம் நடத்துகிறவர்கள் முகமூடி அணியாத கொள்ளைக் கூட்டம்தான். எப்படி அலையவிட்டு வேடிக்கை பார்த்தார்கள்!

எல்.கே.ஜி. அட்மிஷன் என்பது இப்போதெல்லாம் அமெரிக்கா போக விசா வாங்குவதை விட கடினமாகி விட்டதே!

என் சித்தி பையன் அமெரிக்கா போக முயற்சிக்கும் போது, தூதரகம் வாசலில் இரவெல்லாம் காத்திருந்து, அநாதையைப் போல தெருவோரம் படுத்திருந்து, காலையில் அதிகாரிகளை சந்திக்கும் வரை பிராணன் போய் விட்டது என்று சொன்னான்.

எல்.கே.ஜி.யில் சேர்க்கவும் அத்தனை முயற்சிகளும், இடர்களும் கலிகாலத்தில் பட வேண்டிய உள்ளது.

இத்தனை நேரம் நந்து வீட்டிலிருந்தால் சும்மா இருப்பானா? வீடே கலகலத்துப் போகும் விஷமம்.

பிறந்ததிலிருந்து மூன்று வருடமாய் காலையே சுற்றி வந்த குழந்தை இப்போது ஸ்கூலில்!

வீடே வெறிச்சோடி விட்டது என் மனசைப் போல.



பாவம், அழுதுகொண்டே ஸ்கூல் உள்ளே போனான்.

இங்கரி மாதிரி ஒரு ஆயா. அவளைப் பார்த்தால் எனக்கே பயமாயிருக்கிறது. குழந்தை உச்சஸ்தாயிக்குப் போய்விட்டான் பார்த்ததும்.

குழந்தையை எப்படி வெடுக்கென்று பறித்து உள்ளே அனுப்பினாள்.

பூப்போல உடம்பு நந்துவுக்கு. ஆயாவின் பிடியே வலித்திருக்கும். குழந்தைகளை நளினமாக, மிருதுவாகக் கையாள வேண்டாமா? என்ன ஆயா இவள்?

வகுப்பில் இத்தனை நேரம் அழுகையை நிறுத்தியிருப்பானா? கலங்கிப் போன குட்டி முகத்துடன் 'அம்மா, போகாதே' என்று கையை, காலை உதறி அவன் அழுததைப் பார்த்து எனக்கே கண்ணில் நீர்கோர்த்துக் கொண்டது.

புதுச்சட்டை ஜோரில் என்ன சமர்த்தாய் ஸ்கூலுக்குக் கிளம்பினான். லஞ்சமாய் ஃபைவ் ஸ்டார் சாக்லேட். அவன் அப்பாவின் உபயம்.

இவராவது இன்று ஆபீசுக்கு லீவு போட்டிருக்கலாம். என்று போட்டிருக்கிறார் இன்று

கிருஷ்ணா

போட? ஆபீஸ்தான் அவருக்கு முதல் பொண்டாட்டி. பிரைவேட் கம்பெனி. ஓடித்தானே ஆக வேண்டும்.

வெண்டைக்காயை நறுக்க ஆரம்பித்தேன். தேங்காய் போட்டு வதக்கினால் நந்துவுக்கு மிகவும் இஷ்டம்.

வீட்டின் சின்ன அசைவும் பெரும் ஓசையாய் கேட்டது. குடுகுடுவென ரூமுக்குள் ஓடி, டேபிளில் ஏறி, அலமாரியைக் கலைத்து, 'நந்து என்ன பண்றே? விஷமம் செய்யாதே!'

இப்படி நான் வாயை மூடிக் கொண்டு காரியம் பார்க்கவே பிடிக்கவில்லை. ப்ச!

ஸ்கூலில்தான் எப்படி அழுதன குழந்தைகள். பூச்சாண்டி பிடித்துக் கொண்டு போவது போல ஒரே ஆர்ப்பாட்டம்.

பரவாயில்லை டீச்சர்கள்! ஓரளவு கமுகமாய் கொஞ்சி, கெஞ்சி, சமாதானப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

அந்த ஆயா எதற்கோ லேசாய் வகுப்பின் கதவைத் திறக்க முயல, அவன் கால் இடுக்கு வழியே நுழைந்து, நந்து, என்னை நோக்கி வர முயல, 'மிஸ்' ஓடி வந்து தூக்கிக் கொள்ள... இப்போது நினைத்தால் சிரிப்பாய் வருகிறது.

எல்.கே.ஜி. முழு வருடமும் என் மூத்த பொண்ணு அழுதா, தெரியுமோ?

தன் இரண்டாவது குழந்தையுடன் வந்திருந்த ஒரு மாமி ஸ்கூல் வாசலில் சொன்னது ஞாபகம் வந்தது.

நந்து எப்படியோ? அவன் கொஞ்சம் தைரியசாலிதான். புது இடம், பழைய இடம் என்ற வேற்றுமை என்றுமே கிடையாது. எங்கு அழைத்துச் சென்றாலும் இரண்டே நிமிடத்தில் விஷமத்தை ஆரம்பித்து விடுவான்.

போன வாரம் கூட இவர் ஆபீஸ் நண்பர் வீட்டுக்குப் போன போது, டைம்பீஸ் அக்கக்கானது இவன் உபயமாகி, ரிப்பேர் செலவு நூறு ரூபாய் பழுத்து விட்டதே!

வாசலில் ஐஸ் வண்டி சத்தம். கப் ஐஸ்கிரீம்!

நந்து இருந்தால் இத்தனை நேரம் ரகளைதான்.

"ஐஸ்மேன், ஐஸ்மேன்"

வாசல் க்ரில் கேட்டில் நின்றபடி கூப்பிட்டு விடுவான்.

"அம்மா, நான் வேண்டாம்னு சொன்னப்புறமும் அந்த ஐஸ்மேன் போக மாட்டேங்கறாம்மா. பாவம் இல்லை அவன்! கொஞ்சூண்டு ஐஸ்க்ரீம் வாங்கிப்போமா?"

அப்பாவியாய் முகத்தை வைத்தபடி அவன் கேட்கும் போது அதன் பின்னே கண்ணில் மிளிரும் குறும்பில் என் கோபமெல்லாம் சிட்டாய் பறந்து விடும்.

நல்லவேளை, ஸ்கூல் அரை வேளைதான். ஒரு மணிக்கெல்லாம் போய் கூட்டி வர வேண்டும். பத்து நிமிஷ நடைதான் ஸ்கூலுக்கு.

வெடுக், வெடுக்கென்று மாவடுவை கடித்தாற்போல பேச்சு! பதில் சொல்லி மாளாது.

குக்கர் ஆகிவிட்டது. சாம்பாரும் ரெடி. வெண்டைக்காய் வதக்கல் அடுப்பில்.

நேரமாகிவிட்டது. நீண்ட வருடங்கள் கழித்து மகனைப் பார்க்கப் போவது போல பரிதவிப்பு. மூன்று மணி நேரப் பிரிவுக்கே இப்படி அல்லாடுகிறேனே! போகப் போக சரியாகி விடுமோ?

பரபரப்பாய் கிளம்பினேன். கையில் குடை, வெய்யில் இன்று பரவாயில்லை. டிராபிக் கூட குறைச்சலாய். வேக நடை. எட்டிப் போட்டேன். அதோ ஸ்கூல்.

எனக்கு முன்பே நிறைய பேர். எல்லா அம்மாக்கள் முகத்திலும் அதே தவிப்பு. கண்களும், உடலும் எப்படி ஸ்கூல் உள்ளே எட்டிப் பார்த்து தேடுகின்றன!

வரிசையாய் குழந்தைகள். ஒவ்வொருவராய் வெளியே வருகின்றனர்.

"அம்மா!" – அலறலாய் அழுகை. முகத்தில் கண்ணீர் கோடுகள். தடயமாய் கறைகள்.

பாய்ந்து வந்து கட்டிக் கொள்கிறான் நந்து. மூக, மூக என்று அழுகை. எனக்கும் அழுகை வர மாறி, மாறி கன்னத்தில் முத்தமிட்டேன்.

என் குழந்தையைக் கொஞ்ச என்ன வெட்கம்? நடுரோடாய் இருந்தால்தான் என்ன?

முதுகு வலித்தாலும் இறக்கி விட மனசில்லாமல் தூக்கிக் கொண்டே நடக்கிறேன்.

'வாட்டர் பேக்' கையில் இடித்து ஆடுகிறது.

"இனிமே நான் ஸ்கூலுக்குப் போ மாட்டேன்."

பெரிதாய் கத்துகிறான். புன்னகையுடன் இறுக்கிக் கொண்டேன்.

வீடு இப்போதுதான் நிறைவாய் படுகிறது.

"நந்து, இதோ பார்"

"ஹையா! வெண்டைக்காய்... ம்... பிரின்ஜால்.. இல்லை... லே.. லேடீஸ் பிங்கர்"

தன் ஆங்கிலப் புலமையை அவன் பறைசாற்ற எனக்குப் பெருமை தாங்கவில்லை.

"ஸ்கூலில் அழுதியாடா கண்ணா?"

" 'பேட் பாய்ஸ்'தான் அழுவாங்களாம் மிஸ் சொன்னா. நான்தான் குட் பாய் ஆச்சே"

"அட சமர்த்து"

திருஷ்டி கழித்தேன்.

"எனக்கு அந்த மிஸ்ஸை ரொம்பப் பிடிச்சிருக்கும்மா."

"யாரு?"

"அலமேலு மிஸ்! பிங்க் கலர் சேலை கட்டியிருந்தாங்களே."

யார் அது? புரியாமல் பார்த்தேன்.

"இந்தா பருப்பு சாதம்."

ரெண்டு வாய் கூட வாங்கிக் கொள்ளவில்லை ரூமுக்குள் ஓடினான்.

"ஏய், இங்கே வாடா கண்ணா. சாப்பிடணும்."

"வேண்டாம், எனக்கு முருங்கைக்காய் வேணும்."

"நாளைக்குத் தரேன்."

"இப்பவே வேணும்."

"ஆரம்பிச்சுட்டியா? ஓடி வா. உனக்குக் கதை சொல்றேன்."

"ஃபர்ஸ்ட் முருங்கைக்காய். அப்புறம் கதை."

வாசலுக்கு ஓடினான். ரெண்டு தரம் வெய்யிலில் நடந்தது களைப்பாய் இருந்தது.

"நந்து கண்ணா"

என்னிடம் சிக்காமல் சமையலடிக்குள் ஓட... தடால்!

அத்தனை சாம்பாரும் தரையில். மேடையில் வைத்திருந்ததை தட்டி விட்டு விட்டு சட்டென நகர்ந்து விட்டான்.


"சனியனே, வாலு ஒண்ணுதான் பாக்கி. பேசாம, மத்தியானமும் ஸ்கூல் வைச்சுத் தொலைச்சிருக்கலாம் உனக்கு."

முதுகில் என் கை பதிய நந்துவின் கோரோஜனைக் குரல் எட்டுதிக்கும் அலறியது.



சுவாமி படங்களைத் துடைக்கும் தண்ணீரில், கற்பூரத்தைக் கரைத்துத் துடைத்தால், பூச்சி அரிக்காது (படத்தை).

– ஆர். பார்வதி



உங்களுடைய பின்புறம் சிவப்பாக, ரணமாக எரிச்சலுடன் இருந்தால், 'உங்களுக்கு' எப்படி இருக்கும்?

குழந்தையின் மேனி, உங்களுடையதை விட பலமடங்கு மென்மையானது. எனவே அதற்கு நோய் தொற்றும் வாய்ப்பும் கூடுதலானது. குறிப்பாக, நனைந்த நேப்பியின் அந்த இருட்டுப் பகுதி. இங்குதான் பாக்டீரியாக்கள் குடிகொள்கின்றன. இதனால் சிவப்பான எரிச்சலுடன் கூடிய ரணம் உண்டாகிறது. இதுவே 'நேப்பி ரேஷ்' எனப்படும்.

அறிமுகப்படுத்துகிறோம் - ஜான்ஸன்ஸ் பேபி நேப்பி ரேஷ் கிரீம் மென்மையான ஆன்ட்டிசெப்டிக் கிரீம். இது குழந்தையின் பின்புறத்தை பாதுகாக்கிறது. கிருமிகள் வருவதை தடுக்கிறது. இதிலுள்ள விசேஷ உட்பொருள், வலியுடன் கூடிய சொறியை சாந்தப்படுத்துகிறது. அதோடு, குழந்தையின் மேனிக்கும் நேப்பிக்கும் நடுவே ஒரு பாதுகாப்பு தடுப்பாக இருந்து, உராய்வை குறைக்கிறது. எனவே எரிச்சலும் இல்லை, சொறியும் இல்லை.



வேதனையுடன் கூடிய 'நேப்பி ரேஷ்' -லிருந்து குணப்படுத்துகிறது

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

உலக அளவில் பெண்களின் முன்னேற்றம்!

உலக அளவில் பெண்களின் நிலை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது என்று ஒரு பிரிட்டன் ஆய்வு அறிக்கை கூறுகிறது.

அமெரிக்கா போன்ற வல்லரசுகளிலும் சரி, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளிலும் சரி, இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளிலும் சரி - பெண்களின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது.

திருமதி தாட்சர், திருமதி இந்திரா காந்தி, திருமதி கோல்டா மேயர் போன்ற தலைவர்கள் அன்று பிரபலமானவர்கள். இன்று திருமதி பெனாசிர், திருமதி சந்திரிகா, திருமதி ஹிலாரி போன்றோர் பிரபலமானவர்களாக இருக்கிறார்கள். அரசியல் துறையில் பல நாடுகளில் பெண்களின் ஆதிக்கம் மறைமுகமாக இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

கல்வி நிலை என்று பார்த்தால் 70, 80 களில் பெண்களில் 45 முதல் 55 சதவிகிதத்தினர்தான் சராசரியாக உலக அளவில் கல்வியறிவு பெற்றவர்களாக இருந்தார்கள். இன்று அந்த நிலை மாறி சராசரியாக 65 சதவிகிதத்தைத் தொட்டுள்ளது. இந்தியாவில் (1955) 55 சதவிகிதப் பெண்கள் கல்வியறிவு பெற்றவர்கள்.

விண்கலத்தில் பயணம் செய்து ஆய்வு நடத்தக் கூட இன்றைய பெண்கள் தயார் நிலையில்தான் உள்ளனர். கம்ப்யூட்டர் சாஃப்ட் வேரில் ஆண்களைவிடப் பெண்களின் பங்குதான் கணிசமாக உள்ளது.

தகவல்களைச் சேகரிப்பதிலும், தகவல்களைக் கம்ப்யூட்டரில் கொடுத்து ஆய்வு செய்வதிலும் பெண்கள் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். அமெரிக்கா, பிரிட்டன் இந்த இரண்டு நாடுகளிலும் பெண் எக்ஸிக்யூடிவ்களின் எண்ணிக்கை சமீப காலமாக இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.



''குடும்பம், குழந்தை இந்த இரண்டிலும் பெண்கள் கவனம் செலுத்தாமல் இல்லை. அதேசமயம் மாறிவரும் உலகத்தில் இருபாலாரின் சம்பாத்தியமும் குடும்பம் நடத்தத் தேவை என்பதால் வேலைக்குச் செல்ல அவசிய





மாகிறது'' என்கிறார் ஹாங்காங் பெண்மணி ரோசியானா. பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து ஹாங்காங் அடுத்த ஆண்டு வாக்கில் சீனாவின் கைக்கு மாற இருக்கிறது. இதுவரை சுதந்திரக் காற்றைச் சுவாசித்து வந்த நாங்கள் சீனா பக்கம் ஹாங்காங் போனால் என்ன ஆகுமோ? என்று பயப்படுகிறோம். சீரான தொழில் வளர்ச்சி, முன்னேற்றம் இரண்டும் ஹாங்காங்கில் இருந்தது. ஹாங்காங் பெண்மணிகள் அடிமைகள் என்று நினைப்பதை வெறுப்பவர்கள். உழைக்கத் துடிப்பவர்கள். உழைப்பால் தானும் உயர்ந்து நாட்டையும் உயர்த்த முடியும் என்று எண்ணுபவர்கள்'' என்கிறார் ரோசியானா.

முஸ்லிம் நாடுகளில் கூட பெண்களின் நிலை சற்று மாறித்தான் உள்ளது. பழைமையைப் பெண்கள் மீறாவிட்டாலும் சமூகத்தில் தங்களுடைய பங்கேற்பு கணிசமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். தொழில் நுட்பப் படிப்பு, விளையாட்டுத் துறை இரண்டிலும் முஸ்லிம் பெண்களின் நிலை உயர்ந்துள்ளது என்றே சொல்ல வேண்டும். உலக மனித மேம்பாட்டுத் துறை (Women's human development indicators) பெண்களின் கல்வியறிவை கணித்துள்ளது. இதன்படி பங்களாதேஷில் 51 சதவிகிதத்தினரும், பாகிஸ்தானில் 47 சதவிகிதத்தினரும், துபாயில் 60 சதவிகிதத்தினரும் பெண்கள் கல்விமான்களாக உள்ளனர். ஒரு காலத்தில் பொது இடங்களில் முஸ்லிம் பெண்கள் நடமாடவே பயப்படுவார்கள். ஆனால் இன்றோ சீனாவில் நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கேற்பு கணிசமாக உள்ளது. இப்போதைய தாராளமயமாக்கல் கொள்கையால் பல நாடுகளில் வேலை வாய்ப்பு உருவாகியுள்ளது. பொருள்களின்

தரம், பொருள்களின் உற்பத்தி நிலை, பொருள்களின் விநியோகம் இவைகளில் பெண்களின் வேலை வாய்ப்பு நிலை குறைந்துள்ளது என்று சொன்னாலும் புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் தனியார் வசமாகும் தொழில்களில் பெண் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

விவசாய நாடுகளில் பெண்களின் நிலை இன்னும் பத்தாண்டுகளுக்கு முன்னேற்றம் கண்டுகொண்டுதான் இருக்கும். குடிசைத் தொழில்களில் ஆண்களைவிடப் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கைதான் அதிகம். பிலிப்பைன்ஸ், தைவான், ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் குடிசைத் தொழிலில் கொடி நாட்டி வருபவர்கள் பெண்கள்தான். சமையலறைப் பதுமைகளாக இருந்து கரண்டி பிடித்த கைகள் புகையிலைத் தூளை இலையில் வைத்து மடக்கி சிகரெட்டு சுற்றுவதில் இன்று முன்னணியில் இருக்கின்றன! இந்தியாவில் தென் தமிழகத்தில் பீடி சுற்றக் கூடியவர்கள் அதிகம் பேர் பெண்கள்தான்!

வங்கிப் பணியில் பெண்களையே அதிகமாக பிரிட்டன், அமெரிக்கா, சிங்கப்பூர், இத்தாலி போன்ற நாடுகள் விரும்புகின்றன. கனிவான வார்த்தை, விரைவான பணி, நிதானமான சீரான உழைப்பு இவற்றுக்குப் பெண்கள் முற்றிலும் தகுதியுடையவர்கள் என்று கருதப்படுகிறது. பெண் வங்கி ஊழியர்களின் எண்ணிக்கை கடந்த பத்து ஆண்டுகளில் மூன்று மடங்காகியுள்ளது!

விளம்பரத் துறையில் பெண்களின் ஆதிக்கம்தான் மேலோங்கியுள்ளது. பெண்களை வைத்துக் கொண்டுதான் எந்தப் பொருளும் விளம்பரப்படுத்தப்படுகின்றது. பெண்களை விளம்பரப் பொருளாக்கிக் கொச்சைப் படுத்தும் போது பெண் அமைப்புக்களிடமிருந்து கூக்குரலும் கடந்த பத்தாண்டுகளாக மேலோங்கி ஒலிக்கத்தான் செய்கிறது. ஒரு காலத்தில் தன் கணவனிடமே வேண்டியதைச் சொல்ல பயந்த பெண்ணினம் கடந்த பத்தாண்டுகளில் பெரும் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வீதிக்கு வந்து போராடத் தயாராகிவிட்டது. குழந்தைகளைக் கொல்வதை நிறுத்தவும், கருச்சிதைவைத் தடுக்கவும், பெண் தன் உரிமையைப் பெறவும் பல போராட்டங்கள் பல நாடுகளில் நடந்த வண்ணம்தான் உள்ளது!

இராணுவப் பிரிவில் கூடப் பெண்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. தகவல் பரிமாற்றம், விமானப் போக்குவரத்து இவற்றில் பெண்கள் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சந்தோஷமான விஷயம் - ஆண்களைவிட தேக ஆரோக்கியத்தில் பெண்கள்தான் இன்று முன்னணியில் உள்ளனர். கெட்ட பழக்கங்கள் பெண்மணிகளிடையே குறைவு என்பதாலும், ஆண்களைவிட சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்கு பெண்களுக்கு நேரம் அதிகம் கிடைக்கிறது என்பதாலும் பெண்களின் உடல் ஆரோக்கியம் நன்றாக உள்ளது!

தொகுப்பு :

கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்

படங்கள் - நன்றி : 'எகனாமிக் ரெவியூ'




இரவு சாம்பார் சாதம் செய்யும்போது அதனுடன் ரசத்தை இறுத்து அதன் அடியில் தங்கும் பருப்புடன் கூடிய விழுதையும் சேர்க்கலாம். சாதம் சுவையுடன் இருக்கும். பருப்பு வீணாகாமலும் இருக்கும்.

- லக்ஷ்மி சிவகுமார்

வெடிப்புகளிலிருந்து விடுதலை பெற்று, பாதங்கள் மீண்டும் அழகுறும் - 14 நாட்களி

வெடிப்புகள் எவ்வளவு அருவருப்பாக மற்றும் வலியூட்டுவதாக உள்ளன. கோல்ட் க்ரீம் மற்றும் ஜெல்லி மிகக் குறைந்த காலத்திற்கே ஆறுத



அளிக்கவல்லது. ஆனால், மனம் தளர வேண்டாம். இப்போது உள்ளது தனிச்சிறப்பாக தயாரிக்கப்பட்ட புதிய க்ராக் க்ரீம். இதன் சிறப்பான ''ஈ ஹெச்'' (எமோலியன்ட் ஹீலர்) ஃபார்முலா மற்றும் இதில் கலந்துள்ள அரிய மூலிகைகள் வெடிப்புகளில் ஆழ்ந்து ஊடுருவிச் சென்று உங்களுக்கு உடனடி ஆறுதல் அளிக்கிறது. 14 நாட்களில் * நீங்கள் பூரண குணம் பெறுகிறீர்கள். உங்கள் பாதங்களும் அவ்வாறே பொலிவுடன் விளங்குகின்றன எவ்வாறு உங்கள் அழகான முகம் விளங்குவதுபோல். *க்ராக் க்ரீம் தினமும் 3 முறை தடவுங்கள். இதைத் தடவியபின் 15 நிமிடங்கள் வரை உலரவிடுங்கள்.



க்ராக் ஆண்டிசெப்டிக் க்ரீ



நிதியுதவி சேவைத் துறையில் ஒவ்வொரு நிமிடமும் ஏதாவது மாறுதல் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. அப்படியெனில் கடந்த 50 ஆண்டுகளில் எத்தனை மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். ஆனால் கூர்ந்து கவனித்தால், ஒரு சில முக்கியமான விஷயங்கள் இன்னும் மாறவே இல்லை.

எடுத்துக்காட்டாக, இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியாவில் (ITI) தழைத்தோங்கி இருக்கும் திடநம்பிக்கை மற்றும் சேவைமிக்க பாரம்பரியம். கடந்த 50 ஆண்டுகளாக எங்கள் மதிப்பு மிக்க நிறுவனர் திரு. C.M. கோத்தாரி அவர்களின் முன்னோக்குக் கொள்கைகளால் எங்களது வணிகத்தின் ஒவ்வொரு அம்சமும் செயலூக்கம் பெற்றுள்ளது. ஒரு நிதி நிறுவனம் நீண்ட காலத்துக்கு தழைத்தோங்கி இருக்க ஒரு மதிப்புயர்ந்த சொத்து என்னவெனில், அதன் வாடிக்கையாளர்களின் திட நம்பிக்கைதான் என்பதை அவர் உறுதிபடக் கடைப்பிடித்து வந்தார். வாடிக்கையாளர்களுக்கு செய்யப்படும் சேவையை ஆழ்ந்த பொறுப்புடன் செய்வதுதான் வெற்றிக்கு வழி என நம்பினார்.

ITI – 50 ஆண்டு திட நம்பிக்கை மற்றும் சிறந்த சேவை

இந்த ஆண்டு ITI, திட நம்பிக்கை மற்றும் சிறந்த சேவை செய்யும் பாரம்பரியத்தின் பொன்விழாவைக் கொண்டாடுகிறது. லீசிங், பிக்செட் டெபாசிட்டுகள், மர்ச்சென்ட் பாங்கிங், மியூச்சுவல் ஃபண்டுகள், ஹயர் பர்ச்சேஸ் மற்றும் நிதியுதவி சேவைகள் உள்பட எல்லா துறைகளிலும் நாங்கள் ஒரேசீரான வளர்ச்சியையும் சாதனைகளையும் குறிக்கும் பொன்னான 50 ஆண்டுகளைக் கொண்டாடுகிறோம். இந்த ஆண்டு ITI, நம்பகமான செயல்பாட்டைக் குறிக்கும் 50 ஆண்டுகளைப் பொன்விழாவாகக் கொண்டாடுகிறது.

A TRADITION OF TRUST & SERVICE
SINCE 1946
FIFTY GOLDEN YEARS

தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிட்.

(ஒரு H.C. கோத்தாரி குரூப் நிறுவனம்)

"மஷ்கூர் பில்டிங்ஸ்", 1 கிருஷ்ணமாச்சாரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
தொ.பே: 8276297, 8274871, 8274885, 8271691, 8255682.

மங்கையர் மலர் & மீரா ஹெர்பல் பவுடர் இணைந்து வழங்கும் கூந்தல் பராமரிப்புப் பக்கங்கள்



ஈரத் தலையில் சீவலாமா?

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே இருக்கிறது. போகிற போக்கில் நடுத்தரக் குடும்பத்தினர் 'தங்கம்' என்று எழுதித்தான் பார்த்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

இந்த விலை உயர்வை ஈடுகட்ட இப்பொழுதெல்லாம், தங்கமில்லாத அதே சமயம் வேறுவிதமான உலோகங்களில் கழுத்து, கை, காதுகளை அலங்கரிக்க ஆபரணங்கள் வந்துள்ளன.

புடைவை, ஜாக்கெட்டுக்கு ஏற்ற கலரில் (அல்லது தற்போதைய நாகரீகமான மாறுபட்ட கலரில் ஆபரணங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. முன்பெல்லாம் திருமணம் போன்ற பொது நிகழ்ச்சிக்குப் போகும் போது பெண்கள் தங்க நகை அணிவதையே அந்தஸ்தாக நினைப்பார்கள். ஆனால் இப்பொழுது அப்படியல்ல, நவ நாகரீக ஆபரணங்கள் அணிவதால் பெண்கள் மற்றவர்களால் கவரப்படுகிறார்கள். இதையே விரும்புகிறார்கள்.

காதுக்கு சாதாரண தோட்டுக்குப் பதிலாக நீளமாக தொங்கும் வகை மாட்டல்கள் அணிவது அழகாக உள்ளது. தங்கமில்லாமல் ஃபேஷன் நகைகளாக இவை கிடைக்கின்றன. நன்றாகவும் இருக்கிறது. புடைவை, சுடிதாருக்கு ஏற்ற கலரில் கைகளில் நிறைய வளையல் போட்டுக் கொண்டாலும் அழகாக இருக்கும்.

பெண்களே! என்னதான் பொன்னகை அணிந்தாலும் உங்கள் மனம் நிறைந்த புன்னகைக்கு ஈடுகட்ட முடியுமா?



அம்மா இத்தனை வருடங்களாக மறைத்து வைத்திருந்த ரகசியம்

? எனக்கு மூக்கின் இரு ஓரங்களிலும் மிகவும் கருப்பாக உள்ளது. இதற்கு வீட்டிலேயே செய்யுமாறு ஏதாவது எளிய வைத்தியம் இருந்தால் கூறவும்.

கற்பகம், கோவை.

! மூக்கின் ஓரங்களில் உள்ள கருப்புக்கு, தினமும் ஆவி பிடித்து பஞ்சால் மூக்கின் ஓரங்களை துடைத்து எடுப்பது ஓரளவு பலன் தரும். நல்ல கொதிக்கும் நீரில் முகத்தைக் காட்டி ஆவி பிடித்தால், நீராவியால் முகம் ஓரளவு சுத்தமாகும்.

? என் மகனுக்கு வயது 2. அவனுக்கு தலையின் பின்புறம், வலது, இடது இரண்டு சைடிலும் குறிப்பிட்ட இடத்தில் மாத்திரம் முடி இல்லாமல், குறைவாக உள்ளது. ஆனால், மற்ற இடங்களில் முடி அடர்த்தியாக சீராக உள்ளது. எல்லா இடங்களிலும் முடி சீராக, அடர்த்தியாக வளர என்ன வழி? அடிக்கடி மொட்டை அடித்தால் சரியாகி விடுமா?

? எனக்கு பிரசவம் கழிந்த பிறகு, மூக்கின் வலது பாகத்தில் கறுப்பாக தழும்பு மாதிரி கண் வரை வந்தது. அதை ப்யூட்டி பார்லரில் சரிசெய்து விடுவார்களா? இல்லை ஸ்கின் டாக்டரிடம் காண்பிக்க வேண்டுமா?

? என் கணவருக்கு முடி உதிர்ந்து கொண்டே இருக்கிறது. அவர் ஈரத் தலையில் சீவும் பழக்கம் உள்ளவர். அதை நிறுத்தி விட்டால் முடி உதிர்வது குறைந்து விடுமா?

எஸ். மாலதி, கேரளா.

! இரண்டு வயதுக் குழந்தை முடி பிரச்னை பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாளடைவில் முடி வளரும். மூக்கின் வலது பாகத்தில் உள்ள தழும்பு பார்லர் போனால் சரியாகும். ஆனால் அந்தத் தழும்பு வேறு விதமான தோல் பிரச்சனையாக இருப்பின் தோல் வைத்தியரிடம் போவது நல்லது. ஈரத்தலையோடு சீவும் பழக்கம் இருந்தால் நிச்சயம் முடி கொட்டும்.

? என் முகத்தில், மூக்கின் கீழ் அதிகம் முடி இருக்கிறது. இதனை, இந்த முடியை நிரந்தரமாக வீட்டிலேயே கொட்டச் செய்வதற்கும் போக்குவதற்கும் எனக்கு ஒரு நல்ல யோசனை கூறுங்கள், ப்ளீஸ்?

பதில்கள் : மைதிலி பாபு

ம. மலர் வாசகி.

! மூக்கின் கீழ் உள்ள முடியை வீட்டிலேயே போக்க முடியாது. நீங்கள் நல்ல பார்லருக்குச் சென்று எலக்ட்ராலிஸஸ் செய்யலாம். இல்லை, முடி வளர்ச்சி அதிகமாக இருப்பின், வைத்தியரைப் பார்த்து 'ஹார்மோனல் இம்பாலன்ஸ்' பிரச்னை உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

? எனக்கு வயது 23 ஆகிறது. என் தலையில் நடுவிலும், முன் மண்டையிலும் முடி கொட்டி விட்டது. எங்கள் பரம்பரையில் யாருக்கும் வழுக்கை இல்லை. எனக்கு 17 வயது இருக்கும் போது தலையில் அரிப்பு ஏற்பட்டது. அதை அனைவரும் அழுக்கு என்று சொல்லி நன்கு தலையை கசக்கச் சொன்னார்கள். நானும் ஷாம்பூ, சீயக்காய், சோப்பு என்று பலவற்றை உபயோகித்தேன். அன்று முதல் முடிகொட்டத்

தொடங்கிற்று. இன்னும் கொட்டிக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் இப்போது இரண்டு வருடமாக நான் சீயக்காய் தவிர வேறு ஏதும் உபயோகிப்பது இல்லை. ஆனாலும் முடி கொட்டுகிறது. வழுக்கை விழுந்து இருப்பதால் என்னைப் பார்க்கும் போது 30 வயது ஆனவன் போல் தெரிகிறது. ஆகையால்தான் நான் கல்லூரிக்குக் கூட செல்லவில்லை. தாங்கள்தான் எனக்கு உதவ வேண்டும்.

எஸ். சண்முகம், செங்கை.

! தலையில் வழுக்கை, அரிப்பு ஏற்படக் காரணம் உங்களுக்குப் பொடுகு அதிகமாக இருப்பதுதான். தலையில் பொடுகு அதிகமாகி விட்டால் அரிப்பு ஏற்பட்டு வழுக்கை விழுகிறது. இதைப் பூச்சி வெட்டு என்பர். இதற்கு நீங்கள் நல்ல தோல் வைத்தியரைப் பார்க்கலாம். நீங்கள் ஷாம்பூ, சீயக்காய், சோப்பு என்ன உபயோகித்தாலும் தலையில் உள்ள பொடுகை நீக்காவிடில் தீர்வு ஏற்படாது.

? எனக்கு வயது 13. என் கால்களிலும் மற்ற முக பகுதிகளிலும் முடிகள் அதிகமாக உள்ளன. மேலும் என் முகத்தில் பருக்கள் உண்டு. என் முகம் எப்போதும் பளபளப்பாக இருப்பதில்லை. இந்த மூன்று குறைகளும் நீங்க தாங்கள் வீட்டிலிருந்தே செய்யும் முறை ஒன்றைக் கூறுங்கள். மேலும் நான் யூனிஃபார்ம் (சுடிதார்) பெரிய கழுத்து வைத்து அணிவதால் என் கழுத்து மட்டும் சற்று கறுப்பாக உள்ளது. தாங்கள் இதற்கும் வீட்டிலிருந்து செய்யும் முறை ஒன்றைச் சொல்லுங்கள்?

கலா விக்னேஸ்வரி.

! கால், முகத்தில் உள்ள முடிகள் நீங்க வாக்ஸிங் செய்ய வேண்டும். ஆனால் சரியான முறையில் வாக்ஸிங் செய்யாவிட்டால், முடி மறுபடியும் 'கன்னாபின்னா'வென்று வளரும். வாக்ஸ் செய்யும் விதிமுறைகள் தெரிய வேண்டும். இதேதான் முகத்தில் உள்ள பருக்கள் பிரச்சனையும், பருவுக்கான அடிப்படை காரணத்தைப் பார்க்க வேண்டும். பிறகுதான், தீர்வு காண முடியும். கழுத்து கறுப்பாக இருப்பதற்கு கடலைமாவு (அ) பயத்தமாவு போட்டு தேய்த்துக் குளிக்கலாம். வீட்டிலேயே நீங்கள் எது செய்தாலும், அடிப்படைக் காரணம் தெரியாவிடில், உங்கள் பிரச்னைக்குத் தீர்வு காண்பது கடினம்.

? முகம் பளபளப்பாக இருப்பதற்கு பால் ஏடு + கடலை மாவு + எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசினால் நல்லது என்று தாங்கள் பலமுறை கூறியிருக்கிறீர்கள். இந்தக் கலவையைக் கலந்து பிரிஜ்ஜில் வைத்து உபயோகப்படுத்தலாமா? தினமும் முகத்தில் பூசலாமா? அல்லது வாரம் ஒரு முறைதானா? வசம்பு அரைத்துத் தலைக்குத் தேய்த்துக் குளித்தால் பொடுகு + பேன் போகும் என்று எனது உறவினர் சொல்கிறார் செய்யலாமா?


ஆர். கௌசல்யா, மதுரை – 20.

! பால் ஏடு + கடலை மாவு + எலுமிச்சைச் சாறு தினமும் முகத்திற்குப் பூசலாம். சோப்புக்குப் பதிலாக இதை முகத்திற்கு உபயோகப்படுத்தலாம். இதனைக் கலந்து பிரிஜ்ஜில் வைப்பதற்குப் பதில் இந்தக் கலவையை அவ்வப்போது குழைத்து முகத்திற்குப் பூசிக் கொள்ளலாம்.

வசம்பு அரைத்துத் தலைக்குக் குளித்தால் பொடுகு + பேன் போகும் என்பது உண்மையே. வசம்பு வாசனை தலையில் இருக்கும் வரை பேன் அண்டாது.

முள்ளங்கி சாம்பார் எப்பவும் நீர்த்தாற் போலிருக்கும். முள்ளங்கியுடன் பரங்கிக்காயையும், நறுக்கி வேகவிட்டுச் சாம்பார் செய்யுங்கள். 'சாம்பார் தண்ணியா இருக்கே' என்று புகார் சொல்லாமல், அடடே நல்லாயிருக்கு' என்பார்கள்.

– கௌரி கணபதி



மீரா தரும் ரூ.1000/- மதிப்புள்ள குக்கர் பரிசு பெற்ற கட்டுரை

பொன் மொழிகளும், புனித தலைவர்களும் குடியிருக்கும் – புனித வளாகம்.

ஆபீஸில் கண்ட அலங்காரம்

ஜவுளி வியாபாரம் தொடர்பாக, நான் இதுவரை ஏராளமான நிறுவனங்களையும், பெரிய அதிகாரிகளையும் சந்தித்துள்ளேன். சந்தித்தும் வருகிறேன்.

ஒவ்வொரு "டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தையும், நிறுவன அதிபர்களையும் உன்னிப்பாகக் கவனிப்பேன். அப்படி கவனித்த போது ஒரு நிறுவனத்தின் நிர்வாக அலங்காரம் என்னைக் கவர்ந்தது. அதைவிட துல்லியமாக மனதில் நிறைந்தது அந்த நிறுவனத்தின் 'ஆபீஸ்' அலங்காரம் தான். கோயமுத்தூர்- தமிழ் நாட்டின் மான்செஸ்டர். அங்கு மிக பிரமாண்டமான பெரிய டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம். ஆயிரக்கணக்கான மக்கள் பணிபுரியும் அற்புதமான கம்பெனி அது. வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் அளவு முன்னேறிய நிறுவனம். (புடைவை, பனியன், நைட்டி- என ஆர்டருக்கு ஏற்ப) 3- மாடிகள் கொண்டது.

கீழ் உள்ள முதல் கட்டிடத்தில் மெஷின்கள், மற்றும் ஆடைகள் தயாரிப்பு- நடைபெறும்.

இரண்டாவது தளத்தில் செக்கிங், பிரிவும், 'பேக்கிங், பிரிவும், கோடாவுன் அறைகளும்- உள் ளன.

மேலே உள்ள மூன்றாது மாடியில் கம்ப்யூட்டர் வசதிகளுடன் கூடிய ஆபீஸ் நிர்வாகமும், முதலாளியின் ஆபீஸ் அறையும் இருக்கின்றன.

வியாபாரம் தொடர்பாக அதிகாரிகளையும்-முதலாளியையும் காண அனுமதி கேட்டேன். மூன்றாவது மாடிக்கு போகச் சொன்னார்கள். மூன்றாவது மாடியை அடைந்தவுடன் முதலில் கண்களில் பட்டது ரிசப்ஷன் தான். வட்ட வடிவத்தில் மேசை. மேசையை தேசியக் கொடியில் உள்ள நிறங்களால் வர்ணம் தீட்டி அதன் நடுவே அசோக சக்கரமும் பொறித்து இருந்ததைக் கண்டேன். அதிகாரிகளையும் முதலாளியையும் காண வந்ததாகக் கூறினேன். அனுமதி கிடைத்தது.

ஒன்று முதல் ஐம்பது அறைகள் – இருந்தன. ஐம்பதாவது அறையில் முதலாளியின் ஆபிஸ் இருந்தது. முதல் நாற்பத்தியொன்பது அறைகளிலும் ஏராளமான பணிகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. காலை வைத்தால் வழுக்கி விடுமோ- என்ற டைல்ஸ் தரைகள். எங்கு நோக்கினும் கம்ப்யூட்டர்கள், டைப்ரைட்டிங் மிஷின்கள், ஜெராக்ஸ், ரோனியோ மெஷின், ஏ.ஸி., குஷன் நாற்காலிகள், டெலிபோன்கள் என நிறுவனத்தின் வசதிக்காக உருவாக்கப்பட்ட உயரிய சாதனங்கள்.

ஒவ்வொரு அறையின் வெளிக் கதவிலும் பிளாஸ்டிக் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட பொன்மொழி, வாசகங்கள்.

1. கடமையைச் செய்- பின்பு, உரிமையுடன் பேசு.
2. பேச்சு – வெள்ளி, செயல்-தங்கம்.
3. காலம்- பொன்னுக்குச் சமம்.
கடமை-கண்ணுக்குச் சமம்

இது போன்ற அருமையான வைர வாசகங்கள் 1 முதல் 49- அறையின் (வாசலிலுள்ள) கதவுகளில் காணப்பட்டன.

அதிகாரிகளிடம் வியாபார விஷயமாக, பேசி முடித்த பின்பு முதலாளியைக் காண அனுமதிக்கப்பட்டேன்.

அவரது அறையின் எண்-50. அங்கிருந்த கதவின் மேல்-

"எதுவும் உனக்குக் கிட்டும்- அதற்காக நீ முழுமனதுடன் உழைத்தால்" என்று இருந்தது.

அறைக் கதவை விலக்கி உள்ளே போனேன்.

அழகான ஒரு பெண்மணி அமர்ந்திருந்தார். (வயதான பெரியவரை எதிர்பார்த்துப் போன எனக்கு முதல் ஷாக்) நானும் அமர்ந்தேன்.

ஆபீஸ் அறையை நோட்டமிட்டேன். வாய் வியாபாரத்தைப் பற்றிப் பேச, கண்கள் அறையை, அதன் அலங்கார அதிசயத்தை பார்க்க, மனம் வியப்பில் ஆழ்ந்தது.

அழகான தேக்கு மர மேசை. அதன் மேல் பழங்காலத்து கடிகாரம். சிறிய வடிவில் தேசியக் கொடி.. பழைய மாடல் தொலைபேசி, – மற்ற ஆபிஸ் சம்பந்தமான பொருட்கள்.

அறை முழுவதும் படங்கள், படங்கள் படங்கள்- மகாத்மா காந்தி, காமராசர், நேரு போன்ற தலைவர்கள் படங்கள், இரட்சகர் இயேசு, நாகூர் புனித ஆலயப்படம், விநாயகர் படங்கள்.

மதர் தெரசா, திருவள்ளுவர்,

திரு.வி.க., இராஜாஜி லிங்கன்- படங்கள் மாட்டப்பட்டு இருந்தன.

வியாபாரத்தைப் பற்றிய பேச்சு முடிந்தது.

"அம்மா நீங்கள் அனுமதித்தால் சில வினாக்களுக்கு, விடை தருவீர்களா" என்றேன். மௌனமாக தலையசைத்தார்.

"அம்மா நீங்களோ இள வயது. இந்த அறையை ஒரு "மியூசியம்" போல அமைத்துள்ளீர்கள். உங்களுக்கு மர நாற்காலி, மற்ற அனைவருக்கும் குஷன் நாற்காலி. (எனக்கும்). எல்லா அறைகளிலும் (1-49) நவீன பொருட்கள். உங்கள் அறையைத் தவிர. (ஒரு மின் விசிறி கூட இல்லை.) இன்றைய தலைவர்கள் படங்கள் கூட இல்லை. எங்கு நோக்கினும் பொன் மொழிகள். தரைகூட வெறும் சிமெண்ட். இது ஆபீஸ் அறையா இல்லை அருங்காட்சியகமா?" என்றேன்- மனத்தில் பயத்துடன்.

கேள்வியை இரசித்தார். (அப்பாடா!) பிறகு "இந்த ஆபீஸ் அறையை, நான் நினைத்தால் இன்று- வெல்வெட் ஆசனம், ஏஸி, வசதியான நவீன சாதனங்கள். பளிங்குக் கற்கள் என்வும், இன்றைய தலைவர்கள், அவர்களுடன் எடுத்துக் கொண்ட விளம்பர போட்டோஸ், என மாற்றம் செய்ய முடியும். ஆனால் அது என் "தந்தைக்கு" நான் செய்யும் நன்றிக் கடனாகாது. கடைசி காலத்தில், மிக மகிழ்வான நேரத்தில், முன்னேறிய நிலையில் அவர் உபயோகித்த உன்னதமான அறை இது. ஒவ்வொரு பொருளிலும் அவரது முகம் தெரியும். என்னுடனே அவர் இருப்பது போன்ற உணர்வு."

"இன்றைய தலைவர்கள் என்ன கஷ்டப்பட்டு நாட்டுக்காக போராடியவர்களா? போராடுபவர்களா? எதற்காக அவர்கள் படம்? என் முன்னோர்கள் சுதந்திரத்திற்காக உயிரைக் கூட விட்டுள்ளார்கள். இங்கு பணிபுரியும் கடைநிலை ஊழியர்களுக்குக் கூட "எம்மதமும் சம்மதம்"தான். மனதைப் பார்த்து மணம் புரிந்து மகிழ்வோடு வாழ்பவர்களின் தொகை எங்கள் நிறுவனத்தில் அதிகம். நாங்கள் "கூட்டுக் குடும்பம் போல" வாழ்கிறோம். "திருவள்ளுவர் எழுதிய திருக்குறளே" போதும் (உலகம்) வேண்டிய அளவு முன்னேற வழி காட்டும். தேசமும், தேசியக் கொடியும்- உயர்வானது. இங்குள்ள "பொன்மொழிகள்" தொழிலாளர்களின் "கடமையை" என்றும் வளர்க்கும்- அற்புத டானிக். எனக்கும் இரத்தத்தில் கலந்த உயிர்சத்து. இந்த அறையில் மட்டும் வசதி வந்த பின்னும் "டைல்ஸ்" பாதிக்காத காரணம் இந்த சிமெண்ட் தரையில் எனது தந்தையின் பொற்பாதங்கள் பதிந்த இடங்களிலேயே எனது காலடியும் பதிய வேண்டும் என்று தான்" என்று நீண்ட விளக்கம் கொடுத்தார்.

தந்தையின் மாபெரும் நிறுவனத்தை வேண்டிய அளவு மாற்றி பெரும் தொழிற்புரட்சி செய்து வரும் அந்தப் பெண்மணி தனது தந்தையின் வழியில்- காலடி மட்டுமல்ல, வெற்றிக் கொடியும் நாட்டுவார்- என்ற பரவச உணர்வில் மனத்தில் பெருமித உணர்வுடன் என்னையறியாமலேயே எழுந்து நின்றேன். கை குவித்து விடை பெற்றேன்.

திரும்பும் போது மீண்டும் ஒரு முறை அந்த "அற்புதமான ஆபீஸ் அலங்காரத்தை" மனதில் ஆழமாக பதியச் செய்தேன்.

—எஸ்.எஸ். ஆனைமுகனடிமை,
கடலூர்-2.

பிரசுரத்திற்கு...

வசிஷ்டர் வாயால் பட்டம் கிடைத்தது!

'அவளுக்கென்ன? வேலைக்குப் போகிறாள். விதவிதமான அலங்காரம் செய்து கொள்கிறாள். என்னை மாதிரி வீட்டு வேலை செய்பவளுக்கு, அதெல்லாம் எதற்கு' என்று அலுத்துக் கொள்ளும் வேலைக்குப் போகாத பெண்கள்; 'தலை வாரிக்கக் கூட நேரம் இல்லை; என்ன வேலையோ' என்று அலுத்துக் கொள்ளும் வேலைக்குச் செல்லும் பெண்கள். தூரத்துப் பச்சை கண்ணிற்குக் குளிர்ச்சி. வேலைக்குச் செல்லும் பெண்கள், இன்னும் காலையில் அஷ்டாவதானம் செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையில், தலை அலங்காரம்

வட இந்திய டூர் போய் வந்த என் மாமனாரும், மாமியாரும் நல்ல காரமும், புளிப்புமாக கொத்த மல்லிச் சட்னி செய்யச் சொல்ல, ஃப்ரிட்ஜில் இருந்த கொஞ்சம் கொத்தமல்லியுடன், வதக்கின பச்சை மிளகாயுடன், ஏழெட்டு சிறிய வெங்காயம், புளி, உப்பு வைத்து அரைத்துக் கடுகு, பெருங்காயம் தாளித்துக் கொட்ட, அத்தனை ருசியான கொத்தமல்லிச் சட்னியை இதுவரை சாப்பிட்டதில்லை என்று சர்டிபிகேட் வேறு கொடுத்தார்கள்.

— டி. சந்திரலேகா





செய்ய நேரம் ஏது?

என்னுடன் வேலை செய்யும் திருமணமான பெண்கள் பலர், அள்ளி முடித்த அவசர கோலத்தில் தான் அலுவலகம் வருவர். மதிய இடைவேளையின் பொழுதுதான், நிதானமாக பேச முடியும். ஒருவர் அலங்காரத்தை மற்றவர் கேலி செய்வோம். அதில் ஒரு ஆத்ம திருப்தி. நம்மைப் போல் பிறரும் திண்டாடும் பொழுது, நமக்குள் ஒரு மகிழ்ச்சி.

எங்கள் எல்லோரையும் கிண்டல் செய்பவள் லதா. திருமணம் ஆகாத ஆபீஸ் தோழி. வீட்டுப் பொறுப்பு இல்லாததால், மடிப்புக் கலையாத புடைவையும், தினம் ஒரு கொண்டையுமாக எங்களை பொறாமைப்பட வைப்பாள். அவளுடன் சேர்ந்து வருவாள் விஜி. இருவரும் ஒரே பஸ்ஸில் வருவார்கள். எண்ணெய் வழியும் தலையும், கோணல் மாணலான பின்னலும், ஏற்ற இறக்கத்துடன் புடைவையுமாக அவள் லதாவுடன் சேர்ந்து வருவது, வடதுருவமும், தென் துருவமும் இணைந்து வருவது போல் இருக்கும். எங்களுடைய கிண்டலை எல்லாம் விஜி லட்சியப் படுத்த மாட்டாள். அவள், குழந்தைகளின் படிப்பில் அதிக அக்கறை செலுத்துபவள். அதனால் தன்னுடைய அலங்காரத்திற்கு நேரம் செலவழிக்க மாட்டாள்.

வழக்கம் போல், அன்றும் விஜியும், லதாவும் சேர்ந்து வந்தனர். விஜியா அது? அழகிய காட்டன் புடைவை. தூக்கி வாரி, அழகிய கொண்டை போட்டிருந்தாள். கொண்டையைச் சுற்றி முத்துச் சரம். எங்களால் மகிழ்ச்சியை அடக்க முடியவில்லை. அவள் உள்ளே நுழைந்ததும், நாங்கள் எல்லோரும் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரித்தோம். சத்தத்தைக் கேட்டு வெளி வந்த ஆண் ஊழியர்களும், விஜியை ஆச்சர்யத்துடன் பார்த்துவிட்டு, எங்களுடன் சேர்ந்து கைதட்டி விட்டுச் சென்றனர். எங்கள் பியூன் இராமசாமி "மேடம், இன்று தான் நீங்கள் வேலைக்கு வரும் பெண் போல் இருக்கிறீர்கள்" என்று கூற, விஜிக்கு ஒரே வெட்கம்.

"இன்னிக்கு என் பெண்ணிற்கு மேத்ஸ் எக்ஸாம். எனக்கு ஒரே டென்ஷன். அதனால் தலை வாரிக் கொள்ளாமலேயே வந்து விட்டேன்" என்று கூறினாளே பார்க்கலாம். நாங்கள் எல்லோரும் அதிசயத்தினால் வாயடைத்து நின்றோம். "என் பெண்ணிற்குப் பாடம் சொல்லிக் கொடுத்ததில், நேரம் போனதே தெரியவில்லை. அவள் ஆட்டோ வந்த பிறகுதான் மணி 9 ஆகிவிட்டது என்பது தெரிந்தது. இன்னும் 5 நிமிடத்தில் நான் பஸ் ஸ்டாப்பில் இல்லா விடில், இன்று ஆபீஸ்

வரமுடியாது என்பதை உணர்ந்தேன். புடைவை மாற்றுவதற்கோ, தலை வாருவதற்கோ நேரம் இல்லை. காலையில் குளிப்பதற்கு முன் தலையைத் தூக்கி முடிந்திருந்தேன். முடிச்சு அவிழாமல் இருக்க இரப்பர் பேண்ட் போட நினைத்தேன். அந்த அவசரத்தில் எனக்குக் கையில் கிடைத்தது என் பெண்ணின் இலாஸ்டிக்கால் ஆன முத்து வளையல். அதையே இழுத்துக் கொண்டையைச் சுற்றிப் போட்டேன். இங்கு வந்த பிறகு, உங்களுக்குத் தெரியாமல் தலைவாரிக் கொள்ளலாம் என்று நினைத்தால் நீங்கள் எல்லோரும் கைதட்டி கேலி பண்ணுகிறீர்கள்'' என்று வருத்தமாக விளக்கம் கூற,

''இன்று தான் நீ ஒழுங்கான தலை அலங்காரத்துடன் வந்துள்ளாய்'' என்று லதா கூற, 'வசிஷ்டர் வாயால்' பட்டம் பெற்ற மகிழ்ச்சியில் விஜி, ''இனி தலைவாரும் நேரத்தையும் , என் பெண்ணிற்கு பாடம் சொல்லித் தர செலவழிக்கப் போகிறேன்'' என்றாளே பார்க்கலாம்!

– சுபா,

சென்னை– 11.

"ஜாஸ்மின் லேடி"

நான் வேலை செய்யும் பள்ளியில் (திருமணத்திற்கு முன்) தெலுங்குப் பெண் ஒருவர் நர்சரி வகுப்புக்கு டீச்சர் ஆக இருந்தாங்க. நல்ல சிவப்பாய், லட்சணமாய் இருப்பாங்க. தலைமுடி ஒன்றே போதுமுங்க. நீளமாய், படிப்படியாய், அடர்த்தியாக இருக்கும். நீண்ட பின்னல் போட்டு பேண்டை போட்டு கடைசியில் முடியை 'புஷ்' ஆக விட்டிருப்பாங்க. தலையில் மல்லிகைப்பூ இல்லாத நாளே இராது. அந்த வகுப்பே மணக்கும். நெற்றி வகுட்டில் அழகாய் ஜிகினாக்கலந்த சிவப்பு குங்குமம் வைத்திருப்பாங்க. ரொம்ப அழகாக புடைவைகள் கட்டுவதில்லாமல் அந்தந்த நிறத்துக்கு தகுந்தாப்போல் எல்லாம் மாற்றுவாங்க. காதுத்தோட்டில் புடைவைக்கேற்ப பட்டன் கலர் கல் வைத்துச் செய்த வாஷர்தான் போடுவாங்க. கையில் தங்க வளையல் ஊடே கண்ணாடி வளையலும் இருக்கும். மோதிரமும் மாறும், வாட்ச் ஸ்ட்ராப் மாறும், நெற்றியில் பொட்டுகளும் மாறும், கைகுட்டையும் மாறும்.

தன்னுடைய அலங்காரத்தில் மாத்திரம் இல்லாமல், தன்னுடைய வகுப்பில் குழந்தைகளுடன் பழகும் விதமும், பொறுமையும், நளினமும், வேலை பார்க்கும் நேர்த்தியும் அளவான அடக்கமான பேச்சும், தான் உண்டு தன் வேலையுண்டுன்னு இருப்பாங்க. எப்பவும் அந்த முகத்தில் புன்னகை குடி கொண்டிருக்கும்.

தன்னுடைய வகுப்பறையையும், அலங்காரத்துடன் வண்ண வண்ண சார்ட்களுடனும், பேப்பர் கட்டிங்குடனும், வைத்திருப்பார். பள்ளியின் ஆண்டு விழா வந்தால் போதும் தன் வகுப்புக் குழந்தைகளுக்கு விதவிதமாக அலங்கரித்து ஒவ்வொரு ஆண்டும் பேன்ஸி டிரெஸ் போட்டியில் தன் வகுப்பு பிள்ளைகளுக்குத்தான் முதல்பரிசு கிடைக்கும்படி செய்வார். மொத்தத்தில் அவர்களிடம் அழகும், அலங்காரமும் மட்டும் இல்லாமல் எல்லா குணங்களுடன் ''ஸர்வாலங்கார தேவதையாட்டம் தோற்றமளித்தார்கள். இப்படி ஒரு தோழி கிடைத்தற்கு நான் மிகவும் சந்தோஷம், பெருமை அடைகிறேன்.

–சுஜாதா தாமோதரன்,

மதுரை –3.

காலையில் செய்த கருகப்பிலை துகையல் நிறைய மீந்துவிட்டது. மாலையில் அதை சிறிது நீர் விட்டு சட்னி மாதிரி கரைத்துக் கொண்டு ஃப்ரெட் ஸ்லைஸ்களின் மீது ஒரு ஸ்பூனால் தடவி, அதனை ஒன்று, ஒன்றாக தோசை மாவில் தோய்த்து, தோசைக் கல்லில் எண்ணெய் தடவி, இருபக்கமும் வேகுமாறு ரோஸ்ட் பண்ணி வைத்தேன். நாளைக்கும், இதே மாதிரி ஃப்ரெட் ரோஸ்ட்தான் வேண்டும் என்று பசங்கள் டிபனை ஒரு வெட்டு வெட்டினர். இப்பொழுதெல்லாம், எந்தத் துகையல் மீந்து போனாலும் இந்த மாதிரி புதுமாதிரியான பிரெட் ரோஸ்டாகி விடுகிறது.

- டி. சந்திரலேகா



மாறி வரும் பெண்கள்..

தனியொரு பெண்ணாக சிறிது சிறிதாக தன்னுடைய வியாபாரத்தைப் ... குறிப்பிடத்தக்க நிலையை அடைந்திருக்கிறார் திருமதி. உமா சரவணன். கணவரின் காரணமாக பல மாநிலங்களையும், வெளிநாடுகளையும் காணும் வாய்ப்புப் பெற்ற உமா, அங்... கண்ட பல அரிய சிற்ப டிசைன்களில் மனதைப் பறிகொடுத்தார். பிறகு சென்னையில் செட்டி லானது போது அந்த டிசைன்களையே ப்ளாக்காக செய்து புடவைகளில் பதித்து பவித்ரா சாரீஸ் என ஆரம்பித்தார். இப்போது அந்த நிலையையும் தாண்டி புடவைகளில் கைவேலைப் பாடு, மிஷின் வேலைப்பாடு என்றெல்லாம் ஜமாய்க்கிறார்.

“இந்த என்னுடைய அடுத்த நிலை ஓரளவு தற்செயலாக அமைந்தது என்றுகூட சொல்லலாம். முதலில் நல்ல தரமான ப்ளெயின் துணிகளை வாங்கி பல்வேறு விதமான ப்ளாக் ப்ரிண்ட் டிங்குகளைத்தான் செய்து கொண்டு இருந்தேன். சிலர் எம்ப்ராய்டரியாக, ப்ளாக் ப்ரிண்டு களையே கைவேலைப்பாடாகச் செய்து தர முடியுமா எனக் கேட்டார்கள். அதற்காக தையல் மெஷின்களை வைத்துத் தைத்துக் கொடுத்தும், பெண்களை வைத்து கை வேலைப்பாடாகவும் செய்து தர ஆரம்பித்தேன்.

இந்த வேலைகள் நடந்து கொண்டிருந்த போது என்னுடைய கடைக்குப் புடவை வாங்க வந்தவர்கள் எங்களுக்கும் டிசைன்கள் போட்டுத் தர முடியுமா எனக் கேட்டார்கள். ரெடிமேடாக டிசைன்கள் போட்ட புடவைகளை வாங்கு வதை விட அவர்களுக்கு விருப்பமான கலரில், விருப்பமான டிசைன்களை (அதையும் என்னுடைய புடவை கலெக்ஷனிலிருந்தே எடுத்து விடுவார்கள்) பதித்துக் கொள்வது எனும் போது அவர்களுக்கு ரொம்பவும் பிடித்துப் போய் விட்டது. அதுவும் தயாரிப்பாளர் இடத்திலேயே விலையும் வாங்கும் போது

நமக்கெல்லாம் வானமே எல்லை!



• ‘கட்வொர்க்’ புடவை

எப்பவும் மனசுக்கு நிம்மதி தேவைன்னா சரியான வழி ''உபாஸனா'' -திருமதி ராமன்.

''எங்க XYZ பைனான்ஸிலே அதிக வட்டி மட்டுமில்லே, குலுக்கலிலே கார், நகை பரிசும் உண்டுன்னு'' சொல்லி உலுக்கினாங்க! ஆரம்பம் 'ஜோர்' தான். இரண்டு மாதத்திற்கு பிறகு வட்டியே வரலை. போன் செஞ்சு கேட்டா தினம் ஒரு புது செகரட்டரி, தினம் ஒரு புது சாக்கு! ரெஜிஸ்டர் லெட்டர் போட்டால் திரும்பி வந்திடுச்சு! கவலையாயிடுச்சு! பலன்? ஒரே எரிச்சல்! வேதனை! செய்யற காரியமெல்லாம் குளறுபடி! சாம்பார் வைக்கிறதிலே நான் எப்பவும் எக்ஸ்பர்ட்னு சொல்ற என் கணவரே, ''ஒரே உப்பு'' ன்னு தவிச்சுட்டார். டெபாஸிட்டை எடுக்க போனா, எல்லோரும் எடுக்காதீங்கன்னு 'பிரஷர்' கொடுத்தாங்க! நான் ஒத்துக்கலை! என் அதிர்ஷ்டம்! பணம் திரும்பி வந்திடுச்சு!

இந்த தடவை 'டெபாஸிட்' செய்ய ரொம்ப யோசிச்சு கடைசிலே ''உபாஸனா ஃபைனான்ஸ்'' நிறுவனத்தை தேர்ந்தெடுத்தேன்!

'உபாஸனா'வின் சேர்மன் திரு சுரேஷ் கிருஷ்ணா, சுந்தரம் ஃபாஸ்னர்ஸ் மற்றும் பல டிவிஎஸ் நிறுவனங்களின் சேர்மனும் கூட! அதிக பாதுகாப்புக்கு ICRA MAA- கிரெடிட் மதிப்பீடு! சரியான நேரத்திற்கு வட்டி!

நம் தேவையை கவனத்தில் கொண்டு வளைஞ்சு கொடுக்கிற டெபாஸிட்டுகள்! 'நம்பிக்கை, சேவை, மதிப்பு' என்ற டிவிஎஸ் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் உபாஸனா. இப்போ மனசுலே நிம்மதி! குழப்பமேயில்லை. கணவருக்கும் சந்தோஷம்! சாம்பார் சாப்பிட தைரியமா நீங்க இப்போ எங்க வீட்டுக்கு வரலாம்!''

உங்கள் டெபாஸிட்டுகளுக்கு வளமான வட்டி விகிதத்துடன், உண்மையான உற்சாகத்தை தரும் ஆச்சரியங்களும் காத்திருக்கிறது. அருகாமையிலுள்ள உபாஸனா அலுவலகத்தை உடனே அணுகுங்கள்! 'விசேஷ டெபாஸிட் சேகரிப்பு' திட்டத்தில் கலந்துகொண்டு பயன் பெறுங்கள்.

உபாஸனா
ஃபைனான்ஸ் லிமிடெட்
தொடரும் நம்பிக்கை என்னும் டிவிஎஸ் பாரம்பரியம்.

இந்த விளம்பரம் 19.6.95 அன்று 'நியூஸ் டுடே'யில் பிரசுரமான விளம்பரத்தின் தொடர்ச்சியாகும். விளம்பரத்தின் முழு வாசகமும் டெபாஸிட்தாரர்களின் கவனத்திற்கென்று விண்ணப்படிவங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.


பதிவு அலுவலகம்: "கனோஷ் டவர்ஸ்", மூன்றாவது தளம், 96/1, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004. போன்: 4993494/4993121, ஃபேக்ஸ்: 4994881 • கோயமுத்தூர்: நம்பர் 9, ரூபிலி டவர்ஸ், 304 D.B. ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641 002 போன்: 447127 • ஈரோடு: கடை எண்: 389/390, முதல் தளம், 15, EVN ரோடு, ஈரோடு-638 001. போன்: 79574. • மதுரை: 186, வடக்கு வெளி வீதி, மதுரை-625 001. போன்: 36070. • சேலம்: ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், A-1, பாரதி வீதி, ஸ்வர்ணபுரி, சேலம்-636 004. போன் 446711. • திருநெல்வேலி: பார்வதி சங்கர் & சன்ஸ் காம்ப்ளெக்ஸ், 177/A/10 திருவனந்தபுரம் நெடுஞ்சாலை, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி-627 003. போன்: 575320. • திருச்சி: 14-A/3, Dr.சுவாமிநாத சாஸ்திரி சாலை, தென்னூர், திருச்சி-620 017. போன்: 467436. • பெங்களூர்: 18/1, வாணிவிலாஸ் ரோடு, பசவன்குடி, பெங்களூர்-560004. போன்: 622949/620391. • ஹூப்ளி: தெ. 18டி, தயானந்தா காலனி, கேஷ்வபூர், ஹூப்ளி - 23. போன் : 68221. • கொச்சின்: அல்ஃபியா பில்டிங்ஸ், இரண்டாவது தளம், விஜ்னா ஜங்ஷன், கொச்சின்-682 018. போன்: 333991. • திருச்சூர்: C/ரோமச்சந்திரா பஸ் சர்வீஸ், கோவிக்காரா (வழி) ஒல்லூர், திருச்சூர். போன் : 872275. • ஹைதராபாத்: 1-10-63/1/3, வீர் சேம்பர்ஸ், பேகம்பேட், ஹைதராபாத்-500 016. போன்: 847237. • ராஜமுந்திரி: எண் 36-3-2, முதல் தளம், ஜொயானரம்பா டெம்பிள் ஸ்ட்ரீட், இன்னிஸ்பேட், லக்ஸ் சென்டர், ராஜமுந்திரி-533 101. போன்: 75315. • விஜயவாடா: கஸ்தூரி பாப்பையா பில்டிங்ஸ், 64-9-1, பந்தர் ரோடு, பட்டிமடாலங்கா, விஜயவாடா-520 014. போன்: 481519. • விசாகப்பட்டினம்: த.பெ.எண். 130, செக்டர் 8, எம்.வி.பி. காலனி, விசாகப்பட்டினம் - 530 017. போன் : 530473.

Stimulus/UFL/558/96 T

கணிசமாகக் குறையும். இப்படிச் செய்ய ஆரம்பித்த நான் இன்று நிறைய பேருக்குச் செய்து தருகிறேன்..."

என்கிறார் உமா சரவணன், ஆரம்பத்தில் தன்னுடைய வீட்டிலேயே வைத்து விற்பனை செய்தவர் பிறகு லஸ் கார்னரில் கடையாக ஆரம்பித்தவர் இன்று அதையொட்டியுள்ள சாந்தி விஹாரில் பெரிய ஷோ-ரூமுக்குச் செல்லும் அளவிற்கு வளர்ந்திருக்கிறார் என்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம்தானே?





• உமாசரவணன்

"தனியொருவராக உங்களால் எப்படி இந்தச் சாதனையைச் செய்ய முடிந்தது?"

சிரிக்கிறார் உமா. "என்னுடைய கணவர் பெரும்பாலும் வெளியூர்களில் இருப்பதால் பொழுதுபோகத்தான் ஆரம்பித்தேன். ஆனால் நூலில் இருந்து துணியிலிருந்து எல்லாமே நானே போய் வாங்குவதால் விலை கணிசமாகக் குறையும். இன்னொன்று தரமான பொருட்களையே வாங்குகிறேன் என்ற நிச்சயம் ஏற்படுகிறது. அடுத்தது உழைப்பு. எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுளின் அருள். இதெல்லாம்தான் என்னுடைய வெற்றிக்குக் காரணம்னு நினைக்கிறேன். புரிந்து கொண்ட கணவர், குழந்தைகள், உடன் பணிபுரிபவர்கள் இவர்களால்தான் என்னால் வளர்ச்சியடைய முடிகிறது" என்கிறார்.

"குறிப்பாக இந்தத் தொழிலில் வேலையாட்களை வைத்து வேலை வாங்குவது ரொம்பக் கஷ்டம் இல்லையா?"

"உண்மைதான். புடைவைகளில் டிசைன்கள், ஜமிக்கி வொர்க், பூக்கள் போடும் தொழிலாளர்கள் ஸ்ரீபெரும்புதூர் பக்கத்தில் ஒரு கிராமத்தில் இருக்கிறார்கள். இவர்களை தீபாவளி சீசனுக்கு ஒரு மொத்தமாக டிரெயின் டிக்கெட் வாங்கிக் கொடுத்து அழைத்துச் சென்று பம்பாயில் வேலை தருவார்கள். பிறகு வேலை முடிந்தவுடன் கொண்டு வந்து விட்டு விடுவார்கள். மற்ற நாட்களில் அவர்கள் வேலைக்குக் கிடைக்கிறார்கள்.

ஆனால் என்னிடம் வேலை செய்யும் பெண்கள் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்டவர்கள். எங்கள் குடும்பத்தவர்களாகத்தான் அவர்களை பாவிக்கிறேன். பொதுவாகவே ஆண்களை விட பெண்கள் பொறுப்போடு ஆழ்ந்து வேலை செய்வார்கள். அதனால் என்னால் அவர்களிடமிருந்து சிறந்த கைத்திறனைப் பெற முடிகிறது.

அதனால் எல்லாமே சுலபமாக எனக்கு அமைந்து விட்டது என்று சொல்ல முடியாது. மார்க்கெட்டிங், தொழிலாளரின் கஷ்டநஷ்டங்கள், வாடிக்கையாளரின் திருப்தி என இருபத்தி நான்கு மணி நேரமும் உழலுகிறேன்.

புதிது புதிதாக நிறைய கற்பனை வளத்துடன் டிசைன்களை அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்..."

"அப்படிச் சமீபத்தில் ஏதாவது புதிதாக அறிமுகப்படுத்தி இருக்கிறீர்களா?"

'இக்கத்' என்ற ஒரு வகை துணி. இதை 'பேட்ச் வொர்க்'காக ஆர்கண்டி புடைவையில் செய்திருக்கிறேன். ரொம்ப அட்ராக்டிவாக இருக்கிறது. அதே போல புடைவைத் தலைப்பில் 'கட்-வொர்க்' வரும். அதற்கும் நல்ல டிமாண்ட் இருக்கிறது. முத்து மணிகள், துளசி மணிகள், ஜம்க்கி இவற்றைக் கொண்ட வேலைப்பாடுகள் எல்லாம் ஒரு சாதாரண புடைவையை ரொம்ப அழகாக மாற்றி விடுகிறது.

அது தவிரவே என்னிடம் பல ப்ளாக்குகள் இருப்பதால் அவற்றைப் பிரிண்ட் செய்து அதில் வேலைப்பாடுகள் செய்து தரச் சொல்லுகிறார்கள். ரவிக்கைத் துணிகளில் செய்து தருகிறேன். டெர்ரகோட்டா டிசைன், மயில், அன்னம் என நிறைய இணைத்துச் செய்கிறேன். ஒரு அம்மா இங்கே தையற்காரர் எம்ப்ராய்டரி செய்வதைப் பார்த்து தன் பழைய பட்டுப் புடைவையைக் கொண்டு வந்து பார்டரில் அன்னம் போட்டுத் தரச் சொன்னார். அதை முடித்துப் பார்க்கும் போது ரொம்ப அழகாக இருந்தது. பலர் தங்கள் புடைவைகளை சல்வாராக மாற்றித் தரச் சொல்கிறார்கள்.

இப்படி இதில் நிறைய புதுமைகளைச் செய்து கொண்டே போகலாம். கற்பனை வளமும், சலியாத கடின உழைப்பும்தான் இன்றைய பெண்களுக்குத் தேவை. இவற்றை நாம் வளர்த்துக் கொண்டு விட்டோமானால் நமக்குத் தோல்வி என்பதே கிடையாது..."

"பெண் என்பதால் பிரச்னை ஏதாவது இருக்குமா...?"

"அப்படியில்லை. ஆணானாலும், பெண்ணானாலும் போட்டிகள் மிகுந்த இந்த உலகில் ஊடாடி மேலே வந்துதான் ஆக வேண்டும். நாம் அப்போது தாழ்வு மனப்பான்மையோடு பார்த்தால் நம்மைத் தாண்டிச் செல்ல பலரும் தயாராகத்தான் இருப்பார்கள்..."

"வளர்ந்து வரும் நீங்கள் இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?"

"என்னுடைய பவித்ரா சாரீஸுக்கும், நான் கைவேலைப்பாடுகள் டிசைன்கள் செய்து தரும் புடைவைகளுக்கும் நல்ல டிமாண்ட் வெளிநாடுகளில் இருப்பதை, இங்கு வந்து வாங்கிச் செல்லும் பெண்களிடம் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது. வளைகுடா நாடுகளிலும், அமெரிக்காவிலும் உள்ள பெண்களுக்காக நிறைய புடைவைகளை வாங்கிச் செல்கிறார்கள். நாமே நேரடியாக ஏற்றுமதியில் ஈடுபட்டால் என்ன என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்" என்கிறார் உமா சரவணன்.

வானமே எல்லை என்பது உமாவைப் போன்ற பெண்களுக்காக ஏற்பட்ட சொற்றொடர் தானோ! பலருக்கும் வழிகாட்டியாக விளங்கும் உமாவைப் போல இன்னும் நிறைய தொழிலதிபர்கள் நம் நாட்டில் தோன்றட்டும்.



அட்டையில் : உமா **சரவணன்**

படங்கள், அட்டை வண்ணப்படம் : **ஜி. சுரேஷ்**



KEEP YOUR HEALTH IN CHECK

COMPREHENSIVE HEALTH CHECK-UP

FOR Rs.2,600/-

NRI PROMOTED HOSPITAL

- Complete physical examination
- Computerised ECG
- Chest X-ray.
- Computerised Pulmonory Function Test (PFT)
- Rigid Proto-sigmoidoscopy
- Ultrasound examination of abdomen
- E.N.T. Examination
- Eye Examination - Glaucoma screening
- Gynaec Examination (for women)
- PAP Smear (for women)
- Master Laboratory Prfile : Complete Blood Count (Hb,RBC,PCV,MCV, MCH,MCHC,Platelet Count,WBC)Total Protein, Albumin, BUN, Alkaline Phosphatase, SGOT,SGPT, Bilirubin, Cholesterol, TGL, HDL, Creatinine and Blood sugar (fasting)
- Stool for accult blood
- Urine Analysis
- Blood Grouping
- Nutrition counselling

One day. By 4 Consultants

Mammogram and PSA (Special tests at additional cost)

TAMILNAD HOSPITALS

Cheran Nagar, (Off Velachery-Tambaram Road)
Madras 601 302
Ph : 2375221 to 2375225 Fax : 044-2375229

Detect Cancer early. That is the only way to fight the killer disease.

மாறிவரும் பெண்கள்...

மதுரை காமராஜ் பல்கலைக் கழக கல்லூரியில் ஹோட்டல் மானேஜ்மெண்ட் அண்ட் கேட்ரிங் சயின்ஸ் படித்து வரும் மாணவிகள், மதுரை மேலப் பெருமாள் மேஸ்திரி வீதியில் உள்ள சுப்ரீம் ஹோட்டலில் பயிற்சியும் பெற்று வருவதை அறிந்து சென்று சந்தித்தோம். தங்களின் மாறுபட்ட சுவையான அனுபவங்களை அவர்கள் இங்கு கூறுகிறார்கள் -



தீப்தா : "கல்லூரியில் படித்துக் கொண்டு இங்கே சில மணி நேரங்கள் நாங்கள் பயிற்சி பெறுவதன் முக்கிய நோக்கம் அனுபவ அறிவு காண்பதற்குத்தான். இங்கு கிச்சனில் - சமையல் அறை யில் டீ, காப்பி முதல் சாலட்கள், இருபது வகை ஐஸ்கிரீம், இருபது வகை ஜூஸ் தயாரிப்பதை கற்றுக் கொண்டு, நாங் கள் தயாரித்து கஸ்டமர்களுக்கு நேரடியாக அளிக்கிறோம். உணவு வகைகள் இவ்வளவு இருக்கிறதா, இப்படியெல் லாம் மாறுபட்ட சுவைகளில் தயாரிக்க முடியுமா? என்று கஸ்டமர்களை மலைக்க வைக்க இந்தப் பயிற்சி யில் கற்றுக் கொள்கிறோம். மிகப் பெரிய அடுப்பில் பஞ்சாபி தந்தூரி தயார் செய்ய பயிற்சி பெற்றோம். பாலை பன்னீர்

ஹோட்டலையும் நிர்வகிப்போம்!

ஆக்கி பன்னீர் 'பட்டர் மசாலா' என்ற இந்த சுப்ரீ மின் தனிச்சுவை புகழ்பாடக் கூறும் ஸ்பெஷல் உணவு வகையைத் தயாரிக்க அறிந்து கொண் டோம். இதனை அனைவரும், வெளிநாட்டவரும் விரும்பிக் கேட்டு சாப்பிடுவார்கள்.

ரிசப்ஷனில் பயற்சி பெறுவது தன்னம்பிக்கையை, திற மையை வளர்க்கும் விஷயம். அமெரிக்கா, ஜெர்மனி, யு.கே. பிரெஞ்ச், இத்தாலி போன்ற இன்னும் பல நாடுகளில் இருந்து பல மொழிகளை பேசுபவர்கள் இங்கு வருவார்கள். நாங்கள் முதலில் அவர்களுடன் எப்படி பேசி சமாளிப்பது என்று பயந்தது உண்டு. ஆனால் அவர்களுடன் பேசிப் பார்த்த பிறகுதான் எல்.கே.ஜி., யு.கே.ஜி. குழந்தைகள் பேசும் ஆங்கிலம் போல்தான் எளிமையாக அவர்கள் பேசும் ஆங்கிலம் இருக்கும் எனத் தெரிந்து கொண்டோம்.

சாந்தி : "ஒரு ஹோட்டலின் ஜீவநாடியே 'House keeping'தான். அதாவது ஹோட்டல் அறைகளை சுத்தமாக அழகாக, ரம்மியமாக வைத்திருப்பதுதான். குறிப்பாக நட்சத்திர ஹோட்டல் களில் இது முக்கியமாக இருக்கிறது. கலை அழகு மிளிரும் இந்த ஹோட்டலில் House keeping

மிக அற்புதமாக இருக்கிறது. ஒருவர் தங்கி ரூமை காலி செய்து விட்டு போன பிறகு சுத்தம் செய்ய ஒரு மணி நேரம் ஆகும். பெட்ஷீட்கள், தலையணை உறைகள் மாற்றி சலவை செய்யப் பட்ட புதியவைகளைப் போடுவோம். இங்கு Bed making படுக்கை விரிப்பு என்பது ஒரு தனிக் கலை போல் இருக்கிறது. பாத்ரூம் 'செக்' செய் வோம். அறை முழுவதையும் கண் காணித்து அதன் அழகு மெருகு குறையாமல் பராமரிப் போம். ரூம் சர்வீஸில் எந்தப் புகார் வந்தாலும் உடனுக்குடன் சரிசெய்வோம். சுப்ரீமிற்கு 543151 நம்பருக்கு போன் செய்து தங்க வரப்போவதாக கஸ்டமர்கள் மெசேஜ் தந்த உடனேயே மிகவும் சுறுசுறுப்பாக செயல் பட்டு அறையைத் தயார் செய்து வைத்து விடு வோம். கஸ்டமர்கள் வந்த பிறகு அவர்களை



காத்திருக்கச் செய்து அறையை தயார் செய்வது கிடையாது."

விஜயலட்சுமி : "பயிற்சியில் இப்ப நான் பிரமித்துப் போய் இருக்கற விஷயம் இங்கு ரூப் டாப்பில் இப்ப நடத்திட்டு இருக்கற 'தோசை திருவிழா'தான். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நான்கு வாரங்கள், ஒவ்வொரு வெள்ளி, சனி, ஞாயிறு கிழமைகளில் நடக்கிறது. இதிலே 'சுப்ரீம் ஸ்பெஷல் தோசை' எனப்படும் மிகப் பெரிய பிரம்மாண்டமான தோசை, பன்னீர் தோசை, பாலக் தோசை, மஷ்ரூம் தோசை, மின்ட் தோசைன்னு - 'எழுபத்தி ஐந்து' ரகங்களை அறிமுகம் செஞ்சு இருக் காங்க. மனைவி, குழந்தைகளோட குடும்பத் துடன் மக்கள் வந்து பலவகையான தோசை களை ருசிக்க, ரசிக்க சாப்பிட்டு பாராட்ட றாங்க. வெளியூர்களில் இருந்தும் இந்த அதிசய தோசை திருவிழாவை காணவே கூட வராங்க. புதிய அறிமுகமாக 'பாம்பேகுல்பி இன் பாட்'னு சின்ன பானையில் குல்பி ஐஸ்கிரீம் தராங்க. இந்தத் தோசை திருவிழாவில் கலந்து கொள்பவர்களுக்கு குலுக்கல் முறையில் நிறைய அதிர்ஷ்டப் பரிசுகளை வழங்க பல பெரிய வியாபார ஸ்தாபனங்கள் முன் வந்து விலை உயர்ந்த பரிசுகள் பலவற்றை குவிச்சிருக்காங்க. உண்மையாகவே திருவிழா போல நடக்கும் இதில் நாங்களும் பங்கெடுத்துக் கொண்டுள் ளோம் என்பதே மகிழ்ச்சியான விஷயம்தான்."

மீனலோசினி : "நான் இங்கு பயிற்சி பெற வந்த போது 1995 டிசம்பர் 31 இரவில் 1996 வருடத்தை வரவேற்று பல்சுவை நிகழ்ச்சிகள் நடந்தன. விதவிதமான உணவு வகைகள், பாட்டு, டான்ஸ், போட்டிகள் அமர்க்களப் பட்டன. பல்வேறு பரிசுகளும் வழங்கப் பட்டன. நியூ இயர் புரோகிராமை எப்படி நடத் துணும்னு கற்றுக் கொண் டேன். சமீபத்திலே இந்த ஹோட்டல் சுப்ரீமை மிகச் சிறந்த ஹோட்டல்னு தேர்வு செய்து நடிகை மீனா வந்து விருது கொடுத்தார். அவர் இங்கேதான் தங்கினார். அவ ருடன் பேசி மகிழும் வாய்ப்பு கிடைத்தது. இது போல முக்கிய பிரமுகர்களை... விஐபிக்களை சந்தித்துப் பேசும் வாய்ப்பு கிடைப்பதால் எப்படி யாரு டன் பேச வேண்டும் என்ற முக்கியமான பயிற்சி கிடைத்து விடுகிறது.


வெளிநாட்டவர்கள் அசைவ உணவைத்தான் சாப் பிடுவார்கள் என்று நினைத் திருந்தோம். ஆனால் சுவையான சைவ உணவுகளை விரும்பிக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டதைப் பார்த்து வியந்து போனோம். நாங்கள் முதலில் அவர்களுக்கு சர்வீஸ் செய்த போது 'இங்கே சைவ உணவு மட்டும் தான் கிடைக்கும்' என்று தயங்கியபடி சொன்னோம். அவர்கள் சைவ உணவுதான் வேண்டும் என்று கூறியதும் புல் லரித்துப் போனோம். மதுரை மீனாட்சி அம் மன் கோவில் கும்பாபிஷேகத்தை இங்கு ரூப் டாப்பில் இருந்து பார்க்கக் காலை ஆறு மணி முதலே அனுமதித்தார்கள். வெளிநாட்டவரும், உள்ளூர் வாசிகளும், வாடிக்கையாளரும் கூட்ட மாக வந்திருந்து பார்த்தனர். இதெல்லாம் எங்க ளுக்கு மறக்க முடியாத அனுபவங்கள். இங்கே பயிற்சி பெற்றதின் மூலம் எதிர்காலத்தில் சிறந்த ஹோட்டல் நிர்வாகியாக திகழ முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்து விட்டது."

பேட்டி, படங்கள் : ஆர். சுமதி

திரு.வி.க.நகர் பெனி:பிட் :பண்ட் லிமிடெட்

ஸ்தாபிதம் 1989

தலைமை அலுவலகம் : 10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யு, (திரு.வி.க. நகர் பஸ் நிலையம் அருகில்), சென்னை - 600 082. போன் : 5378690
பாரீஸ் கிளை : 8/2, ஸ்ட்ரிங்கர்ஸ் தெரு, சென்னை - 600 108. போன் : 565760
தி. நகர் கிளை : 20, ரங்கநாதன் தெரு, சென்னை - 600 017. போன் : 4344324



பாதுகாப்பான முறையில் சேமித்து வளருங்கள்

திருமூர்த்தி பாண்டு

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 20,000	5 ஆண்டு	ரூ. 60,000

வசந்தம் பாண்டு

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 7,000	40 மாதம்	ரூ. 14,000

பென்ஷனர் வைப்பு நிதி

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 10,000	1 ஆண்டு 2 ஆண்டு 3 ஆண்டு	21%

★ பென்ஷனர், ஓய்வு பெற்றோர், முதியோர் (50 வயதிற்கு மேல்), விதவைகள், ஊனமுற்றோர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.
★ பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்.

பென்ஷனர் மறுமுதலீட்டு திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 5,000	1 ஆண்டு	6,157
	2 ஆண்டு	7,582
	3 ஆண்டு	9,337
	40 மாதம்	10,000

எக்செல் பாண்டு - A திட்டம்

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 9,000	2 ஆண்டு	21%

பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்

எக்செல் பாண்டு - B திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 9,000	2 ஆண்டு	ரூ. 13,648

வைப்பு நிதி

முதலீடு	காலம்	வட்டி
ரூ. 5,000	1 ஆண்டு	18%
	2 ஆண்டு	19%
	3 ஆண்டு	20%
	4 ஆண்டு	21%

பிரதி மாதம் 25ஆம் தேதி வட்டி வழங்கப்படும்

மறுமுதலீட்டு திட்டம்

முதலீடு	காலம்	முதிர்வு தொகை
ரூ. 1,000	12 மாதம்	1,195
	24 மாதம்	1,455
	36 மாதம்	1,810
	42 மாதம்	2,000

★ சேமிப்பு திட்டம் 12% வட்டி நாள் கணக்கில் வட்டி கணக்கிடப்படும்.
★ தங்க நகைகள் பேரில் ஒரு சவரனுக்கு ரூ. 2400 வரை கடன் வழங்கப்படும். மாத வட்டி 2%.
★ சென்னை மாநகர வீடு/:ப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும். மாத வட்டி 2% on Reducing Balances, R.D. கட்ட தேவையில்லை. கடன் மிக விரைவாக வழங்கப்படும்.
★ பங்குதாரர்களுக்கு மட்டும்
★ ரூ.10 செலுத்தி பங்குதாரர் ஆவீர்.


வேலை நேரம்

தலைமை அலுவலகம் : 9 முதல் 5. ஞாயிறு 9 முதல் 1
கிளைகள் : 10 முதல் 5. ஞாயிறு 10 முதல் 1
உணவு இடைவேளை இல்லை. வார விடுமுறை இல்லை.

அழுகைக் குறைகள்!

எனக்கு எதிர் வீட்டிலிருக்கிற ராமனுக்கும் சீதைக்கும் ஒன்றரை மாதத்துக்கு முன் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. தலைச்சன். மாலை மூன்று மணி சுமாருக்கு அழத் தொடங்கி விடும். ராத்திரி 11 மணியளவில் தூக்கம் வந்து அழுகை ஓயும். அதன் பிறகு தான் தெருவே நிம்மதியாகும். தாய்ப்பால் ஒத்துக் கொள்ள வில்லையோ என்று நினைத்து புட்டிப் பால் கொடுத்துப் பார்த்தார்கள். அமுல், லொக்சோ என்று மாற்றி மாற்றி ஊட்டிப் பார்த்தார்கள். தூளியிலே போட்டுக் குலுக்கினார்கள். தோளில் போட்டுத் தட்டினார்கள். தெருவில் நின்று வேடிக்கை காட்டினார்கள். டி.வி.யை அலற விட்டார்கள். ஆனால் பயல் ஒன்றுக்கும் மசியவில்லை. ஒரு பாட்டி "அடி வயிற்றிலே வலி, டாக்டர் கிட்டே காட்டுங்க" என்று தீர்ப்புச் சொன்னாள். நான் எனது நண்பரான டாக்டரிடம் அவர்களை அழைத்துக் கொண்டு போனேன்.

டாக்டர் குழந்தையை மேஜைமேல் படுக்க வைத்ததும் அழுகை நின்று விட்டது. பயல் சிரிக்க வேறு தொடங்கி விட்டான். "எடை, உயரம் எல்லாம் நார்மல், ஒன்றுமே கோளாறாக இல்லை என்று டாக்டர் சிரித்துக் கொண்டே சொன்னார். அப்புறம் ஏன் அழுகிறான்? டாக்டர் விளக்கத் தொடங்கினார்.



"குழந்தை பிறந்தவுடனே அழ வேண்டும். அப்படி அழுதால்தான் எல்லோருக்கும் நிம்மதி ஏற்படும். குழந்தையின் நுரையீரல் முழு அளவுக்கு விரிந்து உயிர் காக்கும் காற்றை உள்ளேயிழுக்க அந்த முதல் அழுகை உதவுகிறது. அதன் பிறகு தோன்றுகிற அழுகைகள் குழந்தையின் தகவல் தெரிவிப்பு உத்திகள் தான். அவற்றின் மூலம் பசிக்கிறது, வலிக்கிறது, ஜட்டி ஈரமாகி விட்டது என்றெல்லாம் குழந்தை தெரிவிக்கிறது. ஆனால் இத்தகைய காரணங்கள் எதுவுமேயில்லாத போது குழந்தை அழுதால் பெற்றோர் கவலைப்படுவது இயற்கையே. அதுவும் தலைச்சன் குழந்தையாக வேறு இருந்து விட்டால் என்னமோ ஏதோ என்ற பயமும் சேர்ந்து பெற்றோரை வாட்டும்."

"இவ்வாறு காரணம் தெரியாமல் அழுதால் எல்லோரும் உடனே அதற்கு அடி வயிற்றில் வலியென்று சொல்லுகிறார்கள். கோலிக் (COLIC) என்று சொல்லப்படுகிற அடிவயிற்று வலி ஒரு நோய் அல்ல. ஒரு நோய்க்குறியும் அல்ல. கிட்டத்தட்ட 20 சதவீதக் குழந்தைகளுக்குக் கோலிக் வரும். குழந்தைகளின் தினசரித் (BIORYTHM) தாளத்தில் அது ஒரு அம்சம் எல்லாக் குழந்தைகளுக்குமே மாலை நேரத்தில் ஒரு அசௌகரியமான உணர்ச்சி தோன்றும். சில குழந்தைகளுக்கு அது அதிகமாயிருக்கும். அவை அதிகமாக அழும். அந்த அசௌகரியமான உணர்ச்சி மூன்று அல்லது நான்கு மாதங்கள் வயதானபிறகு மெல்ல மெல்ல மறைந்து விடும்."

"சராசரியாகப் பார்க்கிற போது ஒரு மாத வயதுள்ள ஆரோக்கியமான குழந்தைகள் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரத்துக்கு மேல் அழும். ஒன்றரை மாதமாகிற போது இந்த அழுகை நேரம் மூன்று மணிகளாக உயரும். அதன் பிறகு அழுகை நேரம் படிப்படியாகக் குறையத் தொடங்கும். மூன்று மாதங்களுக்குப் பிறகு சராசரி அழுகை நேரம் ஒரு மணியாகக் குறைந்து விடும்.

இதெல்லாம் புள்ளி விவர மதிப்பீடுகள்தான். சில ஆரோக்கியமான சிசுக்கள் குறைவாக அழலாம். வேறு சில அதிகமாக அழலாம். அதைப் புரிந்து கொண்டு சமாளிப்பது கஷ்டம்தான்."

டாக்டர் தனது டயரியைப் புரட்டத் தொடங்கினார்.

"இந்தக் கேசைப் பாருங்கள். ஒரு அப்பா, அம்மாவுக்கு முதல் குழந்தை ஐந்து வருஷங்களுக்கு முன்னால் பிறந்தது. அப்பா ஒரு பிரபலமான நிறுவனத்தில் உயர் அதிகாரி. சதா டென்ஷன். ஓய்வே கிடையாது. சிரிக்கவே மாட்டார். அம்மாவோ நேர்மாறான குணமுள்ளவள். சதா சிரித்துப் பேசிக் கொண்டு எதையும் விளையாட்டாக எடுத்துக் கொள்கிறவள். குழந்தை தினமும் மாலை ஆறு மணிக்கு அழத் தொடங்கும். அதுவும் அப்பா ஆபீசிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் தான் அழுகை ஆரம்பிக்கும். அதன் உடம்பில் ஒரு கோளாறுமில்லை. ராத்திரி 11 மணி வரை சிணுங்கிக் கொண்டேயிருந்துவிட்டுத் தூங்கிப் போகும்."

குழந்தையின் அழுகையை அப்பாவால் தாங்க முடியவில்லை. அதற்கு ஏதோ வியாதியென்று அவர் எண்ணினார். "அதெல்லாம் ஒன்றுமில்லை, போகப் போகச் சரியாகி விடும்" என்று அம்மா சொன்னாள். இதனால் இரண்டு பேருக்குமிடையில் பிணக்கு. குழந்தைக்கு மூன்று மாத வயதான் பிறகு அழுகை படிப்படியாகக் குறைந்து விட்டது. மற்ற நலமான குழந்தைகளைப் போலவே அது ஆகி விட்டது."



"இரண்டு வருஷம் கழித்து அவர்களுக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது. அது முதல் குழந்தைக்கு நேர்மாறாக இருந்தது. நன்றாகச் சாப்பிட்டது. தூங்கியது. அழுவேயில்லை. முதல் குழந்தை குணத்தில் அப்பாவைக் கொண்டிருந்தது. இரண்டாவது அம்மாவைக் கொண்டிருந்தது என்று இப்போது புரிகிறது. குழந்தையின் குணம் பிறந்த சில நாட்களிலேயே வெளிப்பட்டு விடுகிறது. சில குழந்தைகள் சாதுக்கள். கொஞ்சமாக அழும். அது கூடப் பசித்தாலோ, ஜட்டி நனைந்து விட்டாலோ தான். வேறு சில நினைத்த போதெல்லாம் அழுது கொண்டேயிருக்கும்."

"பெரும்பாலான குழந்தைகளின் மனப்போக்கு அம்மாவின் குணாதிசயங்களைப் பொறுத்தே அமைகிறது. சில அம்மாக்கள் துடிப்பும், பதட்டமும், சுறுசுறுப்பும் உள்ளவர்களாயிருப்பார்கள். சில பேர் நிதானமாக இருப்பார்கள். முதல் வகையினருக்குப் பிறக்கிற குழந்தைகள் அதிகமாக அழுகின்றன. இந்தப் போக்கு பிறந்த இரண்டு நாட்களுக்குள்ளாகவே வெளிப்பட்டு விடுகிறது. அம்மாவுடன் பழகியதால் இந்த மனப்போக்கு உருவானதாகச் சொல்ல முடியாது. அது பிறவியிலேயே அமைந்ததுதான்."

அத்துடன் மன இறுக்கம், நிதானம் போன்றவை தொற்றக் கூடிய குணங்கள். பெரியவர்களிடமிருந்து குழந்தைகளுக்கு அவை சுலபமாகப் பரவும். தொட்டால் கூட ஒட்டிக் கொள்ளும். பிரசவ சமயத்தில் அம்மா கவலையுடனும் மன இறுக்கத்துடனுமிருந்தால் பிறக்கிற குழந்தையும் அழுகைப் பண்டாரமாக இருக்கும். இதில் இன்னொரு அம்சமும் உண்டு. குழந்தை அழுது கொண்டேயிருந்தால் பெற்றோருக்குக் கவலையும் மன இறுக்கமும் அதிகமாகும். இது ஒரு விஷச்சூழல்தான்.

"குழந்தை பிறப்பதற்கு முன்பு பெற்றோர் வாழ்ந்த விதமும் குழந்தையின் நடத்தையைப் பாதிக்கிறது. கருவுற்றிருந்த காலத்தில் தாய்க்கு ஏற்பட்ட மனச் சங்கடங்கள், பிரசவத்தின் போது ஏற்பட்ட வேதனை ஆகியவை கூடப் பிறந்த குழந்தைக்குச் சிடுமூஞ்சித் தனத்தை உண்டாக்கும்."

"குழந்தைக்குப் பசும் பால் ஒத்துக் கொள்ளாமல் "கோலிக்" உண்டாகுமல்லவா?" என்று சீதை கேட்டாள்.

"நூற்றுக்கு இரண்டு குழந்தைகளுக்குத் தான் பசும் பால் ஒவ்வாமை என்ற கோளாறு ஏற்படும். அழுகையோடு, வாந்தி, வயிற்றுப் போக்கு, வயிற்று வலி போன்றவையும் இருந்தால் பசும்பால் ஒவ்வாமை என்று ஊகிக்கலாம். அதற்கு மாற்றாகத் தாய்ப்பால் அல்லது சோயா அவரைப் பால் ஆகியவற்றை ஊட்ட வேண்டும்."


கண்ணுக்கு மையழகு,
கன்னத்தில் குழியழகு
கூந்தலுக்கு
டாம்ப்கால் அழகு
* அடர்த்தியான கூந்தல் தந்திடும்
குளிர்ச்சியான மூலிகைத் தைலம் டாம்ப்கால்
* பொடுகுத் தொல்லை விரட்டிடும் டாம்ப்கால்
* இளநரையை தடுத்திடும் டாம்ப்கால்
* முடி உதிர்வதைத் தடுத்திடும் டாம்ப்கால்
தமிழக அரசின் தரமான தயாரிப்பு.
* கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி, பொடுதலை,
செம்பருத்தி போன்ற 28 மூலிகைகளைக் கொண்டு
தேங்காய் எண்ணை மற்றும் ஆலிவ் எண்ணையுடன்
கூடியது டாம்ப்கால் மூலிகை கூந்தல் தைலம்
உங்கள் அனுபவத்தை எழுதவும்.
தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக்கழகம்
அண்ணா மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம்,
சென்னை 600 106. தொலைபேசி : 6216696,6214892.
DIPR/356 /DIS/96
டாம்ப்கால்

"எனக்குத் தாய்ப்பால் அதிகமாச் சுரக்கவில்லை. அதுமட்டுமே குழந்தைக்குப் போதாது" என்றாள் சீதை.

"அது தவறான எண்ணம். பெரும்பாலான தாய்மார்களுக்குக் குழந்தைக்குத் தேவைப்படுகிறதை விட அதிகமாகத்தான் பால் சுரக்கும். குழந்தையின் தேவை அதிகமாகிற போது சுரப்பும் அதிகமாகும். சில குழந்தைகள் பாலருந்துவதற்குப் பசி மட்டுமே காரணமாயிருப்பதில்லை. பால் குடிக்கிற போது ஏற்படும் சுகமான உணர்வும் காரணம். அதனால் அவை நினைத்த போதெல்லாம் பால் குடிக்க விரும்பும். மற்ற குழந்தைகளுக்கு மூன்று, நான்கு மணி நேர இடைவெளியில் பாலூட்டினாலே சந்தோஷமாகத் தூங்கிவிடும்."

"குழந்தை அழுவதற்கு உடல் நலக் குறைவும் காரணமாக இருக்கலாமில்லையா?"

"இருக்கலாம். ஆனால் உடல் நலக்குறைவு என்பது அரிதாக ஏற்படுவது தான். குழந்தை கையைக் காலை ஆட்டிக் கொண்டு, சீராக வளர்ச்சியடைந்து கொண்டேயிருந்தால் அதன் உடம்பில் கோளாறு இல்லை என்று நம்பலாம். சில பெற்றோர்கள் குழந்தை தூங்கும் போது எழுப்பிவிடக் கூடாதே என்பதற்காக வீட்டில் எந்த விதமான சத்தமும் எழாமல் தடுக்கிறார்கள். "இரையாதே, குழந்தை தூங்குகிறது" என்று மற்றவர்களை அடக்குகிறார்கள். அது தவறு. வீட்டின் இயல்பான ஓசைகளுக்கிடையிலும் குழந்தை தூங்கப் பழக வேண்டும்."

டாக்டர் தனது டயரியில் இன்னொரு பக்கத்தைப் புரட்டினார்.

"இந்தக் கேசைப் பாருங்கள். சில சமயங்களில் கடந்த காலச் சம்பவங்கள் காரணமாகப் பெற்றோர்களுக்குத் தம்மையுமறியாமலேயே குழந்தையின் உடல் நலத்தில் ஏதோ குறைவு ஏற்பட்டுள்ளதாக ஓர் எண்ணம் தோன்றி விடுவதுண்டு. ஒரு தாய் கருவுற்ற மூன்றாம் மாதத்தில் விட்டு விட்டு ரத்தப் போக்கு ஏற்பட்டது. அது ஒரு மாதம் வரை நீடித்தது. பரிசோதனை செய்து பார்த்தபோது அவளுடைய உடலில் ஒன்றும் கோளாறு இல்லை என்று தெரிந்தது. ஆனாலும் தாயாருக்கும் தந்தைக்கும் குழந்தை குறைப் பிரசவமாகி விடுமோ என்ற பயம் வாட்டியது. ஆனால் அப்படி ஒன்றும் நடக்க வில்லை. பத்து மாதங்கள் கழித்து அழகான, ஆரோக்கியமானதொரு பெண் குழந்தை பிறந்தது. ஆனாலும் பெற்றோர்கள் பதட்டத்துடனேயே இருந்தார்கள். குழந்தை லேசாகச் சிணுங்கினால் கூடப் பதறியடித்துக் கொண்டு ஓடிப் போய்ப் பார்ப்பார்கள். இதனால் குழந்தைக்கும் மன இறுக்கம் ஏற்பட்டு அழ ஆரம்பித்தது. உண்மையான காரணம் புரிந்ததும் பெற்றோர்கள் பழசை மறந்து, கவலையைக் குறைத்துக் கொண்டதும் இயல்பு நிலை திரும்பியது. கோலிக் அழுகை



கவலையூட்டுவதாக இருக்கிற போதிலும் போகப் போகச் சரியாகி விடும் என்பதைப் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். மருந்து கொடுப்பதால் பிரயோசனமே கிடையாது. பொறுமை தான் சரியான மருந்து. தினமும் எவ்வளவு நேரம் அழுகிறது என்று ஒரு கடிகாரத்தை வைத்து அளந்து கொண்டே வாருங்கள். போகப் போக அழுகை நேரம் குறைவதை நீங்களே தெரிந்து கொள்வீர்கள்."

"குழந்தையின் அழுகை பெற்றோருக்கு எரிச்சலை உண்டாக்குகிறது. அதுவும் மாலையில் பெற்றோர் அலுத்துக் களைத்திருக்கும் போதுதான் பெரும்பாலான குழந்தைகள் அழுவதற்கு நேரம் பார்க்கின்றன. இதனால் எரிச்சலும் கோபமும் கூடுதலாக வருகிறது. பெற்றோர் இதை எளிதாகத் தவிர்க்க முடியும். அனாவசியமாக வேலைகளை இழுத்துப் போட்டுக் கொள்ளாமலிருந்தால் அலுப்பும் களைப்பும் குறையும். வீட்டு வேலைகளைக் கணவனும் மனைவியும் பகிர்ந்து கொண்டு சுமையைக் குறைக்கலாம். குழந்தையை வளர்ப்பதற்குத் தாத்தா, பாட்டி, மற்ற உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் உதவியைத் தயங்காமல் நாட வேண்டும். முன் காலத்திலிருந்த கூட்டுக் குடும்பங்கள் இதற்குப் பேருதவி செய்தன. அத்துடன் கணவனும் மனைவியும் தமக்குள் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் இருக்க வேண்டும். அடிக்கடி டாக்டரைச் சந்தித்துக் குழந்தை உடல் நலத்துடனிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். குழந்தை நன்றாகச் சாப்பிட்டு, விளையாடிக் கொண்டிருந்தால் போதும். அது அழுவதைப் பற்றி அதிகமாகக் கவலைப் பட வேண்டாம்."

- கே.என். ராமசந்திரன்

என் பேர் 'ரிப்பேர்' ஆன கதை

பத்தாம் வகுப்பில் என் உடன் படித்த ராகவன் எல்லா பாடத்திலும் பெயில் ஆகி ரெகார்டு ஏற்படுத்தியவன். அவன் நேற்று வந்து தான் ஆரம்பிக்கப் போகும் எலெக்ட்ரிகல் ரிப்பேர் கடை திறப்பு விழாவிற்கு நானும் என் மனைவியும் கண்டிப்பாய் வரவேண்டும் என்று அழைத்துவிட்டு.

"வரும்போது பரிசு எதுவும் கொண்டு வரணுமா? இல்லை ரிப்பேர் ஆன சாமான் கொண்டு வரணுமா?" என்ற என் ஜோக்கிற்கு கஷ்டப்பட்டுச் சிரித்து விட்டுப் போனான்.

திறப்பு விழாவிற்குப் போன போது மறக்காமல் கடபுட சத்தம் வரும் தன் மிக்ஸி பற்றி நண்பன் காதில் போட்டதுடன் நிற்காமல்,

"எங்களுக்கும் அதே ரேட்தானா? இல்லை ஏதாவது குறைப்பீங்களா?" என்று காய்கறிகாரியிடம் பேரம் பேசுவது போல் கேட்டாள் என் மனைவி.

"கடை வைக்க லோன் வாங்க உதவி செஞ்சதே உங்க வீட்டுக்காரர்தான். உங்ககிட்ட போய் பணம் வாங்குவேனா? பையன் கிட்ட குடுத்துவிடுங்க சரி பண்ணித் தரேன்." என்றான் என் நண்பன். அவ்வளவுதான் மறுநாளே மிக்ஸியோடு அவன் கடைக்கு ஆஜர். மிக்ஸியில் உள்ள ரிப்பேர்களை யோசித்து யோசித்து லிஸ்ட் போட்ட போது,

"இவ்வளவு டிரபிளா, பேசாம புதுசே வாங்கிடலாமா?" என்றேன்.

"கேட்டா அப்படியே வாங்கித் தந்திட உங்க சம்பளகவர் என்ன அமுத சுரபியா? நானா



கண்டு இந்த ஓடசல் மிக்ஸிய வைச்சுகிட்டு இத்தனை காலம் தள்ளினேன்."

வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்திருக்கலாம் என்ற ஞானோதயம் எனக்கு அப்போதுதான் வந்தது.

இருக்கும் ரிப்பேர், இனி வரலாம் என்ற ரிப்பேர் என எல்லாவற்றையும் சொல்லி ஒரு மணி நேரம் அவனை வேலை வாங்கி

பூர்ணிமா

விட்டான்.

"எவ்வளவு குடுக்கணும் ராகவன்?" என்ற என்னைச் சாதாரண கண்ணிலேயே நெற்றிக் கண்ணை கொண்டு பார்த்தான்.

"நான்தான் சொன்னேனே உன்கிட்ட பணம் வாங்கறதில்லைன்னு?"

"கண்டிப்பா வாங்கிக்கணும்" என்றபடி பணத்தை எடுத்தேன். ராகவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள்,

"நீங்களும் பணம் குடுத்த மாதிரி இருக்கணும், அவரும் வாங்காத மாதிரி இருக்கணும்னா ஒரு ரூபா குடுத்துருங்க சரியாக போகும்" என்ற ஆலோசனையை மனைவி வழங்க அன்றைய பிரச்னை தீர்ந்தது.

மறுநாள் அலுவலகத்திலிருந்து வீடு திரும்புகிறேன். ஹால் எங்கும் சாமான்கள்.

"வீட்டுக்காரர் திடீர்ன்னு காலி பண்ண சொல்லிட்டாரா? வாடகை கூட ஒழுங்காத் தந்துடறோமே?"

அப்பாவியாய் நான் கேட்க,

"ரிப்பேருக்குன்னு ஒண்ணு ரெண்டு சாமான் எடுத்து வைச்சேன். அதுக்குப் போய் இப்படிக் கிண்டலா குத்திக் காட்டணுமா?"

'ணொங்' என்று எலெக்ட்ரிக் ஸ்டவ் வைக்கப்பட்ட ஓசையில் கோபம் தெரிந்தது. இருப்பது போதாதென்று இன்னும் எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

"இத்தனையும் ரிப்பேருக்குக் குடுத்தா என் சம்பளம் காலிதான்."

"வேற கடையில கொடுத்தாதானே? உங்க பிரெண்டு கடையில கொடுத்தா சும்மாவே கூட பண்ணிக் கொடுத்துடுவார்."

"நல்லாயிருக்கே அவன் ஏதோ பேச்சுக்கு சும்மா பண்ணித் தரேன்னா உடனே எல்லாத்தையும் தூக்கிகிட்டு போயிடறதா?"

"பேச்சுக்குச் சொன்னாரோ ஏச்சுக்குச் சொன்னாரோ உங்களுக்குக் கேட்க அவமானமா இருந்தா நானே போய் கொடுத்துட்டு வரேன்." போங்கல கடன் வாங்க உதவி பண்ணினது நீங்கதானே? அதுக்காக ஒரு நாலு





இல்லதரசிகளுக்கு புதிய துணை
சமையல் கலையில் திருப்புமுனை
மில்க் பாய்லர், இட்லி குக்கர்,
வாட்டர் ஃபில்டர், குழிகரண்டி
எல்லாம் தந்திடும்
Murugan
முருகன் மெட்டல் என்றாலே
முகம் மலரும் தன்னாலே
முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்
21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை-3.
போன்: 582182

பொருள் ஒசியில ரிப்பேர் பண்ணினா ஒண்ணும் குறைஞ்சிடாது."

"லோன் குடுத்தது பேங்க், நான் இல்ல."

"உங்ககிட்ட பேசிப் பிரயோஜனம் இல்ல. காசு குடுத்து ரிப்பேர் பண்ண வக்கில்லை. சாமர்த்தியமா ஓசில பண்ணவும் சூட்டிப்பு இல்லை."

இனியும் வாக்குவாதம் தொடர்ந்தால் தன் தறுதலை தம்பிக்கு லோன் வாங்கித்தர மறுத்த கதையைக் கொண்டு வருவாள். அவளை திசை திருப்ப,

"இப்படி எல்லாச் சாமானையும் தூக்கிகிட்டுப் போனா அவன் பயந்து கடையை மூடிட்டு ஓடிடுவான். இத்தனையும் எடுத்துக்கிட்டு போக டெம்போதான் கூட்டிக்கிட்டு வரணும் அது ஒரு தண்டச் செலவு." நானே அப்பப்ப ஒண்ணொண்ணாக் கொண்டு போறேன். அப்பத்தான் அவனுக்கும் ஓசில பண்ணித் தரோம்னு தோணாது" என்றேன்.

"சரி முதல்ல என் கிரைண்டரைச் சரிபண்ணிடலாம்" என்ற நிலைக்கு இறங்கி வந்தாள்.

"என் வாக்மேன்ல கொர்ன்னு சத்தம் வருது அதை முதல்ல சரி பண்ணித் தாங்க, அம்மாவுக்குத்தான் மிக்ஸி சரியாகி வந்திருக்கே" சமத்துவம் பேசினான் மகன்.

"கொர்ன்னு சத்தம் வர்றது உன் வாக்மேன்ல இல்ல அந்தக் கண்றாவி மியூசிக்கே அந்த லட்சணம்தான். தீபாவளி பட்டாசு மாதிரி டமார் டமார்ன்னு அடிச்சா வொண்டர்புல்னு கேட்பானுங்க. சின்னதா கொர் சத்தம் வந்தா தாங்க முடியாதாக்கும்?"

அவசரத் தேவை லிஸ்டில் வாக்மேன் கடைசி இடத்திற்குத் தள்ளப்பட்டது.

"என் ஹேர் டிரையர் ஆவுன்னா மக்கர் பண்ணுதுப்பா அத முதல்ல குடுங்க."

"வெயில்ல தலை காய வைச்சா சன்பாத் எடுத்த மாதிரி உடம்புக்கும் நல்லது. இதைப் போட்டுதான் உன் முடியே கொட்டிப் போச்சு."

இயற்கை மருத்துவக் குறிப்பு ஒன்றைப் பேத்திக்கு வெளியிட்ட என் அப்பா,

"இந்த ரேடியோ கனெக்ஷனே சரியில்ல. சமயத்துக்கு கால வாரிவுடுது. அதுவும் நியூஸ் நேரத்துல உயிரை வாங்குது. இதைக் கொடுத்துடுவோம்."

"டி.விலதான் இந்தி, தமிழ், இங்கிலீஷ், சமஸ்கிருதம் காது கேளாதோர் நியூஸ்ன்னு நாத்தியெட்டு நியூஸ், காலைல, மத்தியானம் இராத்திரின்னு இருக்கே. அதுங்கள பாத்தா போதாதா?" என்று அவரைச் சரிக்கட்டினேன்.

"வெந்நீர் போடற எலெக்ட்ரிக் டிரம் எப்பவாவது ஷாக் அடிக்குது."

"அது சின்ன விஷயம் நானே சரிபண்ணிடுவேன்." இப்போதைக்கு ஓசி ரிப்பேர் மோகத்துக்கு இடைவெளி கிடைத்தது. சம்பளம் வந்ததும் வேறு கடையில் அவ்வப்போது ஒன்றாய் கொடுத்து சரி செய்து விடலாம் என்பது என் எண்ணம். கொஞ்ச நாளுக்கு யாரிடமிருந்தும் எந்த நச்சரிப்பும் இல்லை.

ஞாயிற்றுக்கிழமை ஷாக் அடிக்கும் டிரம்மை சரிசெய்ய நான் எடுத்தபோது மனைவி சொன்னாள்.

"இப்பல்லாம் அது ஷாக் அடிக்கறதில்லை. உங்க பிரெண்டு இரண்டு நிமிஷத்துல சரி பண்ணிட்டார் அன்னிக்கே."

"எப்ப இதெல்லாம் எனக்குத் தெரியாம?"

"அன்னிக்கு எல்லாத்துக்கும் சாக்கு போக்கு சொன்னப்பவே தெரியும் நீங்க கூச்சப்பட்டுக்கிட்டு போகமாட்டீங்கன்னு. அதுதான் மத்தியானம் சும்மா இருக்கும் போது நானும் மாமாவுமா இரண்டு தடவையா எல்லாச் சாமானையும் கொண்டு போய் ரிப்பேர் பண்ணிக்கிட்டு வந்துட்டோம்."

"பணம் குடுத்தியா இல்லை நாமமா?"

"நான் குடுக்கறேன்னு எவ்வளவோ சொன்னேன். அவர்தான்... வேணும்னா மாமாவை கேளுங்க." சாட்சிக்கு அப்பாவை அழைத்தாள்.

ஏதோ லோன் வாங்க உதவிய பாவத்திற்கு ஒருவனிடம் இப்படியா ஓசி அடிப்பது? அவனைப் பார்த்து மன்னிப்புக் கேட்டு பணத்தை கொடுத்துவரப் புறப்பட்டேன்.

"டி.வில கோடு கோடா வருது. சொல்லிட்டு வந்திருக்கேன். கையோட பண்ணி வாங்கிக்கிட்டு வந்திருங்க. அத்தோட ரிப்பேர் வேலை மொத்தமும் முடிஞ்சிடும்." என்ற மனைவியின் சொற்களைக் காதில் போட்டுக் கொள்ளாமல் வெளியேறினேன்.

தெரு முனையில் என் தலை தெரிந்ததுதான் தாமதம், ராகவன் கடைப் பையனிடம் ஏதோ சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டான். உற்ற நண்பன் என்னைக் கண்டாலே ஓடி ஒளியும் நிலையா? கூனிக் குறுகிப் போனேன் நான்.

"அய்யா இல்ல அப்புறம் வாங்க." சொல்லிக் கொடுத்ததை கிளிப்பிள்ளையாய் சொன்னான் கடைப் பையன்.

"அய்யா வந்தா இந்தப் பணத்தை கொடுத்துரு மேல ஆயிருந்தா வந்து தரேன். என் வீட்லர்ந்து யார் வந்தாலும் பணம் வாங்கிக்கணும், இல்லாட்டா லோனை திரும்ப வாங்கிப்பேனாம்னு சொல்லிவை உன் முதலாளிக்கு." அதட்டலாய்ச் சொல்லிவிட்டு நிம்மதியாய் வீடு திரும்பினேன்.

இதயம் ரோஜா மலராக இருந்தால் பேச்சில் அதன் வாசனை தெரியும்.

- (ரஷ்யப் பழமொழி)

- பா. அச்சுதன்

பொருள் - கிழங்கு

முதல் பரிசு
ரூ. 300/-





• கஸ்தூரி



• சுந்தரி

மிதக்கும் பந்து

தேவையான பொருட்கள்:

ஒரே சைஸில் பெரிய உருளைக் கிழங்குகள் - 8
தக்காளி – ½ கிலோ
பச்சை பட்டாணி – 1 கப்
பொடியாக நறுக்கிய வெங்காயம் – 1கப்
இஞ்சி பூண்டு அரைத்த விழுது
மிளகாய்ப் பொடி – 2 ஸ்பூன்
கரம் மசாலா பொடி - 1 ஸ்பூன்
மேலே தூவ கொத்தமல்லித்தழை – சிறிதளவு
தாளிக்க நெய் அல்லது எண்ணெய்.

செய்முறை:

முதலில் உருளைக் கிழங்கை வேக வைத்து மெல்லிய கத்தியாலோ, அல்லது காய் துருவும் கத்தியாலோ எல்லா கிழங்குகளையும் உடையாமல் உள்ளே பீஸ் மசாலா வைக்கும் அளவுக்கு உள் கிழங்கை சுரண்டி எடுக்க வேண்டும்.

பீஸ் மசாலா செய்யும்முறை:

பட்டாணியை வேகவைத்துக் கொண்டு, சிறிது மிளகாய்த்தூள், உப்பு, கரம்மசாலா சேர்த்து, இஞ்சி பூண்டு வதக்கி, கடாயில் தாளித்து சுருள வதக்கிக் கொள்ள வேண்டும். சுரண்டி எடுத்த கிழங்கு மாவையும் சேர்த்துக் கொள்ளவும்.



தக்காளி சாஸ் செய்யும்முறை:



தக்காளியைக் கழுவி மிக்ஸியில் போட்டு நன்றாக அரைத்துக் கொள்ள வேண் டும். கடாயில் எண்ணெய் வைத்து இஞ்சி பூண்டு விழுது, நறுக்கிய வெங்காயம் சேர்த்து பொன் நிறமாக வதங்கி வந்ததும் தக்காளி சாறை ஊற்றி கரம் மசாலா பொடி, மிளகாய்த் தூள் தேவையான உப்புப் போட்டு, ஒரு ஸ்பூன் சர்க்கரை சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். தக்காளிக் குழம்பு கொதித்து வருகையில் உருளைக் கிழங்கு உள்ளே, பட்டாணி மசாலா பூரணத்தை உள்ளே திணித்து மேலே சிறிதளவு மைதாமாவு பசையைத் தடவி, கொதிக்கும் குழம்பில் ஒவ்வொன்றாக போடவும்.

இம்மாத இல்லத்தரசி



குழம்பு பதமாகி கண்டி உருளைக்கிழங்குகள் பந்து போல அழகாக மிதக்கும். குழம் பினை அகன்ற கிண்ணத்தில் ஊற்றி மேலே கொத்தமல்லி தழையைத் தூவி வைத்தால், பார்க்க அழகாக இருக்கும். ஏற்கெனவே உருளைக் கிழங்கு சாப்பிடும் குழந்தைகள் இந்த உருளைக் கிழங்கை சாப்பிட கேட்கவே வேண்டாம்.

– எஸ். சரோஜா,
சென்னை – 6.

இரண்டாம் பரிசு ரூ. 200/-

சேப்பங் கிழங்கு மசாலா ரோஸ்ட்

தேவையான பொருட்கள் :

சேப்பங் கிழங்கு – ¼ கிலோ
பொறிப்பதற்குத் தேவையான எண்ணெய்
தேவையான பொடி உப்பு, மிளகாய்த் தூள் (அ) மிளகுத் தூள்.

செய்முறை :

சேப்பங்கிழங்குகளை வாங்கும் பொழுது ஒரே மாதிரி அளவு உள்ள கிழங்குகளை பொறுக்கி எடுக்கவும். தண்ணீரில் சற்று நேரம் ஊறவைத்து மேல் மண் போகக் கழுவிக் கொள்ளவும். இந்தக் கிழங்குகளை மேல் தோலை உரிக்கும் அளவுக்கு இட்லி தட்டில் வைத்து ஆவியில் வேக விடவும். பிறகு மேல் தோலை உரித்துக் கொள்ளவும்.

எண்ணெயை அடுப்பில் ஏற்றி நன்கு சூடேறியதும் உரித்த கிழங்குகளை எண்ணெய் கொள்ளும் அளவுக்குத் தகுந்த படி இளம் சிகப்பாக வறுத்தெடுக்கவும். சற்று சூடு ஆறிய பிறகு ஒவ்வொரு கிழங்கையும் உள்ளங்கையில் வைத்து மற்றொரு கையால் மெதுவாக அடை போன்று தடிமனுக்கு அமுக்கிக் கொள்ளவும். இப்படி அமுக்கிய கிழங்கு அப்பளங்களை மறுபடியும் சூடேறிய எண்ணெயில் போட்டு (எண்ணெய் கொள்ளும் அளவுக்குப் போட்டு) வெள்ளையாக தெரியும் பாகங்களெல்லாம் சிவக்கும் அளவுக்கு ரோஸ்ட் செய்து எடுத்துக் கொள்ளவும். இந்த ரோஸ்ட் செய்த கிழங்குகளின் மேல், பொடி உப்பு+மிளகாய்த்தூள் (அ) பொடிஉப்பு + மிளகுத் தூள் – அவரவர் ருசிக்குத் தகுந்த படி கலந்து தெளித்துச் சாப்பிடவும்.

பி.கு.: இரண்டு முறை கிழங்குகள் பொறிக்கப்பட்டாலும், எண்ணெய் அதிகம் குடிப்பது இல்லை. பஜ்ஜி செய்வதை விட குறைவாகவே இழுக்கும். இதனை சிற்றுண்டியாகவும் சாப்பிடலாம். சாப்பாட்டுடனும் சேர்த்துச் சாப்பிடலாம்.

– ஏ. கஸ்தூரி, தாராபுரம்.

மூன்றாம் பரிசு ரூ. 100/-

கருணைக் கிழங்கு தாளிதம்

தேவையான பொருட்கள் :

பிடி கருணைக் கிழங்கு – ¼ கிலோ
புளி – சிறு எலுமிச்சம் பழ அளவு.
மிளகாய்த் தூள் (சாம்பார்ப்பொடி)– 2 டேபிள் ஸ்பூன்
மஞ்சள் தூள்– சிறிது.
வெல்லம்– 25 கிராம் (சிறுகட்டி)
தேங்காய்த் துருவல்– ¼ கப்
துவரம் பருப்பு வேக வைத்தது ¼ கப்
சி.வெங்காயம் - 10 (பொடியாக நறுக்கியது)
இஞ்சி– சிறு துண்டு.
நல்லெண்ணெய் – 2 கரண்டி
தேவையான அளவு உப்பு.
தாளிக்க – கடுகு, உ. பருப்பு, சீரகம், கருவேப்பிலை. (புளி சேர்ப்பதால் நாக்கை அரிக்காது.)

செய்முறை :

கருணைக் கிழங்கை மண் போக நன்கு கழுவி விட்டு வட்டமாக நறுக்கிக் குக்கரில் நீர் விட்டு நன்கு குழையும் வரை வேக விடவும் (4 விஸில்). புளியை உப்பு சேர்த்து கெட்டியாகக் கரைத்து வைக்கவும். கருணைக் கிழங்கை தோலுரித்து மசித்து வைக்கவும். அடிகனமான வாணலியில் பாதி எண்ணெய்



சாதம் அதிகமாக மீந்து விட்டதா? பாத்திரத்திலே வைத்து வெளியே வைத்திருந்தால் கொசகொச என ஆகிவிடும். இதைத் தவிர்க்க சாதத்தைப் பாத்திரத்துடன் 'ஃபிரிட்ஜில்' வைக்கவும். மறுநாள் அதைப் பாத்திரத்துடன் குக்கரில் வைத்து சூடுபடுத்தவும். வெங்காயத்தைத் தாளித்து வதக்கி, சாதத்துடன் கலந்தால் 'வதக்கல் ரைஸ்' மல்லிகைப்பூப் போல இருக்கும்.

– எம்.எஸ். சரஸ்வதி

ஊற்றிக் காய்ந்ததும் கடுகு, உபருப்பு, சீரகம் போடவும். கடுகு வெடித்த பின்பு நறுக்கிய சி. வெங்காயம், இஞ்சித்துண்டுகள், கருவேப்பிலை போட்டு நன்கு வதக்கவும். வதங்கிய பின் புளி கரைசலை விடவும். மஞ்சள்தூள், மிளகாய்த் தூள் போடவும். குழம்பு பதத்தில் உள்ள இதில் கருணைக்கிழங்கு மசித்து வைத்துள்ளதைப் போடவும். நன்கு கண்டும் பதத்தில் துவரம் பருப்பு, தேங்காய்த் துருவல், வெல்லம் சேர்த்து எண்ணெய் ஒரு கரண்டி விடவும். சுருண்டு வரும் பதத்தில் இறக்கவும். இந்தத் தாளிதம் இனிப்பு, புளிப்பு, காரம் என எல்லா ருசியும் சேர்ந்து மிக நன்றாக இருக்கும். எங்கள் தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பிரபலமான பதார்த்தம். பொங்கல் அன்று கண்டிப்பாக இடம் பெறும். பால் பொங்கலுக்குச் சரியான காம்பினேஷன். அப்படியே சாதத்தில் பிசைந்தும் சாப்பிடலாம்.

– சுந்தரி செல்வராஜ், பாண்டிச்சேரி.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

சேனைக்கிழங்கு கார பக்கோடா


தேவையான பொருட்கள்:

சேனைக்கிழங்கு – ¼ கிலோ
கடலை மாவு – 100 கிராம்
வெங்காயம் (பெரியது) – 2
பச்சை மிளகாய் – 4
கொத்தமல்லி – அரைகட்டு
கோஸ் – 100 கிராம்
கேசரிகலர் – சிறிதளவு
உப்பு – தேவைக்கேற்ப
எண்ணெய் – ¼ கிலோ

செய்முறை :

முதலில் சேனைக்கிழங்கை நன்கு வேக வைத்து மசித்துக் கொள்ளவும். கடலை மாவுடன் பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், கோஸ், கொத்தமல்லி ஆகியவற்றைப் போட்டு அதனுடன் உப்பு, சிறிதளவு கேசரி கலர் மற்றும் மசித்து வைத்து உள்ள சேனைக் கிழங்கையும் போட்டுக் கலந்து பக்கோடா போடும் பக்குவத்தில் தண்ணீர் திட்டமாக விட்டு பிசைந்து கொள்ளவும். எண்ணெயைத் திட்டமான தீயில் காய வைத்து பக்கோடாவை போட்டுப் பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். இது மிகவும் மொறுமொறுவென்று இல்லாமல் பஞ்சு போன்று மிருதுவாக இருக்கும். இதற்குத் தேங்காய்ச் சட்னி தொட்டுக் கொண்டால் மிகவும் ருசியாக இருக்கும்.

– ஆர். மாலதி, சென்னை – 91.



"நாம் மட்டும் தலை வணங்கிக் கேட்டோமானால் குழந்தைகளிடமிருந்து எத்தனையோ பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்." - காந்திஜி.

- எஸ். விஜயாசீனிவாசன்

ஆறுதல் பரிசு ரூ. 10/-

கிழங்கு லாடு

தேவையான பொருட்கள் :

சர்க்கரை வள்ளிக் கிழங்கு – ½ கிலோ
தேங்காய்த் துருவல் – 1 கப்
முந்திரிப் பருப்பு – 100 கிராம்.
சர்க்கரை – 100 கிராம்
நெய் – 100 கிராம்
ஏலக்காய் – 10 (பொடி பண்ணியது)

செய்முறை :

முதலில் தேங்காய்த் துருவலைப் பொன்னிறமாக வறுத்து எடுக்கவும். மணம் வரும்போது பொடித்த ஏலக்காயைப் போட்டுக் கிளறி விடவும். இதில் நெய்விட்டு வறுத்த, சிறுசிறு துண்டங்களாக உடைத்த முந்திரிப் பருப்பைச் சேர்த்துக் கிளறி வைத்துக் கொள்ளவும்.

சர்க்கரை வள்ளிக் கிழங்கை கழுவிவிட்டு தோலை கரண்டிய பின்பு உப்பு நீரில் ¼ மணி நேரம் வேகவிட வேண்டும். சிறுசிறு துண்டங்களாக்கி மிக்ஸியில் இட்டு, சர்க்கரையையும் சேர்த்துப் பிசைந்துவிட வேண்டும். இத்துடன் மேலே தயாரித்து வைத்துள்ள பூரணத்தையும் சேர்த்துப் பிசைந்து, நெய்யைத் தொட்டுக் கொண்டு சிறுசிறு லாடுகளாகப் பிடிக்கவும். இட்லி வேக வைப்பது போல 5 நிமிடங்கள் மட்டுமே வெந்த பின்பு, எடுத்துச் சற்று சூடு ஆறிய பின்பு சாப்பிடலாம்.

– என். முத்துலட்சுமி, திண்டுக்கல்

மங்கையர் மலரும், செண்பகம் சில்க்ஸும் இணைந்து ஒரு கட்டுரைப் போட்டியினை அறிவித்திருந்தோம். புடைவை சம்பந்தமாக பெண்களுக்குப் பல்வேறு சம்பவங்கள் வாழ்க்கையில் நடந்திருக்கலாம். அந்த உணர்வுகளையே ஒன்பது பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு உணர்வு வெளிப்படுத்துவதாகப் போட்டிகளை அறிவித்து வருகிறோம்.

முதல் மாதப் போட்டியை விட இரண்டாவது மாதப் போட்டிக்கு நிறைய வாசகிகள் தங்கள் அனுபவங்களை எழுதியிருந்தார்கள். 'கோபம் நிறைய வரும் போலிருக்கே, நம் வாசகிகளுக்கு!' என நினைத்துக் கொண்டோம். பரிசு பெற்ற கட்டுரைகளைத் தொடர்ந்து வரும் பக்கங்களில் பிரசுரித்துள்ளோம்.

போட்டிக்கான நிபந்தனைகள்-

- வாழ்வின் வண்ணங்கள் போட்டியில் இது நான்காவது மாதப் போட்டி, மொத்தம் ஒன்பது மாதங்கள் நடைபெறும்.
- ஒவ்வொரு மாதமும் போட்டிக்கு வரும் கட்டுரைகளில் மிகச் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்து ரூ.5000/- பெறுமானமுள்ள 'செண்பகம் சில்க்ஸ்' பட்டுப்புடைவை பரிசாக அளிக்கப்படும்.
- இந்தப் போட்டிக்கான கட்டுரை ஒரு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- கட்டுரையின் முடிவில் உங்களுடைய பெயர், முகவரியைத் தெளிவாக எழுதவும்.
- தபால் கவரின் மேல் வாழ்வின் வண்ணங்கள் கட்டுரைப் போட்டி - 4 எனத் தவறாமல் குறிப்பிடவும்.
- இம்மாதக் கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 20.3.'96.

மங்கையர் மலர் & செண்பகம் சில்க்ஸ் இணைந்து வழங்கும்

வாழ்வின் வண்ணங்கள்

கட்டுரைப் போட்டி:4

செண்பகம் சில்க்ஸ் பட்டுப்புடைவை பரிசு பெறும் வாசகிகள் சிலருக்கு நாங்களே நேரில் சென்று தருவது, சிலரை மெட்ராஸில் அழைத்துத் தருவது என முடிவெடுத்துள்ளோம். அவ்வப்போது அவற்றினை பற்றிய அறிவிப்பைப் புகைப்படங்களோடு பிரசுரிக்க உள்ளோம்.

சரி, இப்போது நான்காவது மாதப் போட்டிக்குப் போவோமா?

நான்காவது மாதப் போட்டிக்கான தலைப்பு-

அன்பு, பாசம்

புடைவை சம்பந்தமாக உங்கள் வாழ்க்கையில் அன்பு, பாசம் ஏற்படுத்திய நிகழ்ச்சியை, அல்லது உங்களுக்குத் தெரிந்தவர் வாழ்க்கையில் அன்பு, பாசம் ஏற்படுத்திய நிகழ்ச்சியை எழுதி அனுப்புங்கள்.

- கட்டுரைகளைத் தபாலில் மங்கையர் மலர் முகவரிக்கோ அல்லது தபாலிலோ (அ) நேரிலோ செண்பகம் சில்க்ஸ், 30-பி, லஸ் அவின்யூ (நாகேஸ்வரராவ் பார்க் பின்புறம்) மைலாப்பூர், சென்னை- 600 004 என்ற முகவரிக்கோ அனுப்பவும். இரண்டு இடத்திற்கும் ஒரே கட்டுரையைப் பிரதி எடுத்து அனுப்ப வேண்டாம்.
- நேரில் கட்டுரைகளைச் சேர்க்கும் வாசகியருக்கு செண்பகம் சில்க்ஸ் உரிமையாளர் திருமதி. செண்பகம் ராமசாமி ஒரு அன்பளிப்பைத் தரவிருக்கிறார்.
- கட்டுரை சம்பந்தமான கடிதப் போக்குவரத்தோ, திருப்பி அனுப்புவதோ கிடையாது.
- கட்டுரை சம்பந்தமான விதிகளை திருத்தவோ மாற்றவோ ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- பரிசு பெறும் கட்டுரைகளைப் பொறுத்தவரை ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

வாழ்வின் வண்ணங்கள் - கோபம்!

கோபம் செய்த மாற்றம்!

எங்கள் மாமா பெண்ணுக்கு எப்போதும் புடைவை மோகம். எந்தப் புடைவையைப் பார்த்தாலும் வாங்க வேண்டும் என்ற தீராத அவா. அவள் பிறந்த வீட்டில் ஒரே செல்லப்பெண்ணாக இருந்ததால் எங்கள் மாமா அவள் விரும்பிக் கேட்ட புடைவைகளை வாங்கிக் கொடுத்தார். அவளுக்குக் கல்யாணமாகி எங்கள் வீட்டுக்குப் பக்கத்துத் தெருவில் குடியிருந்தாள்.

அவளுடைய கணவர் சிறிது கண்டிப்பானவர். அவர் அலுவலகம் சென்றபின், நவராத்திரி சமயம் வாசலில் புடைவைக்காரன் வந்தான் என்று ஒரு பட்டுப் புடைவை, ஒரு



பாலியஸ்டர் புடைவை வாங்கினாள். மாலையில் கணவன் வந்தவுடன் ஆசையாகக் காட்டினாள். வீட்டில் ஒரே பூகம்பம். அவள் கணவர் அவளை தன் உத்தரவு இல்லாமல் அதிகவிலை கொடுத்து புடைவைகளை வாங்கியதற்காகக் கண்டித்தார். அவளோ தன் உரிமை, சுதந்திரம் முதலியவை பறிபோய் விட்டதாக அழுதாள்.

கஷ்டப்பட்டு தான் சம்பாதித்த பணத்தை அவள் கண்டபடி செலவு செய்வதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கோபப்பட்டார்.

இருவரும் என்னிடம் வந்து தங்கள் மன வருத்தத்தை தெரிவித்தனர். நான் மாப்பிள்ளையிடம் "நீங்கள் வீட்டு வரவு, செலவு கணக்கு, பொறுப்பு முதலியவற்றை உங்கள் மனைவியிடம் விட்டுவிடுங்கள். உங்கள் வருமானத்தில் அவள் செம்மையாகக் குடும்பம் நடத்த வேண்டும். ஆனால் தவறாமல் வீட்டுக் கணக்கை ஒரு புத்தகத்தில் குறித்து அது பற்றி உங்களிடம் மாதக் கடைசியில் பேசவேண்டும்" என்றேன். முதலில் மாப்பிள்ளை கோபப்பட்டார், "அவள் என் சம்பளம் பூராவையும் புடைவைக்கே செலவழிப்பாள்" என்று. பிறகு எங்கள் வற்புறுத்தலால் ஒத்துக் கொண்டார்.

வரவு செலவு கணக்கை கவனிக்கும் பொறுப்பை ஏற்ற என் மாமா பெண்ணிற்கு ஒரே மாதத்தில் குடும்பம் நடத்துவதில் உள்ள கஷ்டம் நன்றாகப் புரிந்தது. வரவைவிட செலவு அதிகமாக இருப்பதைக் கண்டு திகைத்தாள். தன் புடைவை செலவைக் குறைத்தாள். இப்போது வருடத்திற்கு இரண்டு பாலிஸ்டர் புடைவைகளை மட்டுமே வாங்குகிறாள். மாப்பிள்ளை வருமானத்தில் கஷ்டப்பட்டு பணம் சேர்த்து வைக்கிறாள், பின்னால் வரும் பெரிய செலவுகளுக்காக. இப்போதெல்லாம் மாப்பிள்ளை அதிகவிலை கொடுத்து அவளுக்குப் புடைவை வாங்கினால், அவரைக் கண்டிக்கும் அளவு தேறி விட்டாள். புடைவை வாங்கியவுடன் ஏற்பட்ட அந்த கோப நிகழ்ச்சி அவர்கள் வாழ்க்கையில் ஒரு புதிய நல்ல திருப்பத்தை ஏற்படுத்தியது.

-ரோஹிணி வெங்கட்ராமன், சென்னை-5

பிரசுரத்திற்கு....

சவாலே சமாளி

எனக்குத் திருமணமான புதிது. கைப்பிடித்த பாக்கியவான் உறவினர்தான். அவருக்கு நன்றாகவே தெரியும் நான் ஒரு short temper ஆசாமி என. அது எப்படித்தான் "சடார் சடார்" எனக் கோபம் வந்து தொலைக்கின்றதோ எனக்கு...?!


திருமணமான புதிதில் ஹனிமூனுக்குப் புறப்பட்டோம். முதலில் மதுரைக்குக் கிளம்பினோம். பஸ்ஸில் போர் அடிப்பதைத் தவிர்க்க என் கணவர் "ஒரு ஐடியா" என்றார். என்ன என்பது போல பார்த்தேன்.

"ஒரு பெட் கட்டிக்கலாம். நான் மதுரை போற வரைக்கும் எதாவது கேட்டுக்கிட்டே வருவேன். நீ துளிக்கூட கோபப்படாம பதில் சொல்லிட்டு வந்தின்னா... ஒரு பட்டுப் புடைவை வாங்கித்தருவேன்... என்ன ரெடியா?" என்றார்.

மனிதர் என்னை நிமிண்டிப்பார்க்கிறார் எனப் புரிந்தது. ரோஷம் பொங்க, "நான் ரெடி."

என்றேன். போட்டி துவங்கியது.

ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த என் கணவர் "இது...பாரு எத்தாம்... பெரிய்ய்ய... காரு!!" என வாரியைக் காட்டி சத்தமாகச் சொல்ல, எனக்குப் பகீரென் றது. (மனிதர்... இப்படி சதி செய்வார் என யாருக்குத் தெரியும்) நானும் அசட்டுச் சிரிப் புடன் "ஆமாங்க... பெரிய்ய... காருதான்" என் றேன் உள்ளே எரிந்து கொண்டு. அருகில் இருப் பவர்கள் ஒரு மாதிரி பார்க்க ஆரம்பித்து விட்



டார்கள் என உணர்ந்தேன்.

பஸ் நின்றது. ஆரஞ்சு விற்பவன் அருகில் வர "இது... மாம்பலம்... மாம்பலம் வாங்கு"' என்றார். அது கூட பரவாயில்லை, அதைவிட ஒருபடி மேலே போய், "மாம்பலமாம்... மாம் பலம்... மதுகோவா... மாம்பலம்..." (நான் பிழை யுடன் எழுதவில்லை, அவர் அப்படித்தான் பாடினார்) எனச் சத்தமாக பாட, எப்படி இருக் கும் எனக்கு? துடித்தது நெஞ்சம்... வந்த கோபத்தை அடக்கு... அடக்கு... என அடக் கினேன். மனிதரோ அக்கம் பக்கத்தினரின் பார் வைபற்றி துளி கூட கவலையின்றி கேனத்தன மாக பாடுவதில் இருந்தார். மடமட வென ஆரஞ்சை உரித்துக் கொடுத்தேன். அப்படியா வது கொஞ்சநேரம் வாயடக்கட்டும் என.

பஸ் கிளம்பியது. மனிதர் "ஜம்" என களை களை தின்றபடி ஜன்னலில் வேடிக்கை பார்த் தார். வழியில் கரும்புத் தோட்டம் வந்தது. "இது...பாரு.. தென்னமரத்துல... தேங்காயே இல்ல... மரம் குச்சி... குச்சியா.. எளச்சிருக்கு இல்ல...?" என வேண்டுமென்றே சத்தமாகக் கேட்க, பொறுக்க முடியாத பக்கத்து சீட் குட் டிப்பையன் எழுந்து என்னவர் தோளைத் தொட்டு "அங்கிள்...; அது தென்னமரமில்ல.. கரும்பு.. Sugarcane" என, நானும் அதே அசட் டுச் சிரிப்பில் "ஆமா... கரும்புத்தான் எளச் சிருக்கு..." என தலையாட்டினேன். (உள்ளே எரிந்து கருகும் வாசம் கூட வந்தது) அப்பாடா... மதுரை போகும்வரை விவஸ்தையில்லாமல் பல கேள்விகளால் என்னை ஒரு வழிபடுத்திவிட் டார். எப்படியும் "பெட்"டில் தோற்கக் கூடாது என உறுதியுடன் பல்லைக் கடித்து தாங் கினேன். (இதில் வழியில் போகிறவர்களுக் கெல்லாம்...டா...டா...வேறு)

மதுரையில் பஸ்விட்டு இறங்கியதும் என்னவர் பாத்ரூம் செல்ல, அருகிலிருந்த மூதாட்டி என் கை பிடித்து "புதுசா... கட்டிக் கிட்டவுகளா" என ஆதுரத்துடன் கேட்க, நான் "ஆமாம்" என்றேன். "கண்ணுக்களகா இருக்க தாயி... கட்டுனவனுக்கு புத்தி செரியில்லீன்னா லும் கோவப்படாம, நெதான்மா பதில் சொல் லிட்டு வந்தியே... நானும் கவனிச்சுகிட்டுதான் இருந்தேன். மகராசி... ஒனக்குக் கொறவு வராது. மொதல்ல மீனாச்சி... கோவிலுக்குக் கூட்டிட்டு போ" என்றபடி என் தலையை நெட்டி முறித்து விட்டுச் செல்ல, நான் சிலையாய் நின்றேன்.

மனிதர் என்னை, எத்தனை பாடுபடுத்தி விட்டார். வரட்டும் என கறுவிக் கொண்டேன். மதுரையில் பார்க்க வேண்டிய இடமெல்லாம் சுற்றிப் பார்த்ததும் கடைக்குச் சென்றோம். 'பெட்'டில் நான் வென்றதால், (என் கணவரால் நம்பவே முடியவில்லை... இத்தனை செய்தும் நான் கோபப்படாமல் இருந்தது. என்னாலும் தான்!) பட்டுப்புடைவை வாங்கச் சென்றோம். என் இஷ்டத்திற்கு ஜம் என ஒரு புடைவை செலக்ட் செய்தேன். பில் கவுண்ட்டருக்கு வந்தவுடன், புடைவை விலை கேட்ட கணவர் ஸ்தம்பித்து நிற்பதையும், மறுகணம் பல்லைக் கடித்துக் கொண்டு பணம் கொடுப்பதையும் ரசித்த படி வேடிக்கை பார்த்தேன். ஆமாம் புடைவை விலை எட்டாயிரம் ரூபாய்! (வேண்டுமென்று தான் எடுத்தேன்) ஹனி மூனுக்கு என கொண்டு வந்த பணத்தில் 80% Gone போயிந்தே... போயே போச்சு...

மதுரைக்கு வந்த அதே வேகத்தில் வீடு திரும்பினோம். வீட்டில் இருப்பவர்கள் "என்ன அதுக்குள்ள? மத்த எடமெல்லாம் போகலியா?!" என கேட்க, கணவர் சிரித்தபடி (உள்ளே எரிந் தபடி) சமாளிக்க, நான் வேடிக்கை பார்த்தேன். (பஸ்ஸில் எத்தனை பேர் வேடிக்கை பார்க்கும்படி என்னை எரிய வைத்தார்) நான் புடைவையைப் பிரித்து, மற்றவர்களுக்குக் காட்ட, "வாவ்... சூப்பர்... யாரு கரேஷா எடுத் துக்குடுத்தான்... கஞ்சப்பயலாச்சே..." என என் நாத்தனார் கூற, என்னவர் நான் சிரித்த அதே அசட்டுச் சிரிப்புடன் "ஹி...ஹி" என்றுவிட்டு, எனக்குமட்டும் கேட்கும்படி "கிராதகி" என் றார்.

இப்போது நினைத்தாலும் எனக்குச் சிரிப்பு வரும்... எப்படியோ என் கோபத்திற்குச் சவால் விட்டு நான் வென்ற புடைவையல்லவா இது...

-மல்லிகா, சென்னை-20.


தீபாவளி மழையில் புதுப்புடைவை!

நான் என் திருமணத்திற்கு முன்,

செங்கல் பட்டில் பள்ளி ஆசிரியையாக இருந்தேன். நாங் கள் 7,8 குடித்தனங்கள் உள்ள ஒரு ஸ்டோரில் குடியிருந்தோம். எங்களது எதிர் வீட்டில் வசித்த ஒரு தம்பதியருக்கு நான்கு ஆண் குழந்தைகள். கணவர் சென்னையில் ஒரு அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்து வந்தார். கஷ்ட ஜீவனம். ஒவ்வொருநாளும் அலுவலகத்தி லிருந்து வந்தவுடன் மனைவி யைத் திட்டிக் கொண்டே அடிப்பார். சாமான் களையெல்லாம் எடுத்து வெளியில் வீசுவார் அப்பாவைக் கண்டவுடன் குழந்தைகள் எல்லா ரும் ஆங்காங்கே பதுங்கி விடுவர். திருமணத் தின் போது, அவரது மாமனார் அவரை ஏமாற் றியதாகச் சொல்லிக் கொண்டே மனைவியை அடிப்பார்: அலுவலகத்திலிருந்து அவர் வரும் போதே, கண்மண் தெரியாமல் மனைவியை அடிப்பதை நினைத்து எங்கள் எல்லோருக்கும் திகில்.

ஒரு தீபாவளி சமயம், எங்கள் ஸ்டோரில் ஒரு புடைவைக்காரர் வந்து, எல்லாக் குடித் தனக்காரர்களும் புடைவை எடுத்தனர். எதிர் வீட்டுப் பெண்ணும், தன்னிடம் பணம் இல் லாத போதும், புடைவை மிகவும் பிடித்திருந்த தால் தயங்கிக் கொண்டே கடன் வாங்கி ஒரு புடைவை எடுத்தார். அவள் அதைத் தன் கணவரிடம் சொல்ல வில்லை போலும். ஒரு வாரம் சென்றபிறகு, அவளது கணவர் கூச்சல் போட்டுக் கொண்டு சாமான்களை வீசும்போது புடைவை அவர் கண்ணில் பட்டு, மனைவி யைக் கண்டபடி திட்டிக் கொண்டே கோபத் தின் உச்சியில் புடைவையைத் தெருவிலேயே வீசினார். தீபாவளி மழையில் புதுப்புடைவை; அதன்மேல் தெருவில் சென்ற வாகனங்கள். மனைவி அவமானத்தினால் வெளியில் வரவே இல்லை. இரவு வெகு நேரத்திற்குப் பின் மற்றொரு குடித்தனக்காரப் பெண்மணி அப் புடைவையை எடுத்து வைத்திருந்து மறுநாள் கணவர் அலுவலகம் சென்றதும் மனைவியிடம் கொடுத்தார். அப்பெண் புடைவையைத் தொடாமல், அழுத அழுகை எங்கள் எல்லோ ரையும் நிலைகுலைந்து அழவைத்து விட்டது. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் தீபாவளிப் பண்டிகையன்று, கோபத்தால் மதியிழந்து மனைவியை மனம் நோகச் செய்த மனிதரை நினைத்து மனம் வருந்தாமல் இருக்க முடியவில்லை.

-ஜெயந்தி ஸ்ரீநிவாசன், விருதுநகர்.



அரசியல் புயலும் இசைக் குயிலும்

"எங்க அம்மா அந்தக் காலத்து இன்டர் மீடியர். இங்கிலீஷ் பேசினா ஊரே அசந்து போயிடும்."

"எங்கம்மா ரொம்ப கண்டிப்பானவங்க. டீச்சர் வேலை பார்க்கறதனால வீட்டிலேயும் ரொம்ப டிசிப்ளின் எதிர்பார்ப்பாங்க."

"டான்ஸ், மியூசிக்னா எங்கம்மாவுக்கு ரொம்பப் பிரியம். இசையும் நடனமும் விரும் பறவங்க வன்முறைக்குப் போக மாட்டாங்க. பயங்கரவாதியா மாற மாட்டாங்கன்னு எங் கம்மா சொல்வாங்க."

"சமூக சேவை செய்யறதுல ரொம்ப ஆர்வமா இருப்பாங்க. கிராமங்களுக்குப் போய் குடும்பக் கட்டுப்பாடு, சுகாதாரம், நோய் விழிப் புணர்வு இதுபற்றியெல்லாம் பிரச்சாரம் செய்திட்டு வருவாங்க."

இதெல்லாம் என்னுடைய காதலர் (இப் போது என் கணவர்) தன்னுடைய தாயாரைப் பற்றி என்னிடம் புகழ்ந்து பேசிய விஷயங் களின் சுருக்கம். அது கேட்டு கேட்டு, எனக்கு அவருடைய தாயாரைப் பற்றி பெரிய கௌரவ மிருந்தது. உயர்ந்த ரசனைகளையும், லட்சியங் களையும் கொண்ட அந்தப் புரட்சிப் பெண் மணியைக் கண்டு பேசத் துடித்துக் கொண்டி ருந்தேன்.

எங்கள் காதலுக்குப் பச்சைக் கொடி காட்டிய அவரது தாய் என்னைப் பார்க்க விரும்புவதாக சொல்லியனுப்பவும் எனக்கு தலை கால் புரியவில்லை.

முதல் சந்திப்பிலேயே அவருடைய நன் மதிப்பைப் பெற்று, மாமியார் மெச்சிய மருமகளாகிவிட வேண்டும் என்று ஆர்வமாக செயல்பட்டேன். பொது அறிவு, இலக்கியம், அரசியல், பெண் விடுதலை, குடும்பம் இது போல எந்த சப்ஜெக்டில் அவர் பேசினாலும் பதிலுக்கு நாலுவார்த்தை சொல்வது போல என்னை தயார் செய்து கொண்டேன். கிட்டதட்ட முதல் இன்டர்வியூவுக்குச் செல் லும் பெண்போல ஏகப்பட்ட டென்ஷன்.

எளிமை விரும்பி என்று கேள்விப்பட்டி ருந்ததால், சாதாரண கைத்தறிப்புடைவை அணிந்து அவரது வீட்டிற்குப் போனேன்.


நான் எதிர்ப்பார்த்தது போலவே கண் ணாடி அணிந்து, பளிச்சென்று இருந்தார் அவர்.

வணக்கம்."

"வணக்கம், வாம்மா" என்று என்னைப் பிடித்து தன் அருகில் அமர்த்திக் கொண்டார்.

"தி ஹிண்டு' பேப்பரில் வாசித்த தலைப்புச் செய்திகள் மறந்து விட்டதே. ஐய்யோ... அது பற்றி ஏதும் கேட்டு விடுவாரே? என்று நான் கலவரப்பட்டுக் கொண்டிருந்த போது, அவர் என் புடவையைத் தொட்டு, "ஹாண்ட்லூமா? நல்லா இருக்கே என்ன விலை? எக்ஸிபிஷன்லே வாங்கியதா?" என்று கேட்டாரே பார்க்கலாம். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவரைப் பற்றி நான் கொண்டிருந்த கனவென்ன? நிஜத்தில் காண்பதென்ன? எனக்குக் கோபம் தாங்கவில்லை.

'உயர உயர பறந்தாலும் குருவி குருவிதான்.. என்பார்கள். அது நிஜம்தான் போலிருக்கிறது. இலக்கியம், தத்துவம், இசை என்று பெரிய மேதாவியாக பெண் வெளியே பேசினாலும், அவளுடைய உள் மனசு நகை, புடைவை, அலங்காரம், இதைத்தான் சுற்றிச் சுற்றி வரும்



போலிருக்கிறது. அப்புறம் ஏன் இந்த அறிவு ஜீவி போர்வை? வீண் அலட்டல் எல்லாம்?' என்று மனசுக்குள் சினம் பொங்கியது. அதற்குப்பின், அவர் பேசியது எதுவும் என் மனதில் பதியவில்லை. ஏதோ மழுப்பிவிட்டுக் கிளம்பி வந்து விட்டேன்.

நான் 'மூடு' அப்செட் ஆன விஷயத்தை என் காதலர் கண்டு பிடித்து விட்டார் நானும் எதையும் மறைக்காமல் சொல்லி விட்டேன்.

அவர் எதுவும் பேசாமல் போய்விட்டார். இரண்டுநாள் கழித்து தபாலில் ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு சின்ன பேப்பர் கட்டிங் இருந்தது. ஏதோ செய்தித்தாளில் வெளியாகி யிருந்த நியூஸ் அது. "மறைந்த கர்நாடக இசைக் கலைஞர் எம்.எல் வசந்தகுமாரி, அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தியிடம் ஏதோ ஒரு விருது வாங்குவதற்காக டெல்லி சென்றார். எம்.எல்.வி.யின் இனிமையான குரலுக்கு இந்திராகாந்தி ரசிகை. இந்தியத் தலைவிக்கு எம்.எல்.வி. பரம ரசிகை.. இப்படிப்பட்ட இருவருமே முதன்முதலாக சந்தித்துக் கொண்ட போது, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எம்.எல். வசந்த குமாரியைப் பார்த்து, "நீங்கள் காதில் அணிந் திருப்பது உயர்ந்தவகை வைரம் போலிருக் கிறதே! அதுதான் இத்தனை பிரகாசிக்கிறது" என்று விசாரித்தாராம். இசைக் குயிலும், இந்திய அரசியல் வீராங்கனையும் பேசிக் கொண்டபோதே முதன்முதலில் நகை பற்றி பேசியிருக்கிறார்கள். அது பெண்களுக்கே உண்டான இயற்கையான ரசனை. அதனால் நீ என் தாயார் பற்றி கொண்ட புடைவைக் கோபம் நியாயமானதில்லை" என்று எழுதி யிருந்தார் என் கணவர்.

அந்த விளக்கம் என் கோபத்தை ஓரளவு குறைத்தது. பிறகு தன்னுடன் பாலவாடியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கைத்தறிப் புடைவை வாங்கத்தான் விலையையும் கடை யையும் விசாரித்தார் என்பது என் மாமியார் மூலமாகவே தெரிய வந்தது. அப்போது மிச்சமிருந்த கொஞ்ச நஞ்ச கோபமும் மறைந் தது.

-பிரேமா எஸ். ராவ். மைசூர்-2.

த்ரீ இன் ஒன் புடைவை

சிறிய வயதிலிருந்து எனக்குக் கோபம் வந்தால் கையில் இருக்கும் பொருளை அது என்னவாக இருந்தாலும் தூக்கி எறிந்துவிடு வேன். அப்பழக்கத்தை மாற்ற என் அப்பாவும் அம்மாவும் எவ்வளவோ அன்பாகவும் அடித்தும் சொல்லிப் பார்த்தார்கள். மாற்ற முடியவில்லை. எனக்குத் திருமணமான புதிது புதுக் குடித்தனம் வந்து கொஞ்ச நாட்களே ஆகியிருந்தது. எங்களுடன் எனது மாமியாரும் என் கணவரின் அண்ணன் பையனும் (3½ வயது) இருந்தார்கள். அப்போது எனக்குப் பிறந்த நாள் வந்தது.

எங்கள் வீட்டில் நான் ஒரே பெண். எனக்கு ஒரு தம்பி உண்டு. அதனால் புதிய டிரஸ் இல்லாமல் பிறந்தநாளே இல்லை. இங்கு என் கணவரிடம் பிறந்த நாளுக்குப் புடைவை கேட் டேன். அவர், "நீ என்ன சின்னக் குழந்தையா பிறந்தநாள் கொண்டாட. புதிய துணி வாங்கு வது எல்லாம் நாங்கள் செய்வதே கிடையாது" என்று கூறிவிட்டார். புதியவளாக இருந்ததால் அதற்குமேலும் வற்புறுத்த முடியவில்லை. இருந்தாலும் மனதிற்குள் ஒரே கோபம் வெளிக் காட்ட முடியவில்லை.

என் கணவர் ஆபீஸுக்குச் சென்றிருந் தார். நான் சமைத்துக் கொண்டிருந்தேன். மனம் மட்டும் பொங்கிக் கொண்டிருந்தது. என் கணவரின் அண்ணன் பையன் அங்கு வந்து கடுகு சீரகம் உள்ள ஏழறைப் பெட்டியை எடுத்து நான் வாங்குவதற்குள் ஒரே குலுக்குக் குலுக்கி விட்டான். நான் வாங்கி திறந்து பார்த்தேன். எல்லா சாமான்களும் ஒன்றோடு



21st Century's

"Family-Deposit"

அன்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் இருப்பிடம் உங்கள் குடும்பம். தேவை ஏற்படும் போதெல்லாம் அவை உங்களுக்கு ஆதரவாய் உள்ளன.

இப்போது, உள்ளார்ந்த நன்றியுடன் அடையாளமாய் 'ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி'யின் "ஃபேமிலி டெபாஸிட்" டை உங்கள் குடும்பத்திற்கு வழங்குங்கள். அது, எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் நம்பிக்கையுடன் எதிர்நோக்கத் தகுந்த ஒரு செல்வக் களஞ்சியம். நான்கே ஆண்டுகளில் ரூ. 50 கோடியை எட்டியுள்ள புகழ்மிக்க நிதியீட்டு நிறுவனம், இத்திட்டத்தை வழங்குகிறது.

CRISIL FA+ ரேட்டிங் பெற்றிருக்கும், 'ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி'யின் "ஃபேமிலி டெபாஸிட்" – உங்கள் குடும்பத்தினர் மீது நீங்கள் கொண்டிருக்கும் ஆழமான அன்பின் வெளிப்பாடு. அதனை இன்றே அவர்களுக்கு வழங்குங்கள்

உங்கள்
"ஃபேமிலி
டெபாஸிட்"
பற்றி மேலும்
அறிய விரும்புகிறேன்.

பெயர் : ....

விலாசம் : ....

....

போன் : ....


ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்,
"ஸ்ரீவிஜயா", 32, டி.டி.கே. சாலை, சென்னை – 600 018.

This advt. appears further to the statutory advt. published by the company in Makkal Kural and Trinity Mirror on 29th August and 18th November 1995. The text of the statutory advt. is also printed on the application form, which may be referred to before investing in the company's Deposit Schemes.

Sans - TCMS/951063

ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பம் 'ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி' குடும்பம்

ஒன்று சிறிது கலந்து விட்டது. கோபம் தலைக்கேறிவிட்டது எனக்கு. என் மாமியாரிடம் எடுத்து வந்து பார்த்தீர்களா இவன் செய்த காரியத்தை என்று கூறி அப்படியே கீழே போட்டு விட்டேன். எல்லா சாமான்களும் கொஞ்சம் கலந்திருந்தது முழுவதும் கலந்து அறை முழுவதும் சிதறிவிட்டது. என் மாமியார் ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நின்று விட்டார்கள். பிறகு பையனை தூக்கிக் கொண்டு வெளியே சென்று விட்டார்கள். அதன் பிறகுதான்



எனக்கு நிலைமையே புரிந்தது. என் தம்பி ஊரிலிருந்து வந்திருந்தான். ''என்னக்கா இன்னுமா அந்தப் பழக்கத்தை விடவில்லை" என்று கூறினான்.

பிறகு நானும் அவனும் சேர்ந்து எல்லாவற்றையும் கூட்டி அள்ளி ஒவ்வொன்றையும் தனித்தனியாக பொறுக்கி எடுத்தோம். ஒரே வரியில் எழுதிவிட்டேன். அதற்கு நாங்கள் பட்ட சிரமம் அப்பப்பா... கொஞ்ச நேரம் கழித்து மாமியார் பையனுடன் வந்து சாப்பிடாமல் படுத்து விட்டார்கள். நாங்களும் சாப்பிடாமல் என்ன செய்வது என்று புரியாமல் தவித்துக் கொண்டு இருந்தோம்.

மாலை என் கணவர் வந்தவுடன் அவரிடம் நடந்ததைக் கூறினேன். அவர் அம்மாவிடம் போய் தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கேள் என்றார். நானும் என் மாமியாரிடம் போய் கோபத்தில் தூக்கியெறியும் குணம், புடைவை கோபம் எல்லாவற்றையும் கூறி மன்னிக்குமாறு வேண்டினேன். அவர்களும் தவறை உணர்ந்தால் சரி என்று கூறி, புடைவை வேண்டும் என்று என்னிடம் ஒரு வார்த்தை சொன்னாயா, முதன் முதலில் கேட்டிருக்கிறாய், அத்தோடு மாசமாக வேறு இருக்கின்றாய்" என்று கூறி அவர்களே சென்று கறுப்புக்கலரில் எம்ராய்டரி போட்ட புடைவை எடுத்து வந்தார்கள். எனக்குக் கறுப்புக் கலர் ரொம்பப் பிடிக்கும். 25 வருடங்களாக இன்னும் அந்தப் புடைவை என்னிடம் உள்ளது.

அத்தோடு எனக்கும் என் மாமியாருக்கும் அன்று ஏற்பட்ட அன்னியோன்யம் தழைத்து இன்றுவரை சிறு சலசலப்புக்கூட இல்லாமல் ஊரே பார்த்து வியக்கும் வண்ணம் இருந்து வருகிறோம். என் தூக்கியெறியும் குணமும் அன்றோடு போயே போச்சு. அதற்கப்புறம் பிறந்த நாளுக்குக் கேட்காமலேயே புடைவை வந்துவிடும். எப்படியோ ஒரு புடைவையால் எனக்கு மூன்று நன்மைகள்.

இன்றும் குழந்தைகள், கணவர், மாமியார் எல்லோரும் பிறந்தநாள் அன்று "ஏழரைப் பெட்டி சரியாக உள்ளதா, ஏழரைப் பெட்டி ஜாக்கிரதை" என்று கேலி செய்து வருகிறார்கள்.

– பிரேமா பாஸ்கரன், திருச்சி – 13.




தயிர் சாதம் சாப்பிடும் போது, தொட்டுக் கொள்ள எதுவும் இல்லை. ஊறுகாய் சாப்பிடக் கூடாது. மருத்துவரின் கட்டளை. இரண்டு வெண்டைக்காய்களை எடுத்து, பொடியாக நறுக்கி சிறிது உப்புத் தூள், மிளகாய்த்தூள் சேர்த்து பிசறி தொட்டுக் கொண்டால் மடமடவென்று தயிர் சாதம் போன இடம் தெரியவில்லை. தயிர் சாதத்திற்கு தொட்டுக் கொண்டது போலவும் ஆயிற்று, பச்சைக் காய்கறி சாப்பிட்டது போலவும் ஆச்சு.

-சி. பூங்கோதை

சாமான்கள் பொதிந்து வரும் பாலிதீன் கவர்களை பத்திரமாக வைத்திருங்கள். பேருந்துகளில் நீண்ட பயணம் செய்யும் போது காலணிகள் தூக்க கலக்கத்தில் நம் கால்களை விட்டு நழுவி விடும். அவைகளை கழற்றி பத்திரமாக கவர்களில் போட்டு முன் இருக்கை பின்கம்பிகளிலோ நம்காலடியிலோ வைத்திருந்தால் கீழே இறங்கும்போது தேடிப் பிடிக்க வேண்டாம்.

—ஜானகிகுமார்



"எனக்கு அல்சர் இருக்கிறது" என அலட்சியமாகச் சொல்லிக் கொண்டு அதன் விளைவுகளை எண்ணிப் பாராமல் இருப்பவர்கள் பலரைப் பார்க்கின்றோம்.

ஆ! முதுகு பிடித்துக் கொண்டதே! இடுப்பு வலிக்கிறதே! நெஞ்சை அடைக்கிற மாதிரி இருக்கு! ஒருவேளை மாரடைப்பு வந்துவிட்டதோ! இப்படி மறைமுகமாகப் பல தொந்தரவுகளைக் கொடுக்கும் வாயுத் தொல்லையால் அவதிப்படுபவர்களையும் பார்க்கிறோம்.

குடற்புண், வாயுத் தொல்லை, செரிமானக் கோளாறுகள் போன்றவற்றை ஹோமியோபதி மருந்துகள் மூலம் நிரந்தரமான தீர்வு காணலாம் என்கிறார் ஈரோடு டாக்டர் ஆர். ஞானசம்பந்தம்.



டாக்டர் ஆர். ஞானசம்பந்தம்

அல்சர்

அல்சர் எனப்படும் குடற்புண் இரைப்பை, முன்சிறு குடல் ஆகிய இரு உறுப்புகளையும் பாதிக்கிறது. இரைப் பைப் புண்ணை கேஸ்ட்ரிக் அல்லது பெப்டிக் அல்சர் (Gastric or Peptic Ulcer) என்று சொல்கிறோம். முன்சிறு குடல் புண்ணை டியோடினல் அல்சர் (Duodinal Ulcer) என்று கூறுகிறோம். நாம் மென்று சாப்பிடும் உணவு உணவுக் குழாய் வழியாக இரைப்பையை அடை கிறது. இந்த இரைப்பையில் புண் உள்ள நோயாளிக் குச் சாப்பிட்டவுடன் வலி தோன்றும். காரணம் சாப் பிட்ட உணவு நேரடியாகப் புண்ணைத் தாக்கி வலியை உண்டாக்கி விடுவதுதான். வாந்தி எடுக்கும் உணர்வு இருக்கும். நன்றாகச் சாப்பிட முடியாமல் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே போவார்கள்.

அல்சர் ஏற்படும் ஆரம்ப காலங்களில் வயிற்றில் எரிச்சல் இருந்துகொண்டே இருக் கும். புண் ஏற்பட்டதும் வலி தோன்ற ஆரம்பித்துவிடுகிறது. சில சமயங்களில் இதயத் தின் பக்கத்தில் இருப்பதால் தனக்கு மாரடைப்பு வந்துவிட்டதோ என்ற அச்சத்தையும் உண்டாக்கி விடுகிறது.

முன்சிறு குடல்புண் உள்ள நோயாளிகளுக்குச் சாப்பிட்ட 2 மணி நேரம் கழித்து வலி தோன்றும். சாப்பிட்டால் வலி குறைவது இதன் விசேஷ அறிகுறி. இந்தப் "பசி வலியை"ப் போக்க நோயாளி அடிக்கடி சாப்பிடுவதால் நல்ல ஆரோக்கியமாகவே இருப்பார். விடியற்காலை 2 மணிக்குக் கூட நோயாளியைச் சாப்பிட எழுப்பிவிடும்.

அல்சர் தோன்றக் காரணம்

அல்சர் உண்டாவதற்குக் காரணம் இரைப்பையில் அதிகமாக அமிலம் சுரப்பதுடன், மதுப்பழக்கம், கார உணவுகள், புகைப்பழக்கம் போன்றவை அமிலத்தன்மையை அதி கரித்துப் புண்ணை உண்டாக்கிவிடும். சிலருக்கு இயற்கையாகவே இரைப்பையின்

உட்கவர் மென்மையானதாக இருப்பதும் ஒரு காரணம். அதிகப்படியான கோபம், பயம், உணர்ச்சி வசப்படுதல், மிகுந்த டென்ஷனுடன் இருக்கும் அலுவலர்களுக்குக் குடற்புண் ஒரு பொதுவான பிரச்னையாகிவிட்டது. உணர்ச்சிவசப்படும் பொழுது இரைப்பை அதிகமாக அமிலத்தைச் சுரக்க வைத்து விடுவதே காரணம். ஒரு சில குடும்பங்களில் தொடர்ச்சியாக, பரம்பரையாகத் தொடர் வதும் உண்டு.

ஒருவகை இரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அல்சர் வரக் கூடும். இவர்களின் நாக்கைப் பார்த்தால் கண்ணாடி போல 'வழுவழு' என்றிருக்கும்.

ஒரு சிலருக்கு ஓயாமல் வாய்ப்புண் வந்து கொண்டே இருக்கும். பி காம்ப்ளெக்ஸ் மாத்திரை சாப்பிட்டுச் சலித்ததுதான் மிச்சம். நிரந்தர குணம் கிடைக்காமல் அவதிப்படுவார்கள். இவர்களுக்கும் அல்சர் பரவலாக உள்ளது.

வேறு நோயைப் போக்கவும், வலியைப் போக்கவும் அமிலத்தன்மை அதிகரிக்கக் கூடிய மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிடுவதாலும் அல்சர் தோன்றலாம். எனவே மருந்து சாப்பிடும் போது வயிற்றில் எரிச்சல் இருந்தால் மருந்தை நிறுத்திவிடுங்கள். மருத்துவரின் ஆலோசனை பெற்றுச் சாப்பிடுங்கள்.

அல்சர் என்ன செய்யப் போகிறது என்று அலட்சியமாக இருப்பவர்களுக்குத் திடீரென்று ரத்த வாந்தி ஏற்படும். புண் அதிகமாக இரத்தக் குழாய்களை அரிப்பதால் ரத்த வாந்தி ஏற்படுகிறது. இரத்தக் கசிவு இருந்தால் மலத்திலும் வெளியேறும். மலம் கறுப்பாக வெளியேறினால் (Melena) இரத்தக் கசிவு என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு சிலருக்குக் குடலில் ஓட்டை விழுவதும் உண்டு. திடீரென்று தாங்க முடியாத வயிற்று வலி ஏற்படும். வயிற்றுப்பகுதியைத் தொட முடியாத அளவுக்கு வயிற்றை இறுக்கிப் பிடித்துக் கொண்டு புரள்வார்கள். இதற்கு அறுவை சிகிச்சைதான் செய்ய வேண்டும்.

வாய்வுத் தொல்லை

நமது உணவுப் பாதையில் காற்று தோன்றும் தன்மை இயற்கையாகவே இருக்கிறது. நாம் சாப்பிடும் உணவு, உணவுப் பாதையில் சுரக்கும் செரிமான நீர், குடல்களின் தன்மையைப் பொறுத்து காற்று தோன்றும். ஒரு சிலருக்கு அதிகமாகக் காற்று தோன்றிவிடுவதால்தான் பல்வேறு தொந்தரவுகளைத் தருகிறது.

வாயுத் தொல்லையால் பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி ஏப்பம் விடுவார்கள்; சில சமயங்களில் புளித்த சுவையுடன் ஏப்பம் இருக்கும். சிலருக்குச் சாப்பிட்ட உணவு எக்களித்துக் கொண்டு தொண்டைக்கு வருவதும் உண்டு. சிறிது சாப்பிட்டாலும் அதிகமாகச் சாப்பிட்டது போல உணர்வு, வயிறு பெருகிக் கொண்டு கனமாக இருப்பது போலத் தெரியும். வயிற்றில் 'கடமுட' சத்தம் இருக்கும். வாந்தி எடுத்தால் நன்றாக இருக்கும் என்று விரலைத் தொண்டையில் விட்டு வாந்தி எடுப்பார்கள்.

''கண்ட கண்ட உணவுகளையெல்லாம் வயிறுமுட்டச் சாப்பிடுகிறார்கள், என்னால் அதில் கால்வாசி கூடச் சாப்பிட முடியவில்லையே'' என அங்கலாய்ப்பார்கள்.

வாய்வுத் தொல்லையால் நாள்தோறும் மலங்கழிக்க முடியாமல் இருப்பார்கள். மலச்சிக்கல், இடுப்புவலி, வாயுவால் முதுகு வலி, வயிற்றின் பக்கவாட்டில் வலி என்று அவதிப்படுவார்கள். மலங்கழித்த பின் மீண்டும் மீண்டும் கழிக்கத்

இப்பொழுது அநேகமாக எல்லா வீடுகளிலும் பால் குக்கர் உபயோகிக்கிறார்கள். பால் காயும் வரை, குக்கரிலிருந்து வெளியாகும் நீராவியை, முகத்திலும் வலியுள்ள இடங்களிலும் படும்படி செய்தால் முகம் பளபளப்பாகும். கரும்புள்ளிகள் கூட மறைந்துவிடுகிறது. வலி உள்ள இடங்களில் வலி குறைகிறது.

- ஏ. கஸ்தூரி



பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354

கிளை அலுவலகங்கள்: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582, 416417

P-995, இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656, 628075



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு ★
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி

மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர் 10ஆம் ஆண்டு முடிவில் ரூ.50,000/- பெறுவீர் அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில் ரூ.1 கோடி பெறுவீர்

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000	15 Yrs	Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ. 100/-	25 Yrs	Rs.3,00,000

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் ரூ.2 லட்சம் பெறுவீர்.

சேமிப்பு திட்டம் 10% P.a.

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535



பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.

குறைந்தபட்சம் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன்பெறலாம்.

தங்க நகை கடன்

Rs. 3,000 PER 10 GRAM

விதிகளின் பேரில் கடன் வழங்கப்படும். (உச்ச வரம்பில்லை)

நிர்வாக இயங்குனர் :
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

❒ ரூ. 5 - செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❒ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❒ வெள்ளி விடுமுறை

எங்களது மற்றுமொரு கிளை தி. நகரில் செயல்படத் துவங்கியுள்ளது.

73, (கீழ் தளம்) ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை - 600 017.



வீட்டில் வாசற்படி கதவுகள், ஜன்னல் கதவுகளில் கைவைக்கும் இடங்களில் அழுக்கு பசை போல் படிந்திருக்கும். அந்த இடங்களில் சிறு துணியில் கெரோசினைத் தொட்டுத் தடவி ஒரு நிமிடம் ஊறவிட்டு, பின் வேறு துணி கொண்டு துடைத்தால், அந்த அழுக்கு உருட்டிக் கொண்டு வந்துவிடும். சோப்பு நீரைக் கொண்டு சுத்தம் செய்வதைவிட இது சுலபமான வழியாகும்.

- ஏ. கஸ்தூரி

தோன்றும். (Irritable Bowl Syndrome) எப்போதும் களைப்பாக இருக்கும்.

பொது இடங்களில் வாயு பிரிந்து தர்மசங்கடத்தை ஏற்படுத்தும்.

நமது உணவுப் பாதையில் சுரக்கும் பல்வேறு வகையான செரிமான நீர்கள் புரதச் சத்து, மாவுச்சத்து, கொழுப்புச் சத்து ஆகியவற்றைத் தவிடு பொடியாக்கி இரத்தத்தில் எளிமையாகச் சேர உதவும். இந்தச் செரிமான நீர்க் குறைவால் வாயுக் கோளாறு பெரும்பான்மையாக ஏற்படுகிறது. நாம் சாப்பிடும் உணவில் சில வகை உணவுகள் வாயுத் தொல்லையை அதிகரிக்கும்.

அவரை, பீன்ஸ், முட்டை, மாமிசம், உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், வாழைக்காய், முருங்கைக்காய், பட்டாணி போன்றவைகளைக் குறைக்கலாம். சிலருக்கு வறுத்த, பொரித்த உணவுப் பண்டங்கள் தொல்லை தரும். கொழுப்பு மிகுந்த பண்டங்களைப் பார்த்தாலே 'ஓ' என்பார்கள்.

எப்போதும் பிரயாணத்தில் இருப்பது தொழில் செய்வோருக்கு 'அமீபியாஸிஸ்' (Amoebiasis) எனப்படும் பூச்சித் தொந்தரவு அதிகம். மலம் சளியுடன் வெளியேறினால் மலச் சோதனை செய்து அறிந்து கொள்ளலாம். ஆசன வாயைச் சுத்தம் செய்யும்போது 'வழுவழு' என்று இருந்தால் தாமதிக்காதீர்கள், சிகிச்சை பெறுங்கள்.

செரிமானக் கோளாறுகள், அல்சர் தவிர்க்க வழிகள்

நாம் நாள்தோறும் குறித்த நேரத்தில் சாப்பிடப் பழக வேண்டும். பசித்துச் சாப்பிட வேண்டும். பசித்த நேரத்தில் சாப்பிட்டுவிட வேண்டும். மூக்குமுட்டச் சாப்பிடக் கூடாது. உணவில் காய்கறிகளை அதிகமாகச் சேர்க்க வேண்டும்.

மலச்சிக்கல் இல்லாமல் இருக்க நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் மலங்கழித்துப் பழக வேண்டும்.

அல்சரைத் தவிர்க்க மது, புகைப்பழக்கம், காரமான உணவுப் பொருட்களைக் குறைக்க வேண்டும். அல்சர் நோயாளிகள், மூன்று வேளை உணவை நான்கைந்து வேளையாகப் பகுத்து உண்ணுதல் நலம். உணர்ச்சிவசப்படுதலைத் தவிர்க்கலாம்.

சிகிச்சை

என்னதான் உணவுக் கட்டுப்பாட்டுடன் இருந்தாலும், சிகிச்சை என்பது அல்சர் மற்றும் வாயுக் கோளாறுக்குத் தேவையான ஒன்று.

ஹோமியோபதி மருந்துகள் மூலம் அறுவை சிகிச்சையில்லாமல் அல்சரைக் குணப்படுத்த முடியும். வாயுத் தொல்லை, செரிமானக் கோளாறுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கலாம்.

நோயாளிகளின் மனநிலை அடிப்படையிலும் மருந்துகள் வழங்கப்படுவதால் அல்சரின் ஆரம்பக் காரணங்களையும் முறியடிக்கும். அமிலத்தன்மையை மூன்று மாதங்களில் சீராக்க முடியும்.

மருந்துகள் மூலப்பொருட்களாக அளிக்கப்படுவதில்லை. எனவே பக்கவிளைவு என்ற பேச்சுக்கே இடமில்லை. இதைப் பற்றி உங்களுக்கு ஐயங்கள் இருந்தால் வார நாட்களில் டாக்டர் ஆர். ஞானசம்பந்தம் அவர்களை, அரசு மருத்துவமனை எதிரில், ஈரோடு - 638 009. (போன் : 0424 219344; 0424 31444) என்ற விலாசத்திலும் சனிதோறும் சிவா மருத்துவமனை, அ.தி.மு.க. அலுவலகம் எதிரில், இராயப்பேட்டை, சென்னை - 14. போன் : 8260451 என்ற விலாசத்திலும் கேட்கலாம்.


நவநாகரீக நங்கை,
உமக்கு இன்று எந்த வண்ணச்சாயல் பாங்காகும் ?
PETALS
NAIL ENAMEL & LIP STICK
ஏனெனில் நவநாகரீக நங்கைக்கு எழில்கூட்டும் பல வண்ணச் சாயல்கள்.
ADVENTURE/TAM
MARKETED BY: PETALS COSMETICS MARKETING PVT. LTD. PH. 022-872 1202 • FAX: 022-8748169

என்னில் பாதி நீ!

மாறி வரும் பெண்கள்!


இந்தப் பெண்களே ஆச்சரியமானவர்கள்தாம்....

டைனிங் டேபிள் மீது ஆவிபறக்கும் சாப்பாடு மூன்று டிபன் டப்பாக்களில் மதியத்துக்கான டிபன்.... யூனிபார்மில் தயாராக விவேக்... வேலைக்காரி வருவதற்குள் ஊறியிருக்கும் ஸர்பில் நனைந்த என் துணிகள்.. கஞ்சி மொடமொடப்புடன் சந்தன வண்ண பெங்கால் காட்டனில் மிதமான அலங்காரத்துடன் ஆபீஸ் புறப்பட தயார் நிலையில் சசிரேகா....

இத்தனையும் எட்டரை மணிக்குள் கச்சிதமாய் முடிய... முடிக்கப்பட்ட விஷயம்தான் என் புருவ உயர்த்தலுக்கான காரணம்.

நானும்தான் நான் முழுக்க ஆபீசில் அதிவேகக் கம்ப்யூட்டருக்கு ஈடு கொடுத்து பரபரக்கிறேன். இன்னும் கடை கண்ணி, மார்க்கெட் என அன்றாடம் போய் வருவதுடன் வீட்டு வேலைகளிலும் சின்னச் சின்ன உதவிகள். ஆனாலும் பெண்களின் சுறுசுறுப்பு, பொறுப்புணர்ச்சி அலாதியானது. 'வீட்டிலும் மாடாய் உழைக்கணும். ஆபீசிலும் கழுதையாய்த் தேயணும்..' - சில வருடங்கள் முன்பு வரை இருந்த முணுமுணுப்புக்கள் கூட படிப்படியாக் குறைந்து போய் இரண்டு பேருமே சம்பாதித்தால்தான் நிறைவான வாழ்க்கை சாத்தியப்படும் என்ற காலக்கட்டாயத்தை உணர்ந்து கொண்டவர்களாய் வேலைக்குப் போவதை வீட்டு வேலைகள் போல் இயல்பாய் ஏற்றுக் கொண்ட பக்குவம் என்னமாய் வந்து விட்டது இவர்களுக்கு...!

"லீவு போட்டிருக்கீங்களா? இல்ல... பர்மிஷனா?" பதில் எதிர் பார்க்காத கேள்வியின் பொருள் புரிந்து பரிமாறிக் கொண்டிருந்த சசியினின்று பார்வையை மீட்டுக் கொண்டு



சாப்பிடத் துவங்கினேன்.

"ஒரு பருக்கை விடாம சாப்பிடணும். இல்லன்னா 'ரெண்டாவது' பீரியடிலேயே பாடத்தில் மனசு பதியாம லஞ்ச் பெல்லுக்காக காதைத் தீட்டிட்டிருப்பே..." விவேக்கை அதட்டியபடி அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவளும் சாப்பிடலானாள்.

"பாவம் ப்ரியா...."

"இடீர்னு என்னாச்சு?"

"என்ன ஆகணும். எப்பவும் நினைக்கறதுதான். வீடு, ஆபீஸ்னு ரெண்டையும் சமாளிக்கறது சிரமமா இருக்கோ என்னவோ?"

அவளுடைய தாயினும் சாலப்பரிவு வியப்பூட்டவில்லை புருஷனின் தங்கை என்ற உறவு அவ்வளவாய் அன்னியோன்யம் ஏற்படுத்தாத பந்தம் என்ற நடைமுறை சகஜத்திற்கு விதிவிலக்காய் இருக்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலருள் சசியும் உண்டு என்பதை அறிந்தவனாதலால்,

"ஏன்... நீ கூடத்தான் வேலைக்குப் போறே...



ரெண்டுங்கெட்டான் வயதில் பார்ஸ்ட் கிளாஸ் படிக்கிற குழந்தையை வச்சுக்கிட்டு அழகா சமாளிக்கலையா?"

"முகஸ்துதியா?"

"இதில் முகஸ்துதி எங்க வந்தது... உள்ளதைத்தான் சொல்றேன்.... இந்த ஜெனரேஷன் பெண்களுக்கே மெச்சூருடி அதிகம் சசி. அதெல்லாம் பிரமாதமா சமாளிப்பா. கார்த்திக்கும் நல்லா அட்ஜஸ்ட் பண்ற டைப், என்னைப் போல்..."

"அய்ய... போதும் பெருமை..." முகம் வலித்த போது அவள் முகத்தின் களை மேலும் கூடியது ரசனைக்குரியதாக இருந்தது.

ப்ரியாவிற்குக் கல்யாணமான ஆறாவது மாதமே அம்மா கண் மூட.... தாயில்லாக்குறை தெரியக் கூடாதென்று பார்த்துப் பார்த்துச் செய்கிறாள் என் சசிரேகா. உள்ளூரிலேயே இருப்பதால் பை நிறைய தின்பண்டங்களுடன் பதினைந்து நாட்களுக்கொரு முறை சென்று பார்த்து விட்டு வருவாள். அவள் இங்கு வரும் போதெல்லாம் புடைவை, ஜாக்கெட் பீஸ், பாத்திரம் பண்டம், ஷோகேஸ் பொம்மைகள், கேஸட் என சின்னச் சின்னதாக ஏதாவதொரு அன்பளிப்பு. இதெல்லாம் தவிர வாரத்திற்கு இருமுறை தவறாமல் போனில் பேசுவாள்.

அன்று அவள் ப்ரியாவுக்கு போன் செய்யும்

சாந்தா தத்

நாள். காலையில் அந்த நினைவுதான் அவளை எழுப்பியதோ என்னவோ? அதே சிந்தனையில் இருந்திருப்பதால்தான் அவளைக் குறித்த பேச்சு எழுந்திருக்க வேண்டும்.

ஆபீசிலிருந்து நான் வீடு திரும்பி ஒரு மணி நேரம் கழித்துதான் சசிரேகா வருவாள். இரண்டு பஸ்கள் மாற வேண்டும். விவேக் ஸ்கூல் பஸ்ஸில் போவான். காலை வேலைகளில் சசியை நான் டிராப் செய்து விடுவதால் பிரச்னை இல்லை. விவேக் ஸ்கூல் முடிந்து கிரஷ்ஷில் இருக்க ஆபீசிலிருந்து வரும் போது நான் அழைத்து வந்து விடுவேன்.

விவேக்கிற்கு டிரஸ் மாற்றி முகம் கழுவி பூஸ்ட், பிஸ்கட்ஸ் கொடுத்து விளையாட அனுப்பிவிட்டு டீ போட்டு பிளாஸ்க்கில் ஊற்றி என் கப்புடன் அலுப்பு தீர டீ.வி. முன் அமர்ந்தேன்.

சசிரேகா வந்தாள். களைப்பையும் மாறித் தெரியும் கலகலப்பு அன்று காணோம். முகம் கூடக் கழுவிக் கொள்ளாமல் சோபாவில் விழுந்தாள்.

"தலைவலியா சசி."

"உம்... இலேசா. இப்போதெல்லாம் கொஞ்சம் டென்ஷன் வந்தாலே தலைவலி வந்துடறது..." சற்றே நிதானித்து பிறகு சொன்னாள். "ப்ரியா இன்னிக்கு ஆபீசுக்கு வரலையாம்... உடம்பு சரியில்லையோன்னு கவலையா இருக்கு..."

எனக்கு சிரிப்புதான் வந்தது. "இவ்வளவு தானே... ஏதாவது அவசர வேலை இருந்திருக்கும். என்ன நீ... சின்ன விஷயத்துக்கெல்லாம் அப்செட் ஆகிக் கொண்டு.... அப்படி உடம்பு சரியல்லேன்னா கார்த்திக் வந்து சொல்லியிருக்க மாட்டானா; இல்ல, அவளாவது இங்க புறப்பட்டு வந்திருப்பாள்..."

இதோ.... வந்தே விட்டான். மோட்டார் பைக் சத்தம் அப்படித்தான் நினைக்க வைத்தது. இருவருமே வாசற்பக்கம் விரைய... கார்த்திக் வண்டியைப் பூட்டிக் கொண்டிருந்தான். ப்ரியா ஏன் வரவில்லை? இந்நேரத்தில் இருவருமாய் வருவதுதான் வழக்கம். அவன் ஆபீஸுக்குக் கூட வரவில்லை. சுபாவ மலர்ச்சி தொலைந்த அவன் முகம்... அவளுக்கு உடம்பு சரியில்லையோ என்ற என்னவள் சந்தேகம் நிஜம்தானா?

"வா கார்த்திக்... ப்ரியா வரலையா?" வரவில்லை என்று தெரிந்தும் என்னையுமறியாத பழக்கமாகிப் போன அசட்டுக் கேள்வி. தவிர்த்திருக்கலாம் என்று பட்டது.

பதில் சொல்லாது உள்ளே வந்து உட்கார்ந்தவனிடம் இதுவரை நாங்கள் கண்டறியாத கடுகடுப்பு.

சசிரேகா சமையலறை நோக்கி நகர்ந்த போது...

"காப்பியெல்லாம் வேண்டாம். ஹோட்டல் லேர்ந்துதான் வரேன், டிபன் காப்பி எல்லாம் முடித்துக் கொண்டு...." அவன் குரலில் கமுகம் இல்லை. சிநேக பாவம் இல்லை. ஹோட்டல் என்கிறானே... ப்ரியாவிற்கு என்னதான் ஆயிற்று... ஒருவேளை உடம்பு சரியில்லை என்றால் கவலைதானே தெரியும்... இந்த இறுக்கம் எது குறித்து?

"ப்ரியாவுக்கு உடம்பு சரியில்லையா?" தயக்கமாய்க் கேட்டாள் சசிரேகா.

"உடம்புக்கென்ன... நல்லாத்தான் இருக்கா..." எரிச்சலுடன் சொன்னான் கார்த்திக்.

"என்ன நடந்தது கார்த்திக்... ஏன் ஒரு மாதிரி இருக்கே? சசி போன் செய்தாளாம். ப்ரியா ஆபீசுக்கு வரலேன்னு சொன்னாளாம். நீ வேற ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு வரேன்னு சொல்றே... ப்ரியா..."


அவசரமாய்க் குறுக்கிட்டான். "ஹோட்டலில் சாப்பிடாம என்ன செய்யறதாம். வயிறுன்னு ஒண்ணு இருக்கே? மூணு நாளா ஹோட்டல்தான் கதி. உங்க தங்கை எனக்காக சமைக்கமாட்டாளாம்..."


"புரியலையே... எனக்காக என்றால்? தன் வரைக்கும் சமைத்துக் கொள்கிறாளா?"


"அதேதான்... அப்படித்தான்." அவன்

சின்னச் சின்ன கத்தரிக்காய்கள் இருந்தால்தான் முழுதாக 'எண்ணெய்க் கத்தரிக்காய்' செய்ய முடியுமென்பதில்லை. பெரிய கத்தரிக்காய்களிலும் செய்யலாம். கத்தரிக்காய்களை, கருள் நார்த்தங்காய் ஊறுகாய்க்கு நறுக்குவது போல் அதாவது இதே போல் நறுக்கி, ஒவ்வொரு இடைவெளியிலும், அரைத்த அல்லது பொடி செய்த மசாலாக்களை அடைத்து அமுக்கி மூடி வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெயைக் கொஞ்சம் தாராளமாக விட்டு, கத்தரிக் காய்களை ஒவ்வொன்றாகப் போட்டு, கரண்டியால் மெதுவாக ஒவ்வொன்றையும் திருப்பி, கத்தரிக்காய் வெந்து, பொன்னிறமானதும் இறக்கி விடவும். இது புதுமையாக இருக்கும்.


– உமா







ஜலதோஷம்,
தலைவலி,
உடல்வலி...



உடனடி
நிவாரணம்

ஆம், இப்போது ஜலதோஷத்தினால் அவதிப்பட்டால் குழந்தைகளுக்கான கோல்ட்ரப் தடவுவதை நிறுத்துங்கள். அறிமுகம் டி'கோல்ட் கோல்ட்ரப். பெரியவர்களுக்கான ஜலதோஷத்திற்காக விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. எப்போது பெரியவர்களுக்கு ஜலதோஷம் ஏற்படுகிறதோ, அப்போது தலைவலியும் கூட ஏற்படுகிறது. இத்தகைய நிலைமைகளில் தான், டி'கோல்ட் மருந்தின் டபுள் ஆக்ஷன் செயல் புரிகிறது-ஒன்று இதன் அபரிமிதமான வேப்போரைஸிங் ஆக்கப் பொருள் மூக்கடைப்பைப் போக்குகிறது. இரண்டு, இதிலுள்ள அனால்ஜெஸிக் ஆக்கப் பொருள் தலைவலிக்கு நிவாரணம் அளிக்கிறது. அதனால் தான், நீங்கள் செய்ய வேண்டிய அவசர வேலைகள் எதுவும் தடைபடுவதில்லை. ஆகையால் குழந்தைத் தனத்தை விடுங்கள். குழந்தைக்கானதல்ல, உங்களுக்கான டி'கோல்ட் ரப்பைத் தடவுங்கள். ஜலதோஷம் மற்றும் தலைவலியிலிருந்து உடனடி நிவாரணம் பெறுங்கள்.



டி'கோல்ட் பெரியவர்களுக்கான கோல்ட்ரப்

TRITON/96/PP/008/TAM



எல்லோருக்கும் பருப்புத் தேங்காய் பிடிக்க வராது. மிட்டாய் வாங்கி, வாணலியில் 4 ஸ்பூன் நெய்விட்டுச் சூடானவுடன், சிறு மிட்டாய்களையும், குட்டி பிஸ்கட்டுகளையும் போட்டுப் புரட்டி, அப்படியே கூட்டில் நெய் தடவிக் கொட்டி அமுக்கவும். பிறந்த நாளுக்கு வைத்தால், பார்க்க அழகு. குழந்தைகளுக்கோ கொண்டாட்டம்.

- ஆர். பார்வதி

அழுத்தந்திருத்தமாய்ச் சொல்ல.... பகிரென்றது. ஏதோ ஒரு பேச்சுக்குக் கேட்டது நிஜமாகவே அப்படித்தான் என்றால்...? குழப்பத்துடன் அவனைப் பார்த்தேன். அவன் ஏதோ சொல்ல வாயெடுத்த போது வாசலில் விளையாடிக் கொண்டிருந்த விவேக் திபுதிபுவென ஓடி வந்து கால்களைக் கட்டிக் கொண்டான்.

"டேய்... டேய்.... இருடா. காலெல்லாம் எவ்வளவு மண்ணு பார். போய் கழுவிக்கிட்டு வருவியாம்..." நான் சொல்லச் சொல்ல லட்சியமே செய்யாது மடிமீது அமர்ந்து கொண்டான்.

''விவேக் குட்பாயாம். சொன்னபடி கேட்பானாம்..'' கன்னத்தில் முத்தமிட்டு கீழே இறக்கினேன்.

"உங்க குடும்பத்தில் செல்லம் கொடுத்து வளர்க்கறது ரொம்ப சகஜமான விஷயம் போலிருக்கு. அதான்; சின்ன வயசில் தப்பு செய்யறப்ப கண்டிப்பா சொல்லித் திருத்தாம முத்தம் கொடுத்துக் கொஞ்சற பழக்கம் பின்னால் பெரியவங்க ஆனப்புறமும் வீம்பும் முரட்டுத்தனமும் கூடவே வளர வழி செய்யறது....'' அவன் குரலின் நிஷ்டூரியமும் ஏதேதோ சந்தேகங்களுக்கு வழிவகுத்தது.

விஷயம் ஓரளவுக்குப் பிடிபட்டது போலிருந்தது. இவனுக்கும் ப்ரியாவுக்குமிடையே ஏதோ பிணக்கு. இவனுடைய காட்டமான வார்த்தைகளும் மறைமுகத் தாக்குதலும் இப்படித்தான் உணர்த்துகிறது. இந்த பனிப்போரின் பரிமாணம் பக்குவமாய்ப் பேசித் தெரிந்து கொள்ள வேண்டும். கடவுளே... இது இளம் தம்பதியரிடையே சகஜமாய் ஏற்படும் ஊடலாக இருக்க வேண்டும். நிச்சயமாக அப்படித்தான் இருக்கும்.

ஆனால் இவன் முகபாவம் இல்லாத கலவரமெல்லாம் கிளப்பிக் கொண்டு... பசு புலியாக முரண்படும் அளவுக்கு என் தங்கை அப்படி என்னதான் செய்தாள்? 'சொல்லித் தொலையேண்டா' மனம் இரைந்தது.

"கமான் கார்த்திக்... என்னதான் நடந்தது?"

"உங்க ரெண்டு பேருக்கும் சண்டையே வந்ததில்லையா?" திடீரென்று சசியைப் பார்த்துக் கேட்டான்.

"அது எப்படி... ஏழு வருஷ வாழ்க்கையில் சண்டை வரவில்லை என்றால் அது கேபிள் கனெக்ஷன் இல்லாத டீ.வி. மாதிரி இல்ல...''

சூழலின் இறுக்கம் குறைக்கும் பாவனையில் அவள் வேடிக்கையாகப் பேசியதை சற்று முன் உதடு சுழித்த போது பிரகாசம் காட்டிய அவன் முகத்தை ரசித்த மாதிரி அனுபவித்தேன்.

"சண்டை சச்சரவு இல்லாத வீடே கிடையாது கார்த்திக். ஊடல் உறவு கூட்டும் என்பார்களே....."

"வாஸ்தவம்தான். ஆனால் ஒரு லிமிட் இருக்கணும் இல்லையா? சண்டை நடக்கறது சகஜம்னு சொல்றீங்க. நீ எக்கேடும் கெட்டுப்போ, எனக்கு மட்டும் சமைத்துக் கொள்றேன்னு நடந்துக்கிறதும் சகஜம்தானா?"

இது என்ன புதுக்கதை... ப்ரியா ஏன் இப்படி....

"புரியறாப்பல சொல்லுப்பா..." பொறுமையிழந்து கேட்டேன்.

"உம்.... உப்பு பெறாத சின்ன விஷயம்தான். எங்க ரெண்டு பேருக்கும் பொங்கல் போனஸ் வந்தது. அதை எப்படி உபயோகப்படுத்திக் கொள்ளலாம்கற விஷயத்தில் அபிப்பிராய பேதம். சாதாரண விவாதமா ஆரம்பித்து பெரிய வாக்கு வாதம் வளர்ந்து மனக்கசப்பில் வந்து நின்னிருக்கு. ரெண்டு பக்கமும் தப்பு இருக்கறப்ப ஊர் உலகத்தில் இல்லாதவிதமா உங்க தங்கை முரண்டு பிடிக்கறது என்ன நியாயம்கறேன்... நீங்கதான் அவளுக்கு எடுத்துச் சொல்லணும். நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே... முடிந்தால் வாங்க...." சோபாவிலிருந்து எழுந்தான். "உங்க வீட்டுப் பெண் என்று நியாயம் மறந்து பேசமாட்டிங்கன்னு நம்பறேன்" விசிறி விடுகையில் குமுட்டித்தணல் பொறிவது போல் சொற்களை இறைத்துவிட்டுச் சரேலென வெளியேறிவிட்டான்.

வாசல் வரை சென்று வழியனுப்பக் கூடத் தோன்றாமல் திக்பிரமை பிடித்து நின்றோம். அவன் சித்தத்தைப் பார்க்கையில் விஷயம் விபரீதமானது போல் தெரிகிறது. இந்த ப்ரியாவுக்கு

என்ன ஆகிவிட்டது? அவன் செல்லமாய் வளர்ந்தது நிஜம்தான். ஆனால் இப்படியெல்லாம் ஏறுமாறாய் நடந்து கொள்பவளில்லை. 'இந்த ஜெனரேஷன் பெண்களுக்கு மெச்சூரிடி அதிகம்' கவர்ப் பந்தாய் தாக்கின என் வார்த்தைகள்.

என் எண்ணங்களே சசிரேகா நெஞ்சிலும் வரியிட்டிருக்கும் என்பது நிச்சயமாய்த் தெரியும். வார்த்தைப் பரிமாற்றத்திற்கு அவசியமிருக்கவில்லை.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கெல்லாம் அண்ணாநகரில் இருக்கும் அவள் வீட்டில் இருந்தோம். கதவு திறந்தவளிடம் இலேசான வியப்பு அதிர்வுகள். எங்கள் வீட்டிற்கு வந்தது குறித்து கார்த்திக் சொல்லவில்லை போலிருக்கிறது. அந்த அளவு பேச்சு வார்த்தை கூடக் கிடையாதா?

"வா அண்ணா..."

நீண்ட கைகளை சசியைச் சுற்றி படரவிட்டான். உள்ளே கண்பட்ட தூரம் வரை கார்த்திக் தென்படவில்லை.

"கார்த்திக் இல்லையாம்மா?" குரல் இயல்பாக இருக்க மிகவும் பிரயாசைப்பட வேண்டியிருந்தது.

"டிபன் சாப்பிடப் போயிருக்காருன்னு நினைக்கறேன்....." விட்டேத்தியாய்ப் பதில் வந்தது. நெய்யும் இஞ்சியும் மிளகும் சீரகமுமாய் வெண் பொங்கல் மணம் நாசியைத் தொட்டது.

"வீட்டில் தயாராயிட்டிருக்கறப்ப எதுக்காக கார்த்திக் வெளியில் சாப்பிடணும்?"

"அது அப்படித்தான். சரி... வாங்க, டிபன் சாப்பிட்டுக் கொண்டே பேசலாம். நான் ஒருத்தி தானே, ஊறுகாய் போதும்னு தொட்டுக்க எதுவும் செய்யலே. அஞ்சே நிமிஷம்... வெங்காய சட்னி செய்துடறேன்..."

எதுவுமே நடக்காதது போன்ற அவள் சகஜமான பேச்சு... நடவடிக்கை... புருஷன் பட்டினி போட்டு தனக்கு மட்டும் வக்கணையாக மணக்க மணக்க பொங்கல் செய்து கொண்டு... இதில் உபசாரம் வேற... ச்சே... நெஞ்சில் கோபமும் கசப்பும் நிமிடமாய் நிறைந்தன.

வருத்தத்துடன் சமையலறைப் பக்கம் சென்றேன். சமையல் நடக்கும் சுவடே இல்லை. துடைத்து வைத்தாற் போல் துப்புரவாய் அமைதியாய் பாத்திரங்கள் சமர்த்தாய் அதனதன் இடத்தில்... பொட்டிழந்த நெற்றி போல் வெறிச்சென்ற சமையல் மேடை.... தரையில் மட்டும் மூன்று நாள் தூசு... உபயோகிக்கப்படாத காஸ் ஸ்டவ் அத்தனைக்கும் மௌன காட்சியாக.....

ஆத்திரத்துடன் பெட்ரூம் பக்கத்திலிருந்த அறைக்கு வந்தேன். பேச்சு மறந்தவள் போல் சசிரேகா உட்கார்ந்திருக்க ப்ரியா வெங்காயம் அரிந்து கொண்டிருந்தாள். 'பஸ்' என்ற சத்தத்துடன் பம்ப் ஸ்டவ்... அதன் மீதிருந்த சின்ன பாத்திரத்திலிருந்து மூடியையும் மீறி ஆவிப் படலம்... சற்று தள்ளி நான்கைந்து பாத்திரங்கள்... பக்கெட்... சூப்பர் பஜார் மளிகை சாமான் பாக்கெட்டுகள்... மூலையில் சுருட்டி வைக்கப் பட ஒற்றை மெத்தை, சூட்கேஸ் இத்யாதி இத்யாதி....

"ஏய் ப்ரியா... என்ன இது?"

"தனிக்குடித்தனம் அண்ணா..." அமைதியாய்ச் சிரித்தாள்.


"அதான் தெரியறதே... என்ன அசட்டுத்தனம் இது. எதுக்காக இப்படி.... ஏதோ சண்டைன்னு சொன்னான். அதனால...? எங்காவது நடக்குமா இந்த கண்றாவி....?"

"ஓஹோ... உங்களைப் பார்த்து எல்லாம் சொல்லியிருக்காப்பல... சண்டை நிஜம்தான். இல்லன்னு சொல்லலே. ஆனால் நீங்கள்லாம் மூக்கில் விரல் வைத்து ஆச்சரியப்படற இந்த காரியத்தை என்னைச் செய்ய வைத்தது எதுன்னு சொல்லியிருக்கமாட்டாரே.... அசட்டுத்தனமாம்.... கண்றாவியாம்... உங்களுக்கென்ன தெரியும் என் மனநிலை...?" அவ்வளவு நேரம் இருந்த சகஜபாவம் மறைந்து அவள் குரலும் முகமும் கோபம் கொட்டியது.

"ப்ரியா... மாப்பிள்ளையும் நீயுமா மாறி மாறிக் குழப்பறீங்களே தவிர இன்னதுதான் நடந்ததுன்னு விவரமா சொன்னாத்தானே எங்களுக்கும் புரியும். உங்களுக்குள்ள சண்டை வந்ததுன்னு சொன்னார். காரணமும் சொன்னார். குடும்ப விஷயத்தில் முக்கியமா பணம் காசு விஷயத்தில் அபிப்பிராய பேதம் வர்றது எங்கேயும் நடக்கற விஷயம்தாம்மா. இந்த சின்ன விஷயத்தை இவ்வளவு தூரம் முற்றவிடலாமா ப்ரியா....?" கண்டிப்பும்

கோவிலுக்குப் போனால்... சகோதரிகளே! நல்ல விஷயங்களையும் வார்த்தைகளையுமே பேசுங்கள். மனக் கஷ்டங்கள் போகத்தான் கோவிலுக்குப் பலர் வருவார்கள். அவர்கள் காதில் நல்ல வார்த்தைகள் விழுந்தால் நல்ல சகுனமாய் நினைத்து சந்தோஷப்படுவார்கள். உங்கள் வாக்கையே தெய்வ வாக்காக நினைப்பார்கள்.

- கி. மஞ்களா





சொந்த வீடு

- VSR -

'அவன் அருளால், அவன் தாள் வணங்கி', காதில் ஒலித்தது இன்னிசை ! அதில் தான் எத்தனை கருத்து வளம் : தத்துவம் !

இந்துவோ, இஸ்லாமோ, கிறிஸ்துவமோ, இறையின் அருளால் தான் இறைவனை வணங்க முடிகிறது என்பது எத்தனை நிதர்சனம்!

சிந்திக்க விடவில்லை, என்னவள்! பெயர் சிவசக்தி! அவள் பேச்சுக்கு காது கொடுக்கவில்லை என்றால், பின்பு காதை பொத்திக் கொள்ள வேண்டி வரும்!

வார்த்தைகள் வரும் விதம் அப்படி! ஒன்று அப்படி! இல்லையேல் கண்ணை கசக்குவாள்! ஏறிட்டேன்! 'என்ன சிவா..'

'இதில் ஒண்ணும் குறைச்சல் இல்லே: உங்க தங்கச்சிக்கு எல்லாம் அந்தக்காலத்தில் தீபாவளிச் சீர் எப்படிப் பண்ணினீங்க! இப்ப, பெத்த மகளுக்குப் பண்ண ஏன் இப்படி யோசிச்சுக்கிட்டிருக்கீங்க..!' பெற்ற மகளுக்கு செய்ய வேண்டும் என்பதுடன் நிறுத்திக் கொள்ள அவளால் முடியாது. என் பக்கத்து உறவைச் சீண்டா விட்டால் தலை வெடித்துவிடும்!"

'ஆமா, உன் அண்ணன் கொடுத்த சீர், உனக்கு . . . .' என்னாலும் சீண்டாமல் இருக்க முடியவில்லை!

ஏன் என் அண்ணனுக்கு என்ன? அவனுக்கு வாய்த்தவள் மோசம்..' எப்படி இருந்தாலும் தன்பக்கத்து உறவை விட்டுக் கொடுக்காத அந்தத் தன்மை இது தான் பெண்களுக்கே உரிய பெரும் சொத்து!

"விஷயத்துக்கு வா .."

"போன வருஷம் தீபாவளிக்கு அகலக்கரை பட்டுச்சேலை எடுக்காமல் பணத்தைக் கொடுத்திட்டீங்க; இந்தவருடம் அப்படி இல்லாமல் அகலக்கரை பட்டு சேலை எடுத்துக் கொடுக்கணும்"

"உத்தரவு!"

எல்லாக் குடும்பத்திலும் நடப்பது தான். என்னுடைய வருவாய் என்ன என்பது அவளுக்கும் தெரிந்தது தான்! ஆனால் சில சமயம் நான் தலையாட்டாவிட்டால் நான் எதிர்பார்க்கும் சில நேரத்தில் அவள் தலையாட்டமாட்டாளே! இருக்கிற ஷேர்களைஅடைவைத்து அல்ட்ரா நிதி நிறுவனத்தில் கடன்பெற வேண்டியது தான்!

"சார், தந்தி.." எவ்வளவு தான் காலம் மாறினாலும் தந்தி என்றால் என்னவோ போல் தான் இருக்கிறது!

கையெழுத்திட்டு வாங்கிவந்த சிவசக்தி ஒரு குதூகலத்தில் இருந்தாள்! 'இந்த வருடமும் மகளுக்குப் பணமே கொடுத்திடலாங்க.'

எனக்கு புரியவில்லை!

கொஞ்ச நேரத்துக்குள் ஏன் இந்த மாற்றம்!

விளக்கினாள். 'சென்ற ஆண்டு, தீபாவளிக்கு பட்டுச் சேலைக்குப் பதிலாக கொடுத்த ரூபாய் மூன்று ஆயிரத்தை அல்ட்ரா பெனிபிட் பண்டில் 'நம்பர் ஒன் டெபாஸிட்' திட்டத்தில் மகளும், மாப்பிள்ளையும் டெபாஸிட் செய்திருந்தார்களாம். அதில் மாருதி வேன் பரிசாகக் கிடைத்துள்ளதாம். அதிலேயே புறப்பட்டு வருகிறார்களாம்"

'துணை இருப்பாள் மீனாட்சி' என்று வணங்கிய தெய்வம் என்றும் துணை இருக்கிறது ! இருக்கும் !

நம்பர் ஒன் டெபாஸிட் திட்டத்தில் மாருதிவேன் திட்டம் 28.6.95ல் முடிவடைந்தது. தற்பொழுது இரு திட்டங்கள் உள்ளன: ரூ10,000/-மட்டும்

வாழ்வுக்கு ஒரு வழிகாட்டும் தலம்

கொல்லம் ஸ்ரீ உமா மஹேஸ்வரர் கோவில் - கேரளத்து திருமணஞ்சேரி

மனித வாழ்க்கையில் திருமணம் என்பது மிக முக்கியமானதாக விளங்குகின்றது. திருமணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளுடன் வாழ்வதையே சிறந்த தர்மமாக பெரியோர் கூறுகின்றனர். அதனால்தான் ஔவைப் பாட்டியும் இல்லறமல்லது நல்லறமன்று என்று இல்லறத்தைப் போற்றிப் பாடினாள்.

அகஸ்திய மகரிஷிக்கு சிவபெருமான் கயிலாய மலையில் தனக்கும் உமைக்கும் நடந்த திருமணத்தை நிகழ்ச்சிகள் ஒன்று விடாமல் காட்டிய இத்தலங்களே உமாமகேசத் தலங்கள் என்று போற்றப்படுகின்றன. இத் தலங்களில் உமாபரமேஸ்வரர் சிவலிங்கமாக அமையாமல் திருமண மேடையில் திவ்ய தம்பதிகளாகவே எழுந்தருளியுள்ளனர். இத்திருக் கோலத்தைக் கண்டு தரிசிப்பவர்க்கு திருமணத்தை, புத்திரபாக்கியமின்மை ஆகியவற்றை நீக்கி சகல சௌபாக்யமளிப்பதாக அகஸ்தியருக்கு பரமேசுவரன் வாக்களித்துள்ளார். ஆதலால் இவற்றைக் கண்ணாரக் கண்டு வணங்குதல் புண்ணியமும் நல்வாழ்க்கையும் தருவதாகும்.

இத்தகைய தலங்களில் ஒன்றே கொல்லம் உமாமகேஸ்வரர் ஆலயமாகும். பரசுராம க்ஷேத்திரமாகிய கேரளத்தில் கொல்லம் நகரில் இக்கோவில் அமைந் துள்ளது. அகஸ்தியர் இங்கு தவம் செய்து வந்ததால் இதற்கு அகஸ்திய கூடம் என்பது பெயர். இங்கு அவருக்குப் பெருமான் திருமணக் கோலக்காட்சியை அளித்தார் என்று புராணம் கூறும்.



இக்கோவிலில் திருமணத் தடையால் வருந்துவோர்களும், குழந்தைப் பேறு அற்றவர்களும் வந்து வழிபட்டு பல நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். இங்கு செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் நூற்றுக் கணக்கான பெண்கள் கூடி இராகு கால பூஜை செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இப்பூஜையில் கலந்து கொள்கின்ற அனைவருக்கும் கோவில் சார்பிலேயே எலுமிச்சம்பழ மூடியிலான விளக்குகள், அதற்கான எண்ணெய், பூக்கள் முதலியன தரப்படுகின்றன.


நெடுந்தொலைவில் இருந்து கோவிலுக்கு வரமுடியாதவர்கள் கோவில் முகவரிக்கு தங்கள் பெயர் கோத்திரம் வயது நட்சத்திரம் முதலியவற்றை கடிதம் மூலம் எழுதி அனுப்பினால் அவர்களுக்காக முறையாகப் பிரார்த்தனை செய்து பிரசாதம், சுவாமி அம்மன் படத்துடன் இலவசமாகவே அனுப்பப்பட்டு வருகின்றது. (ஆலய முகவரி : ஸ்ரீ உமாமகேசுவரர் ஆலயம், மெயின்ரோடு, கொல்லம், கேரளா - 691 001)

சிவபெருமான் திருமணக் கோலத்துடன் விளங்கும் இப்பதியை நினைப்பது கூட ஒரு புண்ணியமாகும். நமக்காக மட்டுமின்றி அக்கம் பக்கம் உள்ளவர்களுக்குக் கூட பிரார்த்திக்கலாமே.

பூசை. ச. அருணவசந்தன்

ஹேர்டை உபயோகிக்கும் போது சருமத்தில் பட்டால் காய்ந்தபின் கருப்பாக கறைகள் ஏற்பட்டுவிடும். இவைகளை பெட்ரோலில் நனைத்த பஞ்சால் அழுந்தத் தேய்த்தால் கறை கரைந்து விடும்.

- உமா



கரிசனமுமாய் சொன்னான் சசி.

"எது சின்ன விஷயம்... கெட் அவுட் என்பதா?" குப்பென்று முகம் சிவக்க.. இதழ்கள் இலேசாய்த் துடித்தன. இமைகளில் ஈரம்...

"கோபம் அதிகமானால் அப்படிச் சொல்றது சகஜமா நடக்கறதுதானே... இதுக்குப் போய்...."

"நிறுத்து அண்ணா. உங்க ஆண் வர்க்கத்துக்கு எல்லாமே சகஜம்தான். ஒரு ஆணும் பெண்ணும் இணையும் கல்யாணம்கற பந்தத்தில் ரெண்டு பேருமே அவங்கவங்க பெற்றோர், வீடு எல்லாம் விட்டு வந்து ஒரு புது கூட்டில் புது வாழ்க்கை ஆரம்பிக்கறாங்க. ரெண்டு பேருக்குமே சொந்தமான அந்த வீட்டை விட்டு வெளியே வந்து வாசலை நோக்கிக் கையை காண்பிக்க ஆணுக்கு என்ன உரிமை உண்டு? எந்தப் பெண்ணாவது இப்படிச் செய்திருக்கானா? இந்த ஆண்களுக்கு ஆன்னா ஊன்னா கெட் அவுட்...! இதில் வேடிக்கை என்னன்னா.. அக்னி வலம் வந்து அம்மி மிதித்து அருந்ததி காட்டி. இன்னும் ஆயிரத்தெட்டு சடங்குகளுடன் அர்த்த நாரீஸ்வரென இணையும் சாஸ்திரங்களை விடுங்க; நாங்க ரெண்டு பேருமே சம்பாதிக்கறவங்க. பொருளாதாரம் வீட்டு நிர்வாகம் சம்சார அன்னியோன்யம் முதற் கொண்டு எல்லாமே ரெண்டு பேராய் இணைந்து செய்யற ஒரு கூட்டு முனைப்பில் பெண்ணைப் பார்த்து ஆண் கெட் அவுட்னு எப்படி இவ்வளவு சாதாரணமா சொல்லலாம். பதில் சொல்லு அண்ணி...." சசிரேகாவின் தோள்பிடித்துக் குலுக்கியவள் தொடர்ந்து கூறினாள்.

"நீ என்ன சொல்லப் போறே... உன்னிடம் இதுக்கு பதில் இருந்தாத்தானே? நீ.. நீன்னா நீ மட்டும் இல்லே... பொதுவா சொல்றேன். போடி வெளியேன்னு புருஷன் சொன்னதும் இனிமேல் இப்படி நடக்காதுன்னு சமாதானக் கொடி காட்டுவீங்க. இல்லை... அதிகபட்சமா உடனே பெட்டியைத் தூக்கிட்டு பிறந்த வீடு ஓடி, அவன் வந்து கூப்பிட்டால்தான் திரும்பி வருவேன்னு வீம்பா உட்கார்ந்திருப்பீங்க. அந்த அளவு சுயமரியாதை உள்ள நீங்க 'என் வீட்டை விட்டு நான் ஏன் போகணும்னு' சொல்வதோடு நிற்காமல் 'எப்ப என்னை வெளியே போன்னு சொன்னீங்களோ இனி உங்களுடன் எனக்கென்ன வேலை' என்று அதே வீட்டில் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளத் துணியணும். அதுதான் நான் இப்ப செய்யறது..." குற்ற உணர்வு சிறிதும் தென்படாத பிசிரற்ற குரலில் ஒரு வக்கீல் போல் தன் செயலுக்கு நியாயம் விளக்கிய என் தங்கையைப் பார்க்க பிரமிப்பு தட்டியது.

'இந்தப் பெண்களே ஆச்சரியமானவர்கள் தாம்'... அடிக்கடி நான் நினைத்துக் கொள்வது இப்போதும் கூட....

"சாப்பிடு அண்ணா. ஆறிப் போனால் பொங்கல் ருசிக்காது..." மணக்கும் ஆவி பறக்கும் பொங்கலும் ருசிக்காத சூழ்லில் அவளுக்காக சாப்பிடத் துவங்கினேன். சாப்பிடுவதாகப் பாவனை செய்தபின் ஸ்பூனால் பொங்கலை அளைந்து கொண்டிருந்த ப்ரியாவின் மனநிலை புரியத்தான் செய்தது.

தான் செய்தது தப்பா என்று அவளும் கேட்கவில்லை. நானும் அவளுக்கு எந்த அறிவுரையும் கூறவில்லை. மேற்கொண்டு அது குறித்து ஏதும் பேசாமல் விடை பெற்றோம். இந்த மௌன யுத்தம் இப்படியே நீடிக்காது என்ற நம்பிக்கையுடன். ஆனாலும் என் நெஞ்சப் பிரதேசத்தில் ஒரு சின்ன அதிர்வு. விளைவாய் சில கீறல்கள்...


மெயின் ரோட்டிற்கு முன்பிருந்த கிளைத் தெருவில் டிராபிக் ஜாம். சிக்னல் விழவில்லையோ அல்லது வேறு என்ன தகராறோ? ஏழெட்டு நிமிடங்கள் நகர்ந்தும் முன் வண்டிகள் நகர்ந்தபாடில்லை. பொறுமையிழந்து வண்டியை ஆப் செய்த நேரத்தில் தெருவோரத்திலிருந்த ஒரு குடிசையின் உள்ளிருந்து அந்த கூச்சல் செவியை அறைந்தது. தொடர்ந்து ஒரு பெண்ணின் கழுத்தில் கைவைத்து வெளியே இழுத்து வந்தான் ஒரு ஆள். "நடடி வெளியே... இனிமேல இங்க உனக்கு இடம் இல்ல...."

சசிரேகாவின் பார்வை சரேலென என் மீது படிய, சிக்னல் விழுந்து விட்டதா என்று கண்டு கொள்ளும் பாவனையில் எதிர் பக்கம் பார்த்தேன்.


ஸ்கூட்டர் கிளம்பி வெகுதூரம் வந்தும் கவனம் மட்டும் பிடிவாதமாக அந்த குடிசையின் முன்னாலேயே இருந்தது. அவன் என்ன செய்யப் போகிறான்...?

எழுத்தே படமாகும்!

இதுபோன்ற ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு சுலபமாக படங்கள் வரையலாம். அவரவர் கற்பனைத்திறத்திற்கு ஏற்ப வரைந்து காண்பிக்கும் பொழுது குழந்தைகளுக்கும்



ஒரு புதிய ஆர்வம்
ஏற்படும்.
ஓவியம் வரைய
தூண்டுகோலாக
இருக்கும்.
உதாரணத்திற்கு
சில
எழுத்துக்களைக்
கொண்டு
வரைந்த
படங்களைப்
பார்க்கவும்.





- கே. நீலா




ஹெர்னியா..?

மனிதனுக்கு உண்டாகும் சில நோய்களை மருந்தால், மந்திரத்தால், பிரார்த்தனையால் குணம் பெறுவதை பார்த்திருக்கின்றோம். குணம் பெறாத நோய்களுக்கு நவீன அறுவை சிகிச்சை முறை குணமளிக்கும் என்று கூறுகிறார் பிரபல அறுவை சிகிச்சை நிபுணரும், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் முன்னாள் துணை பேராசிரியருமான டாக்டர் பி. ரியாஜ் அஹமத்.

பல வாரங்களுக்கு முன்பே முன் அனுமதி பெற்று காத்துக் கொண்டிருந்தவர்களின் மத்தியில் அவரை பேட்டி காணச் சென்ற போது ஆபரேஷன் தியேட்டரிலிருந்து பச்சை நிற ஆடையில் சிரித்த புன்னகை முகத்துடன், வெளியே வந்த டாக்டர் பி. ரியாஜ் அஹமத் அவர்களைக் கண்டோம். இன்று என்ன விசேஷம் என்று கேட்ட போது, 'ஹெர்னியா' என்று பதில் அளித்தார்.

"60 வயதான பெரியவருக்கு 'ஹெர்னியா' என்னும் குடலிறக்கம் நோய் ஏற்பட்டிருந்தது. 30 நிமிடங்களில் அறுவை சிகிச்சை முடித்தேன். நோயாளி நலமாக இருக்கின்றார். கூலி வேலை செய்யும் அந்தப் பெரியவருக்கு கடுமையான வேலை செய்தாலோ அல்லது கனமான பாரமான பொருளைத் தூக்கினாலோ விரைகளில் குடல் இறங்கி விடும். கடுமையான வயிற்று வலியால் துடிப்பார். உடனடியாக கீழே படுக்க வைத்து குடலை மேல் நோக்கித் தள்ளி 'ஹெர்னியா பெல்ட்' இடுப்புப் பட்டையை அணிந்து கொள்வார். அதனால் தற்காலிகமாக வலிக்கு நிவாரணம் கிடைக்கும். ஹெர்னியா பெல்டின் அழுத்தத்தினால் இடுப்பின் முன் தொடையின் இடது மடிப்பில் விரைகளின் மேல் பாகம் புண்ணாகி விட்டதால் பெல்டும் அணிய முடியாத நிலையில் நம் மருத்துவமனையில் இன்று காலையில் சேர்க்கப்பட்டார். பரிசோதனை செய்து பார்த்த போது குடல் வெடித்து விடும் அபாயக் கட்டத்தில் இருந்தது. அவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அப்பாயிண்ட்மென்ட் நேரத்தை மாற்றி அமைத்து அந்தப் பெரியவருக்கு அறுவை சிகிச்சை செய்தேன். சேதம் அடைந்த குடலையும், புண்ணையும் அகற்றி விட்டு வந்தேன்" என்று விளக்கமளித்தார் டாக்டர் பி. ரியாஜ் அஹமத.

'ஹெர்னியா' எப்படி ஏற்படுகிறது என்று கேட்டபோது, "வயிற்றின் மீது தோல் இருக்கும். தோலின் அடியில் மூன்று மடிப்புக் கொண்ட சதை இருக்கும். சதையும் தோலும் சேர்ந்து வயிற்றுக்குள் அமைந்திருக்கும் குடல், கல்லீரல், மண்ணீரல், இரைப்பை, கணையம்



மற்றும் பித்தப் பைக்கு போர்வையாக அமைந்திருக்கும். தோலுக்கடியில் உள்ள சதைப்பகுதியில் ஜவ் அறுந்து ஓட்டை விழுந்து விடும். அந்த ஓட்டைக்குள் குடல் மாட்டிக் கொள்ளும். அதனால் சதையும் குடலும் புண்ணாகி வெடித்து உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும். ஆரம்ப கால நிலையிலேயே வயிற்று வலி ஏற்பட்டால் உடனடியாகக் கவனிக்க வேண்டும். 'ஹெர்னியா' முதிர்ந்த நிலையில் உடனடியாக அறுவை சிகிச்சை செய்யாவிட்டால் மரணம் நேரிடும்.

கிராமங்களில் விரை வாதம், புட்டை வீக்கம், சைக்கிளிலிருந்து கீழே விழுந்து விட்டேன், மாடு உதைத்து விட்டது அதனால் விரை வீங்கி விட்டது என்று கூறுவார்கள். உண்மையில் விரை வீக்கம் இருக்காது. விரைகளுக்குள் குடல் இறங்கி விட்டிருக்கும். இதற்கு எந்த மருத்துவ முறையிலும் மருந்து கிடையாது. அறுவை சிகிச்சை மட்டுமே குணம் தரும்.

பொதுவாக நம் மருத்துவமனையில் ஏழை எளியோருக்கு மருத்துவ ஆலோசனை, தங்கும் வசதி, இலவசமாக செய்து தரப்படுகிறது. ஆபத்தான நிலைகளில் அவசர உதவிகளையும் செய்கின்றோம். அமெரிக்காவில் கிடைக்கின்ற நவீன அறுவை சிகிச்சை கலை நம் மருத்துவமனையில் இருக்கின்றது. அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஷௌல்டிஸ் ஹெர்னியா கிளினிக்கின் தலைமை மருத்துவர் டாக்டர் ஷௌல்டீஸ் அவர்களிடம் நேரடியாக பயிற்சி பெற்றேன். அதன்பின் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் துணைப் பேராசிரியராக பணிபுரிந்த போதும் நம் மருத்துவமனையிலும் பல நூறு 'ஹெர்னியா' நோயை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்தி உள்ளேன்.

குழந்தைகளுக்கு தொப்புள் வீங்கி இருக்கும். அதனால் அடிக்கடி வலி உண்டாகும். அதைத்தான் குழந்தைகளின் 'தொப்புள் ஹெர்னியா' என்பார்கள். இயற்கையாகவே விரைகளில் ஒன்று பெரியதாகவும் மற்றொன்று சிறியதாகவும் இருக்கும். குழந்தைகளில் சிலருக்கு விரைகள் பலூன் வடிவில் வீக்கமடைந்திருக்கும். அவ்வப்போது வலி வரும். இதற்குக் குழந்தைகளின் ஹெர்னியா என்பார்கள். குழந்தைகள் அழும்போது பலூன் வடிவில் வீங்கிக் கொள்ளும். இதற்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றாலே பெற்றோர்கள் பயந்து விடுகின்றார்கள். பயப்படாமல் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியும்.

ஆண்களுக்குக் குடலிறக்கம் ஏற்படுவதைப் போல் பெண்களுக்கு கர்ப்பப்பை இறங்கி விடுவதுண்டு. குதிக்காலிட்டு உட்காரும் போது பலூன் வடிவில் வெள்ளை திரப்பை தொங்கிக் கொள்ளும். இதனால் உயிருக்கு ஆபத்து இல்லை என்றாலும் உடலுக்கு பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. வெள்ளைப்பாடு நோய், இடுப்பு வலி, சிறுநீர்க் கழிக்கும் போது எரிச்சல், அடிக்கடி யூரினரி இன்ஃபெக்ஷன் ஏற்படுதல், அளவு கடந்த ஒழுங்கற்ற விலக்கு ஏற்படுதல், இரத்த சோகை, உடலுறவு கொள்ள முடியாமை, பாலுணர்வு தடைபடும் பிரச்சனைகள் உண்டாகும். இதற்கு அறுவை சிகிச்சை நிவா, ரணம் தருகிறது.

அறுவை சிகிச்சை என்றால் ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவிட வேண்டும். பல நாட்கள் தங்கியிருக்க வேண்டும் என்ற நிலை நம் மருத்துவமனையில் இல்லை. ஏழைகளுக்கு எட்டும் வகையில்தான் சிகிச்சை அளிக்கின்றோம்" என்று டாக்டர் பி. ரியாஜ் அஹமத் கூறும்போது சந்தோஷமாக இருந்தது.

மூளையிலும் ஹெர்னியா நோய் வரும். இதை ஸ்கேனிங் படம் மூலம் காண முடியும். அடிக்கடி தலைவலி வரும். மயக்கம் வலிப்புகள், வாந்தி உண்டாகும். மூளைக்கும் மண்டை ஓட்டுக்கும் இடையில் மூன்று சதைமடிப்புகள் இருக்கும். அதற்குள் ஓட்டை விழும்போது மூளையின் சதைப்பகுதி தோலின் உள் சதை போர்வைக்குள் மாட்டிக் கொண்டு வெடித்து மூளையிலிருந்து இரத்தக் கசிவை உண்டாக்கும். இதற்கு மூளை ஹெர்னியா என்றழைப்பார்கள். இதற்கு உடனடியாக அறுவை சிகிச்சை தேவைப்படும்.

வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி இரயில்வே நிலையத்தின் எதிரில் மசூதிக்குப் பின்புறம் ஜஹாங்கிரான் தெருவில் இவருடைய ஆர்.எஸ். ஹாஸ்பிட்டல் அமைந்திருக்கின்றது. எக்ஸ்ரே, ஸ்கேனிங், நவீன கருவிகள் இரத்தப் பரிசோதனை, அவசர தீவிர சிகிச்சைப் பிரிவு, என்டோஸ்கோப்பி நவீன அறுவை சிகிச்சை மையம் போன்ற வசதிகள் கொண்ட இம் மருத்துவமனையின் சிறப்பு (தொ.பே. 04174 - 22288, 23106) என்னவென்றால் பார்ப்பதற்கு பணக்காரர்கள் மட்டுமே உள்ளே நுழைய முடியும் என்ற தோற்றமிருக்கும். ஆனால் ஏழைகள், நடுத்தர மக்களின் கூட்டமே அலைமோதிக் கொண்டிருப்பதை காண முடிகிறது. வாணியம்பாடி என்னும் சிற்றூரில் இவ்வளவு பெரிய அறுவை சிகிச்சை மையத்தை வைத்திருக்கின்றீர்களே இதை நகரங்களில் கட்டியிருந்தால் பலருக்குப் பயனளித்திருக்கும். உங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்குமல்லவா? என்று கேட்டதற்கு ஏழைகள் கிராம மக்கள்தான் எனக்கு மிகவும் பிடிக்கும் என்று ஒரே வார்த்தையில் பதிலை முடித்துக் கொண்டார்.

பேட்டி : **யோகம்**



தன்னை குளியலறைத் தொட்டி என்று
பெருமையடித்துக் கொள்ளும் சமையலறை சின்க்!

10 பேர் உள்ள குடும்பத்திற்கான
பாத்திரங்களை எல்லாம் போடு
வதற்குப் போதுமான இடம். இங்கு
மங்கும் கை இடித்துக் கொள்ளாமல்,
அலசிக் கழுவ தாராளமான இடம்.
'சோக்' – இதை மிக எளிதாகத்
திறந்து மூடலாம். அத்துடன் நல்ல
சீரான விளிம்புகள்... எனவே இதை
சுத்தம் செய்வது மிகவும் சுலபம்.
வேறு என்ன? நிறைய உண்டு.
தட்டு, பாத்திரம், கண்ணாடி டம்ளர்-
களை எளிதாக அடுக்கக் கூடிய
புதுமையான டிரெயின்போர்டு.
சிறந்த தரமான சேலம் ஸ்டீல்
பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது.
பாரிவேர் அளிக்கும் புதிய கோரல்
– பல ஆண்டுகள் நிம்மதியாக
இருக்க இந்தக் காரணங்கள்
போதுமே?



Coral
FROM
Parryware

E.I.D. Parry (India) Limited, Ceramics Division,
P.B. No. 12, Dare House, Madras 600 001.

சிந்தனையில் பிறந்த சிறந்த சின்க்...

குறைந்த முதலீடு செய்து குறுகிய காலத்தில் பெருத்த லாபம் பெறுங்கள்!!!

சென்னை – போரூர் மார்கத்தில்

பிரிசித்தி பெற்ற ஸ்ரீ கருமாரி அம்மன் கோயில் அருகிலும் !!!
திருவேற்காடு பஸ்டெர்மினெஸ் அருகில் அதுவும் !!!

MMDA அப்ரூவ்டு லே அவுட் நெ. 115/94

ஸ்ரீ பாலகிருஷ்ணா நகர்
ஒரு மனையின் விலை ரூ. **28,333**
(800 சதுரடி)

அட்வான்ஸ் ரூ. **8333** மட்டும்
மிகுதி தொகையை இரண்டு
மாத சுலப தவணையில் செலுத்தலாம்!

10 நாட்களில் மனையின் முழு தொகையும் செலுத்தினால் விலையில் 5% தள்ளுபடி

இந்த மனை பிரிவின் பத்திரங்கள் அனைத்தும் சரியானது என்பதற்குண்டான அரசு வழக்கறிஞரின் சான்று பெறப்பட்டுள்ளது. ரூ. 50,000 முதல் ரூ. 1,50,000 வரை கடன் உதவி பெறலாம்! உடனே வீடு கட்டி குடியேற நகர்புற அனைத்து வசதிகளும் உள்ளது!

சிட்டிக்குள் எல்லா இடங்களுக்கும் சென்று வர அடிக்கடி பஸ் வசதிகள் உள்ளன. 10 அடி ஆழ்த்தில் நல்ல குடிநீர், நல்ல காற்றேட்டம், மேடான இடம், நேரடி தொலைபேசி, மின் வசதிகள், உயர்நிலைப்பள்ளிகள், பல்பொருள் அங்காடிகள்.

ரூ 10 மட்டும் செலுத்தி உங்கள் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கொள்ள வேண்டும் பதிவு செய்தவர்கள் மட்டுமே.

9.3.96 சனிக் கிழமை 10.3.96 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 முதல் பகல் 2.00 மணிவரை எங்கள் வாகனத்தில் சென்று மனைகளை நேரில் பார்வையிடலாம்!

AVM

அவுசிங் (பி) லிமிடெட்

No. 3, பஜார் ரோடு, (முதல் மாடி), சைதாப்பேட்டை, சென்னை 600 015.

செவ்வாய் விடுமுறை

ROYAL

கோடையை வெற்றிகொள்வோமா?



கோடை என்றால் வெயில் மட்டும் இல்லை. தொடர்ந்து குழந்தைகளுக்கு விடுமுறையும் வந்து விடுமே! வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்கு விதவிதமாக ஜூஸ் வேண்டும். கூடவே கொஞ்சம் ஜாமும் செய்யலாம். ஆனால் அவை கடையில் வாங்குவது போல் கவையாக அமைய சில எளிமையான குறிப்புகள் :

1. ஜூஸ் முதலியன செய்யும் பொழுது கூடுமானவரை கலர்கள், சிந்தடிக் எஸென்ஸ் சேர்க்காமல் இயற்கை பழங்களைக் கொண்டே செய்யுங்கள். உடம்புக்கு நல்லது.

2. சோடியம் அல்லது பொட்டாஷியம் மெட்டாபை சல்பைட்டை சாதாரணமாக பிரிஸர்வேட்டிவாக சேர்க்கிறோம். அதை ஜூஸ் நன்றாக ஆறியபின் சிறிது தண்ணீரில் கரைத்து ஜூஸில் கலக்கவும்.

3. பிரிஸர்வேட்டிவ் போட்டபின் ஜூஸை அதிக நேரம் அலுமினியம் பாத்திரங்களில் வைக்க வேண்டாம். பாட்டில்களுக்கு மாற்றி விடுங்கள்.

4. பொட்டாஷியம் மெட்டா பைசல்பைட் கிடைக்கா விட்டால் சிட்ரிக் ஆஸிட் உபயோகிக்கலாம்.

5. கொய்யாப் பழத்தின் கொட்டைகளை லேசாக கைக்கையால் கசக்கினால் ஒருவிதப் பிசின் போன்ற கொழகொழப்பான பொருள் கிடைக்கும். அதையும் பிரிஸர்வேட்டிவ் ஆக உபயோகிக்கலாம்.





6. எலுமிச்சை, அன்னாசி, சாத்துக்குடி, திராட்சை, தர்பூசணி போன்ற நீர்ச்சத்து மிகுந்த பழங்களையே ஜூஸ் செய்ய உபயோகியுங்கள்.

7. ஜூஸ் செய்ய இனிப்பான பழங்களுக்கு பழச்சாறின் அளவுக்கு ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதத்திலும் சற்று புளிப்பான பழங்களுக்கு சாறுக்கு ஒன்றுக்கு ஒன்றரை என்ற விகிதத்திலும் சர்க்கரை சேர்க்கலாம்.

8. ஒரு லிட்டர் எலுமிச்சை சாறுக்கு ஜூஸ் செய்வதாக இருந்தால் 25 கிராம் பார்லியைத் தண்ணீரில் நன்றாகக் கொதிக்க விட்டு வடிகட்டி அந்தத்

தண்ணீரை சர்க்கரை பாகு செய்ய உபயோகித்தால் சுவையாகவும் இருக்கும். சூட்டையும் தணிக்கும்.

9. பார்லி சேர்க்காவிட்டால் சர்க்கரைப் பாகு கொதித்து வரும் பொழுது 25 கிராம் இஞ்சியை சுத்தமாகத் தோல் சீவி தண்ணீர் விட்டு அரைத்து வடிகட்டி கலக்கலாம். ஜீரணத்திற்கு நல்லது.


10. வெறும் எலுமிச்சை மட்டும் ஜூஸ் செய்து வைத்துக் கொண்டால் தண்ணீர் சேர்த்துக் குடிக்கும் பொழுது ஒரு சிட்டிகை உப்புப் பொடி சேர்த்தால் சுவையும் கூடும். ஜலதோஷம் பிடிக்குமே என்ற பயமும் இல்லை.

11. அன்னாசிப் பழம் ஜூஸ் செய்வதாக இருந்தால் பழக்கூழை மஸ்லின் துணியில் வடிகட்டவும். அப்பொழுதுதான் பழத்தில் உள்ள முள்ளைச் சுத்தமாக நீக்க முடியும். பின் அந்தச் சாறை தெளியவைத்து அடியில் சுண்ணாம்பு போல் தங்கும் கசடையும் நீக்க வேண்டும்.

12. நன்றாக அலம்பிய பாட்டில்களை வெயிலில் காயவைத்து சூடு இல்லாமல் குளிர்ந்த பின் ஜூஸை விட வேண்டும். காற்று புகாத சீல் போட்டது போன்ற மூடிகள் கிடைக்கின்றன. அவற்றை உபயோகித்து மூடிவைக்கலாம்.

13. ஆப்பிள், மாம்பழம் போன்ற சிறிது மாவு அல்லது நார்ச்சத்து உள்ள பழங்களின் கான்சன்ட்ரேட் செய்து வைத்துக் கொண்டால் தண்ணீர் சேர்த்தும் குடிக்கலாம். சிறிது குளிர்ந்த





பாலும் சர்க்கரையும் சேர்த்து மிக்ஸியில் அடித்து மில்க் ஷேக் செய்தும் கொடுக்கலாம் மாறுதலாக இருக்கும்.

14. அன்னாசிப் பழத்தில் பால் சேர்க்கக் கூடாது. பால் திரிந்து விடும்.

15. ஜாம் செய்வதற்கு வாழை, பப்பாளி, கொய்யா, பெங்களூர் தக்காளி போன்ற சதைப்பற்றுள்ள பழங்களை உபயோகிக்கலாம்.

16. ஜாம் பிரிஸர்வேட்டிவ் போடாவிட்டாலும் தண்ணீர்ப் பசை அதிகம் இல்லாததால் ஃப்ரிட்ஜில் வைத்தாலே கெட்டுப் போகாமல் இருக்கும்.

17. ஜெல்லி, ஜாம் செய்யும் பொழுது சேர்க்கும் சர்க்கரையை இரண்டு பாகங்களாகப் பிரித்துக் கொண்டு முதலில் ஒரு பாதியை அடுப்பில் வைத்து லேசாக கம்பிப் பதம் வரும் சமயம் இன்னொரு பாதியைச் சேர்த்துக் கிளறி பாகு வைத்தால் ஜாம் கடையில் வாங்குவது போல கண்ணாடி போலும் தளதளவென்ற பதத்தில் வரும்.

18. அல்லது ஜாமை கிளறி இறக்கியவுடன் சில துளிகள் எலுமிச்சம் பழச்சாறு சேர்த்தாலும் கண்ணாடி போன்ற ஜாம் கிடைக்கும்.

19. ஸ்டிரலைஸ் செய்த ஜாம் பாட்டில்களில் கழுத்தளவு ஜாமை விட்டு மேலே சிறிது மெழுகை லேசாக உருகவைத்துப் பரவலாக ஊற்றி விடவும். இது ஜாமில் ஒட்டாது. அது லேசாகக் கட்டியாகும் போது இன்னும் சிறிது மெழுகை ஊற்றி விட்டால் காற்றுப் புகாமல் வெகு நாட்களுக்கு ஜாம் கெடாமல் இருக்கும்.

- சுகன்யா ஜானகிராமன்

விடியோகான் மட்டுமே உங்களுக்கு அளிக்கிறது

ஜெட்மாட்டிக் அனுகூலம்

விற்பனை துறையில், ஒரு நல்ல, ஒற்றைக் கதவுள்ள ரெஃப்ரிஜெரேட்டரை நாடுபவர்கள் விரைவில் ஒரு அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்வார்கள். அநேக ரெஃப்ரிஜெரேட்டர்கள் சிறப்பம்சங்களை மட்டுமே அளிக்கின்ற வேளையில், விடியோகான் ஜெட்மாட்டிக் உண்மையிலேயே ஒரு தனித்த மேலாண்மையைப் பிரதிபலிக்கிறது.



ஜெட்மாட்டிக் டீஃப்ராஸ்டிங் : ஒரு பட்டனை அழுத்தினால் போதும். ரெஃப்ரிஜெரேட்டர் தானாகவே மற்றவைகளைக் கவனித்துக் கொள்கிறது. ஃப்ரீஸருக்கும் சில்லர் கம்பார்ட்மென்டுக்கும் இடையிலுள்ள ஒரு சாய்வான தட்டு, உறைநிலை மாறிய பழைய தண்ணீரை வெளியிலுள்ள இன்னொரு தட்டுக்கு அனுப்புகிறது. அங்கிருந்து அது முற்றிலும் ஆவியாகி விடுகிறது. உங்கள் ரெஃப்ரிஜெரேட்டர் டிஃப்ராஸ்ட் ஆனதும், அது தானாகவே மீண்டும் வேலையைத் தொடங்குகிறது.

எக்ஸ்ட்ரா லார்ஜ் ஃப்ரீஸர்: ஃப்ரீஸர் கம்பார்ட்மென்டின் சுவர்கள், ரெஃப்ரிஜெரேட்டரின் சுவர்களோடு வரி இறைக்கப்பட்டு இணைக்கப்படுவதால், வழக்கமான ஃப்ரீஸர்களைவிட 20% கூடுதல் சேமிப்பு இடவசதியைக் கொடுக்கிறது. இதில் அதிநவீனமான, எரிபொருளை மிச்சப்படுத்தும் ரோல் பான்ட் தொழில்நுட்பம் இருப்பதால், ஒரே சீராக குளிர்ச்சி அடைந்து, வைக்கப்படும் உணவு பண்டங்கள் நீண்ட நேரம், புத்தம் புதிதாக உள்ளன.



புள் ட்ரே சில்லர் கம்பார்ட்மென்ட் : ஒரு நூதனமான இரட்டை ட்ரே அமைப்பு கொண்ட, ஊடுருவிப் பார்க்கக் கூடிய சில்லர், சீக்கிரம் கெட்டுப் போகக் கூடிய பொருட்களை, உயர்ந்த புத்தம் புது நிலையில் நீண்ட நேரம் வைக்க உறுதி அளிக்கிறது.

கவர்ச்சியான தோற்றம், சுத்தமான பின்புறம் : உங்கள் ரெஃப்ரிஜெரேட்டர் உலர்ந்தும், துருப்பிடிக்காமலும் இருக்க, அசிங்கமான கன்டென்ஸர் காயில்களுக்குப் பதிலாக, வெளிக்குத் தெரியாத முலியன் ட்ரையர் பைப்கள் உள்ளன. இதன் காரணமாக ரெஃப்ரிஜெரேட்டரின் பின்புறம் சுத்தமாக இருப்பதுடன், சுவருடன் நெருக்கமாக சேர்த்து வைக்க முடியும். கைப்பிடி-வார்ப்பட்ட அமைப்புடன், தேர்ந்தெடுக்க வசதியாக மூன்று நிறங்களில் கிடைப்பது ஜெட்மாட்டிக் பெற்றுள்ள இன்னும் கூடுதல் பெருமை.

ஜப்பானிய தொழில்நுட்பம் : ஜேஷனல் ரெஃப்ரிஜெரேட்டர் தயாரிப்பாளர்களான, மாட்ஸுஷிட்டா ரெஃப்ரிஜெரேஷன் கம்பெனி, ஜப்பான், அவர்களின் தொழில் நுட்ப வடிவமைப்பு மற்றும் வரைவு கூட்டுறவுடன் ஜெட்மாட்டிக் தயாரிக்கப்படுகிறது.

எரிபொருள் மிச்சப்படுத்தும் கம்ப்ரெஸர் : ஜெட்மாட்டிக் கின் இதயப் பகுதி போன்ற, இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் மிச்சப்படுத்தும் கம்ப்ரெஸர் உள்ளது. இது இந்திய சூழ்நிலைகளுக்கு உகந்தவாறு தயாரானது. இதுவும் தவிர, இதிலுள்ளது மேம்பட்ட பஃப் இன்சுலேஷன், சீல் செய்யப் பட்ட சிஸ்டம்களுக்கு 5 வருட உத்தரவாதம் மற்றும் ஒரு தொழில் நுட்ப ஜாம்பவானிடமிருந்து கிடைக்கும் அனைத்து விற்பனைக்குப் பிந்திய பணிச் சேவை பராமரிப்புகள். ஜெட்மாட்டிக் கொண்டுள்ள அனுகூலத்தின் பன்முகப் பயன் அம்சங்கள், இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். தாமதம் ஏன் ? விரைந்து சென்று, உங்கள் அருகமைந்த விற்பனையாளரிடமிருந்து, இன்றே வாங்கி வாருங்கள் ஒரு புதிய விடியோகான் ஜெட்மாட்டிக் !


JETMATIC

VIDEOCON






ஜெட்மாட்டிக் டீஃப்ராஸ்டிங்



எக்ஸ்ட்ரா லார்ஜ் ஃப்ரீஸர்



புள் ட்ரே டிரான்ஸ்பேரன்ட் சில்லர் கம்பார்ட்மென்ட்




சுத்தமான பின்புறம்



ஜப்பானிய தொழில்நுட்பம்



ஆட்டோ எவாப்ரேட்



எரிபொருள் மிச்சப் படுத்தும் கம்ப்ரெஸர்.

WE BRING QUALITY VIDEOCON TO YOUR HOME

விடியோகான்

அனைத்துக்கும் முன்னோடி விடியோகான் உங்களோடு



Dr.M.சபாபதி

புற்றுநோய், ஆஸ்த்மா, சிறுநீரகக் கோளாறு, சர்க்கரை வியாதி போன்றவைகளுக்கு சிறந்தது தெய்வீக மூலிகை மருத்துவமே!



Dr.C.K.மாணிக்கவாசகம்

ஆஸ்த்மா எவ்வாறு ஏற்படுகிறது? நம் உடலிலுள்ள சிறுநீரகங்கள் இரத்தத்திலுள்ள கழிவு நீரைப் பிரித்து வெளியேற்றுகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததேயாகும். சிலருக்குச் சில நேரங்களில் சிறுநீரகங்களில் வடிகட்டும் பகுதியில் உப்புப் படிவங்களால் ஏற்படும் குளிர்ச்சித் தன்மையால் சுருக்கம் ஏற்படுவதினாலோ, கழிவு நீர் முறைப்படி முழுவதும் இரத்தத்திலிருந்து பிரிக்கப்பட முடியாமல் இரத்தத்திலேயே ஓரளவு கலந்து இருந்து விடுகிறது. அடுத்தாற்போல் இரத்தம் மார்புப் பகுதியில் உள்ள நுரையீரலில் சுரக்கும் நீருடன் கலந்து சுத்தப்படுத்தப்படுகிறது.

சுத்தப்படுத்தும் போது பிரிக்கப்படும் கழிவு நீர், தும்மல் மூலம் மூக்கில் நீராக வெளியேறுகின்றது. இந்நீர் இறுகி மூக்கடைப்பு ஏற்படுகிறது. மூக்குச் சிந்தும் போது இது மூக்குச்சளியாக வெளியேறுகின்றது. இறுகிய கழிவு நீரே இருமலின்போது கோழையாக வெளியாகின்றது. இம்முறைகளில் வெளியேற்றப்படாத எஞ்சிய கழிவு நீரே நுரையீரல் பகுதியில் படிந்துவிடும் கபம் எனப்படுவதாகும். இதன் காரணமாகவே தொடர்ந்து ஜலதோஷம் மூச்சுத் திணறல், மூக்கடைப்பு மூக்கில் நீர் வடிதல், தும்மல் இருமல், கபம், பீனிசம் (Sinus) மூச்சு வாங்குதல் போன்றவை ஏற்படுகின்றன.

உடலில் தூய்மையான இரத்த உற்பத்தியும் சீரான இரத்த ஓட்டமும் இருந்தால் தான் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் பழுதடையாமல் நல்ல நிலைமையில் இருக்கும். தெய்வீக மூலிகைகளான வில்வம், வேப்பிலை, அத்தி, துளசி, மாவிலை, வெற்றிலை போன்றவைகளுடன் அற்புத மருத்துவக் குணம் கொண்ட தும்பை, கீழாநெல்லி, ஆடாதோடை, குப்பைமேனி போன்றவைகளைப் பொடி செய்து தக்க அளவில் கலந்து உட்கொண்டால் உடலில் தூய்மையான இரத்த உற்பத்தியும் சீரான தடையற்ற இரத்த ஓட்டமும் ஏற்படுவது உறுதி. மேலும் ஆலோசனைக்கு:

சென்னை முகவரி:

Dr.C.K. மாணிக்கவாசகம்,
Dr.C.K.M. சபாபதி,
115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை
(ரெடிமணி ஷாப் எதிரில் உள்ள சந்தில்)
Kellys, சென்னை - 600 010.
போன் : 6424285, 6427638

திருப்பத்தூர் முகவரி:
ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்
Dr.C.K.மாணிக்கவாசகம்
P.B. No: 30, (காலேஜ் எதிரில்)
திருப்பத்தூர் (N.A.A.) 635 601
போன் : 04179-20469, 22329.

வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மூலிகைப்பொடிப் பெற : 1996ம் வருட புதிய முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2ந் தேதி - வேலூர் (N.A.)	: பிற்பகல் 1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா, 16, ஆஃபீஸர்ஸ் லைன், ஃபோன் : 0416 / 23060.
3 & 19 ந்தேதி - சென்னை	: காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ஃபோன் : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி - கடலூர் (S.A.D.L)	: காலை 9 to 11 ஆர்காடு கட்லண்ட்ஸ் ஹோட்டல், ஃபோன் : 04142 / 20707.
4-ந் தேதி - விழுப்புரம்	: பிற்பகல் 2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ஃபோன் : 04146 / 22962.
4-ந் தேதி - திருவண்ணாமலை	: மாலை 5 to 6 ராதா லாட்ஜ் (பஸ் நிலையம் எதிரில்) ஃபோன்: 04175 / 22536.
9-ந் தேதி - பெங்களூர்	: காலை 11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பே கவுடா ரோட். ✆ : 2872321.
9-ந் தேதி - ஓசூர்	: மாலை 3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ஃபோன் : 04344 / 22899.
9-ந் தேதி - கிருஷ்ணகிரி	: மாலை 5 to 6 அமராவதி லாட்ஜ், ஃபோன் : 04343 / 22120.
12-ந் தேதி - சேலம்	: காலை 11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ஃபோன் : 0427 / 449333.
12-ந் தேதி - ஈரோடு	: மாலை 4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில், ஃபோன் : 0424 / 70761.
13-ந் தேதி - கோயம்புத்தூர்	: காலை 9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ஃபோன் : 0422 / 210265, 216691.
14-ந் தேதி - மதுரை	: காலை 9 to 11 ஹோட்டல் கிரான்ட்ஸ் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு. ✆ 0452 / 543940.
14-ந் தேதி - தஞ்சாவூர்	: மாலை 5 to 6 அசோகா லாட்ஜ், ஃபோன் : 04362 / 20021.
15-ந் தேதி - திருச்சி	: காலை 9 to 11 ஹோட்டல் ஆனந்த். (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்), ஃபோன்: 0431 / 460545.
15-ந் தேதி - நாமக்கல்	: பிற்பகல் 2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ஃபோன் : 04286 / 21336.
18-ந் தேதி - ஆம்பூர்	: காலை 10 to 11 சற்பகவி லாட்ஜ், ஃபோன்: 04176 / 43318.
18-ந் தேதி - காஞ்சிபுரம்	: மாலை 4 to 5 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ஃபோன் : 04112 / 22519.
19-ந் தேதி - சென்னை	: காலை 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ஃபோன் : 044 / 6424285, 6427638.
22-ந் தேதி - தர்மபுரி	: காலை 9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ஃபோன்: 04342 / 60226.
22-ந் தேதி - திருப்பூர்	: பிற்பகல் 2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ஃபோன் : 0421 / 20418.
22-ந் தேதி - உடுமலைப்பேட்டை	: மாலை 6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ஃபோன்: 04252 / 24353.
23-ந் தேதி - திண்டுக்கல்	: காலை 9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ஃபோன்: 0451 / 31206, 27017.
23-ந் தேதி - தூத்துக்குடி	: மாலை 5 to 6 ஹோட்டல் ஆஸ்வின், தேவர் புரம் ரோடு, ஃபோன் : 0461 / 22780.
24-ந் தேதி - திருநெல்வேலி	: காலை 8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தாபதி, மதுரை ரோடு, ஃபோன் : 0462 / 23312.
24-ந் தேதி - நாகர்கோவில்	: பிற்பகல் 2 to 3 ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம், ஃபோன்: 04652 / 25689.
25-ந் தேதி - விருதுநகர்	: காலை 9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ஃபோன் : 04562 / 45537.
25-ந் தேதி - கரூர்	: பிற்பகல், 2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ஃபோன் : 04324 / 22663, 23763.

உலகில் யாரும் யாருக்கும் போட்டி இல்லை

ஆண்கள் மட்டுமே 'அரண்மனை ஜோதிடர்' என்று அந்தக் காலம் முதல் தனிப்புகழ், பெயர் பெற்று வந்ததை மாற்றி, பெண்களாலும் ஜோதிட உலகில் சிறப்புப் பெற முடியும் என நிரூபித்து வருகிறவர்களில் ஒருவர் 'ஜோதிடச் சுடர் ஒளி' பத்திரிகையின் ஆசிரியர், 'ஜோதிட வாணி' டாக்டர் சி.எம். ஹனீபா ஆவார். பிரபல ஜோதிடர் என்கிற மாதிரி எல்லாம் இல்லாமல் அமைதியாக... அடக்கமாக சிரித்தபடி இருந்த அவரைப் பார்த்த போது ஆச்சர்யமாக இருந்தது.

"ஒரு பெண்ணாக இருந்து கொண்டு பலரையும் சந்தித்து பலன்களைக் கூறும் ஜோதிடத் துறையில் உங்களால் எப்படி பிரகாசிக்க முடிந்தது?"

"மாறி வரும் பெண்கள் உலகில் இப்படி கேள்வி இனி கேட்க முடியாது. காரணம் அந்த அளவு எல்லாத் துறையிலும் பெண்கள் சாதனை படைத்து வருகிறார்கள். ஜோதிடம் ஒரு தெய்வீகக் கலை... விஞ்ஞானக் கலை.. வாழ்வியல் கலை. கலையைக் கற்றுக் கொள்வதில் ஆண்... பெண் பேதம் கிடையாது. ஜாதிமத பேதமின்றி யார் வேண்டுமானாலும் எந்தக் கலையையும் கற்றுப் பிரகாசிக்கலாம்.

நான் மாயவரத்தில் பள்ளிக்கூடத்தில் படித்த போது 'சமஸ்கிருதம்' கற்றவள். என் தந்தை கைரேகை... ஜோதிடம் அறிந்தவர். அவர் திபேத்தில் இருந்து கொண்டு வந்த பழைய சுவடிகள்... ஜோதிட சாஸ்திர புத்தகங்களைப் படித்து எனக்கும் ஜோதிடம் மீது மிகுந்த ஆர்வம் உண்டானது. ஜோதிட நூல்களை நிறைய வாங்கிப் படித்து ஜோதிடம் கற்றேன். கடந்த பத்து வருடங்களாக பலருக்கும் ஜோதிடம் பார்த்து பலன்களை கூறி அவை அப்படியே பலித்தும் வந்தாலும் இன்றும் பல நூல்களைப் படித்து ஜோதிட ஆராய்ச்சியைத் தொடர்ந்து வருகிறேன்."

"ஆண்கள் நிறைந்த இந்தத் துறையில் உங்களால் அவர்களை எதிர்த்துப் போட்டி யிட முடிகிறதா?"

"உலகில் யாருக்கும் யாரும் போட்டி இல்லை. அவரவர் விதிப்படி... கிரக நிலைப் படி, தெய்வ அனுக்கிரகம், அதிர்ஷ்டம், வாக்குப் பலிதப்படி சிறந்த ஜோதிடராக இருக்க முடியும். மற்றவரால் ஒருவர் நிலை மாறி விடாது. எல்லாம் விதிப்படியே நடக்கும். எனது 1103, 74-வதுதெரு, 12 வது செக்டார், கே. கே. நகர், சென்னை - 600 078 முகவரிக்கு ஜோதிடப் பலன்கள் கேட்டு எழுதுபவர்களுக்குப் பதில் அனுப்புகிறேன். எனக்கு 4834737 நம்பருக்கு போன் செய்து முன்பதிவு செய்து ஜோதிடம் பார்க்க வருபவர்களுக்கு பலன்கள் சொல்கிறேன். நான் வெளியூர்கள் செல்வதில்லை. ஜோதிட 'கேம்ப்' போடுவது இல்லை. எனவே எனக்கு நீங்கள் சொன்ன பிரச்னைகள் இல்லை."



"பத்திரிகை நடத்துவது என்பது கஷ்டமான சோதனையான விஷயமாக இருந்தும் எப்படி ஜோதிட பத்திரிகை நடத்தி வருகிறீர்கள்?"

"ஜோதிட சாஸ்திரம் பற்றி நான் அறிந்ததை புத்தக வடிவில் கொண்டு வர

விரும்பி ஜோதிட முத்துக்கள், ஜோதிடமும் மருத்துவமும், திருமண யோகம் போன்ற இருபத்தியோரு புத்தகங்களை வெளி யிட்டேன். எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வரும் எனது கணவர் ஸ்ரீவிக்ரம் அவர் களும் ஜோதிடம் அறிந்தவர். என் கணித ஜோதிட நிபுணர். என் கணவருடன் இணைந்து அதிர்ஷ்ட எண்களும், அதிர்ஷ்ட ரத்தினங்களும் போன்ற ஐந்து புத்தகங்களை வெளியிட்டோம். சிறு வயது முதலே பத்திரி கைகள் மீது ஆர்வம் அதிகம் இருந்ததால் ஜோதிடக் கலையை மக்கள் தெளிவாக அறிய 1993 ஜூன் மாதம் 'ஜோதிடச் சுடர் ஒளி' பத்திரிகையை துவங்கி வெற்றிகரமான ஜோதிட மாத இதழாக நடத்தி வருகிறோம். நல்ல வரவேற்பு இருக்கிறது.

பத்திரிகை நடத்துவது கஷ்டமான விஷயம்தான். ஆனால் ஆராய்ச்சிபூர்வமாக ஜோதிடக் கட்டுரைகளை பிரசுரித்தும், வாசகர்களின் ஜோதிட சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில் அளித்தும், மாதப் பலன்கள், அதிர்ஷ்ட நாட்கள் இவைகளை வேலைக்குச் செல்லும் ஆண்கள், பெண்கள், வியாபாரிகள், மாணவ மாணவிகள், அரசியல்வாதிகள் இவர்களுக்குத் தனித் தனியே பிரசுரித்தும், தோஷங்களுக்குப் பரிகாரங்களைக் கூறியும், இன்னும் பல்வேறு அம்சங்களின் மூலம் வாசகர்களுக்கு முழுத் திருப்தியை தருகிறோம். எங்கள் 'ஜோதிடச் சுடர் ஒளி' பத்திரிகையை நடத்த தினமும் நானும் என் கணவரும் கடுமையாக உழைக் கிறோம். எங்கள் உழைப்பிற்கு பலனும் இருக் கிறது."

"ஜோதிடம் பார்க்க வருபவர்களைக் கவர நல்ல பலன்களை மட்டும் சொல்வீர் களா?"

"கிடையாது. உள்ளதை உள்ளபடி சொல்லி விடுவேன். ஜோதிடம் என்பது சோதனை காலத்தைக் கூறி எச்சரிக்கையாக நடக்க உதவும் வழிகாட்டி. எனவே நல்லது... கெட்டது இரண்டையும் கூறி விடுவேன். இதனால் தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுவதில் இருந்தும், வெளி நாட்டில் இருந்தும் என்னிடம் ஜோதிடம் பார்க்க வருகிறார்கள்.

ஜோதிடவாணி ஹனிபாவின் ஜோதிடப் பணி வெற்றிகரமாக தொடர வாழ்த்தி விடைபெற்றோம்.

பிரசன்னா

சர்க்கரை வியாதியிலிருந்து நான் மீண்டது எப்படி?


நலமடைந்தவரின் கடிதமும், விலாசமும்: திரு.S. அப்பாசாமி, சின்டிகேட் ரெசிடென்ஸி,
3, Dr. நாயர் ரோடு, தி.நகர், சென்னை-17. போன்: 4340087/ 4344610

அன்புள்ள J.V.G. சேகர், Dr. மதுரம் சேகர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி! நான் தங்களின் மருத்துவத்தைப் பற்றி அனுபவத்தில் கண்ட அளவிற்ற கருத்தினை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இக்கடிதம் தங்களின் கடினமான உழைப்பினை மேலும் ஊக்கப்படுத்துவதற்கு ஒரு பெரிய கருவியாக அமைய வேண்டும். சுமார் 30 வருடமாக என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த சர்க்கரை நோய், B.P. மிகவும் எனக்கு 2 முறை ஹார்ட் அட்டாக் வந்துள்ளது. நான் சென்னையில் பிரபலமான அலோபதி மருத்துவமனைகளில் மருத்துவம் பார்த்தும், பல இலட்சங்கள் செலவு செய்தும் எனது உடல்நிலை நாளுக்கு நாள் நோய் அதிகரித்துக் கொண்டே கட்டுப்பாடில்லாமல் இருந்தது. நீரழிவு நோய்க்கு பல வருடமாக இன்சுலின் ஊசி காலை, மாலை 40 யூனிட் போட்டும் கட்டுப்படாமல் மேலும் கால்களில் உணர்ச்சியற்ற நிலை, மனச்சோர்வு, நரம்புத் தளர்ச்சி, வேலை செய்ய முடியாமை, அதிக களைப்பு, தூக்கமின்மை போன்ற இடிபாடுகளுடன் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

எனது நண்பர் அம்பாலயா பில்டிங் நிறுவனர் (வழக்கறிஞர்) திரு.K. பிரபாகரன் அவர்கள் என்னை பார்த்தபொழுதெல்லாம் தங்களின் காந்திஜி இயற்கை நல்வாழ்வு நிலையத்திற்கு வந்து சிகிச்சை எடுக்குமாறு வற்புறுத்திக் கொண்டே இருந்தார். நம்பிக்கையில்லாமல் நானும் அவருடன் தங்கள் நிலையத்திற்கு வந்து ஆலோசனை பெற்றும், நம்பிக்கையில்லாமல் சென்று விட்டேன். 10 நாட்களிலேயே நான் சுய நினைவிழந்து சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு குணமாகாமல் கஷ்டப்பட்டேன். அப்போதும் நண்பர் திரு.K. பிரபாகரன் அவர்கள் என்னை வற்புறுத்தி தங்கள் நிலையத்திற்கு அழைத்து வந்தார்.

என் மனைவிக்கும், எனக்கும் அன்பான ஆறுதலுடன் நல்ல நம்பிக்கை அளித்து உணவு முறைகளை அறிவுறுத்தி மேலும் உயிருள்ள இயற்கை மூலிகை மருந்துகளை கொடுத்தீர்கள். அதோடு 15 நாட்களுக்கு அக்குபங்சர் சிகிச்சை செய்தீர்கள். முதல் வாரத்திலேயே தங்களின் மருத்துவத்தால் உணர்ச்சியே இல்லாத என் கால்களில் நல்ல உணர்ச்சியை கண்டேன். மேலும் கொடுமைப்படுத்திய சர்க்கரை வியாதி 28-ம் நாள் தங்களின் மருத்துவத்தால் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இன்சுலின் ஊசி தினமும் 2 முறை போட்டும் கட்டுப்படாமல் ஒரு நாள் கூட நார்மல் ரிசல்ட்டை பார்க்காத நான் தங்களிடம் நலமடைந்தேன். தினமும் 500 அடிகள் கூட நடக்க முடியாமல் இருந்த நான் 7 கிலோ மீட்டர் வரை நடக்க முடிகிறது. மேலும் எனது உடல் எடை 95 கிலோவிலிருந்து 74 கிலோவாக குறைந்து நலமுடன் இருக்கிறேன். எனது மனைவிக்கும் சர்க்கரையின் அளவு தங்களால் கட்டுப்பாட்டுடன் இருந்து வருகிறது.

இனி உயிர் வாழ்வோமா? வாழ மாட்டோம் என்று எனது வாழ்க்கையில் நம்பிக்கை இழந்த நிலையில் என்னை பூரண உடல் நலத்துடன் சர்க்கரையின் அளவு தொடர்ந்து இரத்தத்திலும், சிறுநீரிலும் கட்டுப்பாட்டுடன் இருப்பதற்கு காரணம் தங்களின் ஈடு இணையற்ற மருத்துவ தொண்டால்தான் என்பதை இவ்வுலக மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் பணி மேலும் வளர்ந்து பலரும் நலம் பெற வேண்டுமென எண்ணி தங்களுக்கு இறைவன் அருள் புரிய வேண்டுமென வாழ்த்துகிறேன். அன்புடன், S.அப்பாசாமி,



Dr.J.V.G. SEKAR, Ph.D. (Medicine)
GANDHIJI NATURE CURE CENTRE
23-D, North Boag Road, (Mandira Apartments)
T.Nagar, MADRAS-600 017.
Ph: 8257059, Resi: 8257462 Fax: 091-044-8255630

NATURE CURE
GINRC-INDIA

மாற்றப்பட்டுள்ள புதிய முகாம் ஒவ்வொரு ஆங்கில மாதமும்

1-ந் தேதியும் 18-ந் தேதியும் சென்னை: காலை 10 மணி முதல் 1 மணி வரை மேலே உள்ள முகவரியில் ☎ 044/8257059

2-ந் தேதி காஞ்சிபுரம்: காலை 11 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் ஜெயபாலா இன்டர்நேஷனல் (ஹோட்டல் சரவண பவன்), 504, காந்தி ரோடு ☎ 04112/242348

2-ந் தேதி பாண்டிச்சேரி: மாலை 5 மணி முதல் 7 மணி வரை, ஹோட்டல் ராம் இன்டர்நேஷனல், ராமன் தியேட்டர் அருகில். ☎ 0413/37230 (10 lines)

3-ந் தேதி கடலூர்: (S.A.Dt.) காலை 8 மணி முதல் 11 மணி வரை, ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல் ☎ 04142/20707, 20717

3-ந் தேதி சிதம்பரம்: பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை, M.A.T. லாட்ஜ், 24-27, S.P. கோவில் தெரு, ☎ 04144/22457

3-ந் தேதி மயிலாடுதுறை: மாலை 5 மணி முதல் 6 மணி வரை, செல்வா லாட்ஜ், 15-A, கச்சேரி ரோடு (B.D.O. ஆபீஸ் எதிரில்) ☎ 04364/24329

4-ந் தேதி கும்பகோணம்: காலை 8 மணி முதல் 10 மணி வரை, ஹோட்டல் ஆதித்யா, 11, தஞ்சாவூர் மெயின் ரோடு, ☎ 0435/21794,21795,23262

4-ந் தேதி மன்னார்குடி: பிற்பகல் 12 முதல் 1 மணி வரை, P.M.M.லாட்ஜ், 57, மேல ராஜ வீதி. ☎ 04367/22477

4-ந் தேதி தஞ்சாவூர்: மாலை 4 மணி முதல் 6 மணி வரை, அசோகா லாட்ஜ், சாந்தி, கமலா தியேட்டர் ரோடு, ☎ 04362/20021

5-ந் தேதி திருச்சி: காலை 8 மணி முதல் 11 மணி வரை ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்) ☎ 0431/460545

5-ந் தேதி விழுப்புரம்: பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை ஸ்ரீ ராமகிருஷ்ணா லாட்ஜ், கே.கே.ரோடு, முருகன் தியேட்டர் அருகில் ☎ 04146/23289

8-ந் தேதி சேலம்: காலை 11 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் செல்வம் புதிய பஸ் நிலையம் அருகில், ☎0427/449331, 449333

8-ந் தேதி ஈரோடு: மாலை 4 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் அருகில் ☎ 0424/70761

9-ந் தேதி கோயம்புத்தூர்: காலை 9 மணி முதல் 11 மணி வரை சேரன் பேலஸ் சாந்தி தியேட்டர் பின்புறம் ☎ 0422/210265

10-ந் தேதி மதுரை: காலை 8 மணி முதல் 11 மணி வரை ஹோட்டல் கிரான்ட் சென்ட்ரல் மேல பெருமாள் மேஸ்திரி தெரு, (தங்கம் தியேட்டர் அருகில்) ☎ 0452/543941

10-ந் தேதி கரூர்: மாலை 5 மணி முதல் 6 மணி வரை, ஹோட்டல் ஆர்த்தி, (திண்ணப்பா தியேட்டர் அருகில்) ☎ 04324/20122

11-ந் தேதி நாமக்கல்: காலை 9 மணி முதல் 10.30 மணி வரை ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, திருச்சி ரோடு, ☎ 0486/20433, 21336

11-ந் தேதி தர்மபுரி: பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை ஹோட்டல் ராமகஸ், பைபாஸ் ரோடு ☎ 04342/ 60141

14-ந் தேதி பெங்களூர்: காலை 9 மணி முதல் 1 மணி வரை ஹோட்டல் பிரான்டே, கெம்ப கவுடா ரோடு, (கல்பனா தியேட்டர் அருகில்) ☎ 080/287232 Resi: 2281381

15-ந் தேதி திருப்பத்தூர்: (N.A.A.Dt.) மாலை 4 மணி முதல் 5 மணி வரை, 102/2, இரயில்வே ஸ்டேஷன் ரோடு (சப்-கோர்ட் எதிரில்) ☎ 04179/ 22144, 20882, 20699

16-ந் தேதி ஆம்பூர்: காலை 10 மணி முதல் 11 மணி வரை சம்பங்கி லாட்ஜ் ☎ 04176/ 43311

16-ந் தேதி வேலூர்: (N.A.A.Dt.) பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை ஹோட்டல் கன்னகா (ஹோட்டல் கங்கா) 16, ஆபீசர் லைன், ☎ -416/23060

18-ந் தேதி சென்னை: காலை 10 மணி முதல் 1 மணி வரை மேலே உள்ள முகவரியில் ☎ 044/8257059

சென்ற இதழில் திரு. பாஸ்குமாரன் எழுதியது போல இன்றைய அவசர யுகத்தில் வீட்டில் பட்சணம் செய்வது குறைந்து போனது மட்டுமில்லை. சமைப்பதும் கூட குறைந்து வருகிறது. சிலவற்றை மாறிவரும் ட்ரெண்ட் என ஏற்கலாம். ஆனால் சில அடிப்படை விஷயங்கள் மாறாமல் இருந்தால் நன்றாக இருக்குமே என தோன்றுகிறது இல்லையா?

சமையல் செய்வதைக் கொஞ்சம் கேலியாகவே பார்க்கின்ற இளைய தலைமுறை தோன்றி வருகிறார்கள். அது எத்தனை உன்னதமானது என்று இங்கே கூறுகிறார் சமை யல் கலையில் அனுபவம் பெற்ற திருமதி. சௌகார் ஜானகி.

'இரு கோடுகளில் எது பெரியது?'

உணவு, ஒரு மனிதனை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகிறது. அதே உணவு, விஷமாக மாறி அந்த மனிதனின் உயிருக்கே உலையாகவும் மாறு கிறது. இதைத்தான் உபநிஷத் இப்படிச் சொல் கிறது – 'உணவும் நானே, உண்பவனும் நானே உண்பவனை உண்பவனும் நானே.'

'ரசம் புளிப்போ, உப்போ தூக்கலாகவோ, இல்லை வெறும் தண்ணீர் மாதிரியாகவோ இருந்தால் அது ரசம் இல்லை – விரசம். அதுவே கொத்துமல்லி மணக்க, தக்காளி மிதக்க, பருப்பும் அளவோடு இருந்தால் அது – சமரசம்' இப்படிச் சொன்னவர் பெரிய சங்கீத மேதையான அரியக்குடி ஸ்ரீராமானுஜ அய்யங் கார்.

அதே போல் எம்.எல்.வி. – சமையல் செய்ய றதுலேயும் சக்ரவர்த்தினியா இருந்தாங்க. பச் சடி வகையறாக்கள் மாத்திரம் அறுபது விதங் களுக்கும் மேலேயே செய்வாங்கன்னு ஸ்ரீவித்யா சொல்லக் கேட்டிருக்கிறேன். எம்.ஜி.ஆர்., சிவாஜி சார் எல்லாருமே நல்ல சாப்பாட்டு பிரியர்கள் என்று கண்கூடாக பார்த்திருக்கி றோம். சௌகார் சில

சமயம் அவுட்டோர் ஷூட்டிங் போது – அந்த நேரத்தில்தான் ஒரு பெரிய நடிகை என்கிற போர்வையை உதறி விட்டு, அந்த யூனிட்டில உள்ள அத்தனை பேருக்கும் வாய்க்கு ருசியா சமைத்துப் போடும் அம்மாவாக அவர் இருந்ததாகச் சொல்வார் கள்.

"எனது நடிப்புத் துறை ஒரு கோடு. எனது சமையல் கலை இன்னொரு கோடு. மொத்தத்தில் இந்த இரு கோடுகளில் எது ஒன்றுக் கொன்று பெரியது என்று சொல்ல முடியாத அளவுக்கு என்னோடு அவை இரண் டுமே ஒன்றுக்கொன்று இணையாகவேதான் இது வரை ஓடிக் கொண்டு வந் திருக்கின்றது. நேரமே இல்லாமல் எத்தனை பிஸியாக நான் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருந்த



போதிலும் கூட – சமைப்பதை நான் ஒருநாள் கூட நிறுத்தியிருந்ததில்லை.

ஒவ்வொரு புதுவித உணவு தயாரிக்கும்போதெல்லாம் புதிதாய் ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி, அதில் நடிப்பதின் மூலம் ஏற்படும் அதே பெருமிதத்தை நான் உணர்கிறேன். இந்த நிமிஷம் வரையில் அப்படியே...

என் குழந்தைகள், உறவினர், நண்பர்கள் வீட்டார் இப்படி அனைத்தையும் இழுத்துப் போட்டு, அவர்களுக்கு என் கையால் சமைத்து, பரிமாறியதில் சளைத்ததில்லை நான். இதில் கிடைக்கிற இன்பமே அலாதி.

ஒரு தேசத்தினுடைய நாகரீகம், பண்பாடு – போன்றவற்றோடு, அந்த தேசத்து மக்களின் பழக்க வழக்கங்கள் எப்படிப்பட்டவை என்பதை அந்தத் தேசத்து மக்கள் சாப்பிடும் உணவை வைத்து எடை போட முடியும். ஏன் ஒரு தேசத்தின் சரித்திரத்தையே கூட அந் நாட்டின் உணவு வகைகளை வைத்து நிர்ணயிக்க முடியும். இன்னும் பார்க்கப் போனால் – ஒவ்வொரு மாநிலத்துக்குத் தகுந்த மாதிரி, தேசத்துக்குத் தகுந்த மாதிரி உணவு மாறுபடுகிறது.

உண்மையிலேயே சமையல் கலையில் நிஜமான ஆர்வம் இருந்து, குறுகிய நேரத்தில் – அதே சமயம் வாய்க்கு ருசியாகவும், நல்ல உணவு வகைகளை சமைக்கணும்கிற விருப்பம் உள்ளவர்களுக்கு, எனக்கிருக்கிற இத்தனை வருஷ சமையல் அனுபவத்தை வைத்து நான் சொல்றேன் – தினசரி நாம் சமைக்கிற சமையலையே சின்னச் சின்ன மாற்றங்களோடு அதில் முழு ஈடுபாட்டுடன் செய்தால் கதாபாத்திரங்களில் நான் வாழ்ந்தது மாதிரி – இதுலேயும் நிச்சயம் வெற்றி காண முடியும்.

சமையல் அறை எந்தத் திசையில் இருக்கிறது என்று தெரியாதவர்களுக்கும், பரீட்சை எழுதி முடித்த கையோடு, கல்யாணத்தை செய்து, தேனிலவு முடிந்ததும் 'காஸ்' அடுப்பைக் கூட பற்றவைக்கத் தெரியாமல் விழிக்கும் கல்யாணப் பெண்களுக்கும் மட்டுமல்ல... பொழுதுபோகாமல் படித்த 'எனிட் பிளிட்டனை'யே மறுபடியும் படித்து, 'நான்ஸி ட்ரூ'வை கரைத்துக் குடித்து, வீடியோ பார்த்து, அலுத்துச் சலித்த பதினைந்து வயசு மாணவிகளுக்கும், பெண்டாட்டியை பிரசவத்துக்கு அனுப்பி விட்டு ஹோட்டல் சாப்பாட்டினால் வயிறு பாதிக்கப்பட்டு 'மெஸ்' சாப்பாட்டில் நாக்கு செத்து, அக்கா சாப்பிடக் கூப்பிட மாட்டாளா... அண்ணன் வீட்டுக்கு டிபனுக்குப் போகலாமா.. என்றெல்லாம் அலைபாயும் ஆண்களுக்கும் சேர்த்துத்தான் சொல்றேன் – சமையல், செம 'ஈஸிங்க!

'சமையல் கலை'ன்னு வர்ற சமயத்தில், அது சம்பந்தப்பட்ட சில விஷயங்களை நாம் கவனிச்சே ஆகணும்.



கொத்தமல்லி, ப. மிளகாய், உப்பு, புளி இவைகளை மைய அரைத்து, ப்ரெட் ஸ்லைஸில் ஒருபுறம் தடவி, நெய்விட்டு, டோஸ்ட் செய்யுங்கள். அடடா, மேலும் வேண்டுமெனக் கேட்கும் நாக்கு.

– ஆர். பார்வதி

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

சமையல் ருசிகரமா இருக்கணும்கிறதுக்காக, நிறைய எண்ணெய், நெய், டால்டாவையெல்லாம் கொட்டக் கூடாது.

பச்சைக் காய்கறிகளின் தன்மை கெடாமல் சமைக்கத் தெரியணும்.

நம் குடும்ப பட்ஜட்டுக்குத் தகுந்த மாதிரி, சமையல் சிக்கனமாகவும், அதே சமயத்தில் தேவையான போது ஓரிரண்டு அயிட்டங்களை சிறந்த முறையில் தயாரிக்கணும்.

ஒரு மாசத்துக்கு வாங்கி வைத்திருந்த பருப்பு, சர்க்கரை போன்றவற்றை ஒரே சமயத்தில் தீர்த்து விட்டு அப்புறம் முழிக்கக் கூடாது.

சமைத்த பண்டங்களை பரிமாற எடுத்துட்டு வர்ற சமயத்தில் – அழகான முறையில் அதை வெகு நேர்த்தியா சாப்பிட்டு மேஜையிலே 'டிஸ்ப்ளே' பண்ணணும்.

எந்த ஒரு பண்டத்தையும் கையால் எடுத்துப் பரிமாறக் கூடாது. ஒரே கரண்டியை எல்லாத்துக்கும் உபயோகிக்கவும் கூடாது.

காலையில் சமைத்ததை – திரும்பத் திரும்ப கொதிக்க வைப்பதோ – இல்லை ராத்திரிக்கு அல்லது மறுநாளைக்குன்னு எடுத்து வைத்து சாப்பிடவோ கூடாது.

ஒருவேளைக்கு மாத்திரம் போதுமான அளவுக்கு சமைத்தாலே – இந்த மீந்து போனதை என்ன செய்யறதுங்கிற பிரச்னை வராமல் இருக்கும்.


சமைக்கிற இடமோ, சமையல் மேடையோ, சண்டை போட்ட இடம் மாதிரி இருக்கக் கூடாது. சுத்தமாகவும் சமைத்த சுவடு தெரியாமலும் இருக்கணும்.

நாம் சமைத்ததை எப்படி அலங்காரமா, வகைப்படுத்தி பரிமாறுகிறோமோ – அதே போல், பரிமாறுகிற நாமும், வேர்வை வழியாமல், தலைமுடி பறக்காமல், சமைக்கிறப்போ கட்டிட்ட புடைவையோடு அப்படியே பரிமாறாமல் – முகத்தில் புன்னகை மாறாமல் பரிமாறணும்.

மற்ற விஷயங்களில் வைக்கும் கவனத்தில் ஒரு பத்து சதவிகிதம் இதில் வைத்தால் கூடப்

கட்டுரைப் போட்டி

சொல்லுங்கள் உங்கள் அனுபவத்தை வெல்லுங்கள் பரிசுப் புதையலை



1 பரிசு
ரூ.25,000 மதிப்புள்ள தங்க நகைகள் (ஒரு நபருக்கு)

2 பரிசு
ரூ.5,000 மதிப்புள்ள தங்க நகைகள் (5 நபர்களுக்கு)

3 பரிசு
ரூ.2,500 மதிப்புள்ள தங்க நகைகள் (10 நபர்களுக்கு)

100 ஆறுதல் பரிசுகள்
4 கிராம் மதிப்புள்ள வெள்ளி நாணயங்கள்

உறவுகள் வலுப்பெற வேண்டும் என்பதில் மிக்க நம்பிக்கை கொண்ட ராம் காஷ்யப் சிட்ஸ், ஆரோக்கியமான மாற்றத்தை ஊக்குவிக்கும் வகையிலே மருமகள் மெச்சும் மாமியார் மற்றும் மாமியார் மெச்சும் மருமகள் இருவரையுமே கௌரவித்து பரிசளிக்க விரும்புகிறது.

வாழ்வின் ஏதோ ஒரு இக்கட்டான/எதிர்பாராத தருணத்தில் உங்களது மாமியார் அல்லது மருமகள் சொன்ன முன்யோசனை கைகொடுத்து உதவியதை நினைவுகூற அரியதொரு வாய்ப்பு இது!

பாக்கியசாலியான மருமகளா நீங்கள்?

"என் மாமியாருக்கு இணை அவரே தான்!" என்ற தலைப்பில் மருமகளாகிய நீங்கள் உங்களது அனுபவங்களை எழுதியனுப்புங்கள்.

அதிர்ஷ்டசாலியான மாமியாரா நீங்கள்?

"எனது அருமை மருமகள்!" என்ற தலைப்பில் மாமியாராகிய நீங்கள் உங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

200 வார்த்தைகளுக்கு மிகாமல் படிக்கும் படியான அழகிய கையெழுத்தில் ஒரு வெள்ளைத்தாளில் உங்கள் அனுபவங்களை எழுதி கவரின் மேல் "என் மாமியாருக்கு இணை அவரேதான்!" அல்லது "எனது அருமை மருமகள்!" என்று குறிப்பிட்டு கீழே கண்டுள்ள எமது பதிவு அலுவலகத்திற்கு 10.3.1996 தேதிக்குள் வந்து சேருமாறு அனுப்புங்கள். உங்களது புகைப்படத்துடன் முழு விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள்.



வந்து சேர வேண்டிய கடைசி தேதி மங்கையர் மலர் வாசகர்களுக்கு மட்டும் 10.3.1996 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

Ram Kaashyap
Chits Private Limited

ஈடில்லா சேமிப்பு; இணையற்ற தேர்வு

பதிவு அலுவலகம்: 53, பிஷப் கார்டன்
(கிரீன்வேஸ் ரோடு அருகில்)
சென்னை 600 028. போன்: 4936931, 4936932.



வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் பெண்களே! வாரத்திற்கு ஒரு முறையேனும் காலணிகளை சுத்தம் செய்கிறீர்களா? இனி செய்யத் துவங்குங்கள். தோல் வியாதியே நெருங்காது.

– மஞ்சுளா கிருஷ்ணன்

போதும். உங்கள் வயிறையும் காப்பாற்றிக் கொண்டு, சமயத்தில் இன்னும் சில வயிறுகளும் உங்களை வாழ்த்தும்படி செய்யலாம்.

எத்தனை வீடுகளில் – மல்லிகைப் பூ மாதிரி விரலில் ஒட்டாதவாறு சாதம் சமைக்க முடிகிறதாம். முதல்ல குக்கர் வைக்கறதைப் பத்தி சொல்லித் தந்தா தேவலை – அப்படீன்னு ஒரு ஆணின் குரல் கேட்கிறது காதில் விழுகிறது.

சாதம் மட்டுமில்லை. ஆபீசுக்கு அல்லது கல்லூரிக்கு அவசரமாய் கிளம்புகிறவர்களுக்கு எளிதாய் சில 'மல்டி பர்பஸ்' பொடி வகைகள் செய்து வைத்துக் கொண்டால் – அவர்களுக்கு நேரம் மிச்சம், நாட்டுக்கு எரிபொருள் மிச்சம்.

நெருப்பு இல்லாமல், நீர் இல்லாமல் சமைப்பதில் பெயர் போனவன் நளன் – அப்படின்னு சொல்றாங்க. நாமும் 'அப்படியா?'ன்னு வாயைத் திறந்து கேட்டுக்கிட்டிருக்கோம். நெருப்பு இல்லாமல், தண்ணீர் இல்லாமல் சமைக்கிற அயிட்டங்கள் எல்லாம் நமக்குத் தெரியாதா என்ன...?

இன்னிக்குப் படித்த பெண்கள் இருக்கிற வீடுகளிலேயும், ஸ்டார் ஹோட்டல்களிலேயும், ரைத்தாஸ், சாலட்ஸ் இவைகளை நிறைய பண்றாங்க.

தயிரில், துருவிய காய்கறிகளை சேர்த்து, அதில் வெங்காயம், பச்சை மிளகாய், கொத்துமல்லி, புதினா இவைகளை அப்படியே பச்சையா போட்டுச் செய்வது - 'ரைத்தாஸ்.'

முட்டைகோஸ், காரட், பீட்ரூட், தக்காளி, வாழைத்தண்டு – இதுபோல் எந்தக் காய்கறியையும் அழகாய் நறுக்கி, மிளகு, உப்பு, எலுமிச்சை சேர்த்தால் 'சாலட்ஸ்'.

இந்த மாதிரி சமையலை சுலபமாக்கிக் கொண்டால் – நாம் ஆடிக்கிட்டே சமைக்கலாம், பாடிக்கிட்டே சமைக்கலாம், என்ன... கை காலெல்லாம் துருதுருங்கிறதா? வேலைக்குப் போகிற ஜென்டில்மேன் கூட ஒரு 'டை' கட்டிக் கொள்கிற நேரத்தில் புதுசா ஒரு 'டிஷ்' செய்யக் கத்துக்கலாம்.

இந்த முறையில் சமைக்க ஆரம்பிச்சோம் பத்து வயசுப் பொண்ணு கூட பிரமாதமா சமைப்பாள். ஒரு நளனால் முடிகிறது – நம்மால் முடியாதா என்ன...? இப்படிப்பட்ட நள பீம பாக சாஸ்திரத்தை ரொம்ப லேசாக நினைத்து விடக் கூடாது. 'நள-பீம' என்று சொல்லும் போதே அங்கேயும் ஆண் ஆதிக்கத்தைப் பார்த்தீர்களா...?

சமையல்கட்டிலிருந்து, சர்வதேச அளவு வரை இன்றும் ஆண்கள்தான் எதையும் விட்டு வைக்காமல் முன்னணியில் இருக்கிறார்கள். உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள உயர்ந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் எல்லாம் 'Chief cook' ஆண்களே.

நல்லா சமைக்கிறது மாத்திரம் இல்லேங்க. அதை நல்லா ரசிச்சு சாப்பிட்டு, சமைச்சவங்களை மனசார பாராட்டுவது கூட ஒரு கலைதான். மனைவியை மாத்திரம் இல்லை. பெரிய விருந்துகளில், கல்யாணங்களில் சமையல் நல்லா இருந்தா - 'ஹெட் குக்'கை கூப்பிட்டு 'ரொம்ப நல்லா செஞ்சிருக்கீங்க' – இப்படி ஒரு வார்த்தை சொல்லிப் பாருங்க, போதும். அவங்க அத்தனை நேரம் கஷ்டப்பட்டு வியர்வை சிந்த வேலை செய்ததையெல்லாம் மறந்துடுவாங்க. ஆயிரக்கணக்கான ரூபாய் தராத திருப்தியை – உங்களது ஒரு வார்த்தை பாராட்டு தரும்.

அப்படி வீட்டில் நாம் தினமும் கஷ்டப்பட்டு சமைத்ததை, அலட்சியமாக சாப்பிட்டு, கை அலம்பி போய்க்கிட்டே இருக்கறவங்களைப் பார்க்கிற போது – அத்தனை ருசியாக சமைத்த மனசுக்கு எத்தனை கஷ்டமா இருக்கும் சொல்லுங்க.

ஒரு பெண் என்னதான் அழகு முகம் கொண்டவளாக இருந்தாலும், எடுப்பான தோற்றம் உடையவளாக இருந்தாலும், இனிமையான குரல் வளத்தைப் பெற்றிருந்தாலும், எல்லாவற்றிற்கும் மேல் – ஒரு ஆணின் இதயத்தை ஜெயிக்க உதவும் ஆயுதம் எது தெரியுமா? அது – சத்தோடு கூடிய உணவை, ருசிகரமாக, அன்போடு அதை அழகிய வளைக்கரங்களால் பரிமாறுவதே. 'A way to man's heart is through his stomach'ன்னு கூடச் சொல்லுவாங்க.


நம் பெண்களில் நிறைய பேருக்கு மிக அழகாக சமைக்கத் தெரியும்கிறது எனக்குத் தெரியும். ஆனால் அதில் சிலருக்கு நேரம் இருக்கிறது. பொறுமை – ம்கூம்... கொஞ்சம் கூட கிடையாது. பல பேர் சமைப்பதை ஒரு தண்டனையாகவே நினைக்கிறார்கள் பாவம். நல்ல உணவை ருசித்துச் சாப்பிடுவது என்பது அத்தனை இன்பமாய் இருக்கும் போது – அப்படி அந்த உணவை சமைப்பது என்பது எப்படி ஒரு தண்டனை ஆகும்?

பேட்டி : **சர்ச்சில் பாண்டியன்**

நல்லது சொன்னால் நல்லது நடக்கும்

சொற்கள் சக்தி வாய்ந்தவை. ஆழ்மனத்தில் அழுத்தமான பாதிப்பை ஏற்படுத்தி, சொல்லுக்கேற்ற செயலை நடத்திக் காட்டுகின்றன.

“எனக்குக் கொடுத்து வைத்தது இவ்வளவுதான்” என்று மாதவி அடிக்கடி குறை பாடினால், அவ்வளவுதான். அவள் முன்னேற முடியாது. அவள் பலமுறை சொல்லும் சொற்கள் அவளையறியாமலே அவள் உள் மனத்தில் பதிந்து அவளது எதிர்பார்ப்பைக் குறைத்து விடுகின்றது.



“நான் எப்படியும் ஜெயித்து விடுவேன்” என்று பலமுறை சொல்லும் கல்லூரி மாணவி கவிதா விளையாட்டுப் போட்டியில் முதலாவதாக வருகின்றாள். ஏனென்றால் அவள் ஒவ்வொரு முறை சொல்லும் போதும் அவளது ஆழ்மனத்தில் வெற்றி அழுத்தமாகப் பதிந்து விடுகின்றது. உள்ளிருந்தே உடலுக்கு ஊக்கம் தரவல்ல ஆழ்மனம் அவளை வெற்றிக்கு அழைத்துச் செல்கின்றது.

“எனக்கு இதுமட்டும் இயலாது” என்று சொல்லிச் சொல்லிச் சிலர் தமது முயற்சியினைக் குறுக்கிக் கொள்கின்றார்கள். கடைக்குப் போய் காய்கறி வாங்கி வர அசாதாரண சாமர்த்தியம் வேண்டியதில்லை ஆனால் எனக்கு இதுமட்டும் இயலாது என்போர்க்கு, அது கூடிவர ஒரு போதும் இயலாது.

ஆழ் மனம் நமது உடலையும் உள்ளத்தையும் ஆட்சி செய்கின்றது என்பதை எல்லோரும் படித்திருக்கின்றோம். ஆனால் அந்த ஆழ்மனத்தை நமக்குச் சாதகமாக்கிக் கொள்வது எப்படி என்பதில் கவனக் குறைவாக இருந்து விடுகின்றோம். அன்றாட வாழ்வில் நாம் சொல்லும் சொற்கள் ஆக்கபூர்வமான சொற்களாய் இருக்கும்படி பார்த்துக் கொண்டால் ஆழ்மனத்தை நமக்குச் சாதகமாய் ஆக்கிக் கொள்ளலாம். செய்து காட்டுவேன் என்று அடிக்கடி சொல்பவர்கள் செய்து காட்டுகின்றார்கள்!

“எந்தக் கணக்கையும் நான் போட்டு விடுவேன்” என்று சொல்லிக் கொள்ளும் சிறுவனுக்குத் தன்னம்பிக்கை வந்து விடுகின்றது. ஆழ்மனத்தில்

பதியும் சொற்கள் நடைமுறைக் குத் துணை செய்கின்றன. புதி ரான கணக்குகளையும் எளிதாகச் செய்கின்றான்.

வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேர வேண்டுமா? நம்பிக்கையான சொற்களையே பேசுங்கள். நிறைவான சொற் றொடரைப் பயன்படுத்துங்கள்.

"இந்த வேலையை முடித்து விட்டே வருவேன்" என்று சொல் பவர்கள் கடைசி வரை காத் திருந்து - நம்பிக்கையோடு பொறுத்திருந்து வெற்றியோடு திரும்புகின்றார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பு பலித்துவிடுகின்றது.

சொல்லும் சொல் எப்போதுமே பயனுள்ளதாய் அமையட்டும். அவசரப்பட்டு ஒன்றைச் சொல்லும் முன் (வில்லிலிருந்து அம்பை விடும் முன்) நிதானித்து ஆக்கபூர்வமான சொல்லையே சொல்லுங்கள். "சரி, அடுத்த முறை நன்றாய்ச் செய்வாய்" என்று சொல்லுங்கள். "எனக்குத் தெரியாதா? நீ எப்போதுமே இப் படித்தான்" என்று சொல்லா தீர்கள்.

சொற்கள் இன்னொரு வகை யிலும் சக்தி வாய்ந்தவை. அதா வது, சொற்கள் கேட்பவர் ஆழ் மனத்திலும் ஆழமாகப் பதிகின் றன. பாதிப்பையும் ஏற்படுத்து கின்றன.

"நீ ஒரு போதும் உருப்பட மாட்டாய்" என்று ஒரு நாளும் குழந்தையைத் திட்டாதீர்கள்.

"இவளது மண்டை டியூப் லைட். உடனே பொருந்தாது" என்று ஏசாதீர்கள். அப்படிச் சொன்னால் அவளை அப்படியே மாற்றி விட தூண்டு கோலாகிவிடும்.


மாறாக, குழந்தை களிடம் உள்ள திறமைகளை நினைவு படுத்துங்கள். எடுத்துச் சொல் லுங்கள். "கையெழுத்து நன்றாக எழுதுகிறாயே, அப்பா. கொஞ்சம் கணக்கையும் கவனித்துச் செய்யக் கூடாதா" என்று சொல்லிப் பாருங்கள். தாயின் பாராட்டு தலைக் கேட்டு ஊக்கம் பெறும் குழந்தையின் ஆழ்மனத்தில் கணக்கின் மீது அக்கறை பிறக்கும். பலன் கிடைக்கும்.

"படம் நன்றாக வரைகின் றாயே, பாடமும் நன்றாகப் படிக்க லாமே" என்று ஊக்கப்படுத் துங்கள். படிப்பாள்.

ஏனென்றால் -

சொற்கள் மகிமை வாய்ந்தவை. சொல்லுக்கேற்ற வாழ்வை உரு வாக்க வல்லவை.

- பத்மாவதி செல்வராஜ்



தையல் மிஷினில் காக்கித் துணிகளும் மற்றும் கெட்டியான துணிகளும் தைக்கும்போது ஊசி உடைந்துவிடுமோ எனக் கவலையே படவேண்டாம். துணியைத் தைக்கும் பகுதியில் சோப்புக் கட்டியால் கோடு தேய்த்துப் பின் தையுங்கள். ஊசி முறியாது.

- ஆர். பார்த்திபன்

ரிஜிஸ்டர் எண் S.I.C. of C. 3225

ஸ்ரீ ராமஜெயம்

தாது வருஷத்திய

ஆற்காடு கா.வெ. சீதாராமய்யர்

சர்வமுகூர்த்த பஞ்சாங்கம்

1996 **1997**

TRADE  **MARK**

துவக்கம் 1900 நடப்பு 1996

டிரேட் மார்க் உரிமையாளரும், கணிதரும் :
ஆற்காடு ஸ்ரீராம நிலைய நாடி ஜோதிட வல்லவராகிய
ஆற்காடு ஜோதிட வல்லுனர்
கா.வெ. சீதாராமய்யர் குமாரர்
K.S.V. சுப்ராமய்யருடைய அபிமான புத்திரன்
K.N. நாராயணமூர்த்தி மகன்
K.N. சுந்தரராஜன்

லாவண்யா பதிப்பகம்

51, சீதாராமய்யர் தெரு, ஆற்காடு - 632 503.

வெளியிட்டு விற்பனை செய்பவர்கள்
ஆனந்த நிலையம்
18, அருளாம்பாள் தெரு (Upstairs) T. Nagar, Madras - 600 017.
Phone : 4346242, 4344158.

 விலை : 29.00

ஆற்காடு என்ற பெயரால் வெளிவரும் இதர போலி பஞ்சாங்கங்களை வாங்கி ஏமாறாதீர்கள் !

ஆற்காடு ஜோதிட வல்லுனர் கா.வெ. சீதாராமய்யர் அவரது குமாரர் K.S.V. சுப்பராமய்யர் அபிமான புத்திரன் K.N.
நாராயணமூர்த்தி போட்டோ படங்கள் பின்பக்கத்தில் இருக்கின்றனவா என்று கவனித்து வாங்கவும்.

சரவணா ஸ்டோர்ஸ்

ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை 600 017.

உயர்தரமான தங்க நகைகள்
வெள்ளி பாத்திரங்களுக்கு

செய்கூலி இல்லை



22 CT. தங்கம்

1 கிராம் விலை ரூ. 492.00

(விலை மாற்றம் உண்டு)

பட்டுப்புடவைகளுக்கு
10% தள்ளுபடி

ஜவுளிகள்,
ரெடிமேட் ஆடைகள்,
பாத்திரங்கள்,
T.V., டேப்ரிக்கார்டர்,
ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின்,
ஃபேன், கிரைண்டர்,
மிக்ஸி, சூட்கேஸ்

FIXED DEPOSIT
21%
PER ANNUM

ஞாயிறு விற்பனை உண்டு.

LR SWAMI P/P




இந்த மாதம் எப்படி?



மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்.


சுக்கிரன் சுகம் தருவான். யார் யாருக்கு எதில் மகிழ்ச்சி உண்டோ அது கிடைக்கும். எனவே பதவி உயர்வும் கிடைக்கலாம். சுப நிகழ்ச்சியும் கைகூடலாம். வெளிநாட்டுச் செய்தியோ, வேலையோ எதிர் பார்த்தபடி கிடைக்கும். குரு பார்வை இருப்பதால் மற்ற கிரகங்களால் ஏற்படும் எந்தத் தொல்லையும் எல்லை மீறாமல் இருக்கும். மாதத்தின் பிற்பகுதியில் ஒன்று கூடும் கிரகக் கூட்டங்களால் எதிர்பாராத சிறு தொல்லைகள் ஏற்படலாம். ராகுவும், குருவும், சுக்கிரனும் மாதம் பூராவும் உங்களுக்குப் பாதுகாப்புத் தர இருக்கும்போது கவலை ஏன்? நல்லதொரு தசாபுக்தி நடக்குமானால் எல்லாம் நல்லபடியே நடக்கும். தசாபுக்தி சரியில்லாதவர்கள் எந்த தசாபுக்திகள் நடக்கிறதோ அந்தந்த கிரகத்துக்கு அர்ச்சனை செய்யுங்கள். கோளறு பதிகத்தையும் படியுங்கள், வினை தீர்க்கும் வேலவனையும், விக்னத்தைத் தீர்க்கும் விநாயகனையும் பாமாலைகளைக் கொண்டு மனமாற வேண்டுங்கள். புதுவை அரவிந்த ஆசிரமத்தில் ஆழ்துயிலில் உள்ள அன்னையை உளமாற வேண்டுங்கள். முடியுமானால் ஒரு முறை தரிசித்து விட்டு வாருங்களேன்.



ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 - ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

குரு, ராகுவைத் தவிர மற்ற எல்லா கிரகங்களும் உதவும் நிலையில்தான் உலாவுகிறார்கள். குறிப்பாக ஜீவனஸ்தானத்தையும், சுகஸ்தானத்தையும், விரயஸ்தானத்தையும் குரு பார்ப்பதால், பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை. மாதத்தின் பிற்பகுதியில் மீனத்தில் ஒன்று சேரும் கிரகங்கள் இலாபத்தைத் தரத்தக்க வித்திலேயே உள்ளதால் சுப நிகழ்ச்சி கைகூடி வரும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் வரலாம். பதவி உயர்வும் சிலருக்கு உண்டு. அரசியல்வாதிகளுக்கு வெற்றியும் உண்டு. அதன் பயனாக எதிர்பார்க்கும் பதவியும் கிடைக்கும். உண்மையான உழைப்புக்கு ஊதியம் எதிர்ப்பார்க்கும் அளவுக்கு மேலேயே கிடைக்க வேண்டும். வெளிநாட்டுப் பிரயாணம் அனுகூலமாக அமையும். குருவும், ராகுவும் அனுகூலமான நிலையில் இல்லை. எனவே குருவுக்கு வியாழனன்றும், ராகுவுக்கு செவ்வாய், சனி ஆகிய நாட்களிலும் அர்ச்சனை செய்யலாம். ஆயுட் காரகனாகிய சனி இலாபத்தில் இருப்பதால் அனாவசிய பயம் தேவையில்லை. எதற்கும் கவலைப்படாமல், மனதை ஒரு நிலைப்படுத்தி தக்ஷிணாமூர்த்தியை மானசீகமாக நினைத்து ஆராதித்தால் எல்லாம் நல்ல விதமாக அமையும்.



மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

தேவ குருவும், அசுர குருவும் உங்கள் அபிலாஷைகள் சிலவற்றை நிறைவேற்ற இருக்கிறார்கள். குறிப்பாக வீடு வாங்குவதற்கேற்ற

சூழ்நிலை உருவாகும். மாதத்தின் பிற்பகுதியில் புதனும், சூரியனும் உங்களுக்குப் பதவி உயர்வையோ பண இலாபத்தையோ தர இருக்கிறார்கள். மாத ஆரம்பத்தில் இருந்த ஒருவித மனக்குழப்பமும், மயக்கமும் மாதத்தின் பிற்பகுதியில் சரியாகும். தோல் சம்பந்தப்பட்ட வியாதியால் சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படலாம். நான்கில் உள்ள இராகுவால் சில சிக்கல்கள் தொழில் ரீதியிலும், குடும்ப வாழ்க்கையிலும் ஏற்பட்டாலும், உங்கள் இராசியை குரு பார்ப்பதால் நன்மையே ஏற்படும். தவிர ஒரு விதத்தில் புதன், குரு இவர்களது அமைப்புக்கு நீச்ச பங்க இராஜயோகமும் ஏற்படலாம். அதனால் இதுவரை நிலவி வந்த தேக்க நிலை அகன்று, சுறுசுறுப்பான தொரு வாழ்க்கை ஏற்படலாம். வெளியூர்ப் பிரயாணம் ஒன்றை எதிர்பார்க்கலாம். அரசியல், மற்றும் சமூக நலத்துறையில் உள்ளவர்கள் தங்கள் உழைப்புக்கேற்ற பலனைப் பெறும் வாய்ப்பு உண்டு. இது மற்ற துறையினர்க்கும் கூட பொருந்தும். வைணவத் தலங்களுக்குச் சென்று வரலாம். சிறு காயங்கள், திருட்டினால் பொருள் இழத்தல் போன்றவற்றிற்கும் வாய்ப்பு இருப்பினும், தசாபுக்தி நல்ல நிலையில் உள்ளவர்களுக்குக் கவலை இல்லை.



கடக ராசி :

புனர்பூசம் 4 - ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

இராகுவும், புதனும் உதவும் நிலையில் இருக்கிறார்கள். மற்ற கிரகங்களின் சஞ்சாரத்தால் அதிக நன்மையில்லை. பாக்கியஸ்தானத்தையும், விரயஸ்தானத்தையும், ஜீவனஸ்தானத்தையும் குரு தன் வீட்டிலிருந்து பார்ப்பதால் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பு இல்லை. ஆயினும் 10 ல் உள்ள சுக்கிரனை குரு பார்த்தாலும், ஒரு பெண்ணால் மனக்கிலேசம் உண்டாகலாம். நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு ராகு உற்ற துணையாக நின்று வெற்றி உண்டாகும்படி செய்வார். அதனால் முயற்சியை முழு நம்பிக்கையுடன் செய்யுங்கள். ஒருமுறை பாண்டிச்சேரி சென்று அரவிந்த ஆசிரம அன்னையை மனமுருக வேண்டிப் பாருங்கள். கட்டாயம் நன்மை உண்டாகும். தசாபுக்தி நன்கு அமைந்தவர்கள் கவலைப்படத் தேவையில்லை. சொல்லும் இடத்திற்குச் சென்று பரிகாரம் தேட முடியாத நிலை எனில், இருக்கும் இடத்திலிருந்தே பரிபூரண நம்பிக்கையுடன் வேண்டினால் எந்தத் தெய்வமும் கட்டாயம் உதவும்.



சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 - ஆம் பாதம்.


குருவும், சுக்கிரனும் நல்ல நிலையில் இருக்கிறார்கள். எனவே அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அமைதியும், பொருளாதாரச் சூழ்நிலையும் நன்கு அமைந்திருக்கும். ஆயினும் மற்ற கிரகங்களின் சஞ்சாரம் அவ்வளவு பலனுள்ளதாகவோ, பலமாகவோ அமையவில்லை. குரு இராசியைப் பார்ப்பதால் கோடி தோஷங்களும் பரிகாரமடையலாம் என்பதற்கேற்ப மன அமைதியுடன் இருக்கலாம். சுக்கிரன் எந்த ஒரு முயற்சியிலும் உங்களுக்கு உதவுகிறார். எந்தத் துறையிலிருப்பவர்க்கும் இது பொருந்தும். அத்துடன் எட்டாம் இடத்தில் மாதத்தின் பிற்பகுதியில் ஐந்து கிரகங்கள் ஒன்று சேரும் போது நவக்கிரக ஹோமம் ஒன்றை கணபதி ஹோமத்துடன் செய்வது நல்லது. அரசியலில் நேரடியாகப் பங்கு பெறுபவர்கள், காவல் துறையினர், மற்றும் உடல் நிலை சற்று பாதிக்கப்பட்டவர்கள் மிருத்யுஞ்சய ஹோமம் செய்வது தான் சிறந்ததொரு பரிகாரமாகத் தெரிகிறது. இதை ஊரறியச் செய்யாமல் உங்களுக்காக, நீங்கள் இருக்கும் வீட்டிலேயே ஆழ்ந்த நம்பிக்கையுடன் செய்யுங்கள். நீங்கள் நினைக்கும், அல்லது முயற்சி செய்யும் எந்தப் பணியும் வெற்றியுடன் நிறைவேறும். வீடு வாங்குவதானாலும் அல்லது தொழில் ரீதியாகச் செய்யும் கூட்டு ஒப்பந்தமானாலும், அரசியல் ரீதியான தொடர்பானாலும் உங்களை எந்த விதத்திலும் பாதிக்காதவாறு பலமுறை யோசித்தே உடன்படுங்கள். நல்லதைச் செய்ய வேண்டிய புதன் நீசம் அடைந்துள்ளதாலும், கேது அங்கிருப்பதாலும் காரியத்தடை ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே மேற்கண்ட பரிகாரங்கள். வசதியற்றோர் இவை சம்பந்தமான ஜபங்களைக் கூறி வரலாம்.



கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

சுக்கிரன் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளுக்கும், குடும்ப அமைதிக்கும், சுபகாரியத்திற்கும் உதவுகிறார். மாத ஆரம்பத்தில் காவல் துறை, அரசுத் துறை, அரசியல் துறை சுங்க இலாகா, மற்றும் சமுதாய நலத்துறை ஆகியவைகளில் இருப்பவர்களுக்கு வெற்றியையும், புகழையும், மற்றும் புதியதொரு பதவியையும் பெறும் வாய்ப்புகள் உண்டு. நன்கு திட்டமிட்டுச் செயல்பட்டால் கட்டாயம் உங்களுக்கு



அன்னையர் தேவை

'நாகள் சின்னஞ்சிறு அரும்புகள்.
பூத்துக் குலுங்க இருக்கும் புத்தம் புதுமலர் அரும்புகள்
நல்ல வாசமுள்ள மலர்களாக மலர விரும்பும் குழந்தை அரும்புகள்.
ஆனால் அன்பும், ஆதரவும் அளிக்க எங்களுக்கு அம்மா இல்லை.
கொஞ்சி விளையாட, அரவணைக்க, பரிவோடு உணவு ஊட்ட அம்மா இல்லை.
அம்மா வேண்டும் - ஆசை அம்மா எங்களுக்கு வேண்டும் என்று நாங்கள்
மிகவும் ஏங்குகிறோம்''.

- அன்பைத் தேடும் குழந்தைகள்.

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை, தாயின் அன்புக்கு ஈடு இணை வேறெதும் இல்லை என்பது நாம் அறிந்த உண்மை. அந்தத் தாயின் அன்பு கிடைக்காமல் ஆயிரக் கணக்கான குழந்தைகள் இவ்வாறு ஏங்குகின்றன.

அன்புக்கும், பாசத்துக்கும் ஏங்குகின்ற அந்தக் குழந்தைகளுக்குத் தாயாக நீங்கள் ஏன் ஆகக் கூடாது? ஓர் உன்னதத் தாயாக, அந்தக் குழந்தைகளை, அன்புடனும் பாசத்துடனும், குடும்ப சூழ்நிலையில், வளர்க்க வேண்டும் என்ற விருப்பமும் லட்சியமும் தங்களுக்கு இருந்தால் அதை நிறைவேற்ற, இதோ எங்கள் குழந்தைகள் இல்லங்கள் சிறந்த வாய்ப்பளிக்கின்றது.

கோவை மாவட்டம், மதுக்கரையில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள எங்கள் குழந்தைகள் இல்லம் ஒவ்வொன்றும் பெரியதாகவும், மிக அழகுடனும், எல்லா வசதிகளுடனும் அமைக்கப் பட்டுள்ளது.


குழந்தைகளைப் பரிவுடன் வளர்க்க விருப்பம் உடைய தங்களைப் போன்ற பெண்களுக்கு இது மிகவும் உகந்த பணியாகும். அமைதி நிறைந்த இயற்கை அழகுடன் கூடிய சூழ்நிலையில், மனநிறைவையும் தரும் பணி இது.

அன்னையர் பணிபுரிவோர்க்கு இருப்பிடமும், உணவும், ஊதியமும் அளித்து அவர்களை குழந்தைகள் குடும்பத்தில் முக்கிய ஆதாரமாக ஏற்றுக் கொண்டு, அவரது வாழ் நாள் முழுவதும் மிகுந்த பாதுகாப்பை அளிக்கிறது எங்கள் அமைப்பு.

திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லாதவர்/கணவனால் கைவிடப்பட்டவர் அல்லது கணவனை இழந்தவராக 25 வயதுக்கு மேல் 35 வயதுக்கு உட்பட்டவராக தாங்கள் இருந்து பத்தாம் வகுப்பு அல்லது அதற்கும் மேற்பட்ட படிப்பு படித்தவராகவும், தனக்கென்று குழந்தைகள் ஏதும் இல்லாதவராகவும், குழந்தைகள் பணியில் ஈடுபாடு உடையவராகவும் தாங்கள் இருந்தால் முழு விபரங்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

எம்.இ.சி. டிரஸ்ட், தபால் பை எண். 6,
மதுக்கரை (அஞ்சல்), கோவை - 641 105.

வெற்றி உண்டு. ஆனால் மாதத்தின் பிற்பகுதி அவ்வளவு சிறந்தது எனக் கூற இயலவில்லை. எல்லா இனங்களிலும் சற்று தேக்கமோ, ஏன் தோல்வியோ கூட வரலாம். எனவே பெரியதொரு முயற்சியில் ஈடுபடுவோர் கணபதி, நவக்கிரகம், மற்றும் சுதர்ஸன ஹோமம் செய்வது நல்லது. 10 ல் உள்ள குரு ஆட்சியில் இருப்பதால் பதவிக்கும் பங்கமில்லை. ஆனால் இடமாற்றம் ஏற்படலாம். உடல் நிலை சற்று பாதிக்கப்படுவதற்கும் வாய்ப்பு உள்ளதால் மருத்துவ சோதனை செய்து கொள்வது நல்லது. துர்க்கையையும், தும்பிக்கையானையும் தொழுவது நல்லது.



துலா ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.


சுக்கிரனுக்குக் குரு பார்வை. எனவே 7 ல் இருக்கும் சுக்கிரன் குடும்ப சுகத்திற்குப் பங்கம் விளைவிக்க மாட்டார். இந்த மாதம் பூராவும் நல்ல நிலையிலேயே கழியும். மாதத்தின் பிற்பகுதியில் ஐந்து கிரகங்கள் 6 ல் ஒன்று கூடும் சமயத்தில், உங்களது நீண்ட நாள் முயற்சி ஒன்றில் வெற்றி உண்டாகலாம். அது உத்யோக சம்பந்தமாகவும் இருக்கலாம். அல்லது சமுதாயப் பணியாகக் கூட அமையலாம். அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அருமையான நேரம். வெற்றி உங்களைத் தேடி வரும். அதன் பயனாகப் பதவி ஒன்றும் கிடைக்கலாம். 3 ல் உள்ள குரு ஆட்சியில் இருப்பதால் பாதிப்பு இல்லை. எனினும் பதவி மாற்றத்தால் சிறு ஏமாற்றம் ஏற்படலாம். ராகு சிறுசிறு தொல்லைகளை உண்டாக்கலாம். எனவே துர்க்கைக்கும் இராகுவுக்கும் அர்ச்சனை செய்யுங்கள். பொதுஜன செல்வாக்கைப் பெறவும், தேர்தலில் நின்றால் வெற்றி பெறவும் சண்டீஸ்வர ஹோமம் ஒன்றைச் செய்யலாம். மற்றபடி நல்லதொரு மாதமெனலாம். மாணவர்கள் தேர்வில் அமோக வெற்றி பெறுவார்கள். எதிர்பார்க்கும் மதிப்பெண்கள் கிடைக்கும். முயற்சியும் தேவை என்பதை மறந்துவிட வேண்டாம்.



விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை.


குருவால் தனலாபமும், கோர்ட் விவகாரங்களில் வெற்றியும் ஏற்படும். மாத ஆரம்பத்தில் புதனால் பதவி ஒன்று கிடைக்கும். அரசியல், மற்றும் அரசுத் துறையில் பணிபுரிபவருக்கு ஆதாயம் உண்டு. இராகு ஒருவரே உங்களுக்குப் பலவிதங்களில் உறுதுணையாக குருவைப் போலவே உதவுவார். மற்ற கிரகங்களின் சஞ்சாரம் சரியாக அமையவில்லை. மாமன்மார்கள், மற்றும் மனைவியே கூட சில இனங்களில் வேதனை தரும் விதங்களில் நடந்து கொள்ளலாம். ஒரு சிலருக்கு வீடு சம்பந்தமான பிரச்னைகள் தோன்றலாம். இடம் மாற வேண்டியும் வரலாம். பதவி உயர்வு தள்ளிப் போகலாம். பள்ளிக் குழந்தைகள் கவனமுடன் படிக்க உற்சாக மூட்டுங்கள். தொழில் துறை மற்றும் காவல் துறை, அரசியல் துறையில் உள்ளவர்களுக்கு மாத இறுதியில் தொல்லைகள் ஏற்படலாம் என்றாலும் இரண்டில் உள்ள குருவும், 11 ல் உள்ள ராகுவும் எந்த நிலையையும் சமாளிக்கும் ஆற்றலை அளிப்பார்கள். எனவே நவக்கிரக ஹோமம் ஒன்றைச் செய்யலாம்.



தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

மாத ஆரம்பம் சில முயற்சிகளில் ஆதாயம் தரும். சுக்கிரனால் மாதம் பூராவும் மனையில் மகிழ்ச்சி நிலவும். பதவி மாற்றமோ, உயர்வோ கூட ஏற்படலாம். ராகுவால் உடல் நிலையும் பாதிக்கப்படலாம். அதேசமயம் மனதிலும் குழப்பம் நிலவும். மாத இறுதியில் 5 கிரகங்கள் 4 ம் இடத்தில் கூடும் போது சற்று கவனமுடன் பணிபுரிவது நல்லது. சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறும் சூழ்நிலையும் உள்ளது. ஆனால் அது நிறைவேற உங்களுக்கு வேண்டியவர்களாலேயே தடை உண்டாகிச் சரியாகிவிடும். யார் பேசுகிறார்கள் என மதிப்பிடுவதை விட்டு, என்ன பேசப்படுகிறது என்பதை கவனியுங்கள். அதற்கேற்ப மற்றவர்களிடம் நடந்து கொள்ளுங்கள். அதுபோலவே சாப்பிடச் செல்லுமிடத்தில் விருந்து கொடுப்பவர்கள் யார், எத்தகைய உள்ளத்துடன் கொடுக்கிறார்கள் எனக் கவனியுங்கள். பரிமாறப்படுவது என்னென்ன என்பதைக் கவனிக்க வேண்டாம். எனவே அரசியல் துறையில் உள்ளவர்களும், அவர்களை ஆதரிப்பவர்களும் இந்த மாதத்தில் நன்கு கவனித்துச் செயல்படுங்கள். நீங்கள் செய்யப் போகும் முயற்சி, எடுக்கப்படும் முடிவு இவைகளைப் பற்றி நன்கு சிந்தித்துச் செயல்பட வேண்டிய காலம். இது எத்துறையினர்க்கும் பொருந்தும். மேதாவிலாச தக்ஷிணாமூர்த்தி ஹோமம் ஒன்றைச் செய்வது நல்லது.



மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.

மாதத்தின் பிற்பகுதியில் எதிர்பார்க்கும் இனங்களில் வெற்றி உண்டு. குடும்ப சுகம் நன்றாக அமையும். நீண்டதொரு இடைவெளிக்குப் பிறகு நல்லதொரு கோட்சாரம் உங்களுக்கு உதவ இருக்கிறது. மாணவர்களுக்குத் தேர்வில் நல்லதொரு மதிப்பெண் பெறும் வாய்ப்பு உண்டு. முயற்சி செய்யாமல், வாய்ப்பினை நழுவவிட்டு விடாதீர்கள். இதுவரை புத்தகத்தையே எடுக்காத மாணவர்கள் கூட, சற்று சிரமப்பட்டு படித்தீர்களானால் நவக்கிரக நாயகர்கள் உங்கள் பக்கம் இருந்து நீங்கள் படித்த பக்கங்களைப் பற்றிய வினாக்களையே கேட்கும்படி செய்து வெற்றியைத் தேடித் தந்து விடுவார்கள். அதே போல இதர துறையிலிருப்பவர்களும், காலத்தால் அலைக்கழிக்கப்பட்டவர்களும், சுறுசுறுப்புடன் செயல்படுங்கள் வெற்றி கிடைக்கும். அத்துடன் புதுச்சேரி அன்னையையோ, பாம்பன் சுவாமிகளையோ, அல்லது மந்த்ராலய மகானையோ ஒரே மனதுடன், நம்பிக்கையுடன் நினைத்து வழிபடுங்கள். கண்டிப்பாக உங்கள் அபிலாஷைகள் இந்த மாதத்தில் நிறைவேறும்.



கும்ப ராசி :

அவிட்டம் 3 - ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

குரு இலாபஸ்தானத்தில் இருப்பதுடன் 5ம் இடத்தையும் பார்ப்பதால் குழந்தைகளைப் பற்றிய கவலை தேவையில்லை. அவர்களது ஆரோக்கியம், கல்வி நிலை இவை நன்கு பரிமளிக்கும். சுப காரியமும் நடக்கும். இதுவரை இருந்த கவலையும் நீங்கும். 5ல் சுக்கிரன் தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தரக் காரணமாக இருக்கிறார். இந்த மாதத்தில் நீங்கள் நினைத்தது நடக்கும். வெற்றியும் உண்டு. ஆயினும் மாதத்தின் பிற்பகுதியில் சில சிரமங்கள் தொழில் ரீதியாகவோ, உத்தியோக ரீதியாகவோ ஏற்படும். வேண்டாத இடத்திற்கு மாறுதல், பதவி உயர்வுக்குத் தடங்கல் என ஏதேனும் ஒரு விதத்தில் மனச் சஞ்சலம் உண்டாகும் பொருளாதார நெருக்கமுக்கும், உடல் நிலை பாதிப்புக்கும் கூட இடமுண்டு. திருட்டு பயமும் அக்னி பயமும், உறவினர்களுடன் பகையும் கூட ஏற்படலாம். ஆனால் சுக்கிரனும், குருவும் உங்களுக்கு எந்தவித பாதிப்பு வந்தாலும் தடுத்து நிறுத்தி, உங்களுக்கு மனநிறைவைத் தர இருக்கும்போது கவலை ஏன்? முடியுமானால் தெய்வ சன்னிதானங்களுக்குச் சென்று வாருங்கள். வீட்டிலேயே கோளறு பதிகத்தையும், நவக்கிரக ஸ்தோத்திரத்தையும் படியுங்கள். எந்த ஒரு கூட்டுப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுங்கள்.



மீன ராசி :

பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

இராசிநாதன் ஆட்சியில் இருந்தாலும் சில சிரமங்கள் வரத்தான் செய்யும். எனினு சுக்கிரன் 2ம் இடத்தில் இருந்து குடும்ப சுகத்திற்கும், மன மகிழ்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கிறார். குருவின் பார்வை ஜீவனம், களஸ்திரம் மற்றும் 9ம் இடம் ஆகியவற்றிற்கு இருப்பதால் விபரீதமாக ஏதும் ஆகிவிடாது. அரசியலில், மற்றும் அரசுப் பணியாற்றுபவர்கள் புது முயற்சி ஏதும் தொடங்குமுன் துர்க்கை, கணபதி, மற்றும் சூரியன் ஆகியவர்களுக்கு அர்ச்சனை செய்வது நல்லது. அல்லது கணபதி, நவக்கிரகம், மற்றும் சுதர்சன ஹோமம் செய்யலாம். வசதி இல்லாதவர்கள் கோவில்களில் கூட்டாகச் செய்யும் ஹோமங்களில் கலந்து கொள்ளலாம். மாதத்தின் பிற்பகுதியில் உங்கள் இராசியில் 5 கிரகங்கள் கூடும் வாய்ப்பு உள்ளது. அதனால் அந்தக் காலகட்டத்தில் எதையும் யோசித்துச் செய்யுங்கள். மற்றபடி சுபகாரியம் மாத ஆரம்பத்தில் நடக்கலாம். மாலவனையும், வேலவனையும் மற்றும் விநாயகரையும் பாடிப் பரவசப்படுத்துங்கள். அனைத்துச் சிரமங்களும், அந்த இசையிலே கரைந்து, உங்களுக்கு மனச் சந்துஷ்டி உண்டாகும்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்

வாழ்ந்து கெட்ட மனிதர் சிலர். பேசிக் கெட்ட மனிதரோ பலர். ஆகவே முதலில் காப்பாற்றப் பெற வேண்டுவது நாக்கு.

- கி. ஆ. பெ. விசுவநாதம்

தகவல் : வயலூர் ஆர். பார்த்திபன்



வீட்டிலேயே கைவைத்தியம் செய்து கொள்ளலாமே!

இப்பொழுது வீட்டிலேயே செய்து கொள்ளும் கைவைத்திய முறையெல்லாம் மிகவும் அரிதாகிவிட்டது. சின்னத் தலை வலிக்கும் டாக்டரிடம் ஓடுகிறோம். அதிக மருந்துகளினால் பின்விளைவு, பக்க விளைவு நிறைய. எனவே நம் உடலுக்கு வரும் சாதாரண வியாதிகளுக்கு வீட்டிலேயே செய்து கொள்ளும் வைத்திய முறைகளைப் பற்றி இங்கு விளக்குகிறார் டாக்டர் கண்ணன். தற்பொழுது மத்திய அரசின் ஆயுர்வேதா மற்றும் சித்தாமைய ஆராய்ச்சிக் கழகத்தின் அறிவியல் ஆலோசனைக் குழுவின் தலைவராக உள்ளவர் டாக்டர் கண்ணன். வாசகிகளே, உங்களுக்கு ஏற்படும் உடல்நலச் சந்தேகங்களை (வீட்டிலேயே கைவைத்தியம் செய்து கொள்ளலாம் எனத் தோன்றுபவைகளை) டாக்டர் இரா. கண்ணன், ப்ரியா நர்ஸிங் ஹோம், தென்னூர், திருச்சி-620 017 என்ற முகவரிக்கு எழுதுங்கள். அவர் தேர்ந்தெடுத்த சில கேள்விகளுக்கு மங்கையர் மலர் மூலம் பதிலளிப்பார்.

கேள்வி: எனது இரு கால் மூட்டுகளிலும் வலி இருந்து கொண்டே இருக்கிறது. சில சமயங்களில் சிறிது வீக்கமும் ஏற்படுகிறது. இது எதனால் ஏற்படுகிறது? இதனைப் போக்க வழி கூறுங்களேன்.

திருமதி மலர், நாகர் கோவில்.

பதில்: சாதாரணமாக உடலிலுள்ள இரண்டு எலும்புகள் சேருமிடம் மூட்டு எனப்படுகிறது. இந்த மூட்டுகளில் வருகின்ற நோய் கீல்வாயு என்றும் கீல்வாதம் என்றும் சித்த மருத்துவத்தில் அழைக்கப்படுகிறது. இந்த மூட்டு வலியானது பல்வேறு காரணங்களால் ஏற்படலாம். உடல் அதிக பருமனுள்ளவர்களுக்கு, அதிக எடை காரணமாக பெரும்பாலும் முழங்கால்களில் இது ஏற்படும். அதிக எடையைத் தாங்க முடியாமல் அந்த அழுத்தத்தின் காரணமாகவும், முழங்காலுக்கு அதிகம் சிரமம் கொடுப்பதாலும், முழங்காலில் இது ஏற்படுகிறது. வயது முதுமையின் காரணமாக மூட்டுகள் தேய்மானம் ஏற்படுவதாலும் இந்த மூட்டு வலி வரலாம். இவைகள் தவிர ஆங்கிலத்தில் ஆர்த்திரைட்டிஸ் (ARTHRITIS) என்று கூறப்படுகின்ற கீல்வாதத்திலும், இரத்தத்தில் யூரிக் அமிலம் இருக்கின்ற அளவை விட அதிகமாவதாலும் இந்த மூட்டுவலி ஏற்படலாம். நீங்கள் உங்கள் வயதை எழுதாததால் மூட்டுவலிகளுக்கான சில எளிமையான வீட்டிலேயே செய்து கொள்ளும் சித்த மருத்துவ சிகிச்சை முறைகளை விவரித்துள்ளேன். அதனை நீங்களே செய்து பாருங்களேன்!

சித்த மருத்துவக் கொள்கையான "உணவே மருந்து, மருந்தே உணவு" என்ற கொள்கைப்படி, மூட்டு வலி நோயாளிகள் சில வகை உணவு முறைகளை கடைபிடித்து வந்தாலே நல்ல பலன் தரும்.



டாக்டர் கண்ணன்

பொதுவாக உணவில் வாயுப் பொருட்கள் குறிப்பாக கிழங்கு வகைகள். மற்றும் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை நீக்கி பச்சை கீரை வகைகள், வேக வைத்த பிஞ்சு காய்கறிகள் இவைகளை உண்பது நல்லது.

கிராமங்களில் சாதாரணமாக வேலிகளில் படர்ந்துள்ள முடக்கற்றான் என்னும் கீரையை துவையலாக அரைத்தும், இரசம் போல் தயாரித்தும் அடிக்கடி அருந்தி வந்தாலும் நல்ல பலன் தரும். அதே போல் வாதமடக்கி என்ற வாத நாராயணன் இலைகளையும் செய்து அருந்தலாம். பிரமி வழுக்கை என்ற மூலிகை நீர்ப்பாங்கான பகுதிகளில் சாதாரணமாக கிடைக்கக் கூடிய ஒன்று. பெரிய மூட்டுகளில் வலியோ, வீக்கமோ இருந்தால் இந்த பிரமி வழுக்கை இலையைச் சட்டியில் இட்டு விளக்கெண்ணெய் விட்டு வதக்கி, பொறுக்கக் கூடிய இளஞ்சூட்டில் கட்டி வந்தால் நல்ல குணம் தரும்.

நொச்சி, தழுதாழை, வாத நாராயண இலை கழற்சி கொழுந்து இவைகளுள் ஒன்றை தக்கபடி அரிந்து, சிறிது உளுந்து தைலத்தை விட்டு வதக்கி ஒத்தடமிட்டு வரலாம்.

கோதுமை, தவிடு, அல்லது நொச்சி தழை கொண்டு ஒத்தடம் இட்டு வரலாம். செங்கல் மா, மணல் இவைகளில் ஏதேனும் ஒன்றையாவது வறுத்து கிழிகட்டி ஒத்தடம் இட்டு வந்தாலும் நல்ல குணம் தரும்.

சித்த மருத்துவ தயாரிப்புகளான வாத கேசரி தைலம், பிண்டதைலம் இவற்றை மேலே பூசி ஒத்தடமிட்டு வர குணம் தெரியும்.

கேள்வி: என் வயது 16. என் முகத்தில் அதிகமாக பருக்கள் வந்து விகாரமாக இருக்கிறது. இந்தப் பருக்களால் என் முக அழகே போய் விட்டது. மனதிற்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது. வந்த பருக்களை போக்கவும், இனி வராமலிருக்கவும் ஆலோசனை கூறுங்களேன் டாக்டர்.

செல்வி.ஆன்சி செல்வராஜ், குற்றாலம்

காலில்: உளைச்சல் இருக்கும்போது தைலங்களை காலில் தடவாமல், உள்ளங்காலில் அதாவது பாதத்தின் அடியில் அழுத்தித் தேய்த்தால் விர்ரென்று ஏறி, வலி உடனே குறைந்து விடுகிறது. என் அனுபவத்தில் கண்டது.

—உமா



பதில்: பருவ வயதில் ஆண், பெண் எல்லோருக்கும் பருக்கள் தோன்றுவது இயல்பே. இவை சிலருக்கு மிக அதிகமாக தோன்றலாம். பொதுவாக பருக்கள் பருவ வயதில் நாளமில்லா சுரப்பிகளில் ஏற்படும் விகற்பத்தால் ஏற்படுகிறது. உணவில் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருந்தாலே பருக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். குறிப்பாக கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவுப் பொருட்கள் ஐஸ்கிரீம் இவைகளை தவிர்த்து கீரை வகைகள், வேக வைத்த பச்சை காய்கறிகள், பால், மோர் இவைகளை அதிகமாக சேர்த்து வர வேண்டும்.

செயற்கையான அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்துவதை அறவே நீக்கிட வேண்டும். முகத்தில் உள்ள பருக்களை கிள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் அது புண்ணாகி, மேலும் தொற்றுக்கள் ஏற்பட ஏதுவாகும். சிலருக்குச் சருமம் இயற்கையாகவே எண்ணெய்ப் பசையுள்ளதாக இருக்கும். இவருக்கு முகப்பருக்கள் எளிதில் உண்டாகும். இவர்கள் அடிக்கடி முகத்தினை இளஞ்சூடான வெந்நீரில் பாசிப் பயிறு கொண்டு கழுவி வந்தால் நல்லது. பொதுவாக முகப் பருக்கள் வந்தால் எளிய முறையில் எளிய சித்த மருத்துவ குறிப்புகளை தருகிறேன். அதிக செலவில்லாத இந்த முறைகளை நீக்கி பயன்படுத்தி குணம் பெறுங்களேன்.

புனுகை முகப்பருவின் மீது தடவி வந்தால் முகப்பருக்கள் குறைந்து முகம் பொலிவுடன் இருக்கும்.

சீரகத்தைப் பொடி செய்து பால் அல்லது தேங்காய்ப்பால் சேர்த்துத் தடவி வந்தாலும் முகப்பரு குணம் அடையும்.

குப்பைமேனி இலைச் சாற்றினை முகத்தில் தடவி வரலாம்.

சந்தன தூளும், சிறிது பன்னீரும் கலந்து பசை போலாக்கி முகத்தில் தடவி வரலாம். மஞ்சள் தேய்த்துக் குளிப்பது மிகவும் நல்லது. முகத்தில் எண்ணெய் வழிந்து காணப்பட்டால் முதலில் சிறிது நீர் விட்டு ஆவி பிடித்து விட்டு சிறிது நேரம் சென்ற பின்னர் மஞ்சள், வேப்பந்துளிர் நன்கு அரைத்து கழுவி வரலாம்.

முகத்தினைக் கழுவ பாசி பயிற்று மாவை பயன்படுத்துதல் நல்லது.

முட்டை வெண்கருவினை சருமத்திலே உண்டாக்கும் பருக்களுக்குத் தடவி வந்தாலும் நல்ல பலன் கிடைக்கும். பாலாடையைத் தடவி வந்தாலும் நல்ல பலன் கிடைக்கும்.


சாதிக்காயை நீரில் உரைத்து முகப் பருக்குப் பூசினால் நல்ல குணம் தரும்.

வெள்ளைப் பூண்டை பாலில் அரைத்து பருக்களின் மேல் பூசி வந்தாலும் பலன் கிடைக்கும்.

எல்லாவற்றையும் விட நல்ல தேகப் பயிற்சியும் மனதில் விகாரமான எண்ணங்கள் ஏற்படாமல் தவிர்க்க தியானப் பயிற்சியும் அவசி

கேழ்வரகு கஞ்சி குழந்தைகளின் உடம்புக்கு ரொம்ப நல்லது. ஆனால் கஞ்சியைக் கையில் எடுத்து வந்தால் அவர்கள் காததூரம் ஓடிவிடுகிறார்கள். கஞ்சி கிளறும் போதே கொஞ்சம் கலர் எஸன்ஸ்விட்டு சற்று கெட்டியாகக் கிளறி, கூடவே இரண்டு பிரட் துண்டுகளை வைத்து 'ஜாம்' என்று சொல்லி, கஞ்சியைச் சாப்பிட வைத்தால், கஞ்சியுடன், பிரட்டும் சேர்ந்து குழந்தை களின் வயிற்றை நிரப்பிவிடும்.

-உமா



யம் செய்ய வேண்டும்.

கேள்வி: என் வயது இருபத்தி ஐந்து. நான் ஒற்றைத் தலைவலியினால் அவதி படுகிறேன். எனக்கு அதிலிருந்து நிவாரணம் பெற ஒரு வழி சொல்லுங்களேன்.

திருமதி. பிரசன்னா, கோயம்புத்தூர்.

பதில் : ஒற்றைத் தலைவலி பல காரணங் களால் ஏற்படுகிறது. சாதாரண மலச் சிக்கலி லிருந்து மூளைக்குள் புற்று நோய் கட்டிகள் வரை இந்தத் தலைவலி தோன்றக் காரணமாக அமைகிறது. பொதுவாக தலைவலி இரத்த அழுத்தம் மிகுதியாலும், தலையில் ஏதேனும் காயங்கள் ஏற்படுவதாலும், கண்களில் ஏற்படும் குறைபாடுகளாலும் சில வகை மருந்துகளின் ஒவ்வாமையாலும், சிறுநீரகக் கோளாறுகள், நீரழிவு போன்ற நோய்களாலும், கடுமையான வெயிலில் அலைதல், தட்ப வெப்ப மாறு பாடு கள் மற்றும் பெண்களுக்கு மாத விடாய் காலத்திலும், இரவில் தூங்காமல் அதிக நேரம் கண் விழித்தல், சுற்றுப் புறச் சூழ்நிலை கெட்டு அதனால் ஏற்படும் நச்சுத் தன்மை, குறித்த நேரத்தில் உணவு அருந்தாமல் அதிக நேரம் பட்டினி இருத்தல், மதுபானம் போன்ற போதை வஸ்துகளை அதிகமாக பயன் படுத்துதல் நீண்ட காலம் காதில் சீழ் வடிதல் ஆகிய காரணங்களால் ஏற்படலாம். இவை தவிர ஒத்துக் கொள்ளாத உணவு வேறுபாட் டாலும் இந்தத் தலைவலி உண்டாகலாம்.

பல காரணங்களால் தலைவலி தோன்று வதால் என்ன காரணத்தினால் உங்களுக்கு தலைவலி உண்டானது என்று ஆராய்ந்து கண்டு பிடித்து மருத்துவம் செய்வதே முறை யாகும். இருந்தாலும் தற்காலிக சாந்திக்காக வெளிப்பிரயோக மருத்துவ குறிப்புகளை கீழே குறிப்பிட்டுள்ளேன்.

சுக்கைத் தாய்ப்பாலில் இழைத்து நெற்றியில் பற்றிடலாம்.

மஞ்சளைச் சுட்டு முகர நீரேற்றத்தால் ஏற்படும், தலைவலி நீங்கும். சித்த மருத்துவத் தயாரிப்பான நீர்க்கோவை மாத்திரையை வெந் நீரில் இழைத்து நெற்றியில் பற்றிடலாம்.

குப்பை மேனியை உலர்த்திப் பொடித்து மூக்கில் நசியமிடலாம்.

நொச்சித் தழை நான்கு பிடி, மஞ்சள் கால் பலம், இவைகளை ஒன்றிரண்டாக இடித்துக் கஷாயம் செய்வது போலக் காய்ச்சி வடித்து மீண்டும் அடுப்பில் செங்கல் துண்டுகளைப் போட்டு பழுக்கக் காய வைத்து ஒவ்வொரு கல்லாக அதில் இட்டு வியர்வை பிடிக்கலாம். இதனால் பீனிசத்தால் வரும் தலைவலி தீரும்.

கேள்வி: என் பெண்ணிற்கு வயது இருபது. சில வருடங்களாகவே பித்த வெடிப்பு உள்ளது. இதற்கு வீட்டு மருத்துவம் என்னவென்று கூறுங்கள் டாக்டர்.

திருமதி. கலா வில்வநாதன்,
திருநெல்வேலி.

பதில்: பெண்களுக்கு மிகுந்த தொல்லை தருவதில் பித்த வெடிப்பும் ஒன்றாகும். இது முதலில் பாதத்தின் கீழ்ப் பகுதியில் சிறு, சிறு வெடிப்புகளாக தோன்றுகிறது. பொதுவாக பித்த வெடிப்பு சிலருக்குத் தொற்றின் காரண மாகவும், சிலருக்குப் பரம்பரை தன்மை காரண மாகவும் ஏற்படலாம். இது எப்போதும் பாதத்தைச் சுத்தமாக வைக்காதவர்களிடத்தும், சகதி, மண், புழுதி, சேறு முதலியவற்றில் எப் போதும் ஈடுபடுபவர்களிடமும் உண்டாகிறது. பாதத்தில் தோலானது தன் மென்மைத் தன்மையை இழந்து கடினமாக மாறுகிறது. இது வலியை உண்டாக்குவதோடு பாதங்களின் அழகையும் கெடுத்து விடுகிறது. சிலருக்குப் பாதத்தின் பின் பகுதி மட்டும் அல்லாது உள்ளங்கால் முழுவதும் வெடிப்புகள் ஏற்படும். சிலருக்கு உள்ளங்கையிலும் வெடிப்புகள் காணப்படும். இவர்கள் அதிக நெய்ப்புத் தன்மையுடைய உணவுப் பொருட்கள் உண்ண வேண்டும்.

இவர்கள் படுக்கைக்குச் செல்லுமுன் தினமும் கால்களை இளவெந்நீரில் கழுவி சுத்தமாக துடைத்து விட்டுச் செல்ல வேண்டும்.

எப்போதும் காலணிகளை பயன்படுத்த வேண்டும். பாதத்தில் அழுக்கு சேராமல் பார்த் துக் கொள்ள வேண்டும்.

சித்த மருத்துவத்தில் அமிர்த வெண்ணெய், கிளிஞ்சல் மெழுகு போன்ற மருந்துகள் உள்ளன. அவற்றைப் பூசி வந்தால் பித்த வெடிப்பு எளிதில் மறைந்து பூரண குணம் கிடைக்கும். முறைப்படி முந்திரி எண்ணெயைத் தொடர்ந்து தடவி வந்தாலும் நல்ல பலன் கொடுக்கும்.

மணிமேகலைப் பிரசுரத்தின் புதிய நூல்கள்!



நோய்களும் மூட நம்பிக்கைகளும் ரூ. 24.00

டாக்டர் திரு. பி. பாஸ்கர பாண்டியன் எம்.டி., எப்.ஆர்.எஸ்.டி.எம். எப்.ஏ.ஜி.இ., எம்.ஆர்.எஸ்ஸ்ச் எழுதியுள்ள அருமையான புத்தகம். மஞ்சள் காமாலை பெரியம்மை; தாண்டயம்மை; வெண்குஷ்டம்; குஷ்டம்; கால்கை வலிப்பு; நாய்க்கடி; சர்க்கரை வியாதி; மாந்தம் போன்ற பல்வேறு வியாதிகளைப் பற்றிய தவறான நம்பிக்கைகளை அடியோடு தகர்த்தெறிந்து பயனுள்ள மருத்துவ யோசனைகளைச் சொல்லியிருக்கிறார். இதர நூல்கள் : டாக்டர் முத்துச் செல்லக்குமார் எழுதியுள்ள புதிரான நோய்களுக்கு டாக்டரின் பதில்கள் 27.00; டாக்டர் இரா. ரவிச்சந்திரன் எழுதியுள்ள ஆங்கில மருத்துவச் சொல் அகராதி 63.00; ஆண் குழந்தை பெற வேண்டுமா? 16.50; கர்ப்ப காலப் பிரச்னைகளும் தீர்வுகளும் 16.00; டாக்டர் சந்தான கிருஷ்ணன் எழுதியுள்ள குழந்தை மருத்துவரின் பயனுள்ள யோசனைகள் 12.00; டாக்டர் எஸ். ராஜா எழுதியுள்ள குழந்தை வளர்ப்பு கலையா? கவலையா? 34.50.



ஷேர் மார்க்கெட் பற்றிய ஐயங்களும் விளக்கங்களும் ரூ. 43.00


இத் துறையில் மிகுந்த அனுபவமிக்க திரு. டி. சீனுவாச ராஜகோபாலன் எழுதியுள்ள நூல் இது. இதர நூல்கள் : உங்கள் பணத்தைப் பங்கு முதலீடுகள் மூலம் பன்மடங்கு ஆக்குவது எப்படி? 12.00; பணம் வேண்டுமா? 18.00; பணத்தொல்லைகளைப் போக்கப் பல வழிகள் 7.50; வியாபாரத்தை விருத்தி செய்வது எப்படி? 11.00; வியாபாரத்தில் இலாபத்தைக் குவிப்பது எப்படி? 14.00; மூலதனத்தைத் திரட்டுவது எப்படி? 14.00; பல்வேறு வட்டித் தொழில் செய்து சம்பாதிப்பது எப்படி? 13.00; வங்கிகளில் கடன் பெறுவது எப்படி? 14.50; தமிழகக் கடன் நிவாரணச் சட்டங்கள் 14.00; கடன் தொல்லைகளைச் சமாளிப்பது எப்படி? 10.00.

திரைக் கலைஞர்களை வரையக் கற்றுக்கொள்ளுங்கள் ரூ. 30.00



புகழ்பெற்று விளங்கும் நடிகர்கள், நடிகைகள், இயக்குநர்களின் படங்களை எப்படி வரைவது என மூன்று கட்டங்களில் எளிமையாக வரைந்து கற்றுத் தருகிறார் திரு. சின்னதம்பி மார்த்தாண்டன். இதர ஓவிய நூல்கள் : ஓவியம் வரையக் கற்றுக் கொள்ளுங்கள் பாகம் -1 ரூ. 25.00, பாகம் - 2 ரூ. 22.00; கேலிச் சித்திரங்கள், சிரிப்புப் படங்கள் வரைவது எப்படி? 28.50; பல்வேறு கோணங்களில் வரைவது எப்படி? 17.00; தத்ரூபமாக வரைவது எப்படி? 20.00; மனித உருவங்களை வரையக் கற்றுக்கொள்ளுங்கள் 20.00; கடவுள் உருவங்களை வரையக் கற்றுக்கொள்ளுங்கள் 22.00; மாடர்ன் ஆர்ட் வரைவது எப்படி? 13.00; விளம்பர ஓவியங்கள் வரைவது எப்படி? 13.00; ஆயில் பெயிண்டிங் வரையக் கற்றுக் கொள்ளுங்கள் 30.00.

உடல் உறுதிபெற உடற்பயிற்சி முறைகள் பாகம் - 1 ரூ. 11.00



வீட்டிலேயே செய்யக்கூடிய எளிமையான பயிற்சிகள் ஏராளமான படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் எவரும் தேவையில்லை, நீங்களே கற்றுக் கொள்ளலாம். இதர நூல்கள் : உடல் உறுதிபெற உடற்பயிற்சி முறைகள் பாகம் – 2 ரூ. 24.00; பெண்களுக்கான எளிய உடற்பயிற்சிகள் 14.00; உடம்பு உறுதியாக இருக்க வேண்டுமா? 10.00; ஒல்லியாக இருக்கும் நீங்கள் குண்டாக விரும்புகிறீர்களா? 8.00; உடல் பருமனைக் குறைக்கச் சுலபமான வழிகள் 15.00; நீங்கள் உயரமாக வளர வேண்டுமா? 9.00; சிவப்பாக ஆக வேண்டுமா? 9.00; முகப்பருவைப் போக்க முப்பது வழிகள் 9.00; மூச்சுப் பயிற்சியும் ஒருமுகச் சிந்தனையும் 17.00; தியான நெறிகளும், நன்மைகளும் 21.00; யோகாசனம் கற்றுக்கொள்ளுங்கள் 30.00; கராத்தே கற்றுக்கொள்ளுங்கள் பாகம் -1 ரூ. 25.00; பாகம் - 2 ரூ. 27.00; ஜூடோ கற்றுக்கொள்ளுங்கள் 21.00; குங்ஃபூ கற்றுக்கொள்ளுங்கள் 14.00; குத்துச் சண்டை கற்றுக்கொள்ளுங்கள் 18.00.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி). சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக்கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம் : காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை.

வாசகர்களுக்குப் புதுமையான கட்டுரைப் போட்டி!

தபால் தமிழ் உலகமும், மணிமேகலைப் பிரசுரமும் சேர்ந்து நடத்தும் போட்டி இது. 'நான் சுயமாகத் தொழில் தொடங்க மணிமேகலைப் பிரசுரத்தின் தொழில் நூல்கள் எவ்வாறு உதவின?' என்ற தலைப்பில் 6 பக்கங்களில் கட்டுரையாக எழுதி அனுப்புங்கள். சிறந்த முதல் கட்டுரைக்கு 3,000/- ரூபாய் பெறுமானமுள்ள நூல்கள் பரிசு! இரண்டாம் பரிசு ரூ. 2000 பெறுமானமுள்ள நூல்கள் : மூன்றாம் பரிசு ஆயிரம் ரூபாய்க்கான நூல்கள் : ரூ. 100 மதிப்புள்ள நூல்கள் வீதம் 10 ஆறுதல் பரிசுகள். போட்டிக்கான கடைசி தேதி : 30.4.96

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447, 4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 4342926 தொலைநகல் : 044-4346082

தொடரும் பயணம்
நெல்லை செல்வத்தின் சிறுகதைத் தொகுப்பு. கணவன், மனைவி இடையேயான உறவுநிலைகளை, பிரச்னைகளைக் கூறுகிறார்.

பக்கங்கள் : 96 விலை ரூ. 20.00

(செல்லப்பா பதிப்பகம், எண். 6, கஸ்தூரிபாய் நகர் 4 - வது தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600 070.)

பகவான் ரமணர்
பகவான் அவதாரம் முதல் இன்றைய ரமணாச்ரமம் வரை எளிமையாக பக்திமணம் கமழத் தந்திருப்பவர் நாகர்கோவில் கிருஷ்ணன்.

பக்கங்கள் : 256 விலை ரூ. 40.00


திருமுருகன் திருத்தலங்கள் - 108
ஆறுபடை வீட்டுடன் இலஞ்சி, கந்தாச்ரமம், திருமயிலாடி என 108 திருத்தலங்களின் சிறப்புகளை விவரித்துள்ளார் நாகர்கோவில் கிருஷ்ணன்.

பக்கங்கள் : 252 விலை ரூ. 40.00

(இரண்டும் - குமரன் பதிப்பகம், 2, முத்துக் கிருஷ்ணன் தெரு, த.பெ. எண். 6124, தி.நகர், சென்னை - 17.)

புகார்
சுஜாதாவின் ஏழு சிறுகதைகளும் ஒரு குறு நாவலும்.

பக்கங்கள்: 148
விலை ரூ. 26.00



திருவிளக்கு பூஜை
நவக்கிரக ஸ்தோத்திரங்கள், கோலங்கள், பூஜை செய்யும் முறைகளுடன் எழுதியிருப்பவர் ச. சுப்பிரமணியம்.

பக்கங்கள் : 40 விலை ரூ. 6.00

(இரண்டும் - குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001)

பேருக்கு ஒரு கணவன்
சாதாரண ஒரு பெண் ஒரு பெரும் போர்க் குணம் மிக்கவளாக, வீராங்கனையாக மாறிய கதையை எழுதியிருப்பவர் புனிதன்.

பக்கங்கள் : 212 விலை ரூ. 40.00

சில வரிகளில் அரிய செய்திகள்
நிறைய பொது அறிவுச் செய்திகள். ஆசிரியர் - கே. எஸ். சுப்ரமணி

பக்கங்கள் : 148 விலை ரூ. 28.00

(இரண்டும் - மணிமேகலைப் பிரசுரம், த.பெ. எண். 1447, தி.நகர், சென்னை - 600 017.)

ஒரு மனிதன் பேசுகின்றான்
ஆன்மீக வழியில் மனிதனின் முன்னேற்றம் பற்றிப் பேசுபவர் முருகப்பிரியன்

பக்கங்கள் : 136 விலை ரூ. 25.00

(ஓம் முருகா பதிப்பகம், 27, ஜகஜீவன் தெரு, திருவள்ளுவர் நகர், பம்மல், சென்னை - 75.)

எழுத்தாளர்களுக்கு...
எழுத்தாளர்களுக்கு உபயோகமான செய்திகள். நூல் வெளியிடுதல் சம்பந்தமாக உதவும் பல செய்திகள். ஆசிரியர் - ஏர்வாடி எஸ். இராதா கிருஷ்ணன்.

பக்கங்கள் : 132 விலை ரூ. 18.00

(சுதா பதிப்பகம், 4, முத்து முதலித் தெரு, புரசைவாக்கம், சென்னை - 7.)

உலகப் புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரர்கள்
குத்துச் சண்டை வீரர்களைப் பற்றிய தகவல்கள், கதைகள், வாழ்க்கைச் சம்பவங்கள். தொகுப்பு : சேரன்.

பக்கங்கள் : 185 விலை ரூ. 45.00

ஒலிம்பிக் வீரர்கள், வீராங்கனைகள்
1896 - 1992 - வரையிலான புகழ் பெற்ற ஒலிம்பிக் வீரர்களைப் பற்றிய தொகுப்பு - சேரன்.

பக்கங்கள் : 189 விலை ரூ. 45.00

The following particulars regarding the ownership of 'MANGAYAR MALAR' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Madras
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	V. Murali
Nationality	:	Indian
Address	:	D-38, Nelson Chambers, 115, Nelson Manickam Mudaliar Road, Aminjikarai, Madras - 600 029.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034.
5. Name of Editor	:	Manjula Ramesh
Nationality	:	Indian
Address	:	7, Arunachalapuram 2nd Street, Adyar, Madras - 600 020.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1996

K. Rajendran
Publisher

(இரண்டும் - சாந்தி பப்ளிகேஷன்ஸ், 44, அண்ணா சாலை, சென்னை - 2.)

குப்பத்து சாஸ்திரிகள்

பி.வி.ஆர். எழுதிய மனிதநேயம் இழையோடும் நாவல். குப்பத்திலே வாழ்ந்து பாமர மக்களின் வாழ்க்கையோடு இணைந்த மனிதரைப் பற்றிய கதை.

பக்கங்கள் : 251 விலை ரூ. 40.00

நுரைப் பூக்கள்

இன்றைய சமூக அவலம் மற்றும் திரையை நம்பி வாழ்க்கையை மாற்றிக் கொள்ளும் ரசிகர்களில் ஒருவனின் கதை. ஆசிரியர் : ஜனகன்.

பக்கங்கள் : 357 விலை ரூ. 60.00

(இரண்டும் - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.)

அபிராமி அம்மைப் பதிகம்

பக்கங்கள் : 14 விலை ரூ. 3.00

திருமுறைத் திரட்டு

நால்வர் பாடிய அறுபது பாடல்கள்.

பக்கங்கள் : 14 விலை ரூ. 3.00

(இரண்டும் - சருந்தலை நிலையம், 58, ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.)

மகான்களின் வாழ்வும் வாக்கும்

காஞ்சிப் பெரியவர், ஆதிசங்கரர் போன்றோரின் வாழ்க்கைச் சரிதச் சுருக்கமும், அவர்களின் அருள்வாக்கும். ஆசிரியர்கள் - கே. என். சரஸ்வதி, பால. அர்த்தநாரீசுவரர்.

பக்கங்கள் : 104 விலை ரூ. 20.00

(கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

எல்லையற்ற வெற்றிக்கு இதோ சில யோசனைகள்

ஆசிரியர் பி. சி. கணேசன்

பக்கங்கள் : 112 விலை ரூ. 18.00

ஸாமுத்ரிகா லட்சண சாஸ்திரம் எனும் அங்கம், மச்ச பலன்கள்

பக்கங்கள் : 100 விலை ரூ. 15.00

(இரண்டும் - நர்மதா பதிப்பகம், 16/7, ராஜா பாதர் தெரு, பாண்டிபஜார், தி. நகர், சென்னை - 600 017.)

அவள்

லா. சா. ராமாமிருதம் எழுதிய தொகுப்பு. அவரே சொல்வது போல 'இதன் முதன் மூன்று கதைகளா, கட்டுரைகளா என இனம் நிர்ணயிக்க முடியாதபடி அலை அமைந்து விட்டன.' ஆனாலும் அவரின் நெகிழ்ந்து உருகும் வார்த்தைகளில் 'அவள்'!

பக்கங்கள் : 511 விலை ரூ. 90.00

ஸ்ரீ ஜயேந்திரர் பதிலளிக்கிறார் (இரண்டாம் பகுதி)

ஆன்மீக சம்பந்தமான பல கேள்விகளுக்கு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் பதில்கள்.

பக்கங்கள் : 128 விலை ரூ. 20.00

(இரண்டும் - வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

நல்ல உறக்கத்திற்கு KFC மெத்தைகள்

உங்கள் உடல் ஆரோக்கியமாகவும், வலிமையுடையதாகவும் முதுகு வலியின்றி நல்ல புத்துணர்ச்சியுடன் தூங்கி எழுந்திருக்க எங்களது KFC மெத்தைகளை வாங்கிடுவீர்.



எங்களிடம்

- KFC காயர் மெத்தைகள்,
- KFC காயர் ஃபோம் மெத்தைகள்
- KFC ரப்பர் ஃபோம் மெத்தைகள்

மற்றும் சொகுசான தலையணைகளும் சோபா குஷன்களும் கிடைக்கும். இவையனைத்தும் தரமானது, நீடித்து உழைக்கக் கூடியது.

ஹோட்டல், லாட்ஜ், ஆஸ்பத்திரி, நர்ஸிங் ஹோம் மற்றும் இல்லத்திற்கு தேவையான மெத்தைகளும் கிடைக்குமிடம்

அணுக வேண்டிய முகவரி :

Karnataka Foam & coir Company

133, Pycrofts Road, Royapettah,
Madras - 600 014.

Ph : 8526622, 8523389, 830199, 831929

எல்லா வகையான மெத்தைகளுக்கும் உத்தரவாதம் உண்டு. Free டெலிவரி உண்டு. 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வீஸ் செய்து தரப்படும்.

ADVT.


சரியாகத்தான் போகிறோமா?

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

பெண்கள் நடை, உடை, பாவனைகளில் சமீபகாலமாக மிகவும் மாறி வருகிறார்கள். இவர்கள் சரியாகத்தான் போகிறார்களா என்று விவாதிக்கிறார்கள் :– அனந்தகிருஷ்ணன் (துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்), உமாகண்ணன் (ஆடிட்டர்), ரூபாரங்கனாதன் (அப்போல்லோ மருத்துவமனை), மதன்மோகன் (சி.ஏ. மாணவர்), சுபாஷிணி (+1 மாணவி), ஜரினாமொகைதீன் (சமூக சேவகி).

திரு. அனந்தகிருஷ்ணன் : பெண்கள் சுயமாக ஒரு தொழில் தொடங்கிச் செய்வது சிறந்தது. குழந்தைகளையும், குடும்பத்தையும் விட்டுக் கொடுக்காமல் மற்றவரிடம் கையேந்தி தங்கள் தகுதிக்கும் திறமைக்கும் குறைந்த வேலையில் சேர்ந்து குறைந்த சம்பளத்துக்காக உழைப்பதை விட அது நல்லது.

ஜரினா : வேலைக்குப் போகும் இந்தப் பெண்கள் பஸ்ஸிலே ஏறிவர பரிதாபக்



• மதன்மோகன், உமா, துணைவேந்தர்

காட்சியைப் பாருங்க. பஸ்ஸிலே ஓடி ஏறி கையிலே ஹேண்ட் பேக் வேறே. இதுலே 40 வயசுக்கு மேலே ஆனவங்க ஓடி வரதை பார்க்கற போது ரொம்பப் பாவமாயிருக்கு. இதுக்கு ஒரு சிறு தொழில் வீட்டிலேயே தொடங்கலாம். வீட்டையும், குழந்தைகளையும் கணவரையும் நன்கு கவனித்துக் கொண்டு திறமையும் நேரமும் வீணாகாமல் தொழிலையும் தொடர்ந்து வருமானமும் பார்க்கலாமே!

து. வே: இது மாதிரி நிறைய வாய்ப்புகள் எத்தனையோ இருக்கு. இதை மங்கையர் மலர்லே படிச்சுட்டு



• சுபாஷிணி



• ஜரினா



• ரூபா

'இதைச் செய்ய என்ன படிக்கணும் யார்கிட்டே போகணும்னு என்ன ட்ரெயினிங் எடுக்கணும்' – இதுபோன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லி அவர்களுக்கு உதவ நம்ம சமூகத்துலே சூழ்நிலை இருக்கா?

சுபா : இதுபோன்ற சூழ்நிலைகளைப் பத்தி நாங்க பள்ளிகள்ள பேசறோம். எங்க சீனியர் என்ன கோர்ஸ் படிக்கறாங்க? அதுலே உள்ள வாய்ப்புகள், சப்போஸ் நாம நினைக்கற 'கோர்ஸ்' கிடைக்கலேன்னா 'ஆல்டர்நேடிவ்' என்ன? – இதெல்லாம் கூட டிஸ்கஸ் பண்ணுவோம்.

ரூபா : நாங்க மாணவர்களா இருந்த போது 'கரியர் கைடென்ஸ் ஃபேர்' கிடையாது. இப்போ நிறைய இருக்கு. சுற்றுலா போன்ற புதிய துறைகள் வாய்ப்புகள் என நிறைய இருக்கு. இன்றைய தலைமுறை தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் அவ்வளவுதான்.

உமா : ஒருவரின் திறமையைத்தான் இந்த கரியர் கைடென்ஸ் எடை போடுகிறது. ஆனால் இளைய தலைமுறையினரின் ஆசைகளுக்கும், வேகங்களுக்கும் தடைபோடாமல் இருப்பதோடு அவர்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளவும் முதிய தலைமுறையினர் ஆர்வம் காட்ட வேண்டும். பெற்றோர்கள் தரும் உற்சாகம், வழிகாட்டுதல், ஊக்கம் போன்றவைதான் குழந்தைகளின் எதிர்காலத்தை உருவாக்குகின்றன.

து.வே: நீங்க சொல்ற இதெல்லாம் நகரத்துல இருக்கற படிச்ச பெற்றோர்களாலே செய்ய முடியுது. வெளியூர்களிலே கிராமங்களிலே இருக்கிற குழந்தைகளுக்கு எட்டுமா? அங்கே இருக்கிற பெண்கள் சுபா சொன்னது போல டிஸ்கஸ் செய்வாங்களா? அவுங்க பெற்றோர்கள் அதை அனுமதிப்பாங்களா?

உமா : நாம் நகர்ப்புறங்களைத்தான் ஆய்வு பண்ணியிருக்கோம்.

து.வே: டீ.வி.ல 24 மணி நேரம் கூத்து பாட்டு காட்டறதுக்குப் பதில் சமூகக் கடமையோடு இதுபோன்ற வாய்ப்புகளைக் காட்டலாமே? பிபிஸி போன்றவைகளில் மக்களோட மனவளர்ச்சிக்காக செய்வது போல நம்மூர்லே சேனல் வச்சிருக்கவங்களும் செய்யலாமே? இப்படிப்பட்ட விஞ்ஞான வளர்ச்சிகளின் மூலம் கிராமத்திலுள்ள இளைய சமுதாயம் பயனடையும்படி செய்யலாமே!

ரூபா : 'Z' டீ.வி. கம்ப்யூட்டர் சொல்லித் தராங்க. என் 62 வயது தாயார் அதைப் பார்த்து கத்துக்கிட்டு இருக்காங்க. இதுபோன்ற வழியில் என்றால் ஜனங்களை எளிதாகப் போய் அடையுமே! எஜுகேஷனல் சேனல்...

து.வே : கல்விச் சேனல் பார்க்க யாருக்கு விருப்பமிருக்கு? கறுப்பு மருந்தை சர்க்கரை தடவி தருவது போல வேறு நிகழ்ச்சிகளோட இதைக் கலந்துதான் தர வேண்டும்."

உமா : டீ.வி. மட்டுமில்லாமல் பள்ளிகள், தொண்டு நிறுவனங்கள் போல தனிப்பட்ட முறையிலும் இதைச் செயயலாம்.

து.வே : பெண்களுக்குள்ள வேலை வாய்ப்புகள் பற்றிச் சொல்லி கல்யாணம் மட்டுமே வாழ்க்கைக்குத் தீர்வு இல்லை என்பதை விளங்க வைத்து மாற்று வாய்ப்புகள் பற்றிச் சொல்லி அவர்களுக்குப் புரியச் செய்ய வேண்டும். எல்லா மீடியாக்களிலும் அவ்வப்போது இதைச் செய்யலாம். டீவி. பார்ப்பதனால் மனம் கெடும் வாய்ப்பு மற்றும் நேரம் பறிக்குது என்ற எண்ணம் உண்டு. நேரம் கிடைக்கும்போதெல்லாம் படிக்கற குணம் பெண்களுக்கு உண்டு. இப்போது அந்த நேரம் டீ.வி.யாலே பறிக்கப்படுதுன்னு நெனைக்கறேன். மனம், உடல், திறமை மூன்றுவிதமான வளர்ச்சிகள் குழந்தைகளுக்குத் தேவை. இவைகளைச் செய்யற நேரம் டீவியாலே பறிக்கப்படுது."

ம. மோகன் : மனதை அடக்கும் திறன் வேண்டும். இதைப் பெற்றோர்கள்தான் வளர்க்க வேண்டும். சமூகத்தின் தேவை தன் சுயதேவை இரண்டையும் அறிந்து அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் குழந்தை வளர்க்கப்பட வேண்டும். குழந்தை நன்கு உருவாவது பெற்றோர்களிடமும் சமூகத்தினிடமும்தான் உள்ளது.

ரூபா : இன்று பொருளாதாரக் கொள்கைகளின் மாறுபாடு காரணமாக எத்தனையோ கார்கள் எத்தனையோ நவீன பொருட்கள், ஷேம்புவில்தான் எத்தனை வகைகள். நாட்டில் இதுவரை பார்த்திராத பொருட்கள். பணத்தின் பின்னாடியே செல்லும் சமூகம் இன்று உருவாகி விட்டது.

து.வே: உங்களைப் போன்ற பத்திரிகைகள் வேறு ஷேம்பூவை பிளாஸ்டிக் கவரில் போட்டுத் தருகின்றனர். (சிரிக்கின்றனர்)

நம்ம பண்பாடே போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பதுதான் இருக்கிறது. ஆனால் இன்று மிக அதிகம் சம்பாதிக்க வேண்டும், எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்றாகி விட்டது. அதனால்தான் நாம் சரியாகத்தான் போகிறோமா? இன்றைய இந்தக் கோட்பாடுகள் சரியா எனச் சந்தேகம் வருகிறது எனக் கேட்டார் மங்கையர் மலரின் ஆசிரியை மஞ்சுளா ரமேஷ்.

ரூபா : உலகத்தின் சிறந்த தரமான பொருட்களை நாம் அனுபவிப்பதில் தவறென்ன இருக்கிறது. ஆனால் அதற்காக ஒரேயடியாக மோகம் கொண்டு செலவழிப்பதுதான் தவறு

''இப்போது பெண்கள் நிறைய சம்பாதிக்கிறார்கள். அந்தப் பணத்தை கன்ஸ்யூமர் அயிட்டங்களில் மட்டும்தான் செலவிடுகின்றனரா? அல்லது உற்பத்தித் துறை போன்றவைகளில் முதலீடு செய்கின்றனரா?'' - வினவுகிறார் மஞ்சுளா ரமேஷ்.

து.வே: பெண்கள்தான் சேமிப்பில் சிறந்து விளங்கினார்கள். ஒரு காலத்தில் நகைகளிலும், வங்கிகளிலும் முதலீடு செய்து வைத்தனர். பொருளாதார பாதுகாப்புக்காக சேமித்த அந்தக் கலாச்சாரம் மாறி வருகிறதா? விளம்பரங்கள் மூளை சலவை செய்கிறதா? அடுத்த வீட்டில் உள்ளவைகள் போல் தாங்களும் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களா பெண்கள்?

ஜரினா : ஆண்களை தொந்தரவு செய்து கேட்பது பெண்கள்தான். அந்தக் காலம் போல இல்லை. நானும் பெண்தான் என்றாலும் இதைச் செய்ய வேண்டிய நிலை. விளம்பரங்களைப் பார்த்து - ஒன்று வாங்கினால் 2 இனாம் என்பவைகளைப் பார்த்து உடனே போய் க்யூவில் நிற்பவர்கள் பெண்கள்தான்.

து.வே: இந்த நிலை இப்படியே போனால் சமூகத்துக்கு என்ன விளைவு வரும்? பொருளாதாரத்தை - குடும்ப நிலையை எப்படிப்

பாதிக்கும்? கடன் வாங்கி வாங்கி செலவழிச்சுக்கிட்டா என்ன ஆகும் நிலைமை? பட்டுப் புடைவைகளாகவும், சோப்புப் பவுடர்களாகவும் நகைகளாகவும் வாங்கிக் கொண்டே போனால்... இப்படிச் சிந்தித்துப் பார்க்கும் போது ஆரம்பத்துலே அப்படியிருக்கலாம். இது புதுவெள்ளம். ஆனா போகப் போக சரியாகி விடும் என்றுதான் தோன்றுகிறது.

உமா : குடும்பத்தை நிர்வாகம் செய்து, வீட்டுக்குத் தேவையானவைகளைத் தேர்ந்தெடுத்து வாங்குவது பெண்கள்தானே? சில சமயம் இப்படி ஏதாவது விளம்பரங்களைப் பார்த்து வாங்கி வருவதைக் குறைசொல்ல முடியாது. எந்த ஆண் கடைக்குச் சென்று வீட்டுக்குத் தேவையானவைகளை வாங்கி வருகிறார். பணம் இருக்கும் போதுதானே வாங்க முடிகிறது. மக்களின் வாங்கும் திறன் கூடியிருப்பதை இது காட்டுகிறதே? பொருட்களைப் பற்றி மட்டுமா விளம்பரங்கள் வருகின்றன? முதலீடு செய்வது குறித்தும், சேமிப்புப் பற்றியும் கூடப் பல விளம்பரங்கள் வருகின்றதே? முதலீடு குறித்து வரும் விளம்பரங்கள், ஷேர்கள் பற்றிய செய்திகளைப் படிக்கும் எத்தனையோ பெண்கள் எப்படி எங்கு சேமிக்கலாம் என்று எண்ணத் துவங்கியுள்ளனர். ரெகுலராக சீட்டுகளிலும் முதலீடு செய்கின்றனர். எத்தனையோ பெண்கள் ஷேர்களில் முதலீடு செய்து தங்கள் முதலீட்டை இரட்டிப்பாக்குகின்றனரே?

து.வே: "ஃபேன்ஸி பொருட்களினால் நம் நாட்டின் அன்னிய செலாவணி வீணாகிறது. கார்ன்பிளேக்ஸ், கொக்ககோலா, காஸ்மெடிக்ஸ் பல இவைகள் அன்னிய நாட்டின் கட்டுப்பாடுகள் உள்ளவை. அதிகமான பெண்கள் இவைகளைத்தான் விரும்புகிறார்கள். நாமே தயாரித்து இவைகளை விற்பனை செய்தால்... வாங்கும் திறன் கூடுவதால் கிடைக்கும் பலன் நம் நாட்டிற்கே கிடைக்குமே!

ரூபா : என்னதான் 'கார்ன்பிளேக்ஸ்' போன்றவைகளை வாங்கினாலும் நாம் சாப்பிடும் இட்லி வடைகளை நிறுத்த மாட்டோம். உலகின் சிறந்தவைகளை வேண்டும் என விரும்புவது இயற்கைதானே? அடுத்தவர்களைப் பார்த்து அவர்கள் வைத்திருப்பது போல நமக்கும் வேண்டும் என எண்ணாமல் அதையே எண்ணி ஏங்காமல் தெரிந்து கொள்வது நல்லதுதானே? அடிப்படை உண்மைகள் எதனாலும் அழிவதில்லை.

து.வே: பெண்களுக்கான சில தொழில்கள் உண்டு. சிறிய ஊர்களில் இட்லி கடை உண்டு. ரொட்டிக் கடை அதில் டபுள் ரொட்டி உண்டு. சிறுதொழில் தொடங்கி நடத்தும் திறன் உண்டு. வெளிநாட்டின் மகாகம்பெனிகளுடன் அவர்களால் போட்டியிட முடியாது. இது தொடர்ந்தால் இந்த அடிப்படைத் தொழில்கள் இதையொட்டிய கலாசாரம் அழிந்து விடுமோ என்ற பயம் கூட ஏற்படுகிறது.

ரூபா : வேற்றுமைகள் என்றுமே இந்தியாவில் உண்டு. ஒருவர் காப்பி குடித்தால் இன்னொருவர் டீ. எதுவும் எதையும் மறைத்து விட முடியாது.

து.வே.: அப்பளம் பெண்களுக்கு நல்ல வருமானம் தந்த தொழில். இதையே ஃபாரின் கம்பெனிகள் செய்யும் போது? அதிகமான தயாரிப்பு, தரம், பேக் செய்வது – விளம்பரம் விலை, கவர்ச்சி இப்படி எல்லாமே பெரிய அளவில் இருக்கும்போது?

உமா : இப்படி அன்னிய வரவினால் சிறு தொழில்களிலும் தரம் சுவை என நிச்சயம் முன்னேற்றமிருக்கும்.

து.வே : தொழில் முன்னேற்றக் கொள்கைகளில் புதிதாக தொழில் தொடங்கும் பெண்களுக்கு நிறைய வாய்ப்புகள் உண்டு. வீட்டில் உள்ள சாமான்களை ரிப்பேர் செய்ய ஆள் கிடைப்பது கஷ்டம். சுய தொழிலாக இவைகளை லோக்கல் ஏரியாவில் செய்யலாம்.

ஜரீனா : படிக்காத பெண்களில் பலரும் வீட்டிலிருந்தபடியே எத்தனையோ வேலைகள் செய்கின்றனர். அதே போல படித்த பெண்களும் வெளியே வேலைக்கென அலையாமல் வீட்டிலிருந்தபடியே தொழில் தொடங்கலாமே?


முன்பு வீட்டில் செய்த தொழில்கள் வேறே. இப்போ கம்ப்யூட்டர் வச்சு டாகுமெண்ட் பண்றது போல செய்யும் வேலைகள் அதிகம்."

து.வே: மாறிவரும் போக்கினால் நம் பண்பாடு பாதிக்கப்படுமா? தொழிற்புரட்சிக்குப் பின்பு மேல்நாடுகளில் என்ன நடந்தது என்று பார்த்தால் விரும்பத்தகாத நிலை. பெண்

எங்களது திருமணத்துக்குப் பரிசாக வந்த ஹாட்பேக் (டிபன் கேரியர் டைப் சிறியது) உபயோகிக்கப்படாமல் இருந்தது. இப்போது ப்ளாஸ்க் போல உபயோகிக்கிறேன். டம்ளரில் காபி போட்டு அப்படியே அதனுள் வைத்து விட்டால் 3 மணி நேரம் அதே சூட்டுடன் இருக்கிறது. ப்ளாஸ்க் கழுவும் சிரமம் இதில் இருப்பதில்லை.

— நளினி ஜெயபால்





சுவற்றில் மட்டும் டிஜிடல் குவார்ட்ஸ் கடிகாரங்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு, ரிப்பேர் என்று வந்து விட்டால், அடிக்கடி ரிப்பேர் பார்க்கும் செலவில் புதிதாக ஒன்று வாங்கி விடலாம். அப்படிப்பட்ட சமயங்களில், குவார்ட்ஸ் கடிகாரங்களின் உள் இருக்கும் கடிகார முள், நம்பர்களை எடுத்துவிட்டு, சுவாமி படங்கள் வைத்துப் பூஜை அறையில் வைக்கலாம்.

– சி. பூங்கோதை

கள் கல்யாண வயதைத் தள்ளிப் போடுதல் குடும்பத்தை விரும்பாத நிலை. குடும்பமே வியாபாரமாகி விட்டது. எடுத்ததுக்கெல்லாம் டிவோர்ஸ். இன்று அப்படி ஒரு நிலை இல்லை நம் நாட்டில். இனி வருமா?"

உமா : 5000 வருடங்களாக தொடர்ந்து வரும் இந்தக் கலாசாரத்தில் அவ்வப்போது ஏதாவது மாறுதல்கள் இருக்கலாம். ஆனால் குடும்பம் – பாசம் இதெல்லாம் என்றும் குறையாது.

து.வே: இந்தியாவின் மக்கள் தொகையில் பாதி அளவு இருக்கும் பெண்கள் வீணாக எந்தப் பணியிலும் ஈடுபடாமல் இருப்பது இந்தியாவின் பொருளாதாரத்தையே பாதிக்கும். அவர்களுக்குத் தொடர்ந்து பணிபுரிந்து பொருளாதார லாபங்களை அனுபவிக்கவும், அதே நேரத்தில் குடும்ப வாழ்க்கையையும் பாதிக்காமல் இருக்கவும் அவர்களுக்குச் சிறப்பான வாய்ப்புக்கள் உண்டா என்பதுதான் தற்போதைய கேள்வி. திறமையுள்ள பெண்கள் வாய்ப்புக்களைப் பயன்படுத்தாவிட்டால் இந்தியாவின் பொருளாதாரம் 100 ஆண்டுகள் பின்தங்கி விடும்.

உமா : இதற்கு ஆண் பெண் என வித்தியாசம் இல்லாமல் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டும். நாம் போவது சரியான வழிதான். குடும்பப் பாசம் பந்தம் என்றும் மாறாது.

ரூபா : சவால், அதற்குப் பதில், நம் பொறுப்பு இவை மூன்றும்தான் இன்று நம் மனத்தில் நிற்க வேண்டிய ஒன்று. என்னதான் தொழில்நுட்பம் அதிகமாக இருந்தாலும் பண்பாடு என்றும் மாறாது. அதற்கு உதாரணம் டி.வி.யில் வந்த மகாபாரதம் மக்களைக் கவர்ந்த விதம். தற்போது வந்துள்ள சௌகர்யங்களினால் பெண்களின் வேலைகள் குறைக்கப்படுவதால் அவளுக்கு நிறைய நேரம் ஒதுக்கப்படுகிறது. அதைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தலாம்.

ஜரினா : எத்தனை நாகரீகமான யுகமானாலும் இந்தியக் கலாச்சாரம் மாறுபடாது. இளம்பெண்கள் தங்கள் வயது காரணமாக ஏதாவது தவறுகள் செய்யலாம். அதையும் கூடப் பெற்றவர் முயன்றால் நல்ல வழியில் மாற்றி விட முடியும். பெண்களாலே நம் நாட்டுக்குக் கெட்ட பெயர் வராது.

சுபா : நல்ல திசையில்தான் போகிறோம். நல்லது கெட்டதை ஆராய்ந்து நல்லவைகளைத் தேர்ந்து யாரையும் சாராமல் வாழப் பழக வேண்டும்.

ம. மோகன் : என்னதான் முன்னேற்றங்கள் இருந்தாலும் நம் அடிப்படையைத் தேர்ந்தெடுத்து அதைப் பின்பற்றிச் செல்ல வேண்டும். மற்றபடி நாம் போகும் வழி சரிதான் என்றும் தோன்றுகிறது.

து.வே: 21-ம் நூற்றாண்டில் முன்னேற்றம் மூன்று நிலைகளில் அமையும். பெண்கள் ஸ்கூட்டர் ஓட்டுவது, இராணுவத்தில் சேருவது என நல்ல போட்டியாகவும், ஆக்ரோஷமாகவும் முன்னுக்கு வரக் கூடியவர்களாக இருப்பார்கள். இதைப் பார்க்கும் போது ஆரம்பத்தில் அதிர்ச்சியாக இருக்கும். இது முதல் நிலை. இது அதிகபட்சம் 10 ஆண்டுகள் நீடிக்கும். 2005 வரை தொடரும் இந்த முதல் நிலை. பல துறைகளிலும் ஈடுபடும் பெண்களால் வரக் கூடிய இந்த மாறுதலின் போது பெண்களின் செயல், எண்ணம், தோற்றம் எல்லாவற்றிலுமே மாறுதல் இருக்கும். வெளிப்படையாகத் தெரியும் என்பதால்தான் இதை 'ஷாக் ஸ்டேஜ்' என்றேன். தற்போது பெண்கள் ஜனத் தொகையில் என்ஜினியரிங் படிப்பவர்கள். 04%தான். ஆனால் ஆண்கள் ½% படிக்கிறார்கள். இன்னும் 10 ஆண்டுகளில் (2-வது நிலையில்) இந்த சதவிகிதம் மேலும் கூடும். பொருளாதாரத்தில் பெண்களுக்கு அப்போது ஒரு நிலையான பங்கு இருக்கும். நம்பிக்கையுடன் கூடியது 3-வது நிலை. பெண்களின் பங்கு சரியான விகிதத்தில் கிடைக்கும் நேரம் இந்தியா பொருளாதாரத்தில் மிகவும் முன்னேறிய நாடாக இருக்கும். வெளிப்படையாக ஏற்பட்டு வரும் மாறுதல்களைப் பார்த்து நாம் அஞ்ச வேண்டியதில்லை.

கருத்து, ஏற்பாடு : **டி. ஆர். ரமேஷ்**

தொகுப்பு : **வைதேகிதேசிகன்**

புகைப்படங்கள் : **ஜி. சுரேஷ்**

மாறிவரும் பெண்கள் பற்றி வாசகிகளும் எழுதலாம் என்றோமா, அவ்வளவுதான் எழுதித் தள்ளிவிட்டார்கள். ஒவ்வொருத்தரும் ஒரு பெரிய புத்தகமே போடலாம் அளவிற்கு எழுதியிருக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சிதான். அத்தனையும் சிந்தனையைத் தூண்டும் விதமாக நிறைய செய்திகளைச் சொன்னது.

தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகியரின் கட்டுரைகளிலிருந்து சில பகுதிகளை வெளியிட்டுள்ளோம்...

யால் பெண்களை எரிக்கிறார்களே? பாவம் இல்லையா?' என்கிறாள். அந்தப் பிஞ்சு மனதில் திருமணம் பற்றிய எத்துணை அச்சம் மிகுந்த கவலை தொனிக்கிறது பார்த்தீர்களா?

– மோ. முத்துலட்சுமி.

இன்றைய கால கட்டத்தில் பெண்கள் பல துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக





மாறித்தான் இருக்கிறார்கள்!

மாறிவரும் சமுகம் என்றாலும், நான்கு நல்லது நடந்தால், எட்டு கெட்டது நடந்து கொண்டிருக்கிறதே! இதை நம்மால் தடுக்க முடிவதில்லையே... பெண் முன்னேற்றம் என்கிறோம். ஆனால் பெண் பலவீனமானவள் தான் என்றும், பெண் போகப் பொருள்தான் என்றும் அநீதி இழைக்கப்படுகிறதே! சமீபத்தில் நான் படித்த பத்திரிக்கை செய்தி ஒன்றை கவனத்திற்குக் கொணர்கிறேன். மனநிலை பாதிக்கப்பட்ட பெண் ஒருத்தியை பலர் மாறி மாறிக் கற்பழித்து, அதன் விளைவாக அவள் மூன்று பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள்.

என்ன கொடுமை இது? நெஞ்சம் நடுங்குகிறதல்லவா? நான் சந்தித்த பதிமூன்று வயதே நிரம்பிய ஒரு சிறுமி, 'வரதட்சணைக் கொடுமை

வும், இன்னும் ஒருபடி மேலே கூறினால் மேலாகவும் மாறி வருகிறார்கள். இப்படி பெண்கள் முன்னேற்றப் பாதையில் செல்கையில் ஆன்மிக ஈடுபாடு அவர்களை பல நல்வழிகளில் நடத்திச் செல்லும். இன்றைக்கு நடுத்தர வயதுப் பெண்களிடம் ஆன்மிக ஈடுபாடு அதிகமாக வளர்ந்துள்ளது. அதே சமயம் படிக்கும். பெண்களிடம் அத்தகைய

ஈடுபாடு குறைவு. ஏனெனில் அவர்களுக்குக் காலையில் எழுந்தவுடன் காலேஜுக்குச் செல்வதும், கோச்சிங் கிளாஸுக்குச் செல்வதும் மாலையில் சிறிது அரட்டை, டீ.வி. இவற்றுடன் இப்பொழுது புதியதொரு கலாச்சாரம் நடனத்திற்குச் செல்வது. வீட்டில் உள்ள பெற்றோர்கள் சிறிதளவாவது அவர்களை காலையிலோ, மாலையிலோ ஆன்மிக வழிபாட்டில் ஈடுபடுத்துவது மிகவும் அவசியம். காலையில் ஒரு அரை மணி நேரம் அல்லது மாலையில் ஒரு அரைமணி நேரம். மனத்தை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வழிபடுவதால் மனத்திற்கு ஒரு ரிலாக்சேஷன், அலைபாயும் மனதிற்கு அமைதி இவை கிடைக்கும். இதனால் இவர்கள் ஆற்றலோடு தங்கள் பணியைச் செய்து முன்னேற்றமடைய முடியும்.

– ஸ்ரீநிகா.

களைப் பற்றி மட்டுமே யோசித்துச் செயல்படுவதாலும் வீட்டிற்கு வந்த உடன் தன் அலுவலகப் பணிகளின் கவலைகளை அங்கேயே விட்டு விட்டு நிம்மதியாக இருப்பதாலும் இந்த டென்ஷனை குறைக்க முடியும். வீட்டிற்கு வந்த உடன் அங்கு நம் அன்பிற்காக ஏங்கும் நம் குடும்ப நபர்களோடு இன்புற்றும், தாய்ப் பாசத்தோடு குழந்தைகளை அரவணைத்தும், கணவரிடம் கோபமின்றி மகிழ்ச்சியோடும் எதிர்ப்பட்டால் இன்னும் பெரிய மேன்மைகளோடு விளங்கலாம். வீட்டிலிருப்பவர்களும் அவளின் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு அரவணைத்துச் செல்ல வேண்டும். பெண்ணிற்கு மட்டுமல்ல, அனைவருக்குமே அவர்கள் எத்தனை மாறினாலும் முன்னேறினாலும் சந்தோஷமான குடும்பம் என்பது அவசியம் தேவை.

- பத்மாவதி சுந்தரேசன்.

தற்போது பெண்கள் தம் திறமைகளை வெகுவாகச் செலுத்தி நன்கு முயன்று படித்து



முன்னேறி வருகிறார்கள். பல பெரிய பட்டங்களும் பெற்று, அலுவலங்களில் பெரிய பதவிகளும் வகிக்கிறார்கள். ஆனால் இதனால் பல பக்க விளைவுகளும் இருக்கத்தான் செய்கிறது.

அன்றாடம் காலைப் பொழுதில் அவர்கள் அலுவலகம் புறப்படும்போது வீட்டு வேலைகளாலும், நேரத்தோடு அலுவலகம் போக வேண்டும் என்ற கவலையாலும் கோப உணர்ச்சியால் பாதிக்கப்பட்டு கோபத்தை வெளியிடுகிறார்கள். அதன் விளைவாக குழந்தைகளிடம் கடிந்து பேசியும், அடிக்கவும் செய்கிறார்கள். மாலையில் வீடு திரும்பியதும் அலுவலகத்தில் ஏற்பட்ட வேலை பளு, சக ஊழியர்கள், மேலதிகாரிகளால் ஏற்பட்ட கெடுபிடிகளாலும், உடலும், மனமும் சோர்வதால் வீட்டில் உள்ளவர்கள் மேல்தான் அவர்களின் கோபம் வெளிப்படுகிறது.

அலுவலகத்திற்குப் போன பின் தன் வேலை

இப்போது டீன்ஏஜில் உள்ள பெண்



களுக்கு, நம்மைவிடக் கிடைத்திருக்கும் சுதந்திரம் அதிகம். அதேசமயம் ஆபத்துக்களும் அதிகம்.

நன்கு படித்து, வேலைக்கும் போவதினால், பெண்களுக்கு தன்னம்பிக்கை, தைர்யம் துணிச்சல், அஞ்சாநெஞ்சம் என உயர்ந்த பண்புகளும் வந்துள்ளன. நிமிர்ந்த நன்னடையுடன் நேர்கொண்ட பார்வையுடன், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் கொண்டு புதுமைப் பெண்களாக பவனி வருவது மகிழ்ச்சியை அளிக்கிறது. இவையெல்லாவற்றிற்கும் இன்னொரு பக்கமும் உண்டல்லவா, அதனையும் நாம் பார்க்க வேண்டும்.

அலங்காரம் செய்து கொள்வதையே பொழுது போக்காகக் கொண்டு, அதிலேயே தனது பொன்னான நேரத்தை வீணடித்து, அந்த அழகை கன்னாபின்னாவென்று

வெளிப்படுத்தி, காண்போரை பலமுறை பார்க்கத் தூண்டி, பெரிய கதாநாயகியாகப் பாவித்துக் கொண்டு, அந்த அழகினால் ஆபத்தை விலைக்கு வாங்கும் பெண்கள் சிலர் இருப்பதை நினைத்தால் மனம் அச்சப்படு கிறது. எளிமையான ஆடம்பரமில்லாத அழகு தான் நல்லதாகும்.

பிறக்கும்போதே, நாகரீக சாதனங்களுடன் பிறந்து, அதே சூழ்நிலையில் வளர்ந்து, அறி வாற்றல் கொண்டு, கம்ப்யூட்டர் உலகத்தில் கன்னிப் பெண்கள், கெட்டிக்காரர்களாக, வானத்துத் தாரகைகளாக, பவனி வருகின் றனர். ஆன்மிகமும் இன்று நுழைந்து வருவ தால், நாம் சொல்லாமலேயே, குழந்தைகள் சிலர் தினசரி கோயிலுக்குப் போகிறார்கள். நேரத்தில் விழித்து, நேரத்தில் எல்லா வேலை களையும் செய்து பள்ளி, கல்லூரி, அலுவலகங் களில் நல்ல பெயர் எடுத்து நவரத்தினங்களாக ஒளிவீசும் நல்ல பல அற்புதமான பெண்கள், கெட்டிக்காரப் பெண்கள், உண்மை,



நம்பிக்கை, நேர்மை, நாணயம் என்ற நல்ல பல நற்குணங்களுடன் விளங்கும் நங்கைகள் இவர்கள் எல்லோரும் இப்போது நம் நாட் டையே அலங்கரிக்கின்றனர்.

எனவே, களைகளாக இருக்கும் சில அல் லாதவைகளை விலக்கி, நல்லவற்றை நல்லபடி கடைபிடித்து, நாடும் வீடும் முன்னேற பெண் மணிகள் பாடுபட வேண்டும்.


– **கிருஷ்ணப்ரியா.**

பழக்க வழக்கங்கள், ரசனைகள் எல் லாமே மாறித்தான் போய்விட்டன. தைரியம் தன்னம்பிக்கை, தீர்மானம் எல்லாவற்றிலும் இவர்கள் 'சூப்பர்'தான்.

"பெண்ணை போர்த்தி வளர். ஆணை அடித்து வளர்" என்பார் என் பாட்டி. எதைப் போர்த்துவது? பெரும்பாலும் இன்றைய டீன்-ஏஜ் பெண்கள் அணிவது சுரிதார், மிடி போன்ற நாகரீக உடைகள்தான். புடை வையா? பாவாடை, தாவணி போல அதுவும் காணாமற் போகக் கூடும். என் பெண் சொல் வதைக் கேளுங்கள், "டோன்ட் பீ ஸில்லி மா! பஸ்ஸில் வேகமாக ஏற, சைக்கிள் ஓட்ட, ஸ்கூட்டர் செலுத்த இது சௌகர்யம்தானே. அடக்கம் என்று சொல்லி காரணம் காட்டா தீர்கள். இடுப்பு, வயிறு, கழுத்து எல்லாம் ஏராள மாகத் தெரிய புடைவை உடுத்துவதைவிட இது எவ்வளவோ பரவாயில்லை" ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும்!

வாகனம் ஓட்டுவது சர்வ சகஜம். பக்கத் தில் உள்ள அலுவலகம் ஒன்றில் சுமார் 25 பெண்கள் வேலை செய்கிறார்கள். 5 அல்லது 6 பேர் 'சன்னி', டி.வி.எஸ். 50, இவற்றில் வரு கிறார்கள். மேலும் ஏழு அல்லது 8 பேர் சைக் கிள் வைத்திருக்கிறார்கள். பஸ்ஸில் இடிபட்டு, அலையக் குலைய ஓடிவர வேண்டாமே.

தனக்கு என்ன படிக்க வேண்டும், என்ன துறை தேவை என்று நன்கு தெரிகிறது இவர் களுக்கு. சிரமப்பட்டாவது இலக்கை அடை



யும் உழைப்பும் துணிவும் உண்டு. வேகமான செயல்பாடும், பகுத்து அறியும் 'அனலிடிகல்' மூளையும் உண்டு. நீங்கள் ஒரு வேலையைச் சொன்னால் (அதுபற்றிய முழு விவரமும் கேட்காமல்) கேள்வி கேட்காமல் செய்பவர் பத்து சதம் கூட இருக்க மாட்டார்கள்.


முன்பெல்லாம் தியானம், தத்துவம் எல் லாம் வயதானவர்களுக்கு என்று முத்திரை குத்தி இருந்தது. இதையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. மாறிவரும் வேக நாகத்துடன் கூடிய வாழ்க்கையில் மன அமைதி அடைய, டென்ஷனைக் குறைக்க இவை தேவைதானே. புத்தகக் கண்காட்சிகளில் இப்போதெல்லாம் இந்த மாதிரி விஷயங்களைப் பற்றிய புத்தகம் அதிகம் வாங்குபவர்கள் இளைஞர்களும் இளைஞிகளும்தான்.

இவையெல்லாம் இந்த இளம் பெண்களின் + பாயிண்ட்கள், நிறைகள். இனி இவர்களிட முள்ள குறைகளைப் பார்ப்போமா?

சாதாரணமாக 40 வயதான பெற்றோர்கள்

பொங்கித் தழைக்கும் உறவு!
ஓங்கிச் செழிக்கும் வளமை!

எமது சிறப்பு டெபாசிட் சேகரிப்பில்
முதலீடு செய்வீர்
(13.4.96 வரை மட்டுமே)



வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட
ஷாஸன் ஃபைனான்ஸின் திட்டங்கள் :

குமுலேடிவ் டெபாசிட் திட்டம்

காலம்	ஆண்டு வட்டி	ரூ.2000/- முதலீட்டுக்குத் திரும்பக் கிடைக்கும் தொகை	வருமானம் (%)
12 மாதங்கள் & 1 நாள்	15% (மாதாந்திரக் கூட்டு வட்டி)	2322/-	16.07
24 மாதங்கள் & 1 நாள்		2695/-	17.37
36 மாதங்கள்		3128/-	18.80
48 மாதங்கள்		3631/-	20.38
60 மாதங்கள்		4215/-	22.14

ஃபிக்ஸட் டெபாசிட் திட்டம்

காலம்	ஆண்டு வட்டி	குறைந்த பட்ச டெபாசிட் தொகை (ரூ.)	வட்டி வழங்கும் கால இடைவெளி
12 மாதங்கள் & 1 நாள்	15%	2000/-	காலாண்டு
24 மாதங்கள் & 1 நாள்		5,000/-	மாதா மாதம்
36 மாதங்கள்			
48 மாதங்கள்			
60 மாதங்கள்			

எமது டெபாசிட் திட்டங்களின் சிறப்பம்சங்கள்

- பணம்/விண்ணப்பம் எங்களிடம் வந்து சேர்ந்த நாள் முதலாக வட்டி அளிக்கப்படும்.
- ரூ.5000மும் அதற்கு மேலாகவும் உள்ள டெபாசிட்களுக்கு மாதாந்திர வட்டிக்கான காசோலைகள்.
- முன்னதாகவே வழங்கப்படுகின்ற, பின் தேதியிட்ட ஒரு முழு நிதியாண்டிற்கான வட்டி வாரண்டுகள்.
- டிராஃப்டின் மீதான கமிஷன் தொகை திருப்பியளிக்கப்படுதல்.
- வெளியூர் முதலீடுகள் திருப்பியளிக்கப்படும்போது டிராஃப்டாகக் கொடுக்கப்படுதல்.

ஷாஸன் ஃபைனான்ஸிற்கு வருகை தாருங்கள். பங்கு வெளியீட்டுத் தேவையைப்போல் 59 முறை கூடுதலாக மக்களின் ஆதரவைப் பெற்றது ஷாஸன் ஃபைனான்ஸ். அசலைத் திருப்பிக் கொடுப்பதிலும் உரிய நேரத்தில் வட்டி வழங்குவதிலும் போதிய பாதுகாப்பிற்கு CARE நிறுவனத்தாரின் சான்று மதிப்பீடு பெற்றுள்ளது.

ஷாஸன் ஃபைனான்ஸ் லிமிடெட்

நிர்வாக அலுவலகம் : 31, வெங்கடநாராயணா ரோடு, பழனி டவர்ஸ், 3வது மாடி, தி.நகர், சென்னை – 600 017. போன் : 4344849, 4348972, ஃபேக்ஸ் : 4346349.
டெபாசிட் மையம் : 2, துரைசாமி ரோடு, தி.நகர், சென்னை – 600 017. போன் : 4348930, 4348931.
கோயம்புத்தூர் கிளை அலுவலகம் : சேரன் டவர்ஸ், 60/27, முதல் மாடி, அரசு கலைக் கல்லூரி ரோடு, கோயம்புத்தூர் - 641 018.

வாடிக்கையாளரின் திருப்தியே எமது முயற்சியின் குறிக்கோள்

சட்டபூர்வமான ஃபிக்ஸட் டெபாசிட் விளம்பரம் 11.1.96 தேதியிட்ட '[illegible]' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

Insight-1455

உள்ள வீடுகளைப் பாருங்கள். ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் இல்லை. 'நியூக்ளியர் ஃபேமிலி' என்று சொல்லி விடலாம். கூட்டுக் குடும்பமாகவும் இல்லாமல், பெற்றோருடன் மட்டும் வளரும் பெண் குழந்தைகளுக்குப் பகிர்ந்து கொள்ளும் குணமும், மற்றவர் போக்கை அனுசரித்து நடக்கும் இயல்பும் இருப்பதில்லை. எல்லோரும் இவர்களுக்குதான் 'அட்ஜஸ்ட்' செய்ய வேண்டும்.

உலகெங்கிலும் உள்ள மக்கள் நம் வாழ்க்கை முறைகளையும், தத்துவ போதனைகளையும் தேடி வரும்போது நம்மைப் பற்றிய விஷயங்களை நாமே அறிந்து கொள்ளாதது வருந்த வேண்டிய விஷயம்தானே.

பெண்கள் துர்க்கைகள் மட்டுமல்ல, கருணை ததும்பும் அன்னபூரணிகளும்தான் என்று அறிய வேண்டும்.

இக்குறைகளை நிவர்த்தி செய்துக் கொண்டால் இவர்களுக்கு மிக பிரகாசமான எதிர்காலம் நிச்சயம் உண்டு. இவர்களுக்கு வாழ்த்து கூறுவோமா?

— கிருஷ்ணவேணி ரங்கனாதன்.






பெண்கள் வெளியிலும், வேலைக்கும் போவதால் பல ஆண்களுடன் பேசிப் பழக நேர்வது இயல்பே. அதே நேரத்தில் நவநாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் இருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட இதனால், பெண்களுக்கு தான் பிரச்னைகள் ஏற்படுகின்றன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சில எச்சரிக்கைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் தொல்லைகளை பெருமளவு தவிர்க்கலாம். நிஷ்களங்கமாகக் கூட குறிப்பிட்ட ஒரு ஆணிடம் (சிறப்பம்சங்கள் இருந்தாலும்) தனியாகவோ, அதிகமாகவோ பேசாதீர்கள். வம்பர்கள் கதைகட்டி விட அது ஹேதுவாகிறது. அந்த நேரத்துக்கு சுவாரசியமாக இருந்தாலும் ஆண்களுடன் அரட்டை அடிப்பதில் ஆர்வம் காட்டாதீர்கள். அதுசில ஆடவரிடம் உங்களைப் பற்றி இலகுவான அபிப்பிராயத்தை வளர்த்து விடக் காரணமாகி விடுகிறது. உங்களுடன் சமூகமாகப் பழகும் போதே ஒரு எல்லைக்குமேல் உங்களை நெருங்க முடியாது என்ற அச்சத்தைத் தோற்றுவிக்கும் ஒருமென்மையான ஆனால் உறுதியான வேலி உங்களைச் சுற்றி இருப்பதுபோல் ஆண்கள் எப்போதும் உணர்வதுபோல் உங்கள் பேச்சும் நடவடிக்கைகளும் அமைந்திருக்க வேண்டும். ஆரம்பத்தில் கவனமாக இருந்தால் நாளாவட்டத்தில் அதுவே உங்கள் இயல்பாகிவிடும்.

— எஸ். சரோஜினி.

எங்கள் குடும்பம் பழமையான பழக்க வழக்கங்களைக் கொண்டது. பதின்மூன்று வயதில் எனக்குக் கல்யாணம். அத்துடன் படிப்பு நிறுத்தப்பட்டது. முன்பெல்லாம் பாட்டு வாத்தியார் வீட்டுக்கு வந்து கற்றுக் கொடுப்பார். அதையும் நிறுத்தி விட்டார்கள். பக்கத்திலேயே ஹிந்தி கிளாஸ். அதற்கும் தடை. பெண்களாலேயே நடத்தப்படும் தையல் வகுப்பு. ஊஹூம். எதற்குமே வெளியில் போகக்



கூடாது. பெரியவர்கள் சொன்னபடி கேட்டுக் கொண்டு, வீட்டு வேலைகள் எல்லாம் செய்து கொண்டு வீட்டோடு இருந்தால் போதும் என்று என் திறமைகள், உணர்ச்சிகள் எல்லாம் முடக்கப்பட்டு விட்டன.

40 வருடங்களுக்குப் பிறகு, இன்று எங்கள் குடும்பத்திலேயே எத்தனை மாறுதல்கள்! இப்பொழுது பெண்கள் எல்லாரும் நன்கு படித்து பலவிதமான வேலைகளும் பார்க்கிறார்கள். கார், ஸ்கூட்டர் ஓட்டுகிறார்கள். மேடைக் கச்சேரி, பரதநாட்டியம் எல்லாம் செய்கிறார்கள். அமெரிக்காவுக்கு தனியே சென்று படித்து விட்டும் வந்திருக்கிறார்கள். இஷ்டப் பட்டவரைக் கல்யாணம் செய்து கொள்ளவும் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்

கிறது. இது ஒரு பெரிய, சந்தோஷமான மாறுதல்தான்.

- ஆர். ஆண்டாள்.

ஆணுக்குச் சமமாகப் பெண்ணை ஆக்க ஆயிரம் சட்டங்கள் - ஆனால் எழுதாத சமூகச் சட்டங்கள் இச்சட்டங்களோடு முரண்பட்டே நிற்கின்றன. பெண்ணிடம் இயல்பாய் இருக்கின்ற தாய்மை உணர்வும் காலங்காலமாக வரும் சமூகப் பண்பாட்டுக் கட்டளைகளால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அவளுடைய உள்ளப் பாங்கும் இச்சமூகச் சட்டங்கள் வலிமை பெறக் காரணமாகி விடுகின்றன. மரபின் பிடியில் சிக்குண்டு இரு மடங்கு உழைக்கும் இன்னலுக்கிடையேயும் புதிய சுதந்திரமும், தன்னம்பிக்கையும் பெற்றுப் பெருமையே அடைகிறாள். இதுவே அவள் பலமும் பலவீனமும் ஆகின்றது.

மாறிவரும் பெண்கள் நிலையைத் தொடர்ந்து சமுதாயத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. திருமண உறவுகளின் வலிமை குறைந்து ஆணின் ஆதிக்கமும், பெண்ணின் அடிமைத்தனமும் குறைந்து வருதல். குடும்பத்தில் மனைவிக்கு இருக்கும் பொருளாதாரச் சுதந்திரம் - கூட்டுக் குடும்பங்களின் அமைப்புகள் மறைந்து தனிக் குடும்பங்கள் தோன்றுதல் - இதன் விளைவாக முதியோர் இல்லங்களும் குழந்தைகள் காப்பகங்களும் தோன்றுதல் - சமயக் கட்டுப்பாடுகள் - சம்பிரதாயம் மற்றும் சடங்குகளின் வலிமை தளர்தல் - குழந்தைகளின் ஆதிக்கமும் அவர்களுடைய தேவைகளின் முக்கியத்துவமும் முதன்மை பெறல் - போன்றன.

தம்மைப் பற்றிய பெண்கள் மதிப்பீடு - (என்ன இருந்தாலும் நான் பெண்தானே!) பெண்களைப் பற்றிய ஆண்கள் மதிப்பீடு (பெண்களுக்கு அதிகாரம் கொடுத்தால் இப்படித்தான்) கல்வி, சமூகவயமாதல், திருமணம், மணவிலக்கு, மறுமணம் ஆகிய சமூக அடுக்குகள் இனி வரும் தலைமுறையில் சரியத் தொடங்குதல் உறுதி.

ஓரளவுக்கு ஆண்களுக்குச் சமமாக வளர்க்கப்படும் இன்றைய இளம்பெண்களின் சிந்தனைகள் மாறியிருக்கின்றன. பெண்ணுக்குரியதாகச் சில வேலைகளைச் (கோலம் போடுதல், வீடு பெருக்குதல் போன்றவை) செய்யும்போது இந்நேரம் ஜான் (வகுப்புத் தோழன்) படித்துக் கொண்டிருப்பானே என்று எண்ண வைக்கிறது. மாப்பிள்ளைக்கு நிகராகப் படித்து வேலை செய்யும் பெண் எங்கள் இருவர் வாழ்க்கைக்கு என் தந்தை மட்டும் ஏன் வரதட்சிணை கொடுக்க வேண்டும் என்று கேட்கிறாள்.

இத்தகைய எண்ணங்கள் தவிர்க்க முடியாதவை. வளர்ச்சியின் படிநிலைகள் - இன்றைய பெண்ணுக்குப் புதிய சமூக மதிப்பீடுகள் தேவைப்படுகின்றன. பழைய மதிப்பீடுகள் அவளுக்குப் பொருந்தாத நிலையை ஐந்து வயதில் தைத்த சட்டை பத்து வயதுக் குழந்தைக்குப் பொருந்துமா என்பார் பெண் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன். ஆண்களும் பெண்களும் நிறைந்த இச்சமுதாயம் முழுமையும் இந்தக் கண்ணோட்டம் வளர இரண்டு பேருமே சிந்திக்க வேண்டும். மாறிவரும் பெண்கள் நிலைக்கேற்ப சமுதாயம் மாறும்போது தான் குடும்ப அமைப்பு பாதுகாக்கப்படும். மாற்றங்களுக்கு உட்படும் குடும்ப அமைப்பில் தான் பந்த பாசங்கள் வலுவிழந்து போகும் நிலை தவிர்க்கப்படும்.

- டாக்டர் சாவித்ரி பாலகிருஷ்ணன்.

இரண்டுங்கெட்டான் வயதென்னும் டீன்-ஏஜ் பெண்களுக்கு வாழ்க்கைப் பாதையில் எதிர்கொள்ளக் கூடிய நன்மை தீமைகளை முழுமையாக அறியும் திறனை தற்கால விஞ்ஞானம் அளிக்கிறது. இதைச் சரியாக பெற்றோர்களாகிய நாம் வழிநடத்தினால் போதும். அதுமட்டுமல்ல; இன்றைய பெண்கள் படிதாண்டா பத்தினி, படி தாண்டினாலும் பத்தினிதான் என்பதை நிரூபித்து, தான் தாண்டிய ஒவ்வொரு படியையும் தன் வாழ்க்கை முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு மைல் கல் ஆக்கி வேலைக்குச் சென்று பொருளீட்டி வீட்டின் தரித்திர லக்ஷ்மியைத் துரத்தியடித்து தைரிய லக்ஷ்மியாக, தனலக்ஷ்மியாகத் திகழ்கின்றாள்.

பெண்மை மென்மையானதே என்ற சொல்லை மாற்றி பெண்கள் மென்மையுடன் வன்மையும் மனத்திண்மையும் வாய்ந்தவர்கள் என்பதை அங்கிங்கெனாதபடி எங்கும், எத்துறையிலும் பெண்கள் வியாபித்திருப்பதிலிருந்து தெரிந்து கொள்கிறோமே!

- கஸ்தூரி சேஷகுமார்.




பருப்புத் துவையலுக்கு, அரை ஸ்பூன் சீரகம் வறுத்துச் சேர்த்து அரையுங்கள். இது என்ன ஊரே மணக்கிறது?

- பார்வதி

வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக் கல்?

ஜாதகத்தை நம்புகிறவர்களுக்கு "ஜோதிடர் சொல்வதே வேதவாக்கு! ஜோதிடர் தரும் விவரங்களை மிகத் துல்லியமாக கவனத்தில் வைத்துக் கொண்டு அடிக்கடி மனத்தில் உலவச் செய்வதோடு... அப்படிச் செய்யச் சொல்லியிருக்கிறாரே, இப்படி நடந்து கொள்வது நல்லது என்றாரே என்று சதா சர்வகாலமும் ஜோதிடர் சொன்ன வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சிந்திப்பவர்களும் செயல்படுபவர்களும் உண்டு அல்லவா?

இதில் ஒரு விஷயம் என்னவென்றால் சிலருக்கு ஜோதிடர் சொல்லும் பலன்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடும். சிலருக்கு நுனிப்புல் கதையாகிவிடும். ஜோதிடர் ஏதோ சொன்னாரே... ஞாபகத்துல இல்லையே...? மறுபடியும் கேட்கணும்னா முடியுமா? செலவில்லையா பண்ணியாகணும்? என்று யோசிப்பவர்களுக்கு




"ஜோதிட முறையில் ஒரு நூதன வழியை உருவாக்கியிருக்கிறோம். அதுதான் ஆடியோ கேஸட் மெத்தட்" என்கிறார் தி.நகர் வடக்கு உஸ்மான் ரோடில் ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ் எதிரிலிருக்கும் ஜெய்ப்பூர் ஜெம்ஸ் இன் ஜுவல்ஸ் உரிமையாளர் ராஜேந்திரகுமார் எம். மேத்தா.

"இக்கட்டான சூழ்நிலை வரும் போதும், துன்பம் வரும்போதும் பெரும்பாலானோர்கள் ஜாதகத்தை நம்பத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஜோதிடர் சொல்லும் பலன்களைக் கேட்டு அதற்கேற்றபடி நடந்து பயன்பெறுகிறார்கள். இன்னின்ன காலகட்டத்தில் இன்னின்னது நடக்கும். இந்த இடைவெளியில் இப்படிப்பட்ட பொருள் வரவு ஏற்படலாம். தனலாபம் கிடைக்கும். சில காலகட்டம் துரதிர்ஷ்டம் இருக்கும் என்பதையெல்லாம் துல்லியமாக ஆராயப்பட்ட பின்னரே ஜாதகருக்கு அறிவிக்கப்படுகின்றன. ஜாதகர், ஜோதிடர் சம்பாஷணைகளைத்தான் நாங்கள் ஒலிநாடாவில் பதிவு செய்து தருகிறோம். தேவைப்படும் போதெல்லாம் ஜாதகர் கேட்டுப் பயன்பெறலாம். நல்ல சங்கதிகள், தொழில் முன்னேற்றம், குடும்ப மகிழ்ச்சி - சுபகாரியங்கள் இவையெல்லாம் அந்த ஜாதகருக்கு உண்டென்றால் அந்த நபர் அதைப் போட்டுக் கேட்கக் கேட்க, மனத்தளவில் நல்ல மாற்றங்களும் பெறலாம் அல்லவா? அதேபோல கெட்ட நேரம், பிரச்னை, நோய்கள் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகளையும் அவற்றைப் போக்குவதற்காக அவர்கள் அணிய வேண்டிய 'கல்' பற்றியும் ஒலிநாடாவில் பதிவு பெற்றுக் கொண்டால் சற்று முன்ஜாக்கிரதையாக எந்தக் காரியத்தையும் கையாள முடியும் அல்லவா?"

வேறு யாரும் இப்படிக் காஸெட் முறையில் ஜோதிடத்தைப் பதிவு செய்வது உண்டா?

"அது தெரியவில்லை. எங்களைப் பொறுத்தவரை நல்ல ஜோதிடர் கணிக்கும் ஜாதகம் நடைமுறை வாழ்க்கையில் மிகச் சரியாக ஒத்துப் போவதைக் காணலாம். இந்த காஸெட் முறை பெரும்பாலும் வெளியூர், வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும், நேரிடையாக வர முடியாதவர்களுக்கும்தான் பயன்படுத்துகிறோம். பின்னர் பதிவுத் தபாலில் காஸெட்டை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கிறோம். அதோடு ஜாதிக்கல் என்ன விதமானது அணிந்து கொள்ளலாம் என்பதையும் தெரிவிக்கிறோம்."

ஜாதிக்கல்லின் மீது



• எம். மேத்தா

நம்பிக்கை கொண்டு அணிபவர்களுக்கு எல்லாம் வாழ்க்கையில் மாற்றம் வந்து விடுமா என்ன? பகுத்தறிவு இதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறதே?

"ஏன் இல்லை. உயிருள்ள கற்களை அணிந்து கொள்ளும் ஜாதகர்களில் பலர் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். கல்லை அணிந்த பின் எத்தனையோ பேருக்குத் திருமணங்கள் நடந்திருக்கிறது. குடும்பப் பிரச்னை விலகி வருகிறது. அப்படியில்லையென்றால் நம் நாட்டில் எவ்வளவோ பேர் அதிர்ஷ்டக்கல் மோதிரத்தை அணிந்திருக்கிறார்களே? அவர்களெல்லாம் மாற்றம் பெறாமலா இருப்பார்கள்?" என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு,

"நிஜமாகவே அதிர்ஷ்டக்கல் வாழ்வை வளமாக்கும்" என்பதையும் தனது கருத்தின் முத்தாய்ப்பாகச் சொல்லி முடிக்கிறார் ராஜேந்திரகுமார் எம். மேத்தா. வாசகிகளே நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? உங்கள் கருத்து என்ன? உங்களில் பலர் அதிர்ஷ்டக்கற்கள் அணிந்திருப்பீர்கள். வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை இந்த ஜாதிக்கற்கள் உண்டாக்குகின்றனவா? அல்லது உங்களுக்கு ஏற்பட்ட தொல்லை, பிரச்னை யாவும் அதிர்ஷ்டக்கல் அணிந்தும் எவ்விதப் பயனும் ஏற்படவில்லையா? இதை நம்ப மறுக்கிறீர்களா? எதுவாக இருப்பினும் -

உங்கள் சுவாரஸ்யமான அனுபவங்களை - கசப்பான சம்பவங்களை மனத்தில் பட்டபடி ஒரு பக்கத்திற்கு மிகாமல் மங்கையர் மலருக்கு எழுதுங்கள்.

பிரசுரத்திற்கு ஏற்ற கட்டுரைக்கு ஜெய்ப்பூர் ஜெம்ஸ் இன் ஜூவெல்ஸ் ரூ. 500 பெறுமான முள்ள முத்துமாலை, முத்து வளையல், முத்துக் கம்மல் செட் பரிசளிக்க இருக்கிறார்.

- **கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 30.3.'96**
- **தபால் உறையின்மீது 'வாழ்வை வளமாக்குமா அதிர்ஷ்டக்கல்?' போட்டிக் கட்டுரை எனக் குறிப்பிடவும்.**
- **ஒருவரே எத்தனை கட்டுரை வேண்டுமானாலும் அனுப்பலாம்.**
- **போட்டிக் கட்டுரைகளை திருப்பி அனுப்ப இயலாது.**
- **ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.**
- **கட்டுரைகளை 'மங்கையர் மலர்' ஈக்காடு தாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்பவும்.**

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : கொழுப்புச் சத்தில்லாத உணவு.   கடைசி தேதி : 15.3.1996

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

குழந்தை இல்லையா?

காரணங்கள் - சிகிச்சைகள்!

13-14 வயதிலேயே பல பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள் ஆரம்பித்துவிடுகின்றன. இது Hormone Imbalance என்று அதிக ரத்தப் போக்கை நிறுத்தவும், இல்லாதவர்களுக்கு மாதாமாதம் வருவிக்கவும் தொடர்ந்து "ஆர்மோன்" மாத்திரைகளை சாப்பிட்டு வருபவர்கள் பல நூறுபேர்!. இது தற்காலிகமான பலனே தருகிறது. மாத்திரைகளை நிறுத்தினால் மீண்டும் பழைய கோளாறுகள்தான். 'திருமணம் ஆனால் இது சரியாகிவிடும்' என்று அறியாமையில் அப்படியே விட்டு விடுகிறார்கள் பலர். இந்த குறைபாடுகளை சிறுவயதிலேயே சரிசெய்யாத பலருக்கு திருமணத்திற்குப்பின் குழந்தைப் பேறு என்பதே கேள்விக்குறி ஆகிவிடுகிறது. இக்குறைகளை நிரந்தரமாகச் சரி செய்ய அற்புதமான சித்த மருந்துகள் எம்மிடம் உண்டு.

இன்னும் கருப்பை வளர்ச்சி குறைவு, முட்டை உருவாகாமை, முந்திய, தாமதமான, கறுப்பான, கட்டிகட்டியான மாதவிடாய், கருக்குழாயில் அடைப்பு, கோளக்கட்டிகள் கருப்பை வீக்கம், கர்ப்பப்பை புண்கள் அடிக்கடி கருக்கலைவு (Cystic Ovaries, Bulky Uterus, Hypoplastic Uterus, Fallopian Tube Block, Cervicitis Endometriosis etc.) போன்ற பல கோளாறுகள் கருத்தரிக்க தடையாக உள்ளன. குழந்தை பெறும் முன்பே கருப்பையில் கட்டி (Fibroid) தோன்றி அதற்கு மருத்துவம் ஏதுமின்றி கருப்பையையே அகற்றிவிட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள பெண்கள் பலர் உண்டு!

இந்த குறைகள் நீங்கி குழந்தைப்பேறு பெற வேண்டுமா? உங்களுக்கு உதவிட எமது 180 ஆண்டு பாரம்பரை அனுபவம் பெற்ற சித்தர் மருத்துவ சிகிச்சைகள் உள்ளன. ஒவ்வொரு கோளாறுக்கும் தனித்தனி சிகிச்சை அளிக்கிறோம். இதுபோன்ற சிகிச்சை எங்கும் கிடைப்பது அரிது. 10-15 ஆண்டு பல வகை சிகிச்சைக்குப்பின் பெண்கள் 40 வயதளவில் வருவதைவிட ஆரம்பத்தில் வந்தால் விரைவில் பலன் பெறலாம். **உயிரணு இல்லாத ஆண்கள் :** (AZOOSPERMIA) : ஆண்களின் குறைபாடுகளில் மிகவும் சிக்கலானதும் இன்று உலகளவில் மருந்தே இல்லை என்றும் பிறரிடம் உயிரணு பெறுதல் அல்லது தத்து எடுத்தல் இரண்டு மட்டுமே தீர்வு என்று கருதப்படும் இந்த கோளாறுக்கு வெற்றிகரமான சிகிச்சை எம்மிடம் உண்டு. இதற்கு வெறும் விந்து பெருக்கும் மருந்துகளை எத்தனை ஆண்டு சாப்பிட்டாலும் பலன் இல்லை. எமது சிகிச்சையினால் சென்ற மாதம் பலனடைந்த இருவர்: 1. Mr.S.சின்னதம்பி (32) நாமக்கல். 2. Mr.நரசிம்மன் (35) மாதவரம். (இவை Clinical Testமூலம் உறுதி செய்யப்பட்டவை.)

9 ஆண்டு இரத்தப்போக்கு குணமானது

கருப்பை புண், கட்டி, வீக்கம் 30-40 நாட்கள் நிற்காத இரத்தப்போக்கினால் 40 வயதை நெருங்கும் பெண்கள் நூற்றுக்கணக்கான பேர் துன்பப்பட்டு வருகிறார்கள். இதற்காக அவசரப்பட்டு ஆபரேஷன் மூலம் கருப்பை அகற்ற தேவையில்லை. எமது மூலிகை மருந்தால் முழுமையாக சுகப்படுத்துகிறோம். ✱ 9 ஆண்டு நிற்காத இரத்தப்போக்கு உள்ள இளம்பெண் எமது சிகிச்சையினால் குணம் பெற்றார். Miss. J.S.லதா (35) ஸ்ரீரங்கம். திருமணம் ஆகாத இவருக்கு 9 ஆண்டுக்குமேல் நிற்காத ரத்தப்போக்கு இருந்தது. தினம் 2 வேளை "ஆர்மோன் மாத்திரை" மூலம் கட்டுப்படுத்தி வந்தார். அதை நிறுத்தினால் மறு நாளே போக ஆரம்பித்துவிடும்! இப்போது 2 மாதமாக மாத்திரை இன்றி நலமுடன் இருக்கிறார் (நோயாளி நலன் கருதி முகவரி தவிர்க்கப்பட்டது)

புற்று நோயும் குணமாகிறது

புற்றுநோய் தீராத நோய் அல்ல. கடைசி கட்டத்தில் வருவதைவிட கண்டுபிடித்தவுடன் எமது சிகிச்சை பெற்றால் குணம் அடையும் வாய்ப்பு அதிகம். கல்லீரல், மார்பகம், தொண்டை, கல்லீரல், கருப்பை, மலக்குடல், Thyroid அக்குள் சுரப்பிகள், மூக்கு, நாக்கு, மூளை ஆகிய இடங்களில் வரும் புற்றுநோய்க்கு சிறப்பான சிகிச்சை செய்கிறோம். 20-நாளில் வலி நின்றுவிடுவதும், 45 நாளிலேயே குணமாகும் அறிகுறி தென்படுவதும் எமது மருந்துகளின் மகிமையாகும்.

தைராய்டு கட்டி கரைந்தது: Mr.L.M.ராஜு (49), இந்திரா நகர், பழனி. இவருக்கு கழுத்தின் வலப்புற Thyroid சுரப்பி மீது வளர்ந்த கட்டி (Neoplastic Cells) எமது 3 மாத சிகிச்சையில் கரைந்துவிட்டது.

மார்பகத்தில் கட்டியா? பெண்கள் மார்பகத்தில் குத்தல், வலியுடனோ வலி இல்லாமலோ பலவிதமான கட்டிகள் (Fibro Adenoma) வருவதுண்டு. இதில் சில ஆபத்தானவை அல்ல என்று கூறியபோதிலும், ஆபரேஷனோ அதை கரைத்துவிட சரியான மருத்துவமோ இல்லாமல், மாதாமாதம் Check-up செய்து கொண்டு வருபவர் பலர். சாதாரண கட்டி புற்றுகட்டியாக மாறும்வரை காத்திருப்பது அவசியம்தானா? எமது சிகிச்சையில் எளிதாக குணம்பெறலாம். பயத்துடன் நாட்களை கடத்த வேண்டாம்.

கருப்பைக்கட்டி கரைந்தது திருமதி கமலா (45), 23, ஜோசியர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34, இவருக்கு 10.3 செ.மீ. அளவில் இருந்த கருப்பை கட்டி எமது சிகிச்சையால் கரைந்துவிட்டது.



Dr. S. JEYARAM, M.A., M.A., PRAVEEN, HIMP, RMP

3000-க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ சுவடிகளை ஆராய்ந்தவர் மற்றும் ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி ஆங்கில மருத்துவ முறைகளிலும் ஆழ்ந்த ஆராய்ச்சி உள்ளவர்.

நவோதயா சித்தர் மருத்துவமனை

21/2, அலமேலுமங்காபுரம், III-வது தெரு, மயிலாப்பூர் (குளம்)

சென்னை - 4. (சாயிபாபா கோவில் பின்புறம்) ✆4940662. வீடு:8551258

ஆராய்ச்சி நிலையம் : ப்ளாட் எண். 6, (கதவு எண் 15) ராமகிருஷ்ணா நகர் விரிவு, வளசரவாக்கம், சென்னை - 87.

ஆலோசனை நேரம் : காலை 10 முதல் 1 மணி வரை, மாலை 5 முதல் 8 மணி வரை, ஞாயிறு காலை மட்டும்

(ALL SPECIALITIES UNDER ONE ROOF) தபால்/போன்/நேரில், தேதி-நேரம் குறித்துக் கொண்டுதான் வரவேண்டும்.

அடிக்கடி தும்மலா? சளி பிடிக்கிறதா?

டாக்டர் ஹகீம் எஸ். அக்பர் கவுஸர்

ஆடைகளுக்கும் அழகுக்கும் முக்கியத்துவம் அளித்துபாதுகாப்பதைப் போல் பொதுவாக நாம் உடல் உள்ளுறுப்புக்களான கல்லீரல், நுரையீரல், இதயம், சிறுநீரகங்கள், கணையங்கள், பித்தப்பை, வயிறு மற்றும் குடல்களை பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இதனால் உடல் உள்ளுறுப்புக்கள் தன் ஆயுளுக்கு முன்பே பழுதடைந்து செயலிழக்கக்கூடும். ஆங்கில மருத்துவத்தில் செயலிழந்த உறுப்புக்களை அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிட்டு ஆரோக்கியமான உறுப்பைப் பொருத்துவார்கள். நரக வேதனையுடன் இலட்சக்கணக்கில் செலவழித்து குடும்பத்தையே நாசமாக்கும் இந்த நோய்களை யுனானி மருத்துவத்தால் தடுக்க முடியும்.

கல்லீரல் நோய்கள் :

இதயம், நுரையீரலுக்கு அடுத்தபடியாக முக்கிய உறுப்பாகக் கல்லீரல் அமைந்திருக்கின்றது. நைட்ரோஜன் சத்தை கல்லீரல் யூரியாவாக மாற்றி பின் உடலுக்கு ஊட்டச்சத்தாக அமைத்துத் தருகின்றது. வலி நிவாரணிகள், மது மற்றும் போதை மருந்துகள், பான்மசாலா, பான் பராக் போன்ற வாஹரி வஸ்துக்கள் கல்லீரலின் திசுக்களை செயலிழக்கச் செய்து விடுகின்றன. இதற்கு 'லிவர் சிரோசிஸ்' லிவர் ஃபெயிலியர் என்றழைப்பார்கள்.

சீமை அருகம்புல், ஜடாமசி, மூங்கிலுப்பு, லவுங்கப்பட்டை, ஜாதிக்கோட்டம், ரோஜாப்பூ, ஜராவந்த், கர்ஃபஸ் விதை, கஸூஸ் விதை, காசினிவிதை, குங்குமப்பூ, மஜீட், லுக்மக்குல் கொம்பு அரக்கு ஆகிய மருந்துகளை ஒவ்வொன்றிலும் இரண்டு கிராம் அளவில் பவுடராக்கி வைத்துக் கொள்ள வேண்டும். 6 கிராம் பவுடரை தேனில் கலந்து தினசரி 3 வேளை தொடர்ந்து சாப்பிடலாம்.

இராமநாதபுரம் மாவட்டம், சித்தார்க்கோட்டையைச் சேர்ந்த 60 வயதான திரு. உம்முல்பஸ்ரியா பீவி என்பவருக்குக் கல்லீரலில் புற்றுநோய், மற்றும் லிவர் சிரோஸிஸ் (கல்லீரல் புண் வீக்கம்) ஏற்பட்டு மரணப் படுக்கையில் இருந்தார். ஆங்கில மருத்துவர்கள் கல்லீரலை மாற்றுவதற்கு சிபாரிசு செய்தார்கள். மூன்று மாதத்திற்கு மேற்கண்ட மருந்துகளை கொடுத்தபின் மீண்டும் ஸ்கேனிங் படம் மற்றும் இதர பரிசோதனைகள் செய்து பார்த்ததில் மேற்கண்ட கல்லீரல் நோய்கள் குணம்பெற்று செயலிழந்த கல்லீரல் மீண்டும் இயங்கிக் கொண்டிருப்பதாக தெரியவந்தது. இதே போல் பல பேர் குணம்பெற்றுள்ளனர்.

வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி, நியு டவுன், 370 மசூதி வீதியில் அமைந்துள்ள 100 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையில் (தொ.பே. 04174-24095) கடந்த 18 ஆண்டுகளாக மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தை நடத்தி வருகின்றேன். பொதுவாக மது அடிமைகளுக்கும் ஆங்கில மருந்து மற்றும் வலி நிவாரணி மருந்துகளுக்கு அடிமையானவர்களுக்குத்தான் கல்லீரல் நோய்கள் அதிகமாக வரும்.

மஞ்சள் காமாலை



அக்பர் கவுஸர்



குளத்து மீன்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் ஓர் இரையைப் போட்டதும் எப்படி நாலாப் பக்கங்களிலிருந்தும் அதனிடம் ஓடி வருகின்றதோ அது போல மனமுருகி நாம் செய்யும் பிரார்த்தனை இறைவன் எங்கு இருப்பினும், அவனை நம் பக்கம் ஈர்ப்பது நிச்சயம்-

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

தகவல் : எஸ். விஜயா

நோயில் கண்கள் மஞ்சளாக இருக்கும். சிறுநீர் மஞ்சள் நிறத்தில் தெரியும். குமட்டல், வாந்தி, அரிப்பு, பசியின்மை, உடல் வீக்கம் காணப்படும். உயிரைக் குடிக்கும் இந்நோய்க்கு 6 கிராம் மருதாணியை அரைத்து வடிகட்டி காலையில் குடிக்கலாம். மஞ்சள் கரிசிலாங்கண்ணி அல்லது வெள்ளை கரிசலாங்கண்ணி கீரையை இடித்து அதன் சாற்றை வடிகட்டிக் குடிக்கலாம். வெள்ளை முள்ளங்கி இலைகளை இடித்துக் கொதிக்க வைத்து சக்கையும் நீரும் தனித்தனியாக பிரிந்தபின் வடிகட்டி சர்க்கரை கலந்து காலை மாலை இரண்டு வேளை குடிக்கலாம். காசினி விதைகள் 6 கிராம், அதிமதுரம் 6 கிராம், கருப்புப்பு மூன்றையும் பவுடராக்கி வைத்துக் கொள்ள வேண்டும். 3 கிராம் வீதம் காலை மாலை இரண்டு வேளை சாப்பிடலாம்.

சிறுநீரக நோயாளிகளுக்குக் கண்டிப்பாக கல்லீரலும் பாதிக்கப்படுகிறது. அவர்களுக்கு மஞ்சள் காமாலை நோயும், கல்லீரல் வீக்கம் வலியும் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் வலது சிறுநீரகத்தின் 2/3 பாகம் கல்லீரலுடன் தொடர்பு கொண்டதாக இருக்கின்றது. கல்லீரலை காப்பது சிறுநீரகங்களை செயலிழக்காமல் காப்பது போன்றதாகும்.

லேசான வயிற்றுவலி, பசியில்லாமை, வயிற்றை அழுத்திப் பார்த்தால் வலி வருதல், இது கல்லீரல் நோயின் ஆரம்ப கட்டமாகும். இதை குணமாக்க நெல்லிக்காய், கடுக்காய், பிஞ்சுகடுக்காய், ஒவ்வொன்றிலும் 10 கிராம் எடுத்து 25 மில்லி காடியில் (வினிகரில்) 24 மணி நேரம் ஊறவைத்து உலரவைத்து 3 கிராம் பவுடரை காலையில் தண்ணீருடன் சாப்பிடலாம். கல்லீரலை சரிசெய்வதுடன் இரத்தத்தில் ஹீமோகுளோபின் அதிகரிக்கிறது.

கிட்னி ஃபெயிலியர் :

முகம் வீங்கி, பாதங்கள் வீக்கமடைந்து, குமட்டல், வாந்தி, லேசான தலைவலி, சிறிது தூரம் நடந்தால் இளைப்பு, சிறுநீர் பிரியும் தன்மை குறைதல், இந்தக் குறிகளைக் கண்டால் சிறுநீரகங்களில் எக்ஸ்ரே, ஸ்கேனிங் படங்களை எடுத்துப் பார்க்க வேண்டும். இரத்தப் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும்.

மனிதனின் கீழ் முதுகுப் பக்கத்தின் பின்புற வயிற்றுச் சுவரில் 12-வது மார்பு உள் எலும்பு 1-2வது கீழ் முதுகு எலும்பின் பக்கத்தில் ஒரு ஜோடியான சிறுநீரகங்கள் அமைந்துள்ளன. மொச்சை வடிவம் கொண்ட ஒரு சிறுநீரகத்தின் சராசரி எடை 15 கிராம் ஆகும். ஒவ்வொரு சிறுநீரகமும் 10 செ.மீ. முதல் 12 செ.மீ. நீளமாகவும், 5 செ.மீ., முதல் 6 செ.மீ. அகலமாகவும், 4 செ.மீ. கனமாகவும் இருக்கும். பொதுவாக ஒரு சிறுநீரகம் 120 முதல் 200 கிராம் வரை எடை கொண்டதாக இருக்கும். இடது சிறுநீரகம் வலது சிறுநீரகத்தை விட சிறிதளவு நீளமாகவும் கனமாகவும் இருக்கும்.

இடது சிறுநீரகத்தில் 2/3 பாகம் வயிற்றுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. இதனால்தான் சிறுநீரக நோய்க் கொண்டவர்களுக்கு பசியின்மை, ஜீரணக் கோளாறுகளும் இருக்கும். இடது சிறுநீரகத்தின் மேல்பாகம் வயிறு மண்ணீரல், பெரிடோனியல் உறுப்புகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு சிறுநீரகத்திற்கும் ஒரு சிறுநீர்க் குழாய் இணைக்கப்பட்டுள்ளது. கழிவுப் பொருட்கள் அனைத்தும் சிறுநீர்ப்பையில் கூடும். இரண்டு சிறுநீரகங்களிலும் வடிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் சிறுநீர்ப்பை குழாயின் வழியாக உடலிலிருந்து வெளியேறுகிறது.

ஆரோக்கியமான மனிதனுக்கு 15 மில்லி கிராம் முதல் 40 மில்லி கிராம் வரை இரத்தத்தில் யூரியா இருக்கலாம். 0.5 மில்லி கிராம் முதல் 1.2 வரை கிரியாடினின் இருக்கலாம். ஆண்களுக்கு யூரிக் ஆசிட், 3 மில்லி கிராம் முதல் 7.2 மில்லி கிராம் வரையும், பெண்களுக்கு 2.6 மில்லி கிராம் முதல் 6 மில்லி கிராம் வரை இருக்கலாம். ஆனால் சிறுநீரகங்கள் செயலிழக்கும் போது இதன் அளவு அதிகரித்து விடும். சிறுநீரகங்கள் சிறுத்துச் சுருங்கி விடும். அல்லது வீக்கமடைந்துவிடும். இதற்கு கிட்னி ஃபெயிலியர் நோய் என்று கூறுவார்கள். சிறுவர்களுக்கும் முதியோர்களுக்கும் சிறுநீரில்

கரூர், P.R.C. கார்மெண்ட்ஸாரின் புதுமை திட்டம் No. 3 ன்

"புதிய இணைப்புத் திட்டம்"

1. "இப்புதிய இணைப்புத் திட்டத்தில்" ஒரே ஒரு முறை செலுத்தப்படும் துகை ரூ. 1500/-
2. இத்துகைக்கு, ஏழாவது ஆண்டு முடிவில் ரொக்கமாக திரும்பப் பெறும் துகை ரூ. 4,600/- இத்துகைக்கு எங்கள் நிறுவனத்தின் REPAYMENT ASSURED CARD உடனடியாக வழங்கப்படும்.
3. ஏழு ஆண்டுகளில் பரிசுப்பொருட்களாகப் பெறும் துகையின் மதிப்பு ரூ. 2,940/- ஆக மொத்தம் நீங்கள் இத்திட்டத்தின் மூலம் பெறும் துகை ரூ. 7,540/- (ரூ. 4,600 + ரூ. 2,940 = ரூ. 7540/-)

திட்ட விபரம்

1. ரூ. 1,500-ஐ D.D. அல்லது M.O. மூலம் "P.R.C. கார்மெண்ட்ஸ்" என்ற எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள்.
2. பணம் கிடைக்கப் பெற்றவுடன் முதல் தவணையாக ரூ. 420/- மதிப்புள்ள கீழ்கண்ட பொருட்களில் உங்களின் விருப்பத்திற்கும், தேவைக்கும் ஏற்ற வகையில், எங்கள் செலவில் பதிவு பார்சல் அல்லது கூரியர் சர்விஸ் மூலம் உங்கள் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படும். மீதியுள்ள ஆறு தவணைகளும் இதே போன்று ஆண்டுக்கு ஒரு முறை வீதம் அனுப்பி வைக்கப்படும்.

பொருட்களின் விபரம்

பெண்களுக்கு	ஆண்களுக்கு
1. சுடிதார் செட் } எல்லா வயதினருக்கும் ஏற்ற அளவுகளில்	5. பாலியஸ்டர் வாயில்வேஷ்டிகள் (8 முழம்)
2. நைட்டீஸ் }	6. கைலிகள் (2.00 Mtr)
3. சிம்மீஸ்	7. பனியன்கள் மற்றும் T. Shirts
4. உள்பாவாடைகள்	

குறிப்பு :

1. இதற்கான விலைமதிப்பு பட்டியல் அவ்வப்பொழுது அனுப்பி வைக்கப்படும்.
2. எங்கள் நிறுவனம் அளிக்கும் அனைத்து பரிசுப் பொருட்களும் தரமிக்கவை ஆகும்.
3. புதுமைத்திட்டம் No. 3-ல் (31.01.96 முடிய) பயன் பெற்றுவரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை : 4521

பங்கு கொள்வீர்! **பயன் பெறுவீர்!**

பணம் அனுப்பவேண்டிய முகவரி :

P.R.C. கார்மெண்ட்ஸ்

✆ 21946

26, பிரதட்சணம் ரோடு, 'ஏ' பிளாட், கரூர் — 639 002.

எங்கள் நிறுவனம் 1984ல் பாரதப் பிரதமரின் படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

குறிப்பு :

- ✿ நீங்கள் செலுத்தும் துகை முழுமையாக 68 ஆண்டுகளாக மக்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் கரூர் 'தி லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிட்' - ல் டெபாசிட் செய்யப்படும்.
- ✿ மேற்படி டெபாசிட் துகையிலிருந்து எங்கள் நிறுவனத்தின் நடைமுறை மூலதனத்திற்காக (Working Capital) வங்கியிலிருந்து கடன் வசதி பெற்றுக் கொள்ளப்படும்.
- ✿ இத்திட்டத்தில் இந்தியாவில் உள்ள அனைவரும் பங்கு பெறலாம். வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இத்திட்டத்தில் பங்கு பெறலாம். பரிசு பொருட்கள் மற்றும் இதர கடித தொடர்புகள் இந்தியாவில் உள்ள விலாசத்திற்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும். D.D. கரூரில், மாற்றத்தக்க வகையில் அனுப்பவும்.

நுரை நுரையாக நீர் பிரியும். உடல் வளர்ச்சி தடைப்படும். சில சமயம் அடிக்கடி சளி பிடித்து சிறுநீர் அடைப்பு உண்டாகி முகம், உடல் வீங்கிக் கொள்ளும். இரத்தமாக உடலில் கலக்க வேண்டிய ஊட்டச்சத்து அல்புமின், புரோட்டீன் சத்தாக சிறுநீரில் கலந்து வெளி யேறிவிடும். இது கிட்னிஃபெயிலியரின் ஆரம்ப கட்டமாகும். இந்த கிட்னி ஃபெயிலியர் நோய்களை குணமாக்கி இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்ற யுனானி மருத்துவத்தில் ஏராளமான மருந்துகள் கூறப் பட்டிருக்கின்றன. இவைகளை பயன்படுத்தி னால் டயாலிஸிஸ் இல்லாமல் சிறுநீரகத்தை மாற்றாமல் கிட்னி ஃபெயிலியர் நோய் குணம் பெறுகின்றது.

பொதுவாக சுரைக்காய், பூசணிக்காய், புடலங்காய், பாகற்காய், கிரகாய், வெள்ளரிப் பிஞ்சு, வெள்ளரிப்பழம், தர்பூஜ் பழம் சிறந்த உணவாகவும் மருந்தாகவும் அமைந்திருக் கின்றது.

பிராஸ்டேட் நோய் :

பெண்களுக்கு யூரினரி இன்ஃபெக்ஷன் என்னும் சிறுநீரகப் பாதை தொற்றுக் கிருமி களால் பாதிப்பும், ஆண்களுக்கு பிராஸ்டேட் சுரப்பிகளின் நோய்களும் பொதுவாகக் காணப் படும். நாளடைவில் இந்த இரண்டு நோய்களும் சிறுநீரகங்களை செயலிழக்கச் செய்து விடுகிறது.

50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் பிராஸ்டேட் சுரப்பி என்னும் நோய் அதிகள வில் காணப்படுகிறது. ஆண்களுக்கு சிறுநீர்ப் பையின் கழுத்தின் அருகில் அமைந்திருக்கும் இந்த சுரப்பிகளில் புண் வீக்கம், அழற்சி கற்கள் உண்டாகிறது. இதனால் சிறுநீர் சொட்டு சொட்டாகப் பிரியும். நீர் பிரியும் போது எரிச் சலும் உண்டாகும். சில சமயம் அடிக்கடி கழிக் கும் உணர்வு தோன்றும். இரவு நேரங்களில் அடிக்கடி சிறுநீர் கழிக்கத் தூண்டும் இரத்தக் கசிவு வலி உண்டாகும். சிறுநீர் கழிக்க உணர்வு ஏற்பட்டவுடன் அதை கட்டுப்படுத்த முடியாமல் கஷ்டப்படுவார்கள். உடனடியாக ஆடைகள் நனைந்து விடும். இதற்கு ஆங்கில மருத்து வத்தில் அறுவை சிகிச்சை செய்வார்கள்.

இதைக் குணமாக்க 6 கிராம் கருஞ்சீரகத்தை சிறிது வினிகரில் அரைத்து தினசரி இரண்டு வேளை சாப்பிடலாம். இதே போல் 1 கிராம் குங்குமப்பூவை பன்னீரில் அரைத்துச் சுவைக்க வேண்டும். ஆறு கிராம் பரங்கிச் சக்கையை கஷாயமாக்கிப் பகலில் குடிக்கச் செய்யலாம்.

நுரையீரல் பாதிப்பு :

மனிதன் வாழ்வதற்கு ஆக்ஸிஜன் தேவை. இதை மூக்கு காற்றாகச் சுவாசிக்கச் செய்து நுரையீரல் மூலம் சுத்தப்படுத்தி இரத்தத்திற்குச் செலுத்துகின்றது. இரத்தமும் காற்றும் இதயத்தை இயங்க வைக்கின்றது. ஒவ்வாமை, எனும் அலர்ஜி அதிகமான குளுமை, மற்றும் கடுமையான இரசாயனக் கலவை கொண்ட கலவைகளால் நுரையீரல் கடுமையாக பாதிக் கப்பட்டு நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்துவிடும். நுரையீரல் சுருங்கிக் கொள்ளும். இதனால் சுவாசிக்க கஷ்டப்படுவார்கள். உடலுக்குத் தேவையான அளவிற்கு ஆக்ஸிஜன் கிடைக் காததால் மூச்சுத் திணறல், இளைப்பு உண்டாகும். நுரையீரல் தன் செயல் முழுமை யாக இழக்கும்போது ஆக்ஸிஜன் பெறும் சக்தி இழந்து விடுவதால் இதற்கு லங்ஸ் ஃபெயிலியர் என்பார்கள். அறுவை சிகிச்சை செய்து வென்டிலேட்டர் மூலம் செயற்கையாக ஆக்ஸிஜன் பொருத்துவார்கள். சில சமயம் ஊசி மாத்திரைகள், மருந்துகள் மூலம் தற் காலிகமாகக் கட்டுப்படுத்துவார்கள். யுனானி மருத்துவத்தில் நுரையீரல் செயலிழக்காமல் செயல்பட எளிய மருந்துகள் கூறப்பட்டுள்ளன. அவைகளைப் பார்ப்போம் :-

- அடிக்கடி தும்மல், சளிப்பிடித்தல், மூக்கடைப்பு ஏற்பட்டு சுவாசிக்க கஷ்டம்

சமையலறையில் மளிகை சாமான்களை வைக்க விலையுயர்ந்த டப்பாக்களையே வாங்கி வைக்க வேண்டியதில்லை. வீட்டிலிருக்கும் பூஸ்ட், ஹார்லிக்ஸ் பாட்டில்களுக்கு சரியான எவர்சில்வர் மூடிகளை வாங்கிப் போட்டால், பார்க்க அழகாக இருப்பதுடன் ஊறுகாய் போன்ற பொருட்களும் கெடாமல் இருக்கும்.

— உமா



கரூர், P.R.C. கார்மெண்ட்ஸாரின் புதுமைத் திட்டம் No. 3

"லில்லி உள்பாவாடைகள்" மற்றும் "BEDSHEETS" படுக்கை விரிப்புகள்

திட்ட விபரம் :

1. ரூ. 300/- அல்லது ரூ. 350/- அல்லது ரூ. 400/-ஐ D.D. அல்லது M.O. மூலம் "P.R.C. கார்மெண்ட்ஸ்" என்ற எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள்.
2. பணம் கிடைக்கப் பெற்றவுடன் உடனடியாக,

a) ரூ. 300/- செலுத்தியவர்களுக்கு ரூ. 84/- மொத்த மதிப்புள்ள இரண்டு "லில்லி" உள்பாவாடைகள் Normal Size

b) ரூ. 350/- செலுத்தியவர்களுக்கு ரூ. 100/- மொத்த மதிப்புள்ள இரண்டு Spl. Size (Free Size) "லில்லி" உள்பாவாடைகள்.

c) ரூ. 400/- செலுத்தியவர்களுக்கு ரூ. 115/- மதிப்புள்ள "60 X 90" பெட்சீட் ஒன்று எங்களது செலவில் பதிவுத் தபால் அல்லது கூரியர் சர்வீஸ் மூலம் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு ஆண்டுக்கு ஒருமுறை வீதம் ஏழு முறை அனுப்பி வைக்கப்படும்.

3. நீங்கள் ஒரே ஒரு முறை செலுத்திய ரூ. 300/- அல்லது ரூ. 350/- அல்லது ரூ. 400/- ஐ எங்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 84 மாதங்கள் நிறைவு பெற்றவுடன் ரூ. 600/- அல்லது ரூ. 700/- அல்லது ரூ. 800/- ஆக உங்களுக்கு வழங்கப்படும். இரட்டிப்புத் தொகைக்கு எங்கள் நிறுவனத்தின் REPAYMENT ASSURED CARD உடனடியாக வழங்கப்படும்.

	நீங்கள் செலுத்தும் தொகை	பணம் செலுத்தியவுடன்	முதலாம் ஆண்டு இறுதியில்	இரண்டாம் ஆண்டு இறுதியில்	மூன்றாம் ஆண்டு இறுதியில்	நான்காம் ஆண்டு இறுதியில்	ஐந்தாம் ஆண்டு இறுதியில்	ஆறாம் ஆண்டு இறுதியில்	7 ஆண்டு முடிந்தவுடன் பெறும்தொகை	மொத்தம்
Normal size அதிக பட்ச இடுப்பு சுற்றளவு [illegible] Cm	ரூ. 300/-	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 600/-	ரூ. 1188/-
Spl. size அதிக பட்ச இடுப்பு சுற்றளவு [illegible] Cm	ரூ. 350/-	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 700/-	ரூ. 1400/-
பெட்சீட் 60" X 90" ஒன்று	ரூ. 400/-	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 800/-	ரூ. 1605/-

Normal Size மற்றும் Spl. Size - ல் கிடைக்கும் உயரங்கள் 90 Cms, 95, 100, 105 Cms

பங்கு கொள்வீர்! பயன் பெறுவீர்!

பணம் அனுப்பவேண்டிய முகவரி :

P.R.C. கார்மெண்ட்ஸ் ✆ 21946

26, பிரதட்சணம் ரோடு, 'ஏ' பிளாட், கரூர் — 639 002.

எங்கள் நிறுவனம் 1984ல் பாரதப் பிரதமரின் படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

குறிப்பு :

- ✿ நீங்கள் செலுத்தும் தொகை முழுமையாக 68 ஆண்டுகளாக மக்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் கரூர் 'தி லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிட்' - ல் டெபாசிட் செய்யப்படும்.
- ✿ மேற்படி டெபாசிட் தொகையிலிருந்து எங்கள் நிறுவனத்தின் நடைமுறை மூலதனத்திற்காக (Working Capital) வங்கியிலிருந்து கடன் வசதி பெற்றுக் கொள்ளப்படும்.
- ✿ Spl. Size (ஃப்ரி சைஸ்) வேண்டுவோர் ரூ. 350/- செலுத்தவும்.
- ✿ 60 X 90 பெட்சீட் ஒன்று பெறுவதற்கு ரூபாய் 400/- செலுத்தவும்
- ✿ உங்களுக்கு தேவையான கலர் மற்றும் அளவுகளை குறிப்பிட்டு எழுதினால் அதன்படி உள்பாவாடைகள் அனுப்பி வைக்கப்படும்.
- ✿ வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களும் இத்திட்டத்தில் பங்குபெறலாம். 'லில்லி' உள்பாவாடைகள் மற்றும் இதர கடித தொடர்புகள் அவர்களுடைய இந்தியாவில் உள்ள விலாசத்திற்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும். D.D. கரூரில் மாற்றத்தக்க வகையில் அனுப்பவும்.

ஏற்பட்டால் 12 மில்லி இஞ்சிச் சாற்றை 12 கிராம் தேனில் கலந்து தினசரி இரண்டு அல்லது மூன்று வேளை சாப்பிடலாம். நாள் பட்ட அலர்ஜியைக் கட்டுப்படுத்த அதிமதுரம் அல்லது லவங்கப்பூவை ஒரு துண்டு அடிக்கடி சுவைத்து அதன் சாற்றைக் குடிக்க லாம்.

• நுரையீரல் முழுமையாக செயல் இழந்து விடும் நிலையில் டாக்டர்கள் ஆக்ஸிஜன் அல்லது வென்டிலேட்டர் பொருத்த வேண் டும் என்று ஆலோசனை கூறும் போது யுனானி மருத்துவர்களின் ஆலோசனைப்படி ஒரு தடவை முயற்சி செய்து பாருங்கள். நிறைய பேர் என்னிடம் வந்து குணம்பெற்றிருக் கிறார்கள்.

ஹார்ட்ஃபெயிலியர் :

ஆரோக்கியமான மனிதர் ஒருவர் திடீ ரென்று இறந்து விட்டால் ஹார்ட் ஃபெயிலியர் என்று கூறுவார்கள். இதயப் படபடப்பு, மூச்சுத்திணறல்; பயம், ஒழுங்கற்ற இதயத் துடிப்பு, அதிகமான இதயத் துடிப்பு, லோ. பி.பி., ஹை பி.பி. நோயால் இரத்தக் கொதிப்பு அதிகரித்தோ அல்லது குறைந்து விடுதலோ இருத்தல், இவைகளுக்கு அவ்வப்போது மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். பொதுவாக இதய நோயாளிகள் ஹார்ட் அட்டாக் நோயைத் தடுப்பதற்கு கீழ்க்காணும் வீட்டு வைத்தியத்தை கடைப் பிடிக்கலாம்.

• 12 கிராம் துளசி விதைகளை 125 மில்லி கிராம் பன்னீரில் இரவு முழுவதும் ஊற வைத்து 25 கிராம் சர்க்கரை கலந்து தினசரி இரண்டு வேளை சாப்பிடலாம்.

• வெள்ளை சந்தனத் தூள் 6 கிராம், தனியா 6 கிராம், நீலூஃபர் பூக்கள் 6 கிராம், மூன்றையும் ஒரு டம்ளர் தண்ணீரில் இரவு முழுவதும் ஊறவைத்து வடிகட்டி சர்க்கரை கலந்து மாலை இரண்டு வேளை குடிக்கலாம்.

• ரோஜாப்பூ சென்டை அடிக்கடி முகரச் செய்யலாம்.

• செம்பருத்தி பூக்கள் 25 கிராம் அளவில் எடுத்து 120 மில்லி தண்ணீரில் ஒரு மணி நேரம் வரை ஊறவைத்து வடிகட்டி தினசரி இரண்டு வேளை சாப்பிடலாம்.

• அடிக்கடி ஹார்ட்அட்டாக் உள்ளவர்கள், இதயத்தில் ஓட்டையிருந்து அதை அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்ய வேண்டும் என்று கூறும் போது, இதயக் குழாய்கள் சுருங்கி விட்டிருக்கின்றன என்ற ரிப்போர்ட் வரும் போது யுனானி மருத்துவர்களின் மூலமாகவும் குணம்பெறலாம்.



அடிப்படை வசதிகளுக்காக கதறி அழும் கொரட்டூர் மக்களின் "சாலை மறியல்" போராட்டம் கடந்த மாதம் பாடி, பிரகாஷ் டி.வி.எஸ். அருகில் சென்னை, திருவள்ளூர் நெடுஞ் சாலையில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. பல வருடங் களாக கொரட்டூர், பாடி பகுதி வாழ் மக்கள் தங்களின் முக்கிய அடிப்படை வசதிகளுக்காக அம்பத்தூர் நகராட்சி அதிகாரிகளை யும், மற்றவர்களையும் தொடர்ந்து வலியுறுத்தியும், மனுக்கள் மூலமாகவும், நேரிலும் தங்கள் துயரங்களைத் தெரியப்படுத்தியும், பலன் ஏதும் கிட்டாத நேரத்தில்தான் கடைசி கட்டமாக அம்பத்தூர் நகராட்சியின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும், பொது மக் களின் அடிப்படை வசதிகளை செய்து தர வலியுறுத்தியும், இந்த மாபெரும் சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். சுமார் 10,000க்கும் மேற்பட்ட மக்கள் முழு ஊக்கத் துடனும், உற்சாகத்துடனும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு தமிழகம் காணாத சரித்திரம் படைக்கும் சாலை மறியலை நடத்திக் காட்டினர். இதில் குறிப்பாக பெண்களும், பல மகளிர் சங்கங்களும், பொது நல சங்கங்களும், வியாபாரச் சங்கங்களும், கம்பெனி தொழிலாளர்களும், ஊழியர்களும், பள்ளி ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும், பெரியோர்களும் கலந்து கொண்டனர். அனைத்து தமிழ் ஆங்கில தினப் பத்திரிகை களிலும், வாரப் பத்திரிகைகளிலும் மற்றும் சன் டி.வி.யிலும் இந்த நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு செய்தனர்.

கொரட்டூர் பொது மக்களின் குறைகளை 30 நாட்களில் நிவர்த்தி செய்து தருவதாக எழுத்து மூலம் உதவி கலெக்டர் திரு. அய்யர் I.A.S அவர்களும், நகராட்சியின் கூடுதல் டைரக்டர் திரு. வேலு அவர்களும் உறுதி அளித்த பின்தான் சாலை மறியலில் கலந்து கொண்ட பொது மக்கள் கலைந்து சென்றனர். இந்த மாதிரி ஒரு மாபெரும் போராட்டம் முழு வெற்றியோடு அமைவதற்குக் காரணம் எங்கள் கௌரவத் தலைவர் திரு. ஆர். தாமோதரன் அவர்களே. ஒரு தனி மனிதனின் தலைமையில், அடிப்படை பிரச்னைகளுக்காக மட்டுமே, வேறு எந்த அரசியல் கட்சிக் கலப்பும் இல்லாது சுமார் 10,000க்கும் மேற்பட்ட பெண்கள் பெருவாரியாக கலந்து கொண்ட, கிட்டத்தட்ட 10 மணி நேரம் சத்தியாகிரஹ அடிப்படையில் நடந்த இந்த சாலை மறியல் போராட்டம் மாபெரும் சாதனை எனலாம்.

ஆனால் இன்று வரை எங்கள் தேவைகள் இந்த சாலை மறியலுக்குப் பின்னும் சரிவர நிறைவேற்றப்பட வில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம்தான்.

–கலாபழனியப்பன்

இப்பொழுது உலகத்தரம் வாய்ந்த
ஒவ்வொரு பட்டர்ஃப்ளை
ஸ்டாண்டர்டு
பிரஷர் குக்கருடன்

அதற்கு இணையான பட்டர்ஃப்ளை **பிரஷர் பான்*** **இலவசம்!**



ஒன்றின் விலையில் இரண்டு பட்டர்ஃப்ளை சாதனங்களைப் பெற இதோ ஒரு வாய்ப்பு.

பட்டர்ஃப்ளை பிரஷர் குக்கர் கனமான தகடு, வலுவான கட்டமைப்பு, எளிதாய்ப் பயன்படுத்த இணையற்ற கைப்பிடி என இதன் ஒவ்வொரு பாகமும் நீண்ட ஆராய்ச்சியின் வடிவமைப்பு.

இந்த வாய்ப்பு பட்டர்ஃப்ளை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காப்பர் பாட்டம் மற்றும் ஸ்டாண்டர்டு பிரஷர் குக்கர்கள் ஆகிய இரண்டுக்கும் (7.5, 10 மற்றும் 12 லிட்டர்களுக்கு மட்டும்).

இவ்வாய்ப்பு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே.

---

* மூடியில்லாமல்

அனைத்து பிரபல கடைகளிலும் கிடைக்கும்



பட்டர்ஃப்ளை

IS : 2347

ஒன்றின்
விலையில்
இரண்டு

இவ்வாய்ப்பு தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரபிரதேசம் மற்றும் கர்நாடகத்திற்கு மட்டுமே.


ASP/M/GA/2092/95

புடைவைகளுக்கு ஏற்ற ரவிக்கைகள் – 3

எல்லா ரகப் புடைவைகளிலும் 'பட்டு' விசேஷமானது. மங்களகரமானது. நம் பெண்கள் வைபவ நாட்களிலும் பண்டிகை நாட்களிலும் பட்டுப் புடைவைகளைத்தான் மிகவும் விரும்பி அணிகிறார்கள். பட்டு மற்ற புடவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாதபடி 'தனித்தன்மை' கொண்டது. அப்படியொரு அழகு கொண்ட விலை கூடுதலான அந்தப் பட்டுப் புடைவைகளுக்கு ஏற்றதான ரவிக்கைகள் எவையாம்?

வள்ளுவர் கோட்டம் ஹைரோடு சுதந்திரத் தினப் பூங்கா பஸ் ஸ்டாப் அருகிலுள்ள ஆத்ரேயா கார்மெண்ட்ஸ் உரிமையாளர் திருமதி. வசந்தா ராஜ கோபாலனிடம், "பட்டுப் புடைவைகளில்தான் புற்றீசலைப் போல ரகங்கள் இருக்கிறதே. அவற்றை எப்படி வகைப்படுத்தி.... அதற்கான ரவிக்கைகளைப் பற்றிச் சொல்லப் போகிறீர்கள்?" என்று நாம் கேட்க...





"ஓரளவுக்கு வகைப்படுத்த முடியுமே! செல்ஃப் சிம்பிள் டிசைன், செல்ஃப் வித் கிராண்ட் பல்லு காண்ட்ராஸ்ட், மீடியம் பார்டர், காண்டராஸ்ட் கிராண்ட் பார்டர், சிம்பிள் காண்ட்ராஸ்ட், கிராண்ட் காண்ட்ராஸ்ட், டபுள் சைட் சிம்பிள் பார்டர், டபுள் சைட் கிராண்ட் பார்டர், நூல் வேலைப்பாடு கொண்ட பட்டுப் புடைவைகள், கங்கா, ஜமுனா முப்பாகம், வைர ஊசி, தகடி (டிஷ்யூ), ஜரிகை வேல்தாரி, ஜரிகைக் கட்டம், கூரைப் புடைவைகள் (முகூர்த்தப் புடைவை) மற்றும் டபுள் ஷேட் பட்டுப் புடைவைகள்" – என மளமளவென

பட்டில் எத்தனை விதங்கள்!

மூச்சு விடாமல் சொன்னார் வசந்தா.

பொதுவாக பட்டுப் புடைவைகளுக்கு என்ன ரக ரவிக்கைகள் பொருந்தும்?

"அநேகமாக பட்டுப் புடைவைகளுக்கு பட்டு ரவிக்கைகள் சேர்ந்து அணிவதே அழகு. அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய புடைவைகளுக்கு அதே ரக பட்டு ரவிக்கைகளே பொருந்தும் - என்கிற எண்ணங்கள் மாறி வருவதற்கான காரணம் பட்டுக்கு சரிநிகராக வந்து கொண்டிருக்கும் பாலிகாட் ரவிக்கை ரகங்கள் தான். இது அசல் பட்டு போல தோற்றத்தில் காணப்படுகிறது. இதில் ப்ளெயின் நிறங்களும் சின்னச் சின்ன ஜரிகை பூக்களும் கை இடுப்புப் பகுதிகளில் கரை கொண்ட ரவிக்கைகளும்



வருகின்றன. அடுத்ததாக பட்டுப் புடைவைகளுக்கு பட்டு ரவிக்கைகள் வாங்க விரும்பாதவர்கள் ரேபைடு ரவிக்கைகளும் அணிவதுமுண்டு. பெரும்பாலும் பட்டு ரவிக்கைகளில் ஜரிகைக் கரை பொருத்தி தைத்துக் கொள்வார்கள்."

பட்டுப் புடைவைகள் மற்றும் அதன் ரவிக்கைகளின் தற்போதைய டிரெண்ட் பற்றி ஆத்ரேயாவின் விதவிதமான டிசைன்கள் மற்றும் ப்ராஜெக்ட் மானேஜருமான திரு. சாரி அவர்களிடம் விசாரித்த போது வித்தியாசமான பதில் கிடைத்தது.

"பொதுவாகவே விலை உயர்ந்த பட்டுப் புடைவை கட்டிக் கொண்டு நல்ல அழகான பெண்மணி நமக்கு எதிராக வருகிறாரென்றால் நமது கண்ணில் அந்தப் பெண்மணியின் தோற்றம் தெரியாது. அந்தப் பட்டுப் புடைவைதான் நமது பார்வையை உடனடியாகக் கவரும். ஆனால் இப்போது நாங்கள் ரேபைடு துணியில் தயாரிக்கும் 'ஆத்ரேயா டீலக்ஸ்' 'ஆத்ரேயா ஜெம்' 'ஆத்ரேயா செஸ்' போன்ற பேன்ஸி சோளிகளை அணியும் பொழுது புடைவையைப் பார்க்கும் கண்கள் 'அட அந்த ஜாக்கெட்டைப் பாரேன்' எவ்வளவு அழகாக உள்ளது' என்று அந்த ரவிக்கையின் அழகான அதை அணிந்திருக்கும் பெண்ணையும் பார்க்கத் தூண்டும். ஒருதரம் பட்டுப் புடைவைக்கு பட்டுச் சோளி, மற்றொரு நாள் அதே பட்டுப் புடைவைக்கு பேன்ஸி ப்ளவுஸ் என்று அசத்தி விடலாமே" என்கிறார் சாரி.

பட்டுப் புடைவைகளுக்கு ஃபேன்ஸி ரவிக்கைகள் நன்றாக எடுபடுமா?

"சில பட்டுப் புடைவைகளுக்கு டிசைன் ரவிக்கைகள் மிக அழகாக இருக்கும். 'இவற்றையெல்லாம் பாருங்களேன். பட்டுப் புடைவைகளுக்காகவே பிரத்யேகமாக தயாரித்த டிசைன் ரவிக்கைகளாக்கும்" - வசந்தா ராஜகோபாலன் பட்டுப் புடைவைகளுக்கு மேட்ச் வைத்துக் காட்டுகிறார். "ஃபேன்ஸி ரவிக்கைகளை ரேபைடு மற்றும் பாலிகாட் பிளையின் துணிகளில் அமைக்கிறோம்."

வைர ஊசி, அன்னம் புட்டா, தகடு (டிஷ்யூ), ஜரிகை வேல்தாரி போன்ற புடைவைகள் ரொம்பவும் பளபளப்பாக கிராண்டாக இருக்குமே! அவற்றிற்கு ஸ்பெஷலாக டிசைன் செய்து போட்டால் மேலும் அழகு கூடும் என்றா நினைக்கிறீர்கள்?

"மேலே நீங்கள் குறிப்பிட்ட அந்தப் புடைவைகளுக்கு என்று ஒரு தனியான அழகுண்டு. உடுத்தியிருக்கும் பெண்ணை விட புடைவையின் அழகு பிரமாதமாயிருக்கும் இவ்வகைப் புடைவைகளுக்கு அதையும் மீறிய அழகு கொண்ட ரவிக்கை தேவைப்படாது. டிசைன் ரவிக்கைகளை விட குறைந்த ஜரிகை அல்லது பிளெயின் ரவிக்கைகளில் பைப்பிங் செய்து அழுக்கழுத்து வைத்துத் தைக்கலாம். சின்ன சின்ன புட்டா, பாலிகாட் ரவிக்கைகளும் நன்றாக இருக்கும்."

பட்டுப் புடைவைகளில் வரும் டபுள் ஷேட் போலவே பாலிகாட் ரவிக்கைத் துணிகள் கிடைக்கிறதா?

"மாந்துளிர், செவ்வாழை, மயில் கழுத்து, எண்ணெய் அரக்கு போன்றவை குறிப்பிடத் தகுந்த டபுள் ஷேட் நிறங்கள். இதே போல் பாலிகாட் துணிக்ள் கிடைக்கிறது. டபுள் ஷேட் புடைவைகளுக்கு பாலிகாட் ரவிக்கைகளில் டிசைன் செய்து அணிந்தால் அழகாச இருக்கும்."

கங்கா ஜமுனா (முப்பாகம்) புடைவைகளுக்கு என்ன மாதிரி டிசைன் ரவிக்கைகள் எடுப்பாக இருக்கும்?

"இந்த முப்பாகம் பட்டுப் புடைவைகளை சிலர் மார்னிங் ஈவினிங் என்றும் சொல்வதுண்டு. இந்தப் புடைவை மூன்று நிறங்களில் அமைக்கப்பட்டிருக்கும். பாடி நிறத்துக்கு ஏற்ப டூ பை டூ அல்லது பட்டு, பாலிகாட் எவற்றில் வேண்டுமானாலும் ரவிக்கை அணியலாம். நாங்கள் முப்பாகம் புடைவைகளுக்காக தயாரிக்கும் ரவிக்கைகளுக்கு 'ஆத்ரேயா ரெயின்போ' என்று பெயர் வைத்திருக்கிறோம். புடைவைகளின் பாடி கலரை ரவிக்கையின் உடல் பகுதிக்கும் இரு கரைகளில் எது அடர்த்தியான நிறமோ அதை கைக்கும் மிக்ஸ் பண்ணி வைத்திருக்கிறோம். இந்த ரவிக்கையை பாலிகாட் மற்றும் டூ பை டூ துணிகளில் அமைக்கிறோம்."

பெரும்பாலும் உங்கள் ப்ளவுஸ்களில் முதுகுப் பகுதிகளில் மட்டும் டிசைன் செய்வதில் கவனம் செலுத்துகிறீர்கள். கை, முன் கழுத்துப் பகுதிகளில் அதிகமாக டிசைன் செய்வதில்லையே. ஏன்?

திரு. சாரி சொல்கிறார்.

"நீங்கள் சொல்வது சரிதான். மிக அரிதாகத்தான் கை, முன் கழுத்துப் பகுதிகளில் டிசைன் செய்கிறேன். 'ஆத்ரேயா கோட்ஸ்' 'ஆத்ரேயா செஸ்' மாடல்கள்தான் அப்படி வருகின்றன. மற்றவை எல்லாமே முதுகில் ஃபேன்ஸி டிசைன் செய்யப்பட்டவை. டிசைன் ப்ளவுஸ் சாதாரண பிளவுஸை விட பார்வையாக இருக்கும். அது அடிக்கடி கண்ணில் படாமல் தலைப்பு பாகம் முதுகுப் பகுதியை அரைகுறையாக மறைத்து இலை மறை காய் போல லேசாக கண்ணில் பட்டும் படாமலும் தெரிகிற போது.. முதுகுப் பகுதியின் டிசைன் மேலும் அழகை உண்டாக்கும். இதனால் 'அது என்னதான் டிசைன்' என இன்னொரு பெண்ணையும் பார்க்கத் தூண்டும். ஆகவேதான் பெரும்பாலும் நான் கை முன் கழுத்துப் பகுதிகளை விட முதுகுப் பகுதியிலேயே அதிகமாக டிசைன் செய்கிறேன்."

டபுள் ஷேட் புடைவைகளுக்கும் டிசைன் ப்ளவுஸ் உண்டா?

"பட்டுக்கு நிகரான அதே நிற டபுள் ஷேட் பாலிகாட் ரவிக்கைகளை டிசைன் செய்தோ ப்ளெயினாகவோ உடுத்தலாம்."

"திரெட் ஓர்க் செய்யப்பட்ட பட்டுப் புடைவைகளுக்கு சின்ன சின்ன ஹேண்ட் எம்பிராய்டரி கொண்ட ரவிக்கை நல்ல தோற்றம் கொடுக்கும். திரெட் ஓர்க் பட்டுப் புடைவைகள் மூன்று நான்கு வண்ணங்கள் சேர்ந்திருப்பதால் டூ பை டூ துணி உன்னதமானது. இது முன்பகுதியில் பார்டரின் நிறத்துக்கு ஏற்ப அதே நிறத்தில் பின்டெக் செய்தும் கைகளில் வேவ்ஸ் டிசைன் செய்தும் அணியலாம்."

செல்ஃப் சிம்பிள் புடைவைகளுக்கு எந்த ரவிக்கைகள் பொருந்தும்?


செல்ஃப் சிம்பிள், சிம்பிள் காண்ட்ராஸ்ட், டபுள் சைட் சிம்பிள் பார்டர், போன்ற பட்டுப் புடைவைகளுக்கு காஞ்சி காட்டன் அதிக ஜரிகை கொண்ட பட்டு ரவிக்கைகளும் பாலிகாட் ஜரிகை ரவிக்கைகளும் புடைவையின் அழகை தூக்கலாக்கும். இப்படிப்பட்ட சிம்பிள் புடைவைகளுக்கு மிகவும் கிராண்டான டிசைன் ரவிக்கையும், அதிகம் ஜரி கொண்ட ரவிக்கையும் புடைவையை மிக அழகாக ஆக்குவிக்கும்.

"மெலிவான இளம் பெண்களுக்கு எந்த மாதிரி பட்டுப் புடைவைக் கட்டினாலும் முழங்கை கீழாக கை வைத்து (முக்கால் கை) தைத்தால் வடிவாக இருக்கும்."

"டபுள் சைட் கிராண்ட் பார்டர் புடைவைகளுக்கு புடைவை பார்டரின் நிறத்தை மிக்ஸ் செய்து செஸ் மாடலில் தைப்பது பொருத்தமானது. ஒரு பக்கம் பார்டர் கொண்ட காண்ட்ராஸ்ட் புடைவைகளுக்கு பார்டர் நிறம் கூடிய டிஷ்யூ ரவிக்கைகள் அழகை அதிகப்படுத்தும். மோட்டிஃப் செல்ஃப் பட்டுப் புடைவைகளுக்கு அநேகமாக பட்டு ரவிக்கைகளும் கூடவே கிடைக்கும். இல்லையெனில் பாலிகாட் துணியில் ரவிக்கை தைத்து அன்னம் புட்டா வடிவங்களை ரவிக்கையில் ஜரித்ரெட் ஓர்க் செய்தும் அணியலாம். உடுத்திப் பார்க்க பாந்தமாக இருக்கும்."

- மலர்விழி

அன்பளிப்புப் பொருளை விட அளிக்கும் முறைதான் மதிப்புமிக்கது.



தகவல் : கே. வி. சீனிவாசன்

சொல்ல விரும்புகிறோம்

♦ 'மாதி' வரும் பெண்கள் மாத இதழ் என்பதற்கு ஏற்ப அட்டை அமைப்பினையே 'மாற்றி' ஆரம்பமே 'மாற்றம்' என்று சொல்லாமல் சொல்லி அசத்திவிட்டீர்களே!
மணிமொழி, மயிலாடுதுறை.

♦ வேலைக்குச் செல்லும் பெண்கள் குடும்பத்தை மறந்து இயந்திரமாய் இயங்குவதை வெகு அழகாய் சித்தரித்துள்ளார் கவிதையாக ஆண்டாள் பிரிய தர்ஷினி!
புவனாமோகன், விருத்தாசலம் – 1.

♦ மேதா பட்கர் மற்றும் அவரது இயக்கத்தினரின் கொள்கைப் பிடிப்பை 'ஜல்சமர்ப்பண் போராட்டம்' தெளிவாக எடுத்துக் காட்டுகிறது; ஆனால், அது பகுத்தறிவுக் கொவ்வா செயல் என்பதை அவர் நிச்சயம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்! காந்தியின் அஹிம்சைவழி உண்ணாவிரதம், ஒவ்வொரு வேளையும் கவள உணவை வெள்ளையர் உண்ணும் சமயத்தில் அவர்களை பாடாய்ப்



படுத்தியது; அஹிம்சைப் பேரணி மீது, தடியடி நடத்திய காவலர்கள் மனதில், அடித்த ஒவ்வொரு அடியும் ரணம் உண்டாக்கியது! இது சரித்திரம் சொல்லும் உண்மை! தலைவன் கைது செய்யப்பட்டதுக்கு தீக்குளிக்கும்– தனி நாடு கேட்டு தற்கொலைப் படையில் சேரும் அறிவீனத்தின் மறுவடிவமே 'ஜல்சமர்ப்பண்' என்பதில் துளியும் ஐய மில்லை!
வி.பிரசன்னகிருஷ்ணன், சேத்துப்பட்டு.

♦ 'கிளாஸ் ஸீலிங்' என்ற வார்த்தையை அடிக்கடி கேட்டிருக்கிறோம். பொருள் புரியாமல் உபயோகித்தும் இருக்கிறோம். அதன் உண்மையான பொருளை அறிந்ததும் உண்மையில் மனது கனத்துத்தான் போனது. எத்தனை எத்தனை பெண்கள் தங்கள் திறமைகளையும், கற்பனைகளையும் குடும்பம், சமூகம் என்ற கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைத்துக் கொண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்?
ராணி உலகநாதன், சென்னை – 41.

♦ *சிலபிரச்னைகள், சில வார்த்தைகள்* ஆசிரியரின் கட்டுரை மிகவும் அருமை. 'பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள், கொச்சையாக ரசிக்கப்பட வேண்டியவர்கள் அல்ல' என்னும் வாக்கியம் அட்சர லட்சம் பெறுவதுடன், ஒவ்வொரு பெண்ணின் உள்ளத்திலும், பசுமரத்தாணிபோல் பதியும் என்பதில் ஐயமில்லை.
ஸ்ரீ வித்யா காளிதாஸ், சிதம்பரம்–1.

♦ பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி விட்டார்கள் என்பதற்கு பவர்ட்ரில்லர், டிராக்டர் ஓட்டும் பெண்களேசாட்சி.
டி.கமலாதியாகராஜன், பவித்திரமாணிக்கம்–51.

♦ உஷா சுப்ரமணியன் 'நிறமற்ற பெண்' நெடுங்கதையில் பழமையான கருத்தை மிகவும் புதுமையான அணுகு முறையில் கையாண்டு இருக்கிறார். திவ்யாவின் அப்பாவைப் பற்றிக் கூறிய கருத்து ''அரசாங்க வேலை பார்த்து மூளையே மழுங்கி'' என்ற இடம் சிரிப்பை வரவழைத்தது. தாம்பத்திய உறவைப் பற்றி மேல் நாட்டிற்கும் நம் கலாசாரத்திற்கும் ஒப்பிட்ட முறை அருமை, புதுமை.
எஸ். மீனா, திருச்சி–6.

♦ மாறிவரும் பெண்கள் சிறப்பிதழில் பாலகுமாரன் அவர்களின் கதை மிகவும் சூப்பர். அதிலும் ''இனிமே அம்மான்னா வெறும் பட்சணம் இல்லை. படிப்பு, கெட்டிக்காரத்தனம், பிஹேவியர். நான் சமையலறையிலேயே மாவு பிசைஞ்சுகிட்டிருந்தா என் பையன் சிகரெட், கஞ்சான்னு போயிடுவான். காலம் கெட்டுக்கிடக்கு. பையன் கூட நிறைய பேசணும். பொண்ணு கூட வெளியே சுத்தணும்'' இன்றைய தாய்மார்களை நிதர்சனமாக படம் பிடித்துக் காட்டிய வரிகள். பாராட்டுகள்.
கமலா தெய்வசிகாமணி, சென்னை–96.

♦ சகோதரி மஞ்சுளா ரமேஷ் அவர்களின் கட்டுரை, 'சும்மா'தான் பார்த்தார்!' என்ற தலைப்பில் மஹான் ஸ்ரீரமண மஹரிஷியின் வரலாற்றுச் சுருக்கமும் பக்தர்கள் அடைந்து வரும் பரவசமும் படிக்க படிக்க நம்மையே மஹான் முன்னிலையில் இருக்கும் நிலையை எய்த வைக்கிறது. காஞ்சியில் பிறந்தால் முக்தி, காசியில் குளித்தால் முக்தி 'திருவண்ணாமலை'யை நினைத்தாலே முக்தி என்ற மொழிக்கு ஏற்ப நம் அனைவரையும் 'பக்தி' மார்க்கத்திற்கு அழைத்துச் சென்ற கட்டுரை ஆசிரியைக்கு மங்கையர் மலர் வாசகர்கள் சார்பாக நன்றி.
த. சங்கர், கோயமுத்தூர்–9.

♦ 'வலிகள்' பற்றிய டாக்டர் எஸ். அக்பர் கவுஸர் அவர்களின் விளக்கங்களும், எளிய சிகிச்சை முறைகளும் மிக்க பயனுள்ளவையாக இருந்தன. அடிக்கடி இடுப்பு வலிக்கும்போது, என் குழந்தைகளை இடுப்பில் ஏறி, முதுகில் ஏறி மிதிக்கச் சொல்வேன். அதன் ஆபத்தை இப்போது உணர்ந்து அதை நிறுத்தி விட்டேன். நன்றி, உங்களுக்கும் டாக்டருக்கும்.
பி. காந்திமதி, மதுரை.

தஞ்சாவூர் பாணி படம் வரையலாமா?

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வெண்ணெய்த் தாழியை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் நவநீத கிருஷ்ணனின் ஓவியமும், வடபத்ரத்தில் சயனித்திருக்கும் ஆலிலைக் கிருஷ்ணரின் ஓவியமும், அலங்கார மண்டபத்தில் கொலுவீற்றிருக்கும் லட்சுமியின் படமும் தஞ்சைப் பாணியில், தங்க ரேக்குகள் ஜொலிக்கும் கற்கள் கொண்டு அலங் கரிக்கப்பட்டு அழகாக வரையப்பட்டால் அவற்றை விரும்பாதவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்ன?

'வரைந்து பார்க்க ஆசைதான்... வருமா? நான் பெரிய ஆர்ட்டிஸ்ட் இல்லையே...''

"எப்படி வரைவது? கஷ்டமாக இருக் குமா?''

"ஆயிரக்கணக்கில விலை சொல்லு கிறார்களே... ரொம்ப செலவு ஆகுமா?'' போன்ற உங்கள் கேள்விகளுக்குப் பதில் இதோ....

அடிப்படை டிராயிங் தெரிந்தால் வரைதல் சுலபம்தான். ஆனால் தெரியாத வர்கள் மனம் தளர வேண்டாம். பழைய தஞ்சை பாணி படங்களின் 'ட்ரேசிங் அவுட்லைனை' உபயோகப்படுத்தி ஓவியத்தை வரையலாம்.

செலவு... கொஞ்சம் அதிகம்தான்...

ஆனால் நீங்கள் உபயோகப்படுத்தும் 'தங்க ரேக்கு' போன்றவை தரமானதாக உள்ள போது அவை பல வருடங்கள் பொலிவிழக்காமல் புதிது போல மிளிரும் போது ஒரு சில நூறுகள் செலவு செய்து பல ஆயிரங்கள் பெறும் ஓவியத்தைத் தயாரிக்கும் உங்களுக்குக் கிடைப்பது அளவற்ற ஆனந்தமே!


சித்திரமும் கைப்பழக்கமே... இவற்றை வரைய உங்களுக்கு அவசியம் தேவை... பொறுமை... எக்கச்சக்கப் பொறுமை, ஆர்வம் மற்றும் முயற்சி!

தஞ்சாவூர் ஓவியத்தைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள் :

1. தேக்குப் பலகை அல்லது 'வாட்டர் ப்ரூஃப் கிட்ப்ளை' போர்டு (தேவையான அளவுக்கு வெட்டப்பட்டது.)

2. நைஸ் காடாத் துணி

3. தங்க ரேக்குகள், பட்டை தீட்டப்படாத கண்ணாடிக் கற்கள். (இன்று யாராலும் விலை உயர்ந்த நவ ரத்தினக் கற்களை உப யோகப்படுத்த முடிவ தில்லை. அப்படி விலை உயர்ந்த கற்களை உப யோகப்



படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட புராதன தஞ்சை ஓவியங்கள் இன்று பல லட்சங்கள் பெறு கின்றன.)

4. போஸ்டர் கலர்கள். பிரஷ்கள், மெல்லிய மற்றும் 'திக்'கானவை.

5. கோந்து, மற்றும் ஃபெவி கால் அல்லது ஃபெவிபாண்டு.

6. நீங்கள் வரைய விரும்பிய படத்தின் அவுட்லைன்.

7. மக்கு.



மக்கு தயாரிக்க...

அரைக்கிலோ சாக்குப் பவு டரை 225 மில்லி லிட்டர் நீரில் கரைக்கப்பட்ட 50 கிராம் கோந் துக் கற்களுடன் (Gum Arabic Crystals) நன்கு கலக்கவும். இந்தக் கலவை ஆறு மாதங்கள் வரை பயன்படும். காற்றுப் புகாமல் மூடி வைக்கவும்.

வெட்டப்பட்ட பலகையில் நன்கு கஞ்சி நீக்கப்பட்ட 'நைஸ் காடாத்' துணியை ('ப்ளீச்' செய்யப்பட்ட துணிகள் கூடாது) மைதாக் கஞ்சியில் நனைத்து சுருக்கமின்றி ஒட்டிக் காய வைக்கவும்.

இதன் மீது, தயாரிக்கப்பட்ட 'மக்'கை சிறிது நீரில் கரைத்துப் பூசி, காய்ந்தவுடன் நைசான உப்புக் காகிதத்தால் தேய்த்து வழவழப்பூட்டவும்.

டிசைனை ட்ரேஸ் செய்து கொள்ள வும். (அல்லது வரைந்து கொள்ளவும்.)

மண்டபம், விதானம், தூண்கள், நகை கள் போன்றவற்றிற்குத் தேவையான நிறங் களில் கற்களை ஒட்டிக் கொண்டு, அவற் றைச் சுற்றி 'மக்'கை பிரஷ்ஷால் எழுதி நன்கு காயவிடவும். மண்டபம், ஆசனம் போன்றவைகளில் 'மக்'கைச் சிறிது கன மாகவும், நுணுக்கமான வேலைப்பாடு களுடைய நகைகள் வரும் இடங்களில் மெல்லிய கோடுகளாக 'மக்'கைப் பூசவும். புடைவை, வேஷ்டி போன்றவைகளுக்குத் தேவைப்பட்டால் (தங்க ரேக்கு ஒட்டுவ தானால்) நீர்த்த 'மக்'கைப் பூசவும். (இல்லா விடில் போஸ்டர் கலர் பூசிக் கொள்ள லாம்.)

நன்கு காய்ந்தவுடன், 'வேக்ஸ் பேப்பரில்' ஒட்டப்பட்ட தங்க ரேக்குகளை, தேவை யான வடிவங்களில் கத்திரித்து, மக்குப் பூச்சின் மேல் 'கம்' தடவி ஒட்டவும்.

இனி, போஸ்டர் கலர்களை உப யோகப்படுத்தி ஓவியத்தை வரையலாம்.

உங்கள் தேவைக்கேற்றபடி லைட்டாக வும், டார்க்காகவும் ஷேட் செய்து கொண்டு ஓவியத்தை நிறைவு செய்யவும்.

சில யோசனைகள் :

.... கறுப்பு நிற கார்பன் பேப்பருக்குப் பதில் மஞ்சள் நிற கார்பன் பேப்பரை உபயோகிக்கவும்.

.... தங்க ரேக்கை ஒட்டிய பிறகு அவற்றை நன்கு 'மக்கு' டிசைன்களின் மேல் பதியவைக்க ஒரு மெல்லிய கர்ச்சீபை உருட்டி அழுக்கவும்.

.... பெயிண்ட் செய்யும் போது சிறு தவறு நேர்ந்து விட்டால் பதற வேண்டாம். நன்கு காய விட்டு விட்டுப் பிறகு 'டச்-அப்' செய்து கொள்ளலாம்.

.... பல வருடங்கள் இந்த ஓவியம் ஈரப்பசை மற்றும் பூச்சிகளின் தாக்குதல் போன்றவற்றால் கெடாமல் இருக்க, படத்தின் பின்புறப் பலகையில் ஓரிரு கோட் 'பிக்சர் வார்னிஷ்' பூசிக் காயவிடவும்.

.... ஆரம்பத்தில் சிறிய படத்தை வரையலாம். கை பழகியதும் பெரிய படங்கள் சுலபமாக வரையலாம். தேவைப்பட்டபடி படக்கடைகளில் கொடுத்து ஃப்ரேம் செய்து கொண்டு சுவற்றில் அழகாக மாட்டவும்.

தஞ்சை பாணி ஓவியங்களுக்குத் தேவை யான தங்க ரேக்குகள் மற்றும் கண்ணாடிக் கற்கள் சென்னை சௌகார்பேட்டில் இருக்கும் கடைகளில் கிடைக்கும்.

— உஷா ஸ்ரீகுமார்



நினைத்தால்

பரபரப்பிலும் குதூகலத்திலும் வீடு அமர்க்களப்பட - கட்டுச் சாதங்களின் கூட்டணியில் கதம்பமாய் மணத்தது சமையலறை. பாதங்களில் சக்கரம் கட்டிவிட்ட தினுசில் உள்ளுக்கும் வாசலுக்குமாய் பறந்து கொண்டிருந்த பாபு... வினுவின் பிஞ்சு முகங்களில் சந்தோஷ மின்னல்கள்.

"ஆச்சா... எல்லாரும் ரெடியாகியாச்சா? டிரைவரைக் கூப்பிடு. இதையெல்லாம் கார் டிக்கியில் ஏற்றச் சொல்லலாம்" பெரிய பிக்னிக் செட்டையும்... கூல் கண்டிஷன் வாட்டர் பேக்கையும் சுமந்து வந்த கனகா பேரப் பிள்ளைகளை துரிதப்படுத்த...

"ஓ... நாங்கள்ளாம் அப்பவே ரெடி.. வித்யா சித்தியோட சித்தப்பாதான் இன்னமும் எறங்கி வரலை" என கோரஸ் பாடிவிட்டு ஓடின இரண்டும்.


"ஏண்டி வித்யா... இன்னுமா உன் மாப்பிள்ளை கௌம்பலை! என்ன செய்யறார்னு மாடிக்குப் போய்ப் பார்."

கனகா ஆச்சர்யப்பட, அமைதியாய் புடைவைக்கு மடிப்பு வைத்துக் கொண்டிருந்த வித்யாவிடம் பதில் இல்லை.

என்ன பதில் சொல்லுவாள்? அவளுக்குமே உள்ளுக்குள் குழப்பம்தான். - குளித்து முடித்ததுமே கீழே வந்துவிடும் விஜயன் எதனால் இன்னமும் வரக்காணோம்! நேற்று இரவும் படுக்கையில் உம்மணாமூஞ்சியோடு அவளுக்கு முதுகு காட்டிக் கிடந்தான்தான். அநேக நாட்களில் அப்படி இருப்பதே அவன் வழக்கம் என்பதால் அவளும் அதிகம் கண்டு கொள்ளாமல் விட்டிருந்தாள். இப்போது டிபன் சாப்பிடக் கூட இறங்கி வராததைப் பார்த்தால்

சூரியா சிதானந்த்...

எல்லாம் உனக்குள்ளே...



புதிதாக ஏதோ பிரச்னை பண்ணுவான் போல் தெரிகிறதே!

"ஏய்... உன்னைத்தான்டி கேக்கறேன். மாப்பிள்ளை இன்னும் எறங்கி வரலையாமே? போய் அழைச்சிட்டு வா. நான் போய் அவருக்கு டிபன் எடுத்து வைக்கறேன்..."

"ப்ச்.... அவரென்ன கொழந்தையா? வருவாருமா. டிரஸ் மாத்திட்டிருப்பாராயிருக்கும்" என்ற மகளின் குரல் வேறுபாட்டையோ தயக்கத்தையோ கனகா உணர்ந்ததாய்த் தெரியவில்லை.

"டிரஸ் பண்ணிக்க இத்தினி நேரமா ஆவும்! அலுப்பில மறுபடி தூங்கியிருக்கப் போறார். போ... போய்ப் பார்த்துட்டு வா. உன் அக்காவும் அத்தானும் அப்பவே ரெடியாகியாச்சு. வெயிலுக்கு முன்னாடி தேக்கடி போய்ச் சேர்ந்தாத் தானே சுத்திப் பார்க்கறதுக்கு நல்லாயிருக்கும்!"

அதற்கு மேலும் மறுக்க முடியவில்லை வித்யாவால்.

பயத்தில் துவளும் கால்களுக்கு வலுக்கட்டாயமாய் தைரியத்தை ஏற்றிக் கொள்கிறாள். நெஞ்சுக்குள் ஊஞ்சலாடும் மிரட்சியை அம்மா கண்டுகொள்ளாதபடி முகத்தை இயல்பாய் வைத்துக் கொள்கிறாள். மெல்லப் படியேறி... கதவு தள்ளி... அறைக்குள் பார்வை செலுத்திய போது -

காப்பி கொண்டு தந்தபோது எந்த நிலையில் இருந்தானோ - அதே கோணத்தில்... வெளிப்புறத்தை வெறித்தபடி கற்சிலையாய் அமர்ந்திருந்தான் விஜயன். முகத்தில் கடுமை கலந்த இறுக்கம். உதட்டில் பிடிவாதத்தைக் காட்டும் களிப்பு. முன்னாலிருந்த மோடாவில் அரை மணிக்கு முன்பாய் அவள் வைத்த காப்பி ஏடு படிந்து - நிறம் மாறி - அப்படியே காத்திருக்க, இன்னமும் மனதில் கலக்கம் உண்டாயிற்று.

"என்னங்க... கீழே எல்லோரும் உங்களுக்காக காத்திட்டிருக்காங்க. கௌம்பலை?"

"நான் எங்கயும் வர்றதாயில்லை. யாரும் மெனக்கெட்டுக் காத்திருக்க வேண்டாம்."

முகத்திலடித்தாற் போல் வந்த பதிலுக்கு

வித்யா ஒரு கணம் திகைத்து விழித்தாள். "ஏன்... ஏன் வரலை! இந்த பிக்னிக்கையே அப்பா நமக்காகத்தாங்க ஏற்பாடு பண்ணியிருக்கார். சுமியக்காவோட பிள்ளைங்கள்ளாம் ஆசை ஆசையா கௌம்பி வாசல்ல நிக்குதுங்க. அத்தான் கூட புறப்பட்டாச்சு. இப்ப போய் நீங்க வரலேன்னு சொன்னா எப்படி? எல்லாரும் என்ன நினைப்பாங்க?"

"யார்... என்ன வேணா நெனைக்கட்டும் ஐ டோண்ட் கேர். என்னமோ இதெல்லாம் எனக்காகத்தான் ஏற்பாடு பண்ணினாப்பல பாவ்லா பண்றியே. என்னைக் கேட்டாடி புரோக்ராம் போட்டார் உங்கப்பா. வான்னு கூப்பிட்டதும் நாயாட்டம் ஓடி வர்றதுக்கு என்னை என்ன இளிச்சவாயன்னு நினைச்சாரா? அதுக்கு வேற ஆளைப் பார்க்கச் சொல்லு. தொலைச்சுடுவேன்."

"என்ன இப்படிப் பேசறீங்க! எல்லோருமா தேக்கடி போய்ட்டு வரலாம் மாப்பிள்ளைன்னு அப்பா நேத்தே உங்ககிட்ட சொல்லலை?"

"போவோம்னுதானேடி சொன்னார். போகலாமான்னு சம்மதமா கேட்டார்? இவர் என்னவோ பெரிய கவர்னர் மாதிரியும்... நான் இவருக்கு வேலைக்காரன் மாதிரியுமில்ல உத்தரவு போடறார். நல்லாயிருக்குடி நீங்க மருமகனுக்கு மரியாதை தர்ற லட்சணம்! என் அம்மாவுக்கு மட்டும் இந்த விஷயம் தெரிஞ்சதுன்னு வை. என்னை இந்த வீட்டு வாசப்படியக் கூட மிதிக்க விட மாட்டா."

என்ளாய்ப் பொரிபவனை நிமிட நேரம் இமைகொட்டாமல் பார்த்து நின்றாள் வித்யா.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்?

தாலி கட்டியதுமே, இனி தன்னிஷ்டப்படிதான் அவள் நடக்க வேண்டும் என்றான் - ஒத்துக் கொண்டாயிற்று. சமையல் முதல் சகலமும் தன் விருப்பப்படிதான் இருந்தாக வேண்டுமென்றான் - பொறுத்துக் கொண்டாயிற்று. வாசலை விட்டு ஓரடி வெளியே வைப்பதானாலும் அனுமதி பெற்றாக வேண்டுமென்றான் - சகித்துக் கொண்டாயிற்று.

கட்டிக் கொண்ட தோஷத்திற்காக அவளைத்தான் பொம்மையாய் ஆட்டுவிக்கிறான் என்றால் அவளைப் பெற்றவர்களும் ஆட வேண்டும் என்கிறானா! அவளிடம் போலவே அவள் பிறந்த வீட்டினரிடமும் அதிகாரம் செலுத்த எண்ணுகிறானா!

வேண்டாம். இந்தக் கொடுமையும் அவதியும் அவளோடே போகட்டும். திருமணம் முடிந்த இந்த இரண்டு மாத காலமாய் அவனது கோபத்துக்குப் பயந்தும் - வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டும் - ஆசைகளை விட்டுத்தந்து நடத்தும் அடிமை வாழ்வு அவளுடனே முடியட்டும். அவள் குடும்பம் வரை தொடர வேண்டாம்.

"நான்தான் எங்கயும் எழவு கொட்ட வரலேன்னுட்டேன்ல. பிறகென்ன? போய்த் தொலையேன்."

வார்த்தை அக்கினியின் வீறலுக்கு மௌனமாய்த் திரும்பியவளின் நெஞ்சுக்குள் ஏகமாய்க் கொந்தளிப்பு.

இப்போது அம்மாவிடம் என்ன சொல்வது? நீங்கள் தலைமேல் தூக்கிக் கொண்டாடவில்லையென உங்கள் அருமை மாப்பிள்ளை அங்கே வீஞ்சிக் கொண்டிருக்கிறாரென்றா? அப்படிச் சொல்லி விஷயம் அப்பா காதுவரை போனால் இந்த வீறாப்புக்காரனைப் போயல்லவா தாங்கிக் கொண்டிருப்பார். பேசாமல் அவருக்கு உடம்பு முடியவில்லையாம் என்று சொல்லி விட்டால்?

யோசனையாய் இறங்கி வந்த போது -

"இன்னமும் என்னடி பண்ணிட்டிருக்கீங்க? ஏற்கெனவே லேட், தெரியுமில்லே. எங்கே உன்னோட வீட்டுக்காரர்? பெட்ரூமை விட்டு வெளிய வர்றதுக்கே அவருக்கு மனசில்லையாக்கும்" கேலியும் கிண்டலுமாய் வழி மறித்தாள் அக்கா.

அத்தனை சோகத்திலும் சிரிப்பு வந்தது வித்யாவுக்கு.


கலகலப்பான பேச்சுக்கும்... புன்னகைக்குமே இங்கே பஞ்சம். அக்காவானால், தான் என்னவோ சந்தோஷமும் சல்லாபமுமாய் வாழ்வதான கற்பனையில் குறும்பு செய்கிறாள்! உண்மை நிலை மட்டும் தெரிந்தால்?

"ஏன் வித்து ஒரு மாதிரி இருக்கே? எனி திங்

மீந்து போன ஆமவடையை மறுநாள் நான்கு துண்டுகளாக்கி எண்ணெயில் நன்கு பொரித்து, கீரை, கூட்டுகளில் போட்டு வைத்தால், கருவடாம் போலச் சுவையாக இருக்கும்.

- உமா





உருளை வடிவ, செவ்வக வடிவ 'ஹாட்பேக்கு'கள் உபயோகமில்லாமல், அலமாரிகளில் வைக்கப்பட்டிருந்தால், அவற்றின் உள்ளிருக்கும் பாத்திரங்களை எடுத்துவிட்டு பூக்கள், மரம், செடிகளில் உள்ள இலைக் கொத்துக்களைக் கொண்டு அழகான பூங்கொத்து தயாரித்து வைக்கலாம். பிளாஸ்டிக் பூக்களும் வைக்கலாம். அழகான தொங்கு தோட்டங்கள் வீட்டின் உள் அறையை வாசனையுடன் அலங்கரிக்கும்.

- பூங்கோதை



ராங்?"

"அவர்... அவர்... தேக்கடி வரலேங்கறார்" சொல்லவே கூசியது அவளுக்கு.

"என்னது... வரலையா! ஏனாம்!"

"உடம்புக்கு கொஞ்சம் முடியலை போலிருக்கு. நேத்தே தலைவலின்னுட்டிருந்தார்..."

"அத்தானை வேணா அனுப்பி டாக்டரை கூட்டி வரச் சொல்லட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம். டாக்டரெல்லாம் வேணாம் சுமிக்கா..."

இதற்குள்ளாய் அம்மா, அப்பா, சுமதியின் கணவன், குழந்தைகள் என குடும்பம் மொத்தமும் வித்யாவைச் சூழ்ந்து கொள்கிறது. அப்பாவோ டாக்டரை அழைத்து வர வரிந்து கட்டித் தயாராகிறார்.

ஊஹூம்... வேறு வழியில்லை. நிஜத்தை உடைத்துத்தான் ஆக வேண்டும். இல்லையென்றால் பிரச்னை இன்னும் பெரிதாகும். மென்று விழுங்கி விஷயத்தை அவள் விவரிக்க அனைவரின் முகங்களிலும் பரிதவிப்பின் நிழல்.

"ச்சொ... ச்சொ... சின்ன மாப்பிள்ளை இப்படி தப்பா எடுத்துப்பார்னு தெரிஞ்சிருந்தா முதல்லயே அவரோட அபிப்ராயத்தைக் கேட்டிருப்பேனே வித்யாம்மா" வெகுவாய் வருந்தப்பட்டுப் போனார் அப்பா.

"தேக்கடி இஷ்டமில்லாட்டி வேற எங்கே போகலாம்னு அவரே சொல்ல வேண்டியது தானே! இதுக்கெல்லாமா கோவிச்சுக்கறது!" என ஆதங்கப்பட்டாள் அம்மா.

'இதற்கே நொந்து போகிறீர்களே! உங்கள் செல்ல மாப்பிள்ளையின் மொத்த குணாதிசயமும் தெரிந்தால்?' மனதுக்குள் துடித்த வார்த்தைகளை வித்யா சிரமத்துடன் அடக்கினாள். அம்மாவாவது தைரியசாலி. அப்பா பாவம்... மருமகனின் சுயரூபம் தெரிந்தால் நொறுங்கிப் போவார்.

"விடுங்கப்பா. அவரோட சுபாவமே அப்படித்தான்...."

"சுபாவம் என்னடி சுபாவம்? மரியாதையா கௌம்பறீங்களா இல்லையான்னு ஒரு அதட்டல் போடறதை விட்டுட்டு சும்மா வந்து நிக்கிறா இடியட்! இந்த மாதிரி வெட்டி பந்தாவுக்கெல்லாம் இடமே தரக்கூடாது. அப்பப்போ சரியானபடி குடுத்துடணும்" படபடத்த மூத்த மகளை மெல்லிய குரலில் அடக்குகிறாள் கனகா.

"ஷ்... சும்மா இரு சுமி. உனக்கு எதிலயும் அவசரந்தான். புதுசா கல்யாணமான ஜோரில மாப்பிள்ளை ஏதோ பேசறார். அட்ஜஸ்ட் பண்ணிக்கன்னு உன் தங்கச்சிக்கு புத்தி சொல்றத விட்டுட்டு அவளை வம்புக்குக் கௌப்பறியே?"

"ஆமாம்மா. கொஞ்ச நாள் போனா இதெல்லாம் சரியாயிடும். சரி சரி... நீங்கள்ளாம் இங்கயே இருங்க. நான் போய்ப் பேசி, மாப்பிள்ளையைக் கூட்டியாந்துர்றேன்."

சொன்ன அப்பா மாடிக்குக் கிளம்ப, கூடவே தொடர்ந்தான் சுமதியின் கணவனும்.

என்ன பேசினாரோ...

அப்பாவுடனும் அத்தானுடனும் எந்தவித தர்க்கமும் செய்யாமல் விஜயன் இறங்கி வந்த போது அப்பாடா என்றிருந்தது வித்யாவுக்கு.

போகும் வழியில் யாரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அவ்வப்போது எழுந்த ஹாரன் ஒலி... உராய்ந்து சென்ற காற்றின் ஒலி தவிர காருக்குள் அடர்த்தியாய் மௌனம்.

வித்யா-விஜயனின் திருமணத்திற்கு முன்பாய் இதுமாதிரி உல்லாசப் பயணம் என்றாலே வழி முழுக்க கிண்டலும் சிரிப்பும் தூள் பறக்கும். ஆட்டமும் பாட்டும் அருகிலிருப்பவர்களையும் அதிரடிக்கும். இப்பொழுதோ முற்றிலும் எதிர்மாறாய் இருந்தது சூழ்நிலை.

யதார்த்தமாய் ஏதாவது பேசப் போக விஜயன் அதை தவறாகப் புரிந்து கொள்வானோ என்கிற அச்சம். ஒவ்வொரு வார்த்தை பேசும் முன்பு உள்ளுக்குள் ஒருமுறை ஒத்திகை பார்த்தாக வேண்டிய நிர்ப்பந்தம். இதெல்லாம் எங்களுக்கு ஏன் என்ற ரீதியில் ஜன்னல்புறம் பார்வையைப் பதித்துக் கொண்ட குட்டிக் குழந்தைகளின் ஊமை நாடகம்.

வேண்டாத இந்த அமைதி வித்யாவுக்கு வேதனையாயிருந்தது.

இதென்ன அவஸ்தை? ஒருவனின் விவஸ்தையற்ற கோபத்திற்கு இத்தனை பேரின் சந்தோஷமும் பலியாவதா? இயல்பான அவர்களது கலகலப்பு காணாமல் போவதா? இதற்கு எதுவானாலும் தன்னோடு போகட்டும் என்று ஊரிலேயே இருந்திருக்கலாம். இப்படி எல்லோரின்

ஆனந்தத்தையும் பாழடித்திருக்க வேண்டாம். தனக்குள் அவள் வருந்திப் பொசுங்கிக் கொண்டிருந்த அதேநேரம் -

யாருடைய மௌனமும் பாதிக்கப் போவதில்லை என்று சவால்விடும் தொனியில் நெஞ்சு நிமிர்த்தி அமர்ந்திருந்தான் விஜயன்.

தேக்கு மரங்கள் கம்பீரமாய் நிமிர்ந்து நிறைந்திருக்கும் தேக்கடி கொள்ளையழகுடன் பசும்பட்டாய் விரிந்து கிடந்தது ஏரிக்கரை. சமீபத்தில் பெய்திருந்த மழைக்கு சுற்றுப்புறம் முழுதும் கம்பளம் போர்த்தியிருக்க, காட்டுப் பூக்களின் மணம் சுமந்து வந்த காற்று பயணிகளுக்குள் ரம்மியம் நிரப்பிக் கொண்டிருந்தது.

"காலல என்னடி கொலுசுச் சத்தம்? கூத்தாடிக் கழுத மாதிரி இதையெல்லாம் மாட்டிக்கிட்டுத் திரியக் கூடாதுன்னு கல்யாணத்தன்னிக்கே உன்னைச் சொல்லலை?"

ஏரியின் எழிலில் மெய்மறந்தவளாய் நடந்து கொண்டிருந்த வித்யா, கணவனின் சிடுசிடுப்புக்கு விழித்துக் கொண்டாள் ஒரு திடுக்கிடலுடன்.

"வந்து... புதுக் கொலுசை ஏன்டி கழட்டி வச்சிருக்கே, போட்டுக்கோன்னு சுமியக்கா சொன்னா. மாட்டேன்னு எப்படி சொல்றதுன்னுதான்...."

"ஏன் சொல்ல வேண்டியதுதானே... எம் புருஷனுக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு. உங்கக்கா என்ன தலையை எடுத்துடுவாளோ?"

கொலுசு போட்டுக்கறவளெல்லாம் கூத்தாடின்னு நீங்க பேசினது தெரிஞ்சா நிச்சயம் தலையை எடுக்கத்தான் செய்வாள். உள்ளுக்குள் குமுறியவள்,

"ஊருக்குப் போனதும் கழட்டி வச்சுடறேன்" என்று பிரச்னைக்கு முற்றுப் புள்ளி வைத்தாள் ஒற்றை வரியில். இவனிடம் வாய்பேசி மீள முடியுமா என்ன?

நல்லவேளை! மற்றவர்களெல்லாம் நான்கடி முன்னால் நடந்து விட்டதால் எவர் காதிலும் விழுந்திருக்காது. பெருமூச்சுடன் திரும்பிய வித்யாவை புல்வெளியின் சரிவில் அமர்ந்திருந்த அந்த வெள்ளைக்காரக் குடும்பம் வெகுவாய் ஈர்த்தது.

கணவன்-மனைவி கூடவே நெஞ்சை அள்ளும் சிரிப்புடன் கொழுகொழு குழந்தை! ரத்தச் சிவப்பு ஸ்வெட்டர். சுருள் சுருளாய் பொன்னிற கேசம். சின்னச் சிப்பியாய்க் குழிந்த கன்னம் அப்போதுதான் பறித்தெடுத்த குண்டு மல்லி போல் அதிஅற்புதமாய்! ஆரோக்கியமாய்!

அப்பப்பா! என்ன அழகு! ஓடிப் போய் அதனை துள்ளத்துள்ளத் தூக்கித் தோளோடு அணைத்துக் கொண்டால்? - நினைப்பே இனித்தது.

"சுமிக்கா... அந்தச் சிவப்பு ஸ்வெட்டர் குழந்தையைப் பாரேன்..." பேச்சு சுவாரஸ்யத்தில் கவனியாமல் செல்லும் அக்காவுக்கு எப்படியும் காட்டி விடும் ஆவலில் இரண்டடிதான் வேகமாக வைத்திருப்பாள். -

"நில்லுடி. என்ன அவசரம்னு முந்திக்கிட்டு ஓடறே? கூடவே வர்றதானா வா. இல்லாட்டி ஊரைப்பார்த்து இப்பவே கௌம்பு. நாசமாப் போன இந்தத் தேக்கடியப் பார்க்கணும்னு நானொண்ணும் ஏங்கிக் கெடக்கலை" என்றபடிக்கு அவளை லகானிட்டு நிறுத்துகிறது விஜயனின் இரும்புக் குரல். மீறினால் அறைந்து விடுவான் போலொரு அழுத்தம்.

வீட்டில்தான் காலைச் சுற்றும் நாய்க்குட்டியாய் இவனையே வளைய வந்தாக வேண்டும். இது போல் சந்தர்ப்பத்திலாவது அவளின் குடும்பத்தாரோடு சேர்ந்திருக்க அனுமதிக்கக் கூடாதா? அவனோடேதான் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமா?

ஆத்திரம் எழுந்தாலும் வெளிப்படுத்தாது இணைந்து நடக்கத் தொடங்குகிறாள் குனிந்த தலையுடன். கல்லுளிமங்கனாய் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டதுடன் சரி. அவனும் ஒரு வார்த்தையும் பேசுவதாயில்லை.

ஹூம்... இப்படி ரோபாட் போல் வருவதற்குத்தான் கூடவே நட என்றானாக்கும்! வேடிக்கைதான். மை விழிகளில் துளிர்த்த ஈரத்தை, பழகிய லாவகத்துடன் மறைத்துக் கொண்டவளுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போயிற்று.

"போட்டிங் போறப்போ நான் சித்தி பக்கத்துல உட்கார்ந்துப்பேன்."




அப்பளத்தைத் தணல் இல்லாமலே நன்றாகச் சுடலாம். வீட்டிலிருக்கும் நான்-ஸ்டிக் கடாய் அல்லது தோசைக் கல்லை அடுப்பில் போட்டு சற்றுக் காய்ந்ததும் அதில் அப்பளத்தைப் போட்டும் திருப்பிப் போட்டும் சுடலாம். அரிசி அப்பளத்தையும் கொஞ்சம் நெய்யை அப்பளத்தில் தடவி இந்த மாதிரி சுடலாம்.

- பானுமதி நடராஜன்

நாம் அப்பம் செய்யும்பொழுது வெல்லத்திற்குப் பதிலாக, சர்க்கரையைப் போட்டு அப்பம் செய்தால் வெளுப்பாக வாய்க்கு ருசியாக இருக்கிறது. நீங்களும் செய்து பாருங்களேன்!

- சித்ரா ஸ்ரீதரன்



"நானும்தான்."

"சரி சரி... சித்தியோட்டவே உட்கார்ந்துக்கலாம். இப்போ அங்கிட்டு இங்கிட்டு ஓடாம நடங்க. வாங்க மாப்பிள்ளை... பிள்ளைங்களோட வித்யா, சுமியெல்லாம் முன்னாடி இருக்கட்டும். நாம இப்படி பின் சீட்ல இருந்துக்கலாம்" அழைத்த மாமனாரிடம்,

"ஓ ரைட்" என்றே விஜயன் சொன்னான் என்றாலும்,

"நான் பக்கத்துல இல்லேன்னதும் சின்னப் பசங்களோட ஆட்டம் போடக் கௌம்பினே... கொன்னுருவேன்" என இறுகிய முகத்துடன் மனைவியின் காதருகே எச்சரித்துப் போக வித்யாவினுள் சின்னதாய் அரும்பிய சந்தோஷமும் அடங்கியே போகிறது.

ஆட்டமா! அவளா ஆட்டம் போடுகிறவள்! அதுதான் தாலிகட்டிய விநாடியே அவனது உல்லாச உணர்வுகளையெல்லாம் நசுக்கி விட்டானே!

"ஹே...... ஹோ... ஒவ்வ்வ்"

சிறிதும் பெரிதுமாய் கூச்சல்கள்... கும்மாளங்கள்.... குதூகல ஓலங்கள்! ஆனானப் பட்ட பெரியவர்களையும் ஐந்து வயதுக் குழந்தையாய் மாற்றிக் கொண்டிருந்தது படகுச் சவாரி.

கையருகில் சலசலக்கும் ஏரித் தண்ணீரை பயத்துடன் ஸ்பரிசித்து... சிலிர்த்து... கிளுகிளுக்கின்றனர் சுமியக்கா.... அத்தான்... குழந்தைகள் ஏன் அம்மாவும் அப்பாவுமே கூட! வித்யாவிற்கும் அதே போல் விளையாட வேண்டும். உற்சாகக் கூச்சல் போட வேண்டும். ஐந்து வயதுச் சிறுமியாய்த் துள்ள வேண்டும் என்றெல்லாம் ஆசை ஊற்றெடுக்கிறதுதான். எங்கே? முதுகுப்புறத்தில் கணவனின் பார்வைதான் தீயாய் உறுத்திக் கொண்டிருக்கிறதே! தன் கட்டளையை மீறுகிறாளா பார்க்கலாம் என வேட்டை மிருகத்தின் வேகத்துடன் வேவு பார்த்துக் கொண்டிருக்கிறதே!

"உடம்பு எதனா சரியில்லையா வித்யாம்மா? அப்போயிருந்து கம்னு வர்றியே?" எதிர்பாராத விதமாய் அப்பா எழுப்பிய கேள்விக்குத் திணற வேண்டி வந்தது.

"ம்... ஆமாப்பா விடாம தலைவலிச்கட்டேயிருக்கு. அதான்..."

"ஏண்டி..... எங்கிட்ட சொல்லியிருக்கக் கூடாது? டேப்லட் தந்திருப்பேன்ல..." கவலையாய் மகளின் நெற்றியைத் தொட்டுப் பார்த்த கனகா, கைப்பை திறந்து மாத்திரைப் பட்டையை எடுத்து நீட்டுகிறாள்.

மறு பேச்சின்றி அதை வாங்கி விழுங்கி வைத்த வித்யா, கலங்கும் கண்களை அக்கா கவனிப்பது போல் தோன்ற பின்புறமாய் சாய்ந்து இமைகளை மூடிக் கொள்கிறாள்.

"அவளுக்கு டயர்டா இருந்தா ரெஸ்ட் எடுத்துக்கட்டும் கனகா. யாரும் தொந்தரவு பண்ணாதீங்க" என்ற அப்பாவுக்கு ஓராயிரம் நன்றி சொல்லத் தோன்றியது.

"**வி**து... இங்கே வா. உன்னோட கொஞ்சம் பேசணும்."

அழைத்த அக்காவை தயக்கமாய் திரும்பிப் பார்த்தாள் மாடி பால்கனியின் தனிமையில் அமர்ந்திருந்த வித்யா.

"சும்மா வாடி. உன் மாப்பிள்ளைதான் வெளியே போயிருக்காரில்ல. இப்பவும் என்ன பயம்?"

"பயமா?.. அவர்கிட்ட எனக்கென்ன பயம்?"

"ஏய் என்கிட்டயே பூசி மொழுகறே பார்த்தியா? நான் உன் கூடப் பொறந்தவடி. தேக்கடியில நடந்ததை மத்தவங்க வேணா கவனிக்காம இருந்திருக்கலாம். நான் அப்படியில்லை. வீட்டை விட்டுப் புறப்பட்ட நிமிஷத்திலேர்ந்து கவனிச்சுக்கிட்டுத்தான் வர்றேன்."

"............"

"சொல்லு... உங்களுக்குள்ளே என்ன குழப்பம்?"


பரிவான இந்த ஒரு வார்த்தைக்கே இதயம் காத்திருந்ததோ! அன்று வரை தேக்கி வைத்த வெள்ளத்தை ஒரேயடியில் வெளியேற்றி விடும் வேகத்துடன் விழிகள் அருவியாகியிருக்க... வித்யா எதையும் மறைக்கவில்லை. மறைப்பதற்குத் தோன்றவில்லை.


சொல்லி முடித்த போது அழுகை குறைந்திருந்தது. இதயம் நிர்மலமானதுபோல் தோன்றியது. பெரும் பாரமே இறங்கிப் போனதான

அபிராமியின் மயோபுரா எஸ்டேட்
ஐந்தாம் ஆண்டு ஆரம்பவிழாவில்
அறிமுகப்படுத்தும் அற்புதமான திட்டம்

கொடைக்கானலில்

மயோபுரா பண்ணைநிலம்





1. உங்கள் முதலீட்டை திரும்ப பெறுவீர்.
2. பத்திர செலவு - இலவசம்.
3. 5 ஆண்டுகளுக்கு பண்ணை பராமரிப்பு - இலவசம்.
4. மயோபுரா ரிசார்ட்ஸ்களில் ஐந்து வருடங்கள் 3 நாட்கள் வீதம் இலவசமாக தங்கலாம்.
5. பொழுதுப்போக்கு கிளப்பில் நுழைவு ஐந்து வருடங்களுக்கு இலவசம்.
6. வருடாந்திர விவசாய வருமானம்.
7. 100% வரி இல்லா வருமானம்.
8. காட்டேஜ் கட்ட இட ஒதுக்கீடு.
9. 2,400 ச.அடி முதல் கிடைக்கும்.
10. ச.அடி. விலை ரூ. 37/- மட்டும்.
11. ஒரே தவணையில் செலுத்தினால் 10% தள்ளுபடி.
12. ரூ. 15,800/- செலுத்தி பண்ணையை தங்கள் பெயருக்கு பதிவு செய்துக் கொண்டு, மீதி தொகையை ரூ. 2,500/- வீதம் 30 மாதங்கள் செலுத்தலாம்.

வருடத்திற்கு 50% மதிப்பு உயரக்கூடிய பண்ணை நிலத்துடன்
அனைத்து வசதிகளையும் பெறுவீர். இணைவீர்! வளம் பெறுவீர்!!

அபிராமி

மயோபுரா எஸ்டேட்ஸ்

தலைமை அலுவலகம் : சித்ரா காம்ப்ளக்ஸ், திருச்சி - 2. போன் : 31467 கிளைகள் : 49/21, முருகன் காம்ப்ளக்ஸ், பிருந்தாவன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. போன் : 4840258. ★ Y-219, IInd அவென்யூ, பேஸ்மெண்ட் யமஹா ஷோரூம், அண்ணாநகர், சென்னை - 40. போன் : 6214407. ★ 55-B, சின்னையா காம்ப்ளக்ஸ், ஜந்து ரோடு, கௌரி தியேட்டர் அருகில், சேலம் - 4. போன் : 445037. ★ 545, அருணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது மாடி, (கவின் மருத்துவமனை எதிரில்) பெருந்துறை ரோடு, ஈரோடு - 11. போன் : 220781. ★ 307, IIIrd Floor, ராஜராஜேஸ்வரி டவர், Dr. நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 18. போன் : 232381. ★ பம்பாய் கன்சல்டன்ட் Adv (Mrs) S.P. மேரி, B.A., (Hons) LLH, பம்பாய் - 400 017. போன் : 4072960 / 409028

உணர்வு கூட வந்திருந்தது.

தங்கையின் முதுகை ஆதரவாய் வருடியதுடன் சரி. இடையில் ஒரு வார்த்தை குறுக்கிடவில்லை சுமதி. வெட்டிப் பேச்சுக்கும் நொண்டிச் சமாதானத்துக்கும் நேரமில்லை இது. சிந்திக்க வேண்டிய நேரம். நிகழ்ச்சிகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நேரம். அப்படி ஆராய்ந்த அளவில் எல்லாமும் விளங்கிப் போயிற்று அவளுக்கு.

உயிருக்குயிரான தன் தங்கையின் கணவன் ஒரு ஸாடிஸ்ட். மனைவி எனப்படுபவள் தாலி கட்டியவன் காலடியில் விழுந்து கிடக்க வேண்டிய கொத்தடிமை என நினைக்கும் ஸாடிஸ்ட்.

"என்ன சுமிக்கா... ஏன் எதுவும் பேச மாட்டேங்கறே?"

"ம்... தப்பெல்லாம் உம்மேலேங்கறப்போ எதைப் பேசறது?"

"நானென்ன தப்பு செஞ்சேன்?"

"உன் புருஷனுக்கு பயந்துக்கிட்டு இத்தனை நாள் அவர் பண்ணின அநியாயத்துக்கெல்லாம் அடங்கிப் போயிட்டிருக்கியே... அது தப்பில்லையா?"

தவறிழைத்த குழந்தை போல் வித்யாவின் தலை கவிழ்ந்து கொண்டது. "கட்டின புருஷனாவே இருக்கட்டும்... தன்னிஷ்டத்துக்குத்தான் நடந்துக்கணும்னு கட்டாயப்படுத்தறதுக்கு அவருக்கென்ன உரிமையிருக்கு? அதைச் செய்யாதே... இதைச் செய்யாதேன்னு எடுத்ததுக்கெல்லாம் கண்டிஷன் போட அவருக்கென்ன அதிகாரமிருக்கு? இது வெறும் அகம்பாவம் வித்து. தான் என்ன சொன்னாலும் இவள் கேட்டே ஆகணும்கற மேல் ஷாவனிஸம். இதுக்கெல்லாம் நீ பணிஞ்சிருக்கவே கூடாது. என் நேச்சர் இதுதான்... இப்படித்தான் என்னால் இருக்க முடியும்னு இயல்பா இருந்திருக்கணும். விட்டுட்டே."

"வேறென்ன பண்ண முடியும். சுள்ளுனு கோபிக்கறாரே?"

"கோபிக்கட்டுமே. எத்தனை நாள் கோபிப்பார்? நாலு நாளைக்கு வேணா எகிறிப் பார்ப்பார். பிறகு இவகிட்ட நம்ம அதிகாரம் செல்லுபடியாகாதுன்னு புரிஞ்சு தன்னாலே வழிக்கு வந்திருப்பார். அதை விட்டுட்டு இப்படி அடங்கிக் கிடக்கறதாலே யாருக்கு லாபம்? பெண்டாட்டியை முழுக்க முழுக்க நம்ம கண்ட்ரோல்ல வச்சிருக்கோம்கற அவரோட ஷாவனிஸம் வேணா இன்னும் கொஞ்சம் வளரலாமே தவிர மற்றபடி எந்தவித பிரயோஜனமும் இருக்கப் போறதில்லை. உன்கிட்ட நியாயமா எதாச்சும் எதிர்பார்க்கிறாரா... தாராளமா செய். தப்பில்லை. ஆனா இதுமாதிரி சில்லறைத்தனமான மிரட்டல்களுக்கு தழைஞ்சு போறே பார்... மகா முட்டாள்தனம்."

"அவர் செய்யறது அநியாயம்னு எனக்கும் தெரியுது. ஆனா நான் எதிர்ப்பு காட்டினேன்னா பெரிசா ஏதும் பிரச்னை பண்ணிடுவாரோன்னு பயமாயிருக்கு."

"ஏன் இப்போ மட்டும் பிரச்னை பண்ணலையா? நீ பயந்து பயந்து நடக்கப் போய்த்தான் வித்து மாமனார் வீட்லயும் தர்பார் பண்ணிப் பார்க்கலாம்கற தைரியமே வந்திருக்கு. ஆரம்பத்திலேயே தட்டிக் கேட்டிருந்தியானா நேற்று அப்பாவை மன்னிப்புக் கேட்க வைக்கற அளவுக்குப் போயிருப்பாரா?"

"என்னது... அப்பா.... மன்னிப்பு கேட்டாரா?"

"பின்னே? எப்படி உன் வீட்டுக்காரர் கிளம்பினார்னு நெனைக்கறே?" பிக்னிக் விஷயத்திலே நானே முடிவெடுத்தது தப்புதான் மாப்பிள்ளை. இனி உங்களைக் கலந்துக்காம எதுவும் செய்யறதில்லை... மன்னிச்சுக்கிடுங்க'ன்னு அப்பா அவர் கையைப் பிடிச்சு தாங்கியிருக்கார். அப்புறம்தான் வேண்டா வெறுப்பா கெளம்பினாராம். அத்தான் சொன்னார்!"

வித்யா இதைக் கொஞ்சமும் நினைத்திருக்கவில்லை. மாமனாரைப் பார்த்ததுமே தகராறு செய்யாமல் கிளம்பி விட்டான் என்றல்லவா கற்பனை செய்திருந்தாள். அங்கே அப்பாவானால் மன்னிப்பு கேட்டாராமே!

இருக்கும். பயணத்தின் போது கூட அப்பா




அப்போதுதான் அரைத்த தோசை மாவை உடனே தோசை வார்க்க கொஞ்சம் மோர் அல்லது புளித்த மோர் சேர்ப்போம். அவை இல்லாத பட்சத்தில், பழைய சாதத்து நீரை விட்டு தோசை வார்த்துப் பாருங்கள்! மறுநாள் வார்க்கும் தோசையை விடப் பிரமாதமாய் இருக்கும். ஐயய்யே! பழைய சாதத்து நீரையா? என்று கேட்பவர்கள் இனி அந்த நீரைக் கொட்டவே மாட்டார்கள். உடம்புக்கும் சத்துதான்! (தக்காளி அதிகம் மீந்தால், தக்காளி ஜூஸை மாவில் விட்டும் தோசை செய்யலாம்.)

- உமா

சாதாரண பச்சைமிளகாயை காரமில்லாமல் பஜ்ஜி செய்ய ஓர் எளிய முறை - பச்சை மிளகாயை இரண்டாகப் பிளந்து கொஞ்சம் எண்ணெயில் வதக்கியபின் மாவில் தோய்த்துச் செய்தால் காரமே இருக்காது. விதைகளை நீக்கவேண்டிய அவசியமும் இருக்காது. ப. மிளகாயை ஊறுகாயாகப் போட்டு வைத்திருப்பவர்கள் அந்தப் புளி மிளகாயை எடுத்து மாவில் தோய்த்தும் பஜ்ஜி செய்தால் காரமில்லாமல் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

- உமா



விஜயனை ரொம்பவே உபசாரம் செய்தது இப்போது ஞாபகத்திற்கு வருகிறது.

'சின்ன மாப்பிள்ளைக்கு இன்னும் கொஞ்சம் தக்காளி சாதமும் கறிவறுவலும் வை கனகா. அவருக்கு வேணுங்கறதை நல்லா கவனி. கையலம்ப தண்ணீர் கொடு....' என்று பெரிய மாப்பிள்ளையை விடவும் அவரை விழுந்து விழுந்துதான் பார்த்துக் கொண்டார். எல்லாம் எதற்கு? எங்கே இந்தச் சிடுமூஞ்சி மாப்பிள்ளை தன் மீதிருக்கும் கோபத்தில் பெண்ணை கஷ்டப்படுத்தி விடுவானோ என்ற பயத்தில்தானே? பாவம் அப்பா... தன்னால் அவருக்கு எத்தனை வேதனை.

நின்று போயிருந்த கண்ணீர் மீண்டும் தளும்புகிறது புது வேகத்துடன்.

"ஊஹூம்... நடந்ததற்காக வருத்தப்பட்டு ஒன்றும் ஆகப் போறதில்லை வித்து. இனி நடக்கப் போறதைத்தான் யோசிக்கணும். ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சுக்க. எப்பவுமே நாம் ஓட ஓடத்தான் விரட்டறவருக்குக் கொண்டாட்டம். விரட்டறவரை எதிர்த்துத் துணிச்சலா ஒரு அடி எடுத்தோம்னு வை. விரட்டல் அத்தோடு ஒரு முடிவுக்கு வந்துடும். அவசரமில்லை. நிதானமா யோசி. வழி எதுன்னு உனக்கே புரியும்."

மிக இதமாய்ச் சொன்ன சுமதி, தங்கைக்கு அவகாசம் தரும் விதமாய் வெளியேற, சிந்தனையில் விழுந்தாள் வித்யா. மனதில் அக்காவின் வார்த்தைகள் அப்படியே சரம் மாறாமல் பதிந்து போயிருந்தது.

"என்னங்க, மார்னிங் செவன் தர்ட்டி வண்டிக்கு அப்பா நமக்கு டிக்கெட் புக் பண்ணியிருக்கார். எத்தினி மணிக்கு அலாரம் செட் பண்ணட்டும்?"

மாமனார் குடும்பமே தன் காலடியில் என்பதான பாவனையில் அலட்சியமாய் படுத்துக் கிடந்த விஜயன், கேள்வி கேட்ட மனைவியைத் திரும்பிப் பார்த்ததும் ரௌத்ரமானான். கையில் டைம்பீஸுடன் இளம் மஞ்சள் நைட்டியில் சாவதானமாய் நின்றிருந்தாள் வித்யா.

"ஏண்டி... இந்த நைட்டி எழவுகளெல்லாம் எனக்குப் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியுமில்லே? கழட்டி எறிஞ்சுட்டு சேலையக் கட்டிட்டு வாடி."

"ப்ச்சு... தூங்கற நேரத்தில் நைட்டிதான் எனக்கு சௌகரியம். நீங்க லுங்கி மாத்திக்கறதில்லை... அதுமாதிரி. இந்த வாட்டி ஊருக்கு எடுத்துப் போகக் கூட நாலஞ்சை பேக் பண்ணி வச்சிட்டேன். அதிருக்கட்டும்... அலாரத்தை அஞ்சரைக்கு வச்சிடவா? வண்டியை மிஸ் பண்ணிடக் கூடாது பாருங்க."

அவனின் கோபத்தையோ ஆத்திரத்தையோ கொஞ்சமும் கண்டு கொள்ளாத அந்த அலட்சியம் அவனுக்கு நிறையவே எரிச்சலூட்டியது. அந்த எரிச்சல் கிளப்பிய வெறி அவளது அப்பாவைத் தாக்கிப் பேசத் தூண்டியது.

"போகுது! என்னமோ டிக்கெட் எடுத்துட்டார், டிக்கெட் எடுத்துட்டார்னு பிரமாதமா அலட்டிக்கறே! உங்கப்பன் என்ன ப்ளைட்டுக்கா டிக்கெட் எடுத்துத் தந்துட்டார்? பிசாத்து ட்ரெயின் டிக்கெட்தானேடி."

"ஊருக்கு வர்றப்போ நாமளும்தான் என்ன ப்ளைட்லயா வந்தோம்? இல்லியே... பிறகு அப்பா மட்டும் எப்படிங்க ப்ளைட்டில் அனுப்பி வைப்பார்னு எதிர்பார்க்க முடியும்." வெகு நிதானமாய் அதேசமயம் நெற்றியடியாய் வருகிறது பதில்.

எத்தனை திமிர் இருந்தால் தன்னிடமே துணிச்சலாய் வாயாடுவாள்!

சிறலாய் நிமிர்ந்தவன் வித்யாவிடம் எதைக் கண்டானோ! நேருக்கு நேரான பார்வையா? கலக்கமில்லாத அந்தத் தோரணையா? தெரியவில்லை. புருவச் சுளிப்புடன் வெடுக்கென முகம் திருப்பிக் கொண்டதுடன் சரி. வழக்கமான சொல்லம்புகளைக் காணோம். குதறி வெறியும் வார்த்தைக் கணைகளைக் காணோம்.

வெற்றி! தன் முயற்சிக்குக் கிடைத்த முதல் வெற்றி!

மெலிதாய்ப் புன்னகைத்த வித்யா அமைதியுடன் தன் தலையணையில் படுத்துக் கொண்டாள். நெஞ்சுக்குள் பூப்பூவாய் சந்தோஷச் சிதறல்கள். எதிர்காலத்தின் மேல் இப்போது அவளுக்கு நம்பிக்கை வந்திருந்தது.

புதிதாய் மலர்ந்த அழகை உங்களில் பாருங்கள்

புதிய வெல்வெட் பிளாக் பியூட்டி ஷாம்பு - அதிலுள்ள விசேஷ கண்டிஷனர் மூலம் உங்கள் கூந்தலை மென்மையாக்கி, கருமைப் பொலிவுடன் அலைபாயச் செய்கிறது.



எக், ரோஸ், கிரீன் ஆப்பிள், லேவண்டர் மற்றும் ஜாஸ்மின் ஆகிய வகைகளிலும் கிடைக்கிறது.

NEPC

விற்பனை செய்வோர்: என்இபிசி ஃபார்மாகெம் • இது என்இபிசி அக்ரோ ஃபுட்ஸ் லிமிடெட்டின் ஒரு பிரிவு.
மார்க்கெட்டிங் அலுவலகம்: G.R. காம்ப்ளெக்ஸ் அனெக்ஸ், 407 & 408 அண்ணா சாலை, நந்தனம், சென்னை 600 035.
போன்: 4344580, மலர்கள் தொடர்பு கொள்ளவும்.

R.K SWAMY/BBDO NEPC PHAR 15086 TAM



வாழ்க்கையின் நல்ல விஷயங்களை மற்றும் அறிவார்ந்த திட்டமிட்ட நிதி சேமிப்பின் மூலம் உங்களுக்கு அறிமுகப்படுத்தும் முதன்மையான நிறுவனம்

26% + 3%

வட்டி ஊக்கத்தொகை

வட்டித் தொகை பின் தேதியிட்ட காசோலைகளாக வழங்கப்படும்.

புதிய விழாக்கால அன்பளிப்புகள்
ரூ.10,000/- மதிப்புள்ள ஒவ்வொரு டெபாசிட்டுகளுக்கு

சரவணா
கிரெடிட் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்

SARAVANA GROUP

• **சென்னை:** • **அண்ணா சாலை:** சிட்டி சென்டர் பிளாசா, முதல் மாடி, 3, அண்ணா சாலை, சென்னை-600 002. போன்: 848486, 833828, 8555920 • **அடையார்:** ஆதித்யா ஆர்கேட், 55 முதல் தெரு, காமராஜர் அவின்யூ, கஸ்தூர்பா நகர், 3வது குறுக்கு தெரு, சென்னை-600 020. போன்: 410271, 411129 • **அண்ணா நகர்:** A-13, 3வது அவின்யு, கனரா வங்கியின் மேலே, முதல் மாடி, அண்ணாநகர் ரவுண்டு தாணா, சென்னை-600 102. போன்: 6281706 • **தாம்பரம்:** B.R. காம்பிளக்ஸ், 2வது மாடி, 12, ராமகிருஷ்ணன் தெரு, நேஷனல் தியேட்டர் எதிரில், சென்னை-600 045. • **கோயம்புத்தூர்:** ஒப்லி டவர்ஸ், 594, D.B. ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர்-641 002. போன்: 443377 • **சேலம்:** 78-D, கிச்சிபாளையம் மெயின் ரோடு, முதல் மாடி, ஒரியண்டல் சக்தி தியேட்டர் காம்பிளக்ஸ், T.T.C. பஸ் நிலையம் எதிரில், சேலம்-636 001. போன்: 413060 • **திருச்சி:** 74, மதுரை ரோடு, முதல் மாடி, ராஜா காம்பிளக்ஸ் எதிரில், திருச்சி-620 008. போன்: 702073 • **பாண்டிச்சேரி:** 62-A, 2வது மாடி, ஜவஹர்லால் நேரு தெரு, (மிஷன் தெரு கார்னர்), பாண்டிச்சேரி-605 001. போன்: 42641 • **பெங்களூர்:** சிருங்கார் ஷாப்பிங் சென்டர், முதல் மாடி, 80/1, M.G. ரோடு, பெங்களூர்-560 001. போன்: 5091127 • **மைசூர்:** 682/1, (K-18/1), காமராஜா டபுள் ரோடு, காயத்ரி தியேட்டர் எதிர்புறம், மைசூர்- 570 024. • **கொச்சின்:** கதவு எண்.39/4149A, சா..பா காம்பிளக்ஸ், 2வது மாடி, M.G. ரோடு, HDFC ஹவுஸ் எதிரில், ரவிபுரம், கொச்சின்-682 016. போன்: 368719 • **செகந்தராபாத்:** ஹார்டி கமர்சியல் காம்பிளக்ஸ், ஷாப் நெ. 8 & 9, 2வது மாடி, 1-7-301/124, M.G. ரோடு, செர்மாஸ் எதிரில், செகந்தராபாத்- 500 003. போன்: 866641, 866642 • **விசாகப்பட்டினம்:** எண்.28-2-47, இரண்டாவது தளம், தாஸ்பல்லா ஷாப்பிங் சென்டர், சூர்யா பாக், விசாகப்பட்டினம்-530 020. போன்: 60476.

சரவணா உங்கள் வளர்ச்சியில் அக்கறையுள்ள நிதி நிறுவனம்

திருமண மலர்

மணமகள் தேவை

● Alliance invited from fair, employed graduate girls for Vadama, Garga, Uthiradam, 31, 5'.4'', 160 cms, B.Sc., Central Government, Delhi presently working in Madars, Rs. 3000/- Subsect acceptable. Reply horoscope details to Box No. 12437

● இந்து ஆதிதிராவிடர் 31, 5'.8'', 10,000/- மாத வருமானம் உள்ள பையன், சொந்த ஊர் வேலூர், தற்சமயம் பீஹார் மாநிலத்தில் நிலக்கரி எடுக்கும் இடத்தில் பெரிய காண்ட்ராக்ட் வேலையில் உள்ளவருக்கு நல்ல அழகுடைய மணமகள் தேவை. பெட்டி எண் : 12438

● 26 வயது நிரம்பிய சிவந்த நிறமுடைய, டிகிரி, டிரைவிங் லைசென்ஸ், பிசினஸ் அனுபவம் மற்றும், டிராவல் ஏஜென்ஸியில் பொறுப்பாளராக (ரூ.3000/-) பணிபுரியும் இந்து நாடார் வரனுக்கு நல்ல நிறமுள்ள, அழகிய, குண முள்ள படித்த வசதியுள்ள பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12439

● Reddiar Engineer, 29/180cm, 1.2 P.A. employed at Madras based Private Engineering Industry seeks a pleasant professional or graduate bride same caste send bio-data and horoscope to Box No. 12440

● எந்த எதிர்பார்ப்பும் இல்லாத வடமாள், கௌசிக கோத்திரம், (23.10.1965) 29 வயது உள்ள, DME (Diploman Mechanical Engineering) பெங்களூரில் Equipments & Spares என்ற நிறுவனத்தில் நிரந்தரப் பணியில் வேலை செய்யும் பையனுக்கு நிரந்தர வேலையில் உள்ள, மாற்றலாகி வரக்கூடிய பெண் தேவை. பையனின் மாத வருமானம் 4000 + மற்ற படிகள். பெட்டி எண் : 12441

● ஆர்க்காடு சைவ முதலியார், கிருத்திகை, பி.எஸ்ஸி., போஸ்ட்வானா (தென் ஆப்பிரிக்கா)வில் வேலை, 26/ 5'.6'' ரூ. 12,500/- மாத வருமானம் சென்னையில் சொந்த வீடு, ஒரே பையன் அதே இனத்தில் பட்டதாரி அழகு, குடும்பப்பாங்கு வெளிநாடு செல்லவும் விருப்ப முள்ள பெண் தேவை. பெட்டி எண் : 12442

● Alliance invited from Tamil Yadava good-looking graduate employed/unemployed girl for the youth employed as Business Executive in Private Company Madras. Rs. 5000/26/5'.11'' Box No. 12443

● Vadagalai, Kowsiga Gothram, Rohini, 29/160/(B.Sc.,) employed in Pvt. Concern, only son, salary Rs. 2000/- Income from Investment Rs. 1400/- father alive, sister married, Subsect no bar. Reply with details, horoscope to Box No. 12444

● Hyderabad Tamil Brahmin, Brahacharanam, Sadamarshanam Gothram, Insurance employed P.G. (New India Assurance) Boy 28 years, 5'7''/4500/- p.m. seeks Bank/Insurance/Railways, employed girls. subsect no bar. Reply with horoscope and details to Box No. 12446

● சோழிய வெள்ளாளர், வயது 33, அனுஷம் நட்சத்திரம், உயரம் 5'.2'' சுயதொழில் (பைனான்ஸ்) வருமானம் ரூ 1500 சொந்த வீடுள்ள வரனுக்கு நல்ல குடும்பப்பாங்கான, சுமாராக படித்த பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 12447

● Saiva Vellala Pillai Boy, 29/165/D.M.E., D.R.T.M. (B.E.) Southern Railway seeks alliance from a fair educated girls, good-looking, employed graduates/unemployed. All vegetarians can also apply. Send all details with family background. Box No. 12448

● Iyer groom, Vathimal, Bharadwaja S.S.L.C. Anusham, 30/167/3000 own business real estate & building materials supplier. Suitable good-looking homely bride from respectable family. Subsect no bar. Reply to Box No. 12449

● Bombay based Tamil Iyer, Athreya, Brahacharanam, Uthirattadhi fair, 31/167 owning Computer Consultancy firm seeks very fair, wheatish graduate. All subsects welcome. Reply with details to Box No. 12450

● Madhwa Koundinya, Uttaram Ist padam, Graduate employed in Public Limited Finance Company age 26 years, seeks Madhwa Marathi or Kannada Speaking good looking graduate employed girl. Box No. 12451

● Tirunelveli Saiva Vellalar, M.B.B.S., 29/5'.7'', well established clinic, seeks Doctor bride from same caste. Reply with horoscope to Box No. 12453

● வடமாள், கர்க கோத்திரம், விசாகம் வயது 30, உயரம் 162 செ.மீ., மாத வருமானம் ரூ. 3000/- படிப்பு பி.எஸ்ஸி., பி.ஜி.டி.சி.ஏ., சென்னையில் பிரபல நிதி நிறுவனத்தில் பணிபுரியும் பையனுக்கு படித்த நல்ல பொது நிறுவனம் அல்லது அரசு அலுவலகத்தில் பணி புரியும் குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12454

● Vadama Koundinya Gothram, M.S., U.S. employed (Computer Consultant) HIB Visa 31 years, seeks B.E/B.Sc., with Computer Diploma or MCA bride. Box No. 12455

● Good-looking, Smart, Well educated girl for Iyer/Vadamal/Haritha/Krithigai boy 34/165/Chartered Accountant well established practice at Calcutta. Subsects acceptable. Correspond with horoscope to Box No. 12456

● சௌராஷ்ட்ரா ஐயங்கார், மதுரை பூர்வீகம், தாமாட்டி, சொந்த வீடு, படிப்பு பி.ஏ., 32 வயது, சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டையில் சொந்தத் தொழில், மாத வருமானம் சுமார் ரூ. 10,000/- மணமகளுக்கு ஓரளவு படித்த குடும்பப்பாங்கான மணமகள் தேவை. வரதட்சணை தேவையில்லை. பெட்டி எண் : 12457

● 24, Manai Telugu Chettiar, 8th house Boy, Sevvai Dosham, Post-graduate, Central Govt. Immigration Officer, Madras Airport 31/180/5500 seeks preferably educated employed brides. Caste no bar. Box No. 12458

● Alliance for Iyer, Brahacharnam, Kutsava, Kettai, fair, 35, 165 cms, B.E., Rs. 8000/- seeks graduate, below 30 unemployed, Non-Keralite girl. Reply to Box No. 12459

● தெலுங்கு பத்மசாலியர், வயது 49, கேட்டை நட்சத்திரம் உயரம் 5'.6'', படிப்பு டி.எம்.ஈ., மாத வருமானம் 9000/- விவாகரத்தானவருக்கு மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. உட்பிரிவுகள்/ விவாகரத்தானவர்/விதவை தொடர்பு கொள்ளவும்.



பெட்டி எண் : 12460

● தேவாங்கர்/கன்னடம்/பாலிதார்/31/பி.ஏ. (ஹானர்ஸ்)/5000 டாலர் பன்னாட்டு நிறுவனத்தில் மானேஜராக ஆஸ்திரேலியா சிட்னியில் வேலை பார்க்கும் மணமகனுக்கு அதே ஜாதியில் பட்டப் படிப்புப் படித்த, அழகான மணமகள் தேவை. பெட்டி எண் : 12461

● வடமாள், கௌசிகம், ரோகிணி, 31, பி.காம்., 5'.7'', சென்னை, தனியார் கம்பெனியில் உதவியாளர் ரூ. 2500/- சென்னையில் சொந்த வீடுள்ள வரனுக்கு வேலைக்குச் செல்லும்/செல்லத் தகுந்த படிப்புள்ள மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12462

● Alliance invited from respectable family, good-looking graduate girls for Sourashtra Punarpoosam boy, 26/165/DECE/7000 p.m. working as Senior Engineer in reputed organisation at Hyderabad. Reply to Box No. 12463

● சௌராஷ்ட்ரா சமூகத்தைச் சேர்ந்த, சென்னையில் மத்திய அரசு அலுவலகத்தில் மாதச் சம்பளம் சுமார் ரூ.5000/- பெறும் எம்.ஏ.,பி.எல்., படித்த, பண்பு மிகுந்த, ஆரோக்கியமான இளைஞனுடன் வாழ்நாள் முழுவதும் வாழ்க்கைத் துணைவியாக அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ள மிக அழகான இளம்பெண் இதயபூர்வமாக வரவேற்கப்படுகிறாள். விதவை, வரதட்சணை தடையல்ல. பெட்டி எண் : 12464

● எல்.ஐ.சி./ஜி.ஐ.சி./வங்கிகள்/லெக்சரர்கள் மத்திய அரசில் பணிபுரியும் பெண்களிடமிருந்து பெருந்தன்மையுள்ள கன்னட தேவாங்க செட்டியார் திருமணமாகாத வங்கி ஊழியருக்கு 43/165/எம்.ஏ./9000 திருமண விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. எல்.ஐ.சி.யில் பணிபுரியும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஜாதிமத பேதமில்லை. பெட்டி எண் : 12465

● சௌராஷ்டிரா குலம், பரத்வாஜரிஷி கோத்திரம், ஆயில்யம் (பி.காம்.,)/30/165/2000 தனியார் நிறுவனத்தில் (சென்னை) பணிபுரியும் கும்பகோணம் வரனுக்கு குறைந்தது +2 தேறிய தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12466

● நாட்டுக்கோட்டை நகரத்தார் மாத்தூரில் மணலூர் பிரிவு 25 வயது பள்ளிப் படிப்பு முதலீட்டுத் தொழில் மாதம் ரூ. 5000/- வருமானம் உள்ள மணமகனுக்கு 24 வயதுக்குள் பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பு உள்ள பிற

2500/- சென்னையில் சொந்த வீடுள்ள வரனுக்கு வேலைக்

• Wanted professionals, preferably CAS, fair, slim, good-looking, home-loving, PIOUS, below 26, well-to-do, Non-Kousika, Brahmin girls, for Iyer, M.Com., ACA., employed Boy, 29/164/8000. Subsect acceptable. Send horoscope to Box No. 12472

• புதுவையை சேர்ந்த, அஷ்டசகஸ்ரம், கௌண்டின்ய கோத்திரம், 5'.8'', 39 வயது, நல்ல நிறம், M.Phil., (Education) படித்த, மத்திய அரசு பள்ளி (கேந்திரிய வித்தியாலயாவில்) செகண்டரி ஆசிரியர் பணிபுரியும் (தற்சமயம் பணி மேற்கு வங்காளம்) பையனுக்கு, எந்த வித அரசுப் பணியிலும் இல்லாத, வேலையில்லா பட்டதாரி, பிராமணப் பெண் தேவை. ஜாதகம் அனுப்பவும். Subsect no bar. பெட்டி எண் : 12473

• பிராமின் தாய் தகப்பன் யாதவன், நிரந்தரப் பணி பி.காம்., முதல் நிலை, புனர்பூசம் வயது 26, வரும்படி 3100/- மகனுக்கு பிராமண குலம் சைவ பழக்கமுள்ள இதர சாதி சம்மதம். மகள் தேவை. உடன் திருமணம். விவரங்களுக்கு பெட்டி எண் : 12474

• ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸம், பூராடம், தனியார் நிறுவனம் பி.காம்.,/30/170/2500 நல்ல குடும்பத்தைச் சேர்ந்த நன்கு படித்த அழகான வேலைக்குச் செல்லும்/செல்லாத பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12475

• MBBS, M.S., Iyer, Kowshika, Anusham, 30, 168, V.fair, good-looking, employed U.S. Researcher VSMLE. 23-26, smart, post-graduate, fair girls 158-165. Settled Madras Bangalore. Mysore. Box No. 12476

• வடமாள், ஸ்ரீவத்ஸம், பூசம் 3-ம் பாதம், 34 வயது, 5.6'', பி.காம்., 2500/- சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் வரனுக்கு படித்த வேலை பார்க்கும் பெண் தேவை. திருச்சி சொந்த ஊர். பெட்டி எண் : 12477

• பாலக்காடு ஐயர், பிரஹசரணம், பாரத்வாஜ, ஸ்வாதி, 34 வயது, 5.6'', பி.காம்., 5000/- சூபர்வைசர் திருச்சி மாவட்டத்தில் பிரபல நிறுவனத்தில் பணிபுரியும் வரனுக்கு தகுந்த படித்த வேலை/வேலையில்லாத மணமகள் தேவை. பெட்டி எண் : 12478

• Maruthuvar community, 25/175, fair, clean habits, Draughtsman, Autocad, Computer diploma, well, employed Multi-national Company, seeks suitable alliance from professional India, Abroad, willing to settled in Singapore, Malaysia, visiting India. Box No. 12479

• Alliance invited for Tamil Brahmin, Iyer, Vadamal, Bharadwaja, Bharani, B.A., 25, 5.6'', slim, central Govt. employed, Rs. 4600/- from educated employed girls, Delhi based or transferable. Reply in details alongwith horoscope to Box No. 12480

• Fair, wellthiest, Smart, Homely +2, girl for Saiva Vellalah Mudaliar, 31/172 cms, B.Com./6000 p.m. Reply with horoscope to Box No. 12481

• Iyer, Brahacharnam, Naithrubakasyapa, Magam 27/173 fair, MS/USA Engineer, H1-visa seeks bride profesionally qualified smart, fair, Minimum 160cm, respectable family adept culture domestic Chorus/Music. Early marriage. Box No. 12482 Phone No. 415867

• பிரஹசரணம், பாரத்வாஜம், சுவாதி நட்சத்திரம், வயது 39, அரசு வேலை வருமானம் மாதம் ரூ. 5000 உள்ள வரனுக்கு, பட்டதாரி உயரம் 5/5-1 அடிக்கு மிகாமல் உள்ள, வேலையில் உள்ள/வேலையில்லாத அழகிய குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12483

• Vadama, Bharadwaja, Krithigai, 3rd, 29/170/7000 fair,

இல்லம் நாடி வரும்

108

கோவில்களின் "தெய்வீக சக்தி"

இந்தியா முழுவதும்
108 புண்ணியஸ்தலங்களின்
புனிதப் பயணம் இலவசம்

+

பிரசாதங்கள், "விசேஷ அர்ச்சனை"
"விசேஷ பூஜை" செய்த
"தங்க நாணயம்"

+

உங்கள் முதலீட்டிற்கு

27% + 6%

வருடவட்டி ஊக்கத்தொகை

ரூ. 10,000/- அதற்கு மேலும் டெபாசிட் செய்பவர்களுக்கு 108 கோவில் பிரசாதங்கள், அர்ச்சனை, 1 கிராம் தங்க நாணய இலவசபயணம், வருட வட்டி 27% + 6% ஊக்கத் தொகை வழங்குகிறோம்.

ரூ. 10,000/- டெபாசிட் செய்பவர்கள் அர்ச்சனை பிரசாதங்கள், 37வது மாதம் ரூ. 20,000/- திரும்ப பெற்றிடுவீர்.

(எங்களிடம் டெபாசிட் செய்பவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து 108 கோவில்களுக்கு இலவசமாக அழைத்து செல்கிறோம். பயணம் புறப்படும் தேதி விரைவில் அறிவிக்கபடும்)

1/2 Kg. தங்கமும், வெள்ளிய

(each 250 gms.)

ஒவ்வொரு 500/- ரூபாய் டெபாசிட்டிற்கும் ஒரு கூப்பன். குறைந்த பட்ச டெபாசிட் தெ ரூ. 1000/- குலுக்கல் நாள். 14-4-96.

LORD SUN

GROUP OF COMPANIES

7/2, NUNGAMBAKKAM HIGH ROAD, D-1, 8TH FLOOR, J.P. TOWER, MADRAS - 600 034. ✆ : 82802

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்யக் கட்டணம் ரூ. 100/- தொகையை, 'மங்கையர் மலர்' பெயருக்குச் சென்னையில் மாற்றலாகக்கூடிய டிமாண்ட் டிராப்டாக மட்டுமே அனுப்ப வேண்டும். மணியார்டரோ, போஸ்டல் ஆர்டரோ ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்பவர்களின் விலாசங்களைக் கொடுப்பதற்கில்லை. விளம்பரங்களுக்குப் பதில் அனுப்புபவர்கள், 'விளம்பரதாரர், பெட்டி எண் : C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097' என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். தபால் பெட்டி எண்ணிற்கு வரும் கடிதங்களை அதற்குரிய விலாசத்திற்கு 15 நாட்களுக்கு ஒருமுறை அனுப்பி வைக்கப்படும். தபால் செலவிற்குத் தனிக் கட்டணம் எதுவும் கிடையாது. இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண்களுக்குப் பதில்கள் ஏப்ரல் '96 31-ஆம் தேதிக்குள் எங்களுக்கு வந்து சேர வேண்டும். திருமண தகவல் நிலையங்கள் அனுப்பி வைக்கும் தபால்களை எங்கள் அலுவலகம் ஏற்றுக் கொள்வதில்லை. தனிப்பட்ட எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

beautiful, N.Arcot District working as Executive, Systems in Pvt. Co., seeks good-looking, graduate girl preferably employed. Box No. 12484

- வடமாள், ஐயர், நைத்ருப காஸ்யப கோத்திரம், பி.காம்., கம்பெனி எக்ஸிகியூட்டிவ், 35/165/6000 கேட்டை 4-வது பாதம், செவ்வாய் தோஷம், கேரள பிராமின் முதலிடம். பெட்டி எண்: 12485
- ஐயர், ஸ்ரீவத்ஸம், பிரஹசரணம், திருவோணம், வயது 29, உயரம் 5'.6'', சென்னையில் மத்திய அரசு அஞ்சல் துறையில் மாதம் ரூ. 2300/-க்கு வேலை பார்க்கும் பையனுக்கு, சென்னையில் அரசாங்க வேலை பார்க்கும் அழகான, குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 12486
- Tanjore Vadamal, Bharathwaj, Kettai, 34, 5'.8'', B.Com., fair, well employed in Muscat with family Visa seeks good-looking employed/unemployed graduate girl. Box No. 12487
- MBBS/BE good looking vegetarian bride wanted for 27/175 Sadhyam, wheatish, handsome Karkarthar groom BE employed as Marine, Engineer, Officer in Shipping Corporation of India. Subsect acceptable. Contact with biodata to horoscope to Box No. 12488
- வடகலை, சடமர்ஷண கோத்திரம், பரணி நட்சத்திரம், 28 வயது, 6 அடி உயரம், தனியார் கம்பெனியில் மாதம் ரூ. 2800/- வருமானம் டிப்ளமோ இன் டெக்ஸ்டைல் டெக்னாலஜி படித்துள்ள வரனுக்கு 21 வயது முதல் 25 வயதுக்குள் பட்டப் படிப்பு படித்து பணியில் இருக்கும்/ அல்லாத மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12489
- 29/6000/172 cm/medium/Viswamitra/Moolam (II)/ Nationalisd Bank/Iyer Boy seeks INS/Bank/Govt employed girl sub-sect no bar. Box No. 12490
- Alliance from Non-Bharadwajam, beautiful tall, professioanl/Bank/PSU/employed girl below 29 years for Brahacharanam Tamil Iyer, Anusham, Nationalised Bank employed boy, M.Com., CAIIB, MBA, (C.F.A.) 32/178 cms. 8500 - Immediate marriage. Box No. 12491
- Tamil, Yadhava US Green Card holder 28/172 M.S. Computer Engineer, requires horoscope, educational details from smart girls, whose merit only counts. Box No. 12492
- சைவ வெள்ளாளர், ஹஸ்தம், வயது 29, பி.காம்., 3500/- பெறும் புகழ்பெற்ற தனியார் கம்பெனியில் உள்ள நல்ல வசதி படைத்த மணமகனுக்கு ஆசிரியர் பணியில் உள்ள/பயிற்சி பெற்ற குடும்பப்பாங்கான மணப்பெண் தேவை. கம்ப்யூட்டர் கோர்ஸில் தேர்ச்சி பெற்ற மணப்பெண்ணும் வரனும் வரவேற்கப்படுகிறது. பெட்டி எண் : 12493
- Alliance invited for Telugu Yadava Boy, 31, 5'.5'', graduatre own house Sales Executive at Madras 4000/- pm from good-looking graduate Telugu Yadava girls. Reply with horoscope and family details to Box No. 12495
- Iyer, Upper middle class, Vathimal Srivatsa Revathy, B.Sc./1957/160/1600, Haritha Anusham PUC/B.Com./ 1963/160/1550 Private Employment plus properties investments seeks good-looking, educated girl. Subsect welcome to Box No. 12496
- Kerala Iyer, Koundinya 33, Vadamal 5'.8'', Pooram, BA, working in I.T. Bangalore, Rs. 4000/- + Rs. 4000 from investments/owned a house in B'lore, seeks educated employed bride. Subsect acceptable. Contact 5469367/ 3329769 B'lore. Reply with horoscope to Box No. 12497
- வடமாள், பாரத்வாஜ கோத்திரம், அனுஷம், வயது 33/ரூ.4000/ உயரம் 164 செ.மீ., விற்பனை பிரதிநிதி, குவாலிட்டி பிஸ்கட்ஸ் லிட்., வேலை பார்க்கும் அல்லது வேலை பார்க்காத படித்த நல்ல குடும்பப் பெண் தேவை. பெட்டி எண் : 12499
- Alliance invited from only a well settled widow (any professional preferably a doctor) having children for a well employed & well settled person aged 38 years. Write to Box No. 12500
- Alliance invited for Sourashtra Graduate working reputed company Bombay/6000/29/own flat in Bombay from fair Sourashtra working graduate girl. Apply with horoscope family details to Box No. 12501
- கம்மவார் நாயுடு (மதுரை மாவட்டம்) சென்னையில் இருக்கும் அழகான மணமகன் உத்திரம்/சிம்மம்/33/ 175 செ.மீ., பி.எஸ்ஸி., டி.ஃபார்ம், மெடிக்கல் ரெப்ரெசென்டேடிவ்க்கு அதே இனத்தில் படித்த அழகான, குடும்பப் பாங்கான மணமகள் தேவை. பணியிலிருந்தால் நலம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12502
- வன்னியர், வயது 37, அரசு வேலை ரூ. 2800/- ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர், ஸ்ரீ சாரதாதேவி ஆகியோரைப் போல இலட்சிய தம்பதிகளாக வாழ விளையாட்டு, ஆன்மீகம், யோகம் ஈடுபாடுள்ள அழகிய மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12503
- Compatible match for handsome Telugu Brahmin, highly qualified professional, 33 years, 175 cms, settled Canada from beautiful, talented, post-graduate, professional, below 28, cultured family. Girl's merits main consideration. Early marriage. Box No. 12504
- சோழிய வேளாளர், வயது 36, அஸ்தம், எம்.எஸ்ஸி., பி.எட்., எம்.ஃபில்., ஆலோசகர், இறால் பண்ணை மற்றும் வளர்ப்பு, மாத வருமானம் சராசரி ரூ. 3000/- நல்ல குடும்பப்பாங்கான படித்த பெண் தேவை. வேலை

யில் உள்ள பெண்ணுக்கு முன்னுரிமை உண்டு. ஜாதகத்துடன் அனுப்பவும். பெட்டி எண் : 12505

- சோழிய வேளாளர், வயது 34, மூலம், B.Sc., B.Ed., C.L.I.Sc., தனியார் பொறியியல் கல்லூரியில் நூலக உதவியாளர், மாத வருமானம் ரூ. 2500/- நல்ல குடும்பப் பாங்கான படித்த பெண் தேவை. வேலையில் உள்ள பெண்ணுக்கு முன்னுரிமை உண்டு. ஜாதகத்துடன் அனுப்பவும். பெட்டி எண் : 12506

- சோழிய வேளாளர், வயது 38, உத்திரட்டாதி, எம்.ஏ., வங்கி உத்தியோகம், மாத வருமானம் ரூ. 4000/- நல்ல குடும்பப்பாங்கான படித்த பெண் தேவை. ஜாதகத்துடன் அனுப்பவும். பெட்டி எண் : 12507

- Tamil, Iyer, bachelor, Krittika, Garga 44, very fair, healthy 5'.7", B.Com., employed Quasi, Govt. Company Rs. 6000/- owns City Flat, seeks Spinster bride around 36. Graduate fair, pretty no demands. Respond to Box No. 12508

- Alliance invited for Haritha post-graduate Iyengar groom 43/5'.4"/5600 employed in Pune from Iyengar/Iyer bride. Reply with horoscope and family particulars to Box No. 12509

- ஐயர், அஷ்டசகஸ்ரம், காசியபம், திருவாதிரை, பி.எஸ்ஸி., வயது 32, உயரம் 165 செ.மீ., கோவையில் தனியார் துறை, நிரந்தரப் பணி, மாத வருமானம் ரூ. 2500/- வசதியுடைய வரனுக்கு (முதல் தாரம் இறப்பு) படித்து வேலையில் உள்ள/இல்லாத குடும்பப்பாங்கான பெண் ஜாதகம் வரவேற்கப்படுகிறது. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 12510

- அஷ்டசகஸ்ரம், நைத்ருப காஸ்யப கோத்திரம், ரேவதி 2, (எம்.காம்., பி.எல்.) புதுவை அரசாங்கத்தில் எல்.டி.சி. ஆக பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 12511

- ஆத்திரேய கோத்திரம், ஹஸ்தம், குருக்கள் (5000 மாத வருமானம்) பிரபலமான முருகன் கோயிலில் அர்ச்சகர் பணிபுரியும் 26 வயது நிரம்பிய வரனுக்கு ஓரளவு படித்த வசதியான சிறிய குடும்பத்திலிருந்து அழகான பெண் தேவை. போன் நெ : எஸ்.டி.டி. 04118-5887. பெட்டி எண் : 12512

- Alliance invited for Vella Pillai good-looking boy B.Com., M.A., P.G.D.T.T.M., P.G.D.H.R.D. doing M.B.A. 33/5'.6"/7000 business. seeks graduate employed girl caste no bar. Box No. 12513

- தெலுங்கு பிராமின், வெலநாடு, சுவாதி, கௌண்டின்ய, திருச்சியில் சொந்த வியாபாரம், எஸ்.எஸ்.எல்.சி., ரூ. 2500/- வயது 34 உள்ள வரனுக்கு குடும்பப்பாங்கான, 25-30 வயதுள்ள பெண் தேவை. வேலையில் இருக்கத் தேவையில்லை. பிராமின் எந்த உட்பிரிவும் சம்மதம். எளிய முறையில் திருமணம். உடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 12514

Suitable alliance for Vadamal, Kausikam, Swathi, 34/152 cm, SSLC, employed in Private firm, working girl from middle class simple marriage. Apply with horoscope and details to Box No. 12515

Blind Vadama Srivatsam Hastham, Indian and Foreign qualified Computer trained Boy working overseas 37 years, Religious Theosophy interests seeks same community devoted compassionate willing to sacrifice educated bride around 33 years. Comfortable assured life income. Reply to Box No. 12544

Vathimal/Vadamal girl below 26 years for Vathimal, Koundinya Moolam, 30, 5'.10" boy doing photo/video/illuminations etc. Box No. 12559

